

# தேடல்

இதழ்-01







தொல்லியல் ஆய்வுவட்டம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

2008

P 117

பொது சன நூலகம்
பிரதேச சபை
நல்லூர்

٢١١٩

# தேடல்

## இதழ் - 1


### இதழாசிரியர்கள்

செல்வி.கு.சசிதா

செல்வி.த.கெர்சி



பொது சன நூலகம்
பிரதேச சபை
நல்லூர்



தொல்லியல் ஆய்வு வட்டம்

வரலாற்றுத்துறை

யாழ் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

2008.

# THEDAL

EDITED BY
MISS.K.SASITHA
MISS.T.GETSY

ARCHAEOLOGICAL STUDY CIRCLE
DEPARTMENT OF HISTORY
UNIVERSITY OF JAFFNA
THIRUNELVELY
2008.

## தேடல் சஞ்சிகையின் நோக்கும், போக்கும்

இத்தேடல் சஞ்சிகை இதுரை வெளிச்சத்திற்கு வராத தொல்லியற் சான்றுகளை வெளியிடுவது, உலகின் பதிய தொல்லியற் கண்டுபிடிப்புக்களைப் பதிவு செய்வது, ஏற்கவே வெளிவந்த தொல்லியல் ஆய்வுகளில் காணப்படும் முக்கிய தொல்லியல் ஆதாரங்களை விபரிப்பது அல்லது விமர்சனம் செய்வது போன்ற அம்சங்களை முக்கிய நோக்காகக் கொண்டு வெளிவருகிறது. அதில் தொல்லியல் மாணவர்களின் தனிப்பட்ட ஆளுமையையும், ஆற்றலையும் வெளிப்படுத்தம் நோக்கில் அவர்களின் படைப்புக்களுக்கு முன்னுரிமை கொடுப்பது இன்னொரு நோக்காகும். அதற்கு ஏற்பவே இச்சஞ்சிகையில் மாணவர்களின் ஆக்கங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் எதிர்கால மாணவஉகளிடமும், மக்களிடமும் தொல்லியல் விளிப்புணர்வை ஏற்படுத்தலாம் என்பது தொல்லியல் ஆய்வு வட்டத்தின் நம்பிக்கையாகும். அவற்றை ஊக்கப்படுத்தும் நோக்கில் மாணவர்கள் ஒவ்வொருவரது ஆக்கங்களையும் முறையாக நெறிப்படுத்தி பயனுள்ள பல ஆலோசனைகளை வழங்கிய பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்களுக்கு எம் நன்றிகள்.

# தேடலில்.....


1. சமர்ப்பணம் I
2. நிர்வாகக்குழு II
3. துணைவேந்தர் வாழ்த்துரை III
4. கலைப்பீடாதிபதி வாழ்த்துரை IV
5. உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி வாழ்த்துரை V
6. வரலாற்றுத்துறைத் தலைவர் வாழ்த்துரை VII
7. கழகக் காப்பாளர் வாழ்த்துரை IX
8. சிரேஷ்ட பெரும் பொருளாளர் வாழ்த்துரை X
9. மாணவர் ஒன்றியத் தலைவர் வாழ்த்துரை XII
10. கழகத் தலைவர் வாழ்த்துரை XIII
11. கழகச் செயலாளர் வாழ்த்துரை XIV
12. இதழாசிரியர்கள் வாழ்த்துரை XVI
13. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதலாவது வரலாற்றுப் பேராசிரியர் கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா 1
14. இலங்கை மக்களின் பண்டைய சமய நம்பிக்கைகளை வெளிப்படுத்தும் லக்ஷ்மி நாயணம். 8
15. அன்றிலிருந்து இன்று வரை இலங்கை பெருங்கற்கால மட்பாண்டக் குறியீட்டு எழுத்துக்களின் பயணம். 17
16. வட இலங்கை - உரோம நாட்டு வணிக உறவுகள் 30
17. வட இலங்கையில் தமிழ்மொழியின் தொன்மையும் தமிழ்ச் சாசனங்களும் 42
18. 1971 உதயமான யாழ்ப்பாண தொல்லியற் கழகம் 51
19. இலங்கை கலை மரபின் உருவாக்கம். 59
20. அருங்காட்சியகத்தின் தோற்றம் வளர்ச்சி 66
21. யாழ்ப்பாண அரசு பற்றிய ஆய்வுக்கு புது வெளிச்சமூட்டும் அண்மையில் கிடைத்த அரியவகை நாணயங்கள். 75
22. தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் அரிய தொல்லியற் கண்டுபிடிப்பு. 78
23. தமிழ்நாட்டு ஆதிச்ச நல்லூரில் கண்டுபிடிக்கப்பட்ட அரிய தொல்லியற் சின்னங்கள். 80
24. சங்ககாலத் தமிழகம் எகிப்துடன் கொண்டிருந்த உறவுக்கு ஓர் அரிய சான்று 82
25. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ச்சாசனம் தாய்லாந்தில் கண்டுபிடிப்பு 83
26. கள ஆய்வில் கண்டவையும், கண்டுபிடித்தவையும் 85
27. சங்ககாலத்தில் சேரநாட்டு வணிகன் கிரேக்க நாட்டு வணிகனுடன் செய்துகொண்ட ஓர் ஒப்பந்தம் பற்றிய அரிய ஆவணம். 94
28. தமிழகம் வேதாரணியம் கோயிலில் யாழ்ப்பாணத்தார் கல்வெட்டுக்கள். 104
29. நூல் அறிமுகம். 109

# தொல்லியல் ஆய்வு வட்டம் - 2008



இருப்பவர்கள்: இடமிருந்து வலம்

செல்வி.க.துஷ்யந்தினி (செயலாளர்), பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா (காப்பாளர்), பேராசிரியர் நா.சண்முகலிங்கன் (துணைவேந்தர்), திரு.பா.கபிலன் (தலைவர்), பேராசிரியர் சோ.கிருஸ்ணராஜா (கலைப்பீடாதிபதி), பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் (பெரும்பொருளார்), திரு.மா.ரசித்குமார் (பொருளாளர்), திரு.வே.ராஜிவன் (நிர்வாக சபை உறுப்பினர்).

நிற்பவர்கள்: இடமிருந்து வலம்

செல்வி.த.கெற்சி (இதழாசிரியர்), க.மதுராம்பிகை (நிர்வாகசபை உறுப்பினர்), சசிப்பிரியா (நிர்வாகசபை உறுப்பினர்), சரிதா (நிர்வாகசபை உறுப்பினர்), சி.ரேணுகா (நிர்வாகசபை உறுப்பினர்), சி.வசிகரன் (நிர்வாகசபை உறுப்பினர்), ந.அருள்ராஜ் (உப தலைவர்), எஸ்.கைலைவாசன் (நிர்வாகசபை உறுப்பினர்), கோ.கம்சாநந்தினி (நிர்வாகசபை உறுப்பினர்), கு.சசிதா (இதழாசிரியர்), வி.சிவரூபி (நிர்வாகசபை உறுப்பினர்), ப.ராகினி (உப செயலாளர்).

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
## முதலாவது வரலாற்றுப் பேராசிரியருக்கு
## "தேடல்"
## சமர்ப்பணம்




பல்லினப்பண்பாடு கொண்ட இலங்கை மக்களின் பண்பாட்டு இருப்பை அறிந்து கொள்ள தமிழ் மாணவர்கள் தொல்லியல் கற்பதற்கு ஆக்கபூர்வமான முன்முயர்ச்சிகளை மேற்கொண்டவரும், எமது பல்கலைக்கழகத்தின் முதல் வரலாற்றுப் பேராசிரியரும், முதல் மனிதப் பண்பியல் பீடாதிபதியும், சர்வதேசப் புகழ் பெற்ற தொல்லியல் - வரலாற்று அறிஞர்களில் ஒருவருமான கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா அவர்களுக்கு தொல்லியற் சிறப்புக்கலை மாணவர்கள் உருவாக்கிய தொல்லியல் ஆய்வு வட்டத்தின் முதல் வெளியீடான "தேடல்" சஞ்சிகையை அவரின் புலமைக்கு காணிக்கையாகச் சமர்ப்பணம் செய்வதில் அவர் புலமையில் ஊட்டம் பெற்ற மாணவ தலைமுறையினர் ஆன்ம திருப்தி அடைகின்றனர்.

# தொல்லியல் ஆய்வு வட்டம்
# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# 2005/2006 நிர்வாகக் குழு

| | |
|---|---|
| காப்பாளர் | : பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா |
| பெரும் பொருளாளர் | :பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் |
| தலைவர் | :திரு.பா.கபிலன் |
| உப தலைவர் | :திரு.ந.அருள்ராஜ் |
| செயலாளர் | :செல்வி.க.துஷ்யந்தினி |
| உப செயலாளர் | :செல்வி.ப.ராகினி |
| பொருளாளர் | :திரு.ம.ரசித்குமார் |
| இதழாசிரியர்கள் | :செல்வி.கு.சசிதா |
| | : செல்வி.த.கெற்சி |
| நிர்வாக உறுப்பினர்கள் | :செல்வி.சி.ரேணுகா |
| | திரு.சி.வசிகரன் |
| | செல்வி.க.மதுராம்பிகை |
| | திரு.வே.ராஜீவன் |
| | செல்வி.வீ.சிவரூபி |
| | திரு.கே.கயிலைவாசன் |
| | செல்வி.ப.சசிப்பிரியா |
| | செல்வி.கே.சரிதா |

# துணைவேந்தர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வு வட்டத்தின் "தேடல்" சஞ்சிகையின் வரவு கண்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.


எங்கள் கல்விப் புலத்து நெடுநாள் தேவையாக உணரப்பட்ட தொல்லியல் சிறப்புக்கலை கற்கை நெறியை ஆரம்பித்து முதல் தொகுதி மாணவர்கள் பட்டதாரிகளாகும் வேளையில் "தேடல்" வரவாகின்றது.

தொல்லியல், வரலாற்றிற்கு முற்பட்டகால மக்களின் வாழ்வினை மீள கட்டமைப்பதில் மட்டுமன்றி வரலாறு முழுமையும் நிகழும் பண்பாட்டு மாற்றங்களை விளக்குதலிலும் பெரிதும் கைகொடுக்கின்றது. இந்த வகையில் எங்கள் பண்பாட்டின், நாகரிகத்தின் வேர்களைத் தேடும், மாற்றங்களைப் புரிந்து கொள்ளும் காலக் கடமையில் தேடல் வரப்பிரசாதமாகும். தேடலில் இணைந்துள்ள மாணவர்களும் அவர்களிற்கு வழிகாட்டிகளான ஆசிரியர்களும் பாராட்டிற்குரியவர்கள்.

தேடலின் பயனாய் மென்மேலும் பல அறிவார்ந்த கனிகள் எம் வரலாற்றிற்காக என் அன்பு வாழ்த்துக்கள்.

*பேராசிரியர். நா. சண்முகலிங்கன்*
*துணைவேந்தர் அலுவலகம்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*2008-04-16.*

## கலைப் பீடாதிபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தொல்லியல் ஒரு பாடமாக அறிமுகமாகி மாணவர்கள் இன்று சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்று வெளியேறியுள்ள நிலையில் தமது பயில்துறையின் பெறுபேறாக "தேடல்" என்ற சஞ்சிகை ஒன்றை வெளியிடுவது பாராட்டிற்குரியது.

வரலாற்றில் ஊகங்களாக வெளியிடப்பட்ட கருத்துக்களை உரிய சான்றாதாரங்களுடன் நிறுவுவதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ பயன்படுவது தொல்லியல் ஆகும். சான்றுகளைத் தேடுவதும், அவற்றை உரிய முறையில் விஞ்ஞான பூர்வமாக ஆராய்வதும் தொல்லியலாளர்களின் ஒழுக்கமாக இருத்தல் வேண்டும். அவ்வகையில் தொல்லியலாளர்களிற்கு பாரிய பணியுண்டு.

தொல்லியல் மாணவர்கள் வெளியிடும் "தேடல்" அவர்களிற்கு சிறந்ததொரு பயிற்சிக் களமாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் சஞ்சிகையின் கட்டுரையாளர்களிற்கும், அவர்களை வழிநடத்திய பேராசான்களிற்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

***பேராசிரியர். சோ. கிருஷ்ணராஜா***
***யாழ் பல்கலைக்கழகம்.***

# பெருமை தரும் படைப்பு

எமது பல்கலைக்கழகத்தில் முதன் முதலாக வெளிவரும் தொல்லியல் சார்ந்த மாணவர் சஞ்சிகையொன்றுக்கு வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய நவீன தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் உலக நாகரிகம் பலவழிகளில் சுருங்கிவிட்டது. இதனால் எமக்குரிய பண்பாட்டு அடை யாளங்கள் எவை எனத் தெரியாமலே புதிய வாழ்க்கை முறைக்கு மாறிக்கொண்டிருக்கிறோம். இந்நிலையில் எமது பண்பாட்டு மூலங்களைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றைப் பாதுகாக்கும் முயற்சியில் தேடல் என்ற பெயரில் சஞ்சிகை ஒன்று வெளிவருவது வரவேற்கத்தக்க அம்சமாகும். இன்றைய உலகில் திறமையும், வசதியும் உள்ள ஒருவர் தான் விரும்பும் கல்வியை உலகின் எந்தப் பல்கலைக்கழகத்திலும் தொடரலாம். ஆனால் எமது பண்பாட்டு விழுமியங்களை எமது பல்கலைக்கழகத்தில் தான் முறையாகக் கற்கலாம், ஆழமாக ஆராய முடியும். அதற்கு தொல்லியற் கற்கை நெறி சிறந்த வழிகாட்டியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

கடந்த 30 ஆண்டுகளில் எமது பல்கலைக்கழகக் கல்வியாளர்கள் விஞ்ஞானத்திலும், சமூக விஞ்ஞானத்திலும் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளனர். ஆனால் அச்சாதனைகளை எல்லாம் எமது பல்கலைக்கழகத்தைக் காணவரும் ஒருவருக்கு எமது பண்பாட்டின் அடையாளமாகவோ, அல்லது எமது இனத்தின் தனித்துவமாகவோ எடுத்துக் கூறமுடியாது. மாறாக எமது ஆய்வுகள், கண்டுபிடிப்புக்கள் மூலம் எமது பண்பாட்டின் பழமையையும், தனித்துவத்தையும், விழுமியங்களையும் அவர்களுக்கு தெரியப்படுத்தும் போதுதான் இப்பல்கலைகழகத்தை உருவாக்கியதன் உயர்ந்த குறிக்கோள் நிறைவுபெறுகிறது. அதனால்தான் இப்பல்கலைக்கழகத்தில் பாடநெறிகள் பல போதிக்கப்பட்டு வந்தாலும் அவற்றுள் எமது மொழி, மதம் பண்பாடு பற்றிய கற்கை நெறிகளுக்கு முன்னுரிமை கொடுத்து வளர்க்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றோம். அந்தவகையில் அண்மைக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொல்லியல் கற்கை நெறிக்கும் முன்னுரிமை கொடுத்து வளர்ப்பது எமது எல்லோரினதும் கடமையாகும்.

கடந்த காலங்களில் நாம் அறிந்திராத புதிய சில வரலாற்று உண்மைகள் தொல்லியல் ஆய்வால் தெரியவந்துள்ளன. அவைபற்றி பல இடங்களில் பிறருடன் உரையாடி வருவதைப் பெருமையாகக் கருதுகிறேன். இது மேலும் வளர அக்கற்கை நெறி வகுப்பறைப் போதனைக்குள் மட்டும் அடங்கியிராது விஞ்ஞான ஆய்வுமுறையிலான ஆய்வுகூட ஆராய்ச்சியும், வெளிக்கள பயிற்சியும் பெறுவது அவசியமாகும். அதன் மூலம் மேலும் வளரலாம் என்பதற்கு இச்சஞ்சிகையில் வெளிவந்துள்ள மாணவர்களின் படைப்புக்கள் சான்றாகும். அதற்குரிய வாய்ப்புக்களையும், வசதிகளையும் இப்பல்கலைக்கழகம் மேலும் உருவாக்கிக் கொடுக்கும் என நம்புகிறேன்.

எண்ணிக்கையில் தொல்லியல் கற்பவர்கள் குறைவாக இருந்த போதும் நீண்டகால வரலாறு கொண்ட ஒரு துறைக்குரிய சாதனையை இம்மாணவர்கள் நிகழ்த்தியுள்ளனர். அதற்காக இதில் சம்பந்தப்பட்ட மாணவர்களையும், ஆசிரியர்களையும் பாராட்டுகிறேன். முன்னைய காலங்களில் பல்கலைக்கழக வெளியீடுகளும், மாணவ சஞ்சிகைகளும் தொடங்கிய வேகத்திலேயே மறைந்து விட்டன. அவ்வாறான நிலை

*பேராசிரியர் க.கந்தசாமி*
*பௌதிகவியல் பேராசிரியர்*
*உயர் பட்டப் பின்படிப்பு பீடாதிபதி*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

## வரலாற்றுத்துறைத் தலைவர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையைச் சேர்ந்த தொல்லியலை சிறப்பு பாடநெறியாக கற்ற மாணவர்கள் தங்கள் அடையாளத்தை எடுத்துக் காட்டும் வகையில் "தேடல்" எனும் மாணவர் சஞ்சிகையை வெளியிடுவதனையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன்.

யாழ் பல்கலைக்கழகம் வளாகமாக ஆரம்பித்த காலத்தில் வரலாற்றுத் துறையின் தலைவராகவும் வரலாற்றுத் துறையின் முதற் பேராசிரியராகவும் விளங்கிய பேராசிரியர் கா.இந்திரபாலா அவர்களின் சிந்தனையுடன் வரலாற்றுப் பாடநெறியின் ஓர் அங்கமாக தொல்லியல் பாட அலகினை இணைத்திருந்தார். அவ்வகையில் 1975 ஜனவரியில் தொல்லியலில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றிருந்த திரு.சி.க.சிற்றம்பலம் அவர்களை தொல்லியல் பாடநெறிக்காகவும் என்னை வரலாற்றுப் பாடத்திற்கும் உதவி விரிவுரையாளர்களாக நியமித்திருந்தனர். அன்றிலிருந்து தொல்லியல் பாடப்பரப்பு வரலாற்றுத் துறையின் ஓர் அங்கமாக சேர்க்கப்பட்டிருந்தது. பின்னர் அது பொதுத் துறைப் பட்டத்திற்கான ஒரு பாடமாகவும், 2003 இல் சிறப்புக் கலைப் பட்டத்திற்கான ஒரு பாட நெறியாகவும் போதிக்கப்பட்டு வருகின்றது.


இந்த நீண்ட காலப் பகுதியில் வரலாற்றுத் துறையில் தொல்லியல் பாடநெறியினை கற்பித்தவர்களாக பேராசிரியர்கள் கலாநிதி கா.இந்திரபாலா, கலாநிதி சி.பத்மநாதன், கலாநிதி சி.க.சிற்றம்பலம், கலாநிதி வி.சிவசாமி, கலாநிதி பொ.ரகுபதி, கலாநிதி செ.கிருஸ்ணராஜா, கலாநிதி ப.புஸ்பரட்ணம் ஆகியோர் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்கள். இவர்கள் அனைவரும் அகழ்வாய்வுகளிலும், மேலாய்வுகளிலும் அதீத ஆர்வத்துடன் ஈடுபட்டு இப்பிராந்தியத்தின் தொன்மை நிலையை வெளிக் கொணர்ந்தவர்களாக சிறப்புப் பெறுகின்றனர். ஆனைக்கோட்டையில், கந்தரோடையில், பூநகரியில், சாட்டியில் எனப் பல தொன்மை மிக்க தொல்லியல் தலங்களில் .இவர்கள் தம் ஆய்வை மேற்கொண்டவர்களாக விளங்குகின்றனர்.

இத்தகைய பின்புலத்தில் வரலாற்றுத் துறையின் தலைவராக நான் இருந்த காலப்பகுதியில் தொல்லியல் சிறப்புக் கலைப் பாட நெறி ஆரம்பிக்கப்பட்டமையையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன். இம் முயற்சியில் பேராசிரியர். கலாநிதி ப.புஸ்பரட்ணம் அவர்களின் பங்கு தனி முதன்மையானது. அவரது வழிகாட்டலில் தொல்லியல் சிறப்புப் பாட மாணவர்களின் முதலாவது அணியினர் "தொல்லியல் ஆய்வு வட்டம்" என்ற மாணவர் அமைப்பை யாழ் பல்கலைக்கழகத்தில் உருவாக்கி, தமது கன்னி முயற்சியாக தேடல் என்ற பெயரில் மலர் ஒன்றினை வெளியிட்டு யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையின் பிதாமகனான பேராசிரியர். கலாநிதி கா.இந்திரபாலா அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்வது மிகப் பொருத்தமானதாகும்.

இம் முயற்சியில் பங்கு கொண்ட அனைத்து மாணவர்களிற்கும், ஆசிரியர்களிற்கும் துறைத் தலைவர் என்ற வகையில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*பேராசிரியர். கலாநிதி.ச.சத்தியசீலன்,*
*தலைவர், வரலாற்றுத் துறை,*
*யாழ் பல்கலைக்கழகம்,*
*திருநெல்வேலி,*
*25-04-2008.*

# கழகக் காப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



தேடலுக்கான காலத்தின் கட்டளை

வடிவமே **தேடல்**

உதிரத்தை உறுஞ்சும் உக்கிரப்புழுக்கள்

மலிந்துபோனதால்

மானிடம் மறைந்ததம்மா!

மண்ணில் மனிதநேயமும் புதைந்ததம்மா!

காலக்கண்ணாடியான இக்கவிதை வரிகள்

இத்தேடலைப்பொறுத்தவரையில்

எவ்வளவு யதார்த்தமாக அமைந்துவிட்டது

ஆம்., தேடுவோம்.

எம் தேடலைத் தேடுவோம் !

எம் முதிசத்தைத் தேடுவோம் !!

எம் வைப்பினைத் தேடுவோம் !!!

மானிடத்தினையும் தேடுவோம் !!!!

எமது முதலாவது தேடல் குழுவினருக்கு வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் கூறி,

அதன் பேரபிமானிகளுக்கும் நண்பர்களுக்கும்

நன்றி கூறி, தேடலின் தொடக்கத்திலிருந்தே தேடல் தொடரப்படவேண்டும்

எனக்கோரி, காப்பாளர் என்ற வாய்ப்பிற்கு நன்றியும் கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

***பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராஜா.,***
***வரலாற்றுத் துறை,***
***யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,***
***15 - 03 - 2008.***

## சிரேஷ்ட பெரும் பொருளாளர் பார்வையில்....

### கனவு நனவாகிறது

தொல்லியலில் சிறப்புக் கற்கை நெறியை முடித்து வெளியேறும் முதல் மாணக்கர் “தொல்லியல் ஆய்வு வட்டம்” என்ற மாணவர் அமைப்பை உருவாக்கி அதனூடாக வெளியிடப்படும் தேடல் என்ற சஞ்சிகைக்கு நானும் ஒரு பங்காளியாக இருந்து வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒரு வளாகமாக ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து தொல்லியலை ஒரு சிறப்புப் பாடநெறியாக அறிமுகப்படுத்த வேண்டும் என்பது எமது வரலாற்றுத் துறையின் முதற் பேராசிரியர் கலாநிதி கா.இந்திரபாலா வின் கனவாகும். அந்த இலக்கை அடைய அவர் ஆக்கபூர்வமான அத்திவாரங்கள் பலவற்றையும் தனது காலத்தில் இட்டிருந்தார். இருப்பினும் அவரின் நீண்ட காலக் கனவை 2003ஆம் ஆண்டு வரை அடையமுடியவில்லை. ஆனால் கடந்த காலங்களில் நிரந்தர ஆசிரியர்கள் இன்றி புதிய பாடங்கள் சிலவற்றை சிறப்புப் பாடங்களாக்கிய எமது பல்கலைக்கழகம் இருபைத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக கற்பிக்கப்பட்டு வந்த தொல்லியல் பாடத்தை மட்டும் சிறப்புப் பாடமாக அறிமுகப் படுத்த தயக்கம் காட்டியது. அதற்குப் பல தடைகள் இருந்தன. தப்பான விளக்கங் கள் தரப்பட்டன. ஆனால் 2002-2003 ஆம் கல்வியாண்டில் பேராதனை, ஸ்ரீ ஜெயவாத்தனபுர மற்றும் களனிப் பல்கலைக்கழகங்களுக்கு மேலதிக அனுமதியின் கீழ் (Additional Intake) பல சிங்கள மாணவர்கள் தொல்லியல் கற்க அனுமதிக்கப்பட்ட போது பல்கலைக்கழக மானிய ஆணக்குழு தானாக முன்வந்து ஒரு சில தமிழ் மாணவர்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் அனுமதித்தது. அம்மாணவர்கள் தொல்லியலைத் தவிர வேறு எந்தப் பாடத்தையும் சிறப்புப் பாடமாக கற்பதற்கு அனுமதியில்லை. இதனால் எமது பல்கலைக் கழகத்திலும் தொல்லியலைச் சிறப்புப் பாடநெறியாக ஆரம்பிக்கப்பட வேண்டிய கட்டாயம் உருவானது. இதுவே எமது பல்கலைக்கழகத்தில் தொல்லியல் சிறப்புப் பாடநெறியாக அறிமுகப்படுத்தப்பட்ட வரலாறு என்பதை தேடல் சஞ்சிகையில் பதிவு செய்வது பொருத்தமாகும்.

நாம் எங்கிருந்து வந்தோம் என்பதைத் தெரிந்து கொண்டால்தான் நாம் எங்கே போகிறோம் என்பது தெரியும். அப்பணியைச் செய்வதில் தொல்லியலுக்கு முக்கிய பங்குண்டு. ஆயினும் அதன் பார்வையும், பணியும் சமகால அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப விரிவடைந்தும், மாற்றமடைந்தும் செல்வதைப் பார்க்கலாம். ஒரு காலத்தில் தொல்லியலால் கட்டியெழுப்பப்பட்ட

தேசம், தேசியம், நாடு, இன அடையாளம் என்ற பண்பாட்டு அம்சங்கள் இன்று பலவீனமடைந்து வருகிறது. இன்று பண்பாடு என்பது ஒருவர் சொந்த நாட்டின் எல்லை கடந்து எங்கு வாழ்ந்தாலும் தனது பாரம்பரிய விழுமியங்களுடன் நல்ல கல்வி, உயர்ந்த சுகாதாரம், பொருந்தமான சுற்றுச் சூழல் என்பவற்றுடன் மகிழ்ச் சியாக வாழ்தல் என்ற நிலைக்கு வளர்ந்துள்ளது. அதில் குறிப்பிட்ட இனத்தின் பண்பாட்டு அடையாளங்கள் கண்டறிந்து பாதுகாக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்படும் அதேவேளை, ஏனைய இன மக்களின் பண்பாட்டையும் அறிந்து அவற்றை மதிக்கவேண்டும் என்ற நல்ல பண்பும் காணப்படுகிறது. இதன் மூலம் இனங்களுக்கு இடையிலான இன, மத, பண்பாட்டு முரண்பாடு களை மறந்து கலாசார ஐக்கியத்தை (Cultural Unity), கலாசார பன்மைத்துவத் தினை (Cultural Pluralism) உருவாக்கலாம் என்பது தொல்லியலாளரின் நம்பிக்கையாகும். அந்த நோக்கில் எமது மாணவர்களின் தொல்லியல் பார்வை யும், பாடப்பரப்பும் அமைய வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். அது புகையடர்ந்த நிலையிலுள்ள இலங்கைத் தமிழரின் பண்பாட்டை அடையாளம் காணவும், எனைய இன மக்களின் பண்பாட்டுப் பெருமையை விளங்கிக் கொள்ளவும் உதவும்.

இன்று தொல்லியற் கற்கை நெறியை முடித்து வெளியேறும் ஏழு மாணவர்களும் எமது பல்கலைக்கழகத்தில் தொல்லியலில் பட்டம் பெற்ற முன்னோடி மாணவர்கள் என்ற கௌரவத்திற்கு உரியவர்கள். கடந்த நான் காண்டு காலத்தில் வகுப்பறையில் கற்றவற்றை கள ஆய்வின் போது நேரில் கண்டு களித்த அனுபவசாலிகள். அதன் போது புதியவைகள் சிலவற்றை கண்டு பிடித்த பெருமையும் அவர்களுக்கு உண்டு. அந்த இனிய அனுபவங்களை தேடல் சஞ்சிகையில் புகைப்படங்களோடு பதிவு செய்திருப்பதன் மூலம் மகிழ்ச்சியின் உச்சத்திற்கே சென்றுவிட்டனர். இருப்பினும் அந்த மகிழ்ச்சிக்குப் பின்னால் பல துன்பங்கள், துயரங்கள், தடைகள், ஏமாற்றங்கள் இருந்ததையும் அவர்களுடன் ஒன்றாக அனுபவித்தவன் என்ற வகையில் எனக்கும் நன்கு தெரியும். அவையெல்லாம் இனிவரும் காலத்தில் நீங்கி மகிழ்ச்சியான சூழலில் கற்கவும், துடிப்புடன் களஆய்வில் ஈடுபடவும் பல்கலைக்கழக நிர்வாகம் பக்கபல மாக இருக்கும் என்ற நம்பிக்கை தற்போது தொல்லியல் கற்கும் மாணவர்க ளுக்கு ஏற்பட்டுள்ளது. அந்த நம்பிக்கை வெற்றி பெற இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

***பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்***

# தேடலுக்கு வாழ்த்துக்கள்

யாழ் பல்கலைக்கழக வரலாற்று துறையின் தொல்லியல் மாணவர்களின் தேடல் சஞ்சிகையின் வரவு கண்டு நிறைவடைகின்றேன். தொல்லியல் மாணவர்களின் முதலாவது ஆவணப்படுத்தல் முயற்சியாகவே தேடல் பிறந்திருக்கின்றது.

எமது பிரதேசங்களின் பூர்வீகமும் எங்களின் இருப்பும் வீச்சோடு உலகெங்கும் சொல்லப்பட வேண்டியவையே. கூடவே மகாவம்ச நாமன்களின் மறைப்புக்களுக்கும் புனைவுகளிற்கும் எதிராக எம்மை நாமே நிறுவி நிலைநாட்ட வேண்டும்.

அத்துடன் புதுவிஞ்ஞான யுகத்திற்கு தயாராகும் எமது சமூகத்தின் இனத்துவ அடையாளங்கள் இத்துறை சார்ந்தவர்களாலேயே சொல்லப்படவும் முடியும். ஐ.நா வின் பட்டயங்களும் “வரலாற்றுத் தொடர்ச்சி” என்பதே சுய நிர்ணயத்திற்கான அடிப்படை என்று குறித்துரைக்கின்றன.

இத்தகைய பெரிய பொறுப்பை எழுத்துக்களால் சாத்தியப்படுத்த முனைந்திருக்கின்ற இக்குழுவினர் பாராட்டிற்குரியவர்கள். உலகப் பிரசித்தி பெற்ற வரலாற்றாய்வாளர்களையும், தொல்லிய லாய்வாளர்களையும் பெற்ற இம்மாணவர்கள் உண்மையிலேயே கொடுத்து வைத்தவர்கள்.

ஏதிர்காலத்தில் எமது தொல்லியல் சின்னங்கள் அனைத்தும் விஞ்ஞான ரீதியான காலக்கணிப்பிற்கு உட்படுத்தல் வேண்டும் என்பதோடு..........

எமது சுயத்தை நாமே நிறுவிக்கொள்ள இவ்வெழுத்துக்கள் உதவிட அவாவுகின்றேன்.

– நன்றி

*ந.விநோதரன்,*
*தலைவர்,*
*24-04-2008*

*கலைப்பீட மாணவர் ஒன்றியம்,*
*யாழ் பல்கலைக்கழகம்.*

## கழகத் தலைவரின் எண்ணத்திலிருந்து

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வு வட்டம் தனது முதலாவது தேடலினை இவ்வருடம் உருவாக்கியுள்ளது. தொல்லியல் ஆய்வு வட்டத்தின் உச்ச வளர்ச்சியில் உதயமானதே "தேடல்" என்ற இச் சஞ்சிகை ஆகும். முதலாவது தொல்லியல் சிறப்புக் கற்கைநெறியினைக் கற்று வெளிறேும் முதலாவது மாணவர்களாகிய நாம் பல்வேறு பிரயத்தனங்களின் மத்தியில் இவ்விதழை வெளியிட்டு வைக்கின்றோம். மாணவர்களின் ஆளுமை விருத்தி, ஆராய்சித் திறன் என்பவற்றை வெளிக்கொணர வேண்டும் என்பதற்காக உருவாக்கப் பெற்ற இத்தேடல் காலத்தால் அழியாது தொடர்ந்தும் தேடிக்கொண்டேயிருக்க வேண்டும் என்பதே எனது அவா ஆகும்.

மாணவர்களின் தொகையில் மிகக் குறைந்த எண்ணிக்கை கொண்ட இக்கழகம் முன்னேற வேண்டும் எனத் திடசங்கற்பம் பூண்டு அதற்கமைய பல ஆக்கப் பணிகளை மேற்கொண்டுள்ளோம். தொல்லியல் மையங்களான சாட்டி, பூநகரி, கந்தரோடை போன்ற தொல்லியல் மையங்களிற்கு அடிக்கடி கல்விச் சுற்றுலா மேற்கொண்டு பல மேலாய்வுகளையும், அகழ்வாய்வுகளையும் மேற்கொண்டுள்ளோம்.

இந்த இதழின் வெளியீடு என்பது பலரது அரிய, அயராத உழைப்பின் பயனாக வெளிவருகின்றது. இந்த இதழின் வெளியீட்டிற்கு மிக முக்கிய காரணகர்த்தாவாக விளங்குபவர் எமது பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்களே ஆகும். மற்றும் எமக்கு பல வழிகளிலும் வழிகாட்டிய எமது ஆசான் பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா அவர்களிற்கும், மற்றும் எமது கழகத்தின் நடவடிக்கைகளுக்கு பல்வேறு வகையில் ஒத்துழைப்பு நல்கிய விரிவுரையாளர்கள், நிர்வாக குழு உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மனநிறைவடைகின்றேன். அத்துடன் இத் தேடல் காலமெல்லாம் தேடிக்கொண்டே யிருக்க எனது வாழ்த்துக்கள் தொடர்ந்து வரும் மாணவர்களிற்கு உரித்தாகட்டும்.

*நன்றி*

***பா.கபிலன்***
***தொல்லியல் ஆய்வு வட்டம்***

## கழகச் செயலாளரின் எண்ணத்திலிருந்து..........

யாழ் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வு வட்டத்தின் செயலாளர் என்ற வகையில் தேடலின் வரவு கண்டு பூரிப்படைகின்றேன். *2005/2006* ஆம் கல்வியாண்டிற்கான கழகத்தின் செயற்பாடுகள், வளர்ச்சிகள், முயற்சிகள் பற்றி எழுதுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

*2005/2006* ஆம் கல்வியாண்டிற்கான தொல்லியல் ஆய்வு வட்டம் என்ற கழகம் *29/05/2007* இலிருந்து இன்று வரை இயங்கி வருகின்றது. எமது கழகம் உருவாகுவதற்கு அனுமதி தந்த எமது துறைத்தலைவர் பேராசிரியர். ச.சத்தியசீலன் அவர்களிற்கும், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர். குமாரவடிவேல் அவர்களிற்கும், முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர். இரா.சிவச்சந்திரன் அவர்களிற்கும் முதற்கண் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கழகத்தின் ஆரம்பத்திலிருந்து கழகத்தின் செயற்பாடுகளை தொல்லியல் பாட விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோர் முன்னின்று நடாத்தி வருகின்றனர். அந்த வகையில் கழகத்தின் முதல் முயற்சியான “தேடல்” சஞ்சிகையினை வெளியிட்டு வைத்தல் செயற்பாட்டில் முனைப்புடன் ஈடுபட்டு அம்முயற்சியில் வெற்றியும் கண்டு வருகின்றது. எமது இத் தேடலிற்கு ஆசியுரைகள் வழங்கிய எமது துணைவேந்தர் பேராசிரியர்.நா.சண்முகலிங்கன் அவர்களிற்கும், கலைப்பீடாதிபதி பேராசிரியர்.சோ.கிருஷ்ணராஜா அவர்களிற்கும், உயர் பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர். கந்தசாமி அவர்களிற்கும், எமது துறைத்தலைவர் பேராசிரியர்.ச.சத்தியசீலன் அவர்களிற்கும், எமது கழகக் காப்பாளர் பேராசிரியர். செ.கிருஷ்ணராஜா அவர்களிற்கும், பெரும் பொருளாளர் பேராசிரியர்.ப.புஸ்பரட்ணம் அவர்களிற்கும், எமது நன்றிகள்

மேலும் கழகத்தின் ஏற்பாட்டில் பூநகரி, கந்தரோடை, சாட்டி போன்ற தொல்லியல் மையங்களுக்கு மாணவர்களால் சுற்றுலா மேற்கொள்ளப் பட்டு, பேராசிரியர்.ப.புஷ்பரட்ணம் தலைமையில் அகழ்வாய்வு, மேலாய்வு மேற்கொள்ளப்பட்டது. நாம் மேற்கொண்ட தொல்லியல் அகழ்வாய்வு, மேலாய்வுகளிற்கு பண உதவியளித்த முன்னாள் யாழ்ப்பாண அரச அதிபர்

திரு.செ.பத்மநாதன் அவர்களிற்கும், முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர்.இரா.சிவச்சந்திரன் அவர்களிற்கும், நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். மேலும் எமது கழகத்திற்கான Banner அன்பளிப்புச் செய்த எமது ஆசான் பேராசிரியர்.செ.கிருஷ்ணராஜா அவர்களிற்கும், எமது நன்றிகள்.

மேலும், எமது கழகத்தின் சஞ்சிகை வெளியீட்டில் கன்னி முயற்சியாக வெளிவரும் இச்சஞ்சிகைக்கான நிதியினை சேகரிப்பதற்கு இலங்கையின் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் Sticks வடிவில் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களிற்கு விற்கப்பட்டது. இதன் மூலம் குறிப்பிடத்தக்களவு நிதியினைப் பெற்று இச்சஞ்சிகையைத் தற்போது முழுவடிவில் வெளிக்கொணர்ந்துள்ளது. Sticks அமைத்துத் தந்த கரிகணன் பிறிண்டர்ஸ்ற்கும் எமது நன்றிகள். அதனை விற்பனை செய்வதற்குதவிய பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களிற்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

எனவே, எமது கழகத்தின் இத்தகைய செயற்பாடுகளுக்கு நிதியுதவி வழங்கியும், இன்னும் பல்வேறு வழிகளில் ஆக்கமும் ஊக்கமும் தந்த அனைத்து உள்ளங்களிற்கும் தொல்லியல் ஆய்வு வட்டத்தின் செயலாளர் என்ற வகையில் நன்றியைத் தெரிவிப்பதுடன், இத்தகைய சஞ்சிகையினை எமது இளைய தலைமுறை மாணவர்கள் தொடர்ந்து வெளியிட வேண்டும் என வாழ்த்தி, அதற்கு எல்லாம் வல்ல கணபதி அருட்கடாட்சம் வழங்க வேண்டி பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

நன்றி

***செல்வி.க.துஸ்யந்தினி***

***தொல்லியல் ஆய்வு வட்டம்***

## இதழாசிரியர்களின் எண்ணங்களிலிருந்து.....

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வு வட்டத்தின் முதலாவது வெளியீடான "தேடல்" இதழ் 1 உருவாக்கம் பெற்று உங்கள் கரங்களிலே மலர்ந்துள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தொல்லியல் சிறப்புக் கற்கைநெறியினைக் கற்று வெளிறேும் முதலாவது மாணவர்களாகிய நாம், ஏனைய வருட மாணவர்களுடன் இணைந்து "தொல்லியல் ஆய்வு வட்டம்" என்ற எமது கழக செயற்பாட்டின் மூலம் "தேடல்" என்ற இச் சஞ்சிகையை உருவாக்கியுள்ளோம்.

மேலும், தொல்லியல் இறுதி வருட மாணவர்களின் இடைவிடா முயற்சியும், ஏனைய வருட மாணவர்களின் பூரண ஒத்துழைப்பும், எல்லாவற்றுக்கும் மேலாக எமது ஆசான் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்களின் இடைவிடா ஊக்கமும் தேடலின் கன்னி வெளியீட்டிற்கு அடிப்படை இட்டுக் கொடுத்தன. இச் சஞ்சிகை மாணவர்களின் ஆக்கங்களை மட்டும் தன்னகத்தே கொண்டு மாணவர்களின் புதிய தேடலின் விளைவால் உருவானதாகும். இவ்விதழில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்தும் தொல்லியல், வரலாற்றுத்துறையில் ஆர்வமுள்ளோருக்கும் ஏனையோருக்கும் பயன்தரும் என நம்புகின்றோம்.


இவ்விதழின் உருவாக்கத்திற்கு பல்வேறு வழிகளில் ஆக்கமும், ஊக்கமும் அளித்து ஒத்துழைப்புத் தந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கழக அங்கத்தவர்கள், மாணவர்களுக்கும், இதனை வடிவமைப்பதற்கு எமக்கு ஆலோசனைகள் வழங்கிய பெரும் பொருளாளர் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்களிற்கும், கழகக்காப்பாளர் பேராசிரியர்.செ.கிருஷ்ணராஜா அவர்களிற்கும், இந் நூலினை சிறப்புடன் வடிவமைத்துத் தந்த ஜெயஸ்ரீ அச்சகத்தாருக்கும் கழகத்தின் சார்பில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இவ்விதழ் தொடர்ந்தும் வெளிவரவேண்டும் எனபதே எமது பெரு விருப்பமாகும். இக்கழகம் மாணவர்களின் பல்துறை அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதுடன் வருங்காலத்தில் முனைப்போடு செயற்படவும் வேண்டும் என்ற பேராவலுடன் வாழ்த்தி விடைபெறுகின்றோம்.

நன்றி

***செல்வி. கு. சசிதா***
***செல்வி. த. கெற்சி***
***தொல்லியல் ஆய்வு வட்டம்***

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது வரலாற்றுப் பேராசிரியர் கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா

இலக்கிய கலாநிதி வி.சிவசாமி
முன்னாள் பேராசிரியர் சமஸ்கிருத துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே தொல்லியல் கற்கும் மாணவர்கள் இப் பல்கலைக்கழகத்தின் முதலாவது வரலாற்றுப் பேராசிரியரான கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா அவர்களின் தலைசிறந்த கல்விப் பணிகளைக் குறிப்பாக இப் பல்கலைக்கழக வரலாற்றிலே முதற் தசாப்த காலத்தில் இவர் ஆற்றியுள்ள மகத்தான கல்விப் பணிகளைக் குறிப்பாக வரலாறு, தொல்லியல் பணிகளையும், அவரின் சிறந்த புலமையையும் கௌரவிக்கும் முகமாக தாம் வெளியிடவுள்ள தேடல் என்னும் சஞ்சிகையின் முதலாவது மலரை அவருக்கு சமர்ப்பணம் செய்யவுள்ளனர். எனவே அவரைப் பற்றிய குறிப்புரை ஒன்றினை அவரின் நண்பரும் சக ஆசிரியரும் என்ற வகையில் எழுதித் தருமாறு என்னிடம் விநயமாகக் கேட்டனர். மாணவர்களின் கோரிக்கைக்கு உடன்பட்டு என்னுடைய அன்பிற்கும் நம்பிக்கைக்குமுரிய நீண்ட கால நண்பரும், சக பாடியும், சக ஆசிரியருமாகிய கலாநிதி கா. இந்திரபாலா பற்றி ஒரு குறிப்புரை எழுத வாய்ப்புக் கிடைத்தமை பற்றி மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வாய்ப்பினை அளித்த தொல்லியல் மாணவர்களுக்கு மனமார்ந்த நன்றி.

கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையில் தோன்றிய பிரபல வரலாற்று அறிஞர்களில் ஒருவராவார். அவர் வரலாறு மட்டுமன்றித் தொல்லியல், தமிழ், ஆங்கிலம், பாளி, சிங்களம் முதலியனவற்றிலும் மிகுந்த தேர்ச்சியுள்ளவர். இவற்றுடன் நுண்கலைகள், ஜேர்மானிய, இத்தாலிய, யப்பானிய மொழிகள் முதலியவற்றிலும் குறிப்பிடத்தக்க புலமை வாய்ந்தவர். இவற்றுடன் குரு பக்தி, நன்றியுடைமை, மனித நேயம், சமய பண்பாட்டு விழுமியங்கள் முதலியவற்றை நன்கு மனமார மதித்து விளங்குகிறார். இவர் கடமை புரிந்த பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகங்களைச் சேர்ந்த அனைத்து மட்டத்தினருடன் அன்புடன் பழகியவர். அவர்கள் பலரின் நல்லெண்ணத்தைப் பெற்றவர். பல மாணவர்களை உருவாக்கிய பெருமையும் இவருக்கு உண்டு.

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் அங்குள்ள மிகப் பிரபலமான யாழ்ப்பாண கல்லூரியிலே தான் பல்கலைக்கழகம் புகுவதற்கு முற்பட்ட கல்வியை நன்கு பயின்றவர். தமிழ், ஆங்கிலம், வரலாறு முதலிய பாடங்களிலே நல்ல தேர்ச்சி

அக்கல்லூரியின் மாணவர் சஞ்சிகையான "இளஞாயிறு" என்பதன் தமிழ்ப் பதிப்பாசிரியராகச் சில ஆண்டுகள் விளங்கினார். அதேவேளையில் இங்குதான் இவர் சிங்களத்தையும் முதன் முதலாகக் கற்றார். (அக்கால யாழ்ப்பாணத்திலுள்ள சில பிரபல பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கப்பட்டது.)

1956 ஆம் ஆண்டு இவர் பேராதனை பல்கலைக்கழகத்திலே கற்பதற்கான தகைமை பெற்று அங்கு வரலாற்றினை சிறப்புப் பாடமாக கற்று 1960 ஆம் ஆண்டு சிறப்புக் கலைமாணிப் பட்டத்தினைச் சிறப்பாகப் பெற்றுக்கொண்டார். வரலாற்றுக் கற்கை நெறியில் தொல்லியல் அம்சங்கள், கல்வெட்டியல் போன்றனவும் இடம்பெற்றன. பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலத்தில் சக மாணவர்களுடன் அநுராதபுரத்தில் நடைபெற்ற தொல்லியல் அகழ்வாய்வுகளில் பங்குபற்றினார். வரலாற்றில் மட்டுமன்றி தொல்லியலிலும் மிகுந்த ஈடுபாடு இவருக்கு இருப்பது பற்றித் தாம் அண்மையில் வெளியிட்டுள்ள **"இலங்கையில் தமிழர்**..." எனும் நூலில் "என் வாழ்வில் நிகரற்ற இன்பத்தைக் கொடுக்கும் துறையாக தொல்லியல் இருந்து வந்துள்ளது" என இவரே குறிப்பிட்டுள்ளமையால் நன்கு புலப்படும். இவர் மேற்கொண்ட ஆய்வுகள் அனைத்திலும் தொல்லியல் மூலங்கள் நன்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. தொல்லியலின் துணையின்றிப் புராதன தென்னாசிய வரலாற்றை நன்கு அறிந்து கொள்ளமுடியாது. மேலுமிவர் இந்திய மத்திய அரசின் கீழ் மைசூரில் உள்ள மைசூர் சாசனவியல் அளவீட்டு மையத்திலும் பயிற்சி பெற்றவர்.

1960 ஆம் ஆண்டு தொடக்கம் 1974 ஆம் ஆண்டு பிற்பகுதி வரை இவர் பேராதனை பல்கலைக்கழகத்திலே முதலிலே உதவி வரலாற்று விரிவுரையாளராகவும் பின்னர் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் நன்கு பணிபுரிந்தார். இக்காலகட்டத்திலே (1963-1965) லண்டன் பல்கலைக்கழகத்திற்குச் சென்று **"ஆதி இலங்கையில் திராவிடக் குடியிருப்புக்கள்"** பற்றி ஆராய்ந்து கலாநிதி பட்டத்தினை பெற்றுக்கொண்டு திரும்பினார். இவர் தென்னிந்திய வரலாற்றில் சோழப் பெருமன்னர் காலம் பற்றிய ஆராய்ச்சியினையே விரும்பினார். ஆனால் அப்போதைய வரலாற்றுத் துறை தலைவராக விளங்கிய இவரின் குருவாகிய பேராசிரியர். W.J.F லப்றோய் என்பவர் தான் "இலங்கைத் தமிழர்" பற்றி ஆராய்வது மிகப் பொருத்தமானதாகவும் பயனுள்ளதெனவும் கூறித் தம்மை திசைதிருப்பிவிட்டதாக மேற்குறிப்பிட்ட நூலில் இவர் மிகத் தெளிவாக கூறியுள்ளார். ஆதி இலங்கையில் தமிழர் வரலாறு பற்றி அறிவதற்கான நம்பகரமான வரலாற்று மூலங்கள் அப்போது மிகக் குறைவாகவே கிடைத்தன. 1970 இல் கந்தரோடையில் பென்சில் வேனியப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் நடத்திய அகழ்வாய்வுகளிலும், மற்றும் பொன்பரிப்பு முதலிய இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளிலும், பிற தொல்லியல் கண்டுபிடிப்புக்களிலும் இவர் ஈடுபட்டார். இதன் விளைவாக இலங்கை தமிழர் வரலாறு

பற்றித் தாம் கொண்டிருந்த கருத்துக்களைக் காலப்போக்கிலே மாற்றியுள்ளார். ஆனால் துரதிர்ஷ்டமாக இவர் ஆய்வினை மேற்கொண்ட காலத்தில் இவை கிடைக்கவில்லை. எனவே கிடைக்ககூடிய வரலாற்று மூலங்களைக் கொண்டு ஆய்வினை முடித்தார்.

1960களின் பிற்பகுதியிலே பல தமிழ்க் கல்வெட்டுக்கள் கிழக்கு இலங்கையில் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் பலவற்றை இவரே வாசித்துக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இக்காலகட்டத்தில் இவர் **சிந்தனை** எனும் காலாண்டு சமூகவிஞ்ஞான சஞ்சிகை மூலம் புதிய கண்டுபிடிப்புக்கள் பற்றியும் இவை தொடர்பான வரலாறு, தொல்லியல் பற்றித் தாமும், வேறு சிலரும் எழுதிய கட்டுரைகளையும் இவை பற்றிய செய்திகளையும் வெளியிட்டு வந்தார்.

யாழ்ப்பாணத்திலே தொல்லியல் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தி அதன் முக்கியத்துவத்தினை மக்களுக்கு எடுத்துக் காட்டும் முகமாக யாழ்ப்பாணத் தொல்லியல் கழகத்தினை யாழ்ப்பாண நூதனசாலை அதிபருடனும் இக்கட்டுரையாளருடனும் சேர்ந்து 1971இல் தோற்றுவித்தார். இதன் அலுவலகம் யாழ்ப்பாண கல்லூரி பட்டதாரிப் பிரிவில் செயற்பட்டது. இக் கழகம் தொல்லியல் பற்றிய விரிவுரைகள், தமிழ்ச் சாசன விரிவுரைகள், தொல்லியல் மேலாய்வுகள் முதலியனவற்றைச் சில ஆண்டுகளாகச் செவ்வனே செய்து **பூர்வகலா** எனும் சஞ்சிகையினையும் வெளியிட்டது. மேலும் யாழ்ப்பாணத்திலும் வேறு சில இடங்களிலும் சமகாலத்தில் கண்டுபிடித்த தமிழ்க் கல்வெட்டுக்களையும் இவர் தாமும் வேறு சிலருடனும் சேர்ந்தும் Epigraphica Tamilica எனும் பெயரிலே இத்தொல்லியல் கழகப் பிரசுரமாக அவற்றை வெளியிட்டார். மேலும் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையின் கலாநிதிப்பட்ட ஆய்வான **பாண்டியக் கல்வெட்டுக்கள்** இக்கழகப் பிரசுரங்களில் ஒன்றாக வெளிவந்துள்ளது. இத்தொல்லியற் கழகச் செயற்பாடுகளில் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலை மாணவர்களும் ஈடுபட்டனர். அவர்களில் பிரபலமானவர் கலாநிதி பொ.இரகுபதி. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடங்கிய பின் இதன் அலுவலகம் இப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டது.

1974 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி இன்றைய யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகம் எனும் பெயரில் தொடங்கிற்று. இப் பல்கலைக்கழகத் தொடக்கம் இப்பிராந்திய வரலாற்றிலே பல வழிகளிலும் ஒரு முக்கியமான நிகழ்வாகும். வளாகத்தின் தலைவராக கலாநிதி .கா.கைலாசபதியும், மனிதப் பண்பியல் பீடத்தின் (இன்றைய கலைப் பீடம் அன்று இவ்வாறு அழைக்கப்பட்டது) தலைவராக கலாநிதி கா.இந்திரபாலாவும், திரு. பே.கனகசபாபதி விஞ்ஞான பீடாதிபதியாகவும் நியமிக்கப்பட்டனர். ஆரம்ப காலத்தில் புதிய பல்கலைக்கழகம் எதிர்நோக்கிய பல பிரச்சினைகளை இம்மூவரும் தக்கவாறு எதிர்கொண்டு மும்மூர்த்திகள் போல நன்கு வழிநடத்திவந்தனர். வளாகத்தின் தலைவரும் மனிதப் பண்பியல் பீடாதிபதியும் ஒரே பீடத்தினை சேர்ந்தவர்களாகையால் இவர்கள் ஒன்றாகச் சேர்ந்து கலைப்பீடத்தினை பல வழிகளிலும் வளர்த்து வந்தனர். தமிழ், இந்து

நாகரிகம், வரலாறு, சிங்களம் எனும் நான்கு துறைகளுடன் தொடங்கிய வளாகத்தில் மேலும் புவியியல், பொருளியல் சமஸ்கிருதம் போன்ற துறைகள் சாதுரியமாக ஏற்படுத்தப்பட்டன. சட்டத்துறை பரிந்துரை செய்யப்பட்ட போதும் அது தொடங்கப்படவில்லை.

முதலில் பல ஆண்டுகள் தனியார் நிறுவனமாகவும், பின்னர் அரசாங்கம் நடத்திய அழகியல் நிறுவனத்தின் ஒரு பகுதியாக விளங்கியதுமான இராமநாதன் நுண்கலைக் கழகத்தினை அப்போதைய கல்வியமைச்சின் செயலாளரான திரு.இ.பாஸ்கரலிங்கத்தின் ஆலோசனைக்கேற்ப இவர்கள் 1975 இல் இப்பல்கலைக்கழகத்துடன் இணைத்தனர்.இதனை நன்கு ஒழுங்குபடுத்திப் பல வழிகளிலும் வளர்ப்பதற்கு இருவரும் நன்கு செயலாற்றினார். வளாகம் தொடங்கிய பின்னரே பேராசிரியர் பதவிகள் விளம்பரப்படுத்தப்பட்டு 1975 இல் இவர்கள் நியமனம் பெற்றனர். யாழ்ப்பாண வளாகம் பற்றிய வர்த்தமானியிலே கூறப்பட்டுள்ள நான்கு துறைகளில் ஒன்றாக வரலாறு தொல்லியல் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கேற்பவே வரலாறு தொல்லியல் பேராசிரியர் பதவிக்கான விளம்பரம் செய்யப்பட்டது. இதற்குப் பேராசிரியராக கலாநிதி.கா.இந்திரபாலா தெரிவுசெய்யப்பட்டார். இதிலுள்ள இரண்டு பாடங்களிலும் (வரலாறு தொல்லியல்) அவருக்குத் தகைமையும், ஈடுபாடுமிருந்தன. அவருக்கு அனுப்பப்பட்ட முதல் நியமனக் கடிதத்திலும் விளம்பரத்திலிருந்தவாறே வரலாறு தொல்லியல் பேராசிரியர் என்றே கூறப்பட்டது. ஆனால் ஏதோ காரணத்தினால் அது கைவிடப்பட்டு வரலாற்றுப் பேராசிரியர் எனப் பின்னர் பதவி பெற்றார்.

இவ்வாறு முதலாவது வரலாற்றுப் பேராசிரியராக நியமனம் பெற்ற இவரே அத்துறையினை பல வழிகளிலும் வழிநடாத்தி வளர்ப்பதிலீடுபட்டார். திறமையான விரிவுரையாளர் பலரை நியமித்து அவர்கள் பட்டப் பின் ஆய்வு செய்வதற்கான வழிவகைகளைச் செய்து கொடுத்தார். தொல்லியலில் ஈடுபாடுள்ளவராக தொல்லியல் மேலாய்வுகளிலும் இவை தொடர்பானவற்றிலும் தாமும், சகவிரிவுரையாளர்களும், மாணவர்களும் ஈடுபட்டனர். தொல்லியலுக்கான அருங்காட்சியகம் ஒன்றை அமைப்பதிலும் இவர் நன்கு ஈடுபட்டார். கலாநிதி பொ.இரகுபதி ஆனைக்கோட்டையில் கண்டுபிடித்த தொல்லியல் தலத்தினை இவரே தலைமை யேற்று நடாத்தினர். வரலாற்றுக்கான பாடத்திட்டத்தினை வகுக்கும் போது தொல்லியல் பற்றிய பாடப்பரப்புக்களும் அதில் இடம்பெற்றன. மனிதப் பண்பியல் பீடத்தின் தலைவராக பல துறைகளை ஏற்படுத்துவதிலும் திறமையான விரிவுரையாளர்கள், பேராசிரியர்களை நியமிப்பதிலும் வளாகத்தின் தலைவருக்கு உறுதுணையாக இருந்தார். முதலாம் ஆண்டு கலைப்பீட மாணவர்கள் (இராமநாதன் நுண்கலை மாணவர்கள் உட்பட) அனைவரினதும் பொது அறிவினை வளர்க்கும் முகமாகப் பல்துறைக் கற்கைநெறி அவர்களுக்கு கட்டாய பாடமாகப் போதிப்பதற்கான செயற்பாட்டினை மேற்கொண்டார். இப்போதனையிலே பல துறைகளைச் சேர்ந்த விரிவுரையாளர்களும் பங்கெடுத்தனர்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் நலனுக்காக ஆசிரியர் சங்கம், சிரேஷ்ட

பொது அறை, மாணவர் சங்கங்கள் அமைக்கப்பட்டன. கலைப்பீட ஆசிரியர்களின் ஆராய்சிகளை ஊக்கப்படுத்தி பிரசுரிப்பதற்காகத் தமிழில் **"சிந்தனை"** எனும் சஞ்சிகையும் , ஆங்கிலத்தில் ***"The Sri Lanka Journal of South Asian Studies"*** எனும் ஆங்கில சஞ்சிகையும் இவரால் தொடங்கப்பட்டன.

இரண்டாவது தடவையாக கலைப்பீடாதிபதியாக இருந்த போது இராமநாதன் நுண்கலைக்கழக இசை, நடனப் போதனாசிரியர்களின் கலைத்திறனையும், புலமையையும், ஆய்வு நோக்கினையும் மேம்படுத்தி அவர்கள் பதவி உயர்வு பெறும் நோக்கில் அவர்களைச் சேவை மூப்பின் அடிப்படையிலே துணைவிரிவுரையாளர்களாக உயர்த்துவதில் துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் துணையுடன் செயற்பட்டார். இவ்வாறு அவர்கள் நியமனம் பெற்று இந்தியாவில் பட்டப்படிப்பினை மேற்கொள்ள வழிவகுத்தார். இதன்படி முதன் முறையாக மூத்த நடனப் போதனாசிரியரான செல்வி.சாந்தா பொன்னுத்துரை துணைவிரிவுரையாளராகப் பதவி உயர்வு பெற்று மும்பையில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் நடனத்திலே முதுகலைமாணிப் பட்டம் பெற்றுத் திரும்பினார். ஆனால் அவருக்குரிய பதவி உயர்வு வழங்கப்படவில்லை. இதனாலும், வேறுசில காரணங்களாலும் அவர் பதவியில் இருந்து விலகி வெளிநாடு சென்றார். இசைப் போதனாசிரியர் ஒருவருக்கும் துணைவிரிவுரையாளர் பதவி வழங்கிய போதும் அவர் அதனை ஏற்காது பதவி விலகி வெளிநாடு சென்றார். இக்கால கட்டத்தில் கலாநிதி இந்திரபாலாவும் பதவி விலகிவிட்டார். இதன் பின்னர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பேராசிரியர் அ.துரைராஜா ஆகியோரின் பெரும் முயற்சியின் விளைவாகப் போதனாசிரியர்கள் பலரும் துணைவிரிவுரையாளர்களாகப் பதவி உயர்வு பெற்று முதுகலைமாணிப் பட்டத்தினை இப்பல்கலைக்கழகத்திலேயே மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டது.

சமகால அரசியல், பொருளியல், கலாசார சிந்தனைக்கேற்பத் தென்னாசியவியலில் இவர் கவனம் செலுத்தினார். இக்கருத்தினை முன்னெடுக்கும் வகையில் மேற்குறிப்பிட்ட ஆங்கில சஞ்சிகையின் பெயரை குறிப்பிடலாம். **தென்னாசியவியல் சங்கம்** ஒன்றை நிறுவி அதில் இங்குள்ள அறிஞர்கள் மட்டுமன்றி அவ்வப்போது தென்னிலங்கை, வெளிநாடுகளைச் சேர்ந்த அறிஞர்களும் பயனுள்ள விரிவுரைகள், கருத்தரங்குகள் நடாத்த வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனால் காலப்போகில் அது செயலிழந்து விட்டது. மேற்குறிப்பிட்டவற்றிற்கு நல்ல அனுசரணையாக நூலகத்தில் தென்னாசியவியல் பற்றிய பகுதியும் ஒழுங்கு செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தரசரின் தலைநகராக விளங்கிய **சிங்கைநகர்** பற்றி நன்கு ஆய்வு செய்வதற்கான ஆய்வுத்திட்டம் ஒன்றையும் வகுத்திருந்தார். மேலுமிவர் 1977 ஆண்டு சுமார் ஒரு மாதகாலத்திற்கு மேலாக பதில் துணைவேந்தராகவும் நன்கு கடமையாற்றினர். 1984 இல் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதலாவது தென்னாசியவியல் பேராசிரியராக நியமனம் பெற்று சில காலம் அங்கு கடமை யாற்றிப் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சேவையில் இருந்து விலகி அவுஸ்ரேலியா

சென்று அங்கு குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகிறார்.

இவர் பல நூல்களையும், சஞ்சிகைகளையும் வெளியிட்டுள்ளார். இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வெளியிடப்பட்டு வரும் சஞ்சிகைகளில் ஆங்கிலத்திலும், தமிழிலும் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வருகிறார். இவர் எழுதிய நூல்கள்

I. யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம், கண்டி 1972.

II. இலங்கையில் திராவிடக்கட்டிடக்கலை இரண்டாம் பதிப்பு சென்னை 1999.

III. The Evolution of an Ethnic Identity, The Tamils in Sri Lanka C.300 BC to C 1200 CE. Sydney 2005. .

IV. இலங்கையில் தமிழர் - ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு, கொழும்பு-சென்னை. 2006.(முன்னைய நூலின் தமிழாக்கம்) ஆங்கிலத்தில் உள்ள மூல நூலினை ஒரு பிரபல சிங்கள நிறுவனம் சிங்கள மொழியில் மொழிபெயர்த்து வெளியிடுகின்றது.

இந்நூல் புராதன இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் மிகப் பெரிய பங்களிப்பாகும். இவர் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆய்வு செய்து வந்தவற்றை இந்நூலின் மூலம் நிறைவு செய்திருப்பதாகத் தாமே இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நூலுக்கு இலங்கையிலும், வெளிநாடுகளிலும் நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது. இதனால் 2005இல் ஆங்கிலத்தில் வெளிவந்த இந்நூல் 2007 இல் இரண்டாவது பதிப்பாக வெளியிடப்பட்டது. இவர் பதிப்பித்த ஆய்வுச் சஞ்சிகைகள், பிற பிரசுரங்கள்.

1. சிந்தனை காலாண்டுச் சஞ்சிகை 1968, 1969, 1970 ஆம் ஆண்டுகளில் பேராதனையில் இருந்து வெளிவந்தவை.

2. கலைப்பிட ஆங்கிலச் சஞ்சிகையான ***The Sri Lanka Journal of South Asian Studies***
(முதலாவது பதிப்பாசிரியர்)

3. ***Epigraphica Tamilica***, part-1, Jaffna, 1970.

4. ***Dr.James Thevadasan Rutnam 75th Birth day Felicitation volume***, Jaffna Archaeological Society. 1975. (கலாநிதி ஜேம்ஸ இரத்தினம் யாழ்ப்பாணத் தெல்லியற் கழகத்தின் தலைவராக இருந்து கழகத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது).

5. கலைப்பீட மாணவர்களுக்கான கலைப்பீடக் கைநூல் 1984.

6. வளாகச்செய்திகள் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே நடைபெற்ற முக்கியமான நிகழ்வுகளை வளாகச் செய்திகள் என்னும் சிற்றிதழ் மூலம் இவர் ஆவணப்படுத்தினார்.

இவர் தமிழர் வரலாறு, பண்பாட்டு விழுமியங்களை எவ்வாறு மதித்து நோக்கினார்

என்பதற்கு கலைப்பீட ஆங்கிலச் சஞ்சிகையில் முகப்பிலே நடராசர் திருவுருவத்தை இலச்சினையாகப் பயன்படுத்தியமையும் ஏனைய பேராசிரியர்களுடன் இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இலச்சினையாக எருதினை தேர்ந்தெடுத்துள்ளமை யினையும் குறிப்பிடலாம். இது யாழ்பாண அரசின் இலச்சனையாகும். மேலும் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்திலே தமிழர் பண்பாட்டின் தனிச் சிறப்பினை எடுத்துக் காட்டும் வகையில் பட்டமளிப்பு விழாவில் பயன்படுத்தும் மேலங்கிகள் மஞ்சள் நிறமும், சருகையும் கொண்டதாகவும் பல்கலைக்கழக வேந்தர், உபவேந்தர் மேற்கூறப்பட்ட அங்கிகளுடன் தலைப்பாகையும் அணிந்து செல்வதற்குமான தீர்மானம் எடுத்தமையில் இவரும் முக்கிய மான பங்களிப்புச் செய்துள்ளார். ஆனால் அவர் விலகிய பின் இது கைவிடப்படடுட எனைய பல்கலைக்கழங்கள் போன்ற மேலங்கி பயன்படுத்தப்படுகிறது. இவரும் பேராசிரியர் கைலாசபதியும் வேறு சிலரும் சேர்ந்து யாழ்ப்பாணம் பற்றிய கைநூல் ஒன்றினை 1980 இல் அரச வெளியீடாகப் பதிப்பித்தமையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. அதில் யாழ்ப்பாணத்திலே தமிழரின் தொன்மை பற்றி இவர் கூறிய கருத்துக்கள் சிறப்பாக நோக்கத்தக்கவை.


இவர் இப்பல்கலைக்கழகத்திலே சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆக்கபூர்வமான சேவைகளை குறிப்பாக வரலாறு, தொல்லியல் அறிவியல்களுக்குச் செய்துள்ளார். அந்த வகையில் அவரின் மகத்தான சேவை மறக்கப்படாது கௌரவிக்கப் படுவது பொருத்தமானதே. இதனைச் செய்துவரும் தொல்லியல் மாணவர்களும் தொல்லியல் வரலாற்று விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் நன்கு பாராட்டுக்கு ரியவர்கள்.

இவர் பல்கலைக்கழகத்தை விட்டு விலகிப் பல ஆண்டுகள் கழிந்த போதிலும் ஆராய்ச்சிப் பணியில் இருந்து விலகவில்லை. அண்மையில் இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி வெளியிட்ட நூலுக்குப் பின்னர் தொடர்ந்து தமிழ்ச் சாசனங்கள் பற்றிய ஆய்வில் ஈடுபாடு காட்டி வருகிறார். தம்முடைய அருமை நண்பர்களில் ஒருவரான அமரர் பேராசிரியர் கா.கைலாசபதியின் 25வது நினைவு தினத்தை ஒட்டிச் சங்ககாலம் பற்றிய ஒரு ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பினை வெளியிடுவதிலும் ஈடுபட்டு வருகிறார். இவருடைய பல்வேறு சாதனைகளுக்கும் இவரின் அன்பு மனைவியும், அருமைப் பிள்ளைகளும், மருமக்களும் உறுதுணையாக உற்சாகமளித்து வருகின்றனர். இவ்வரலாற்றுப் பேராசான் உடல் நலம், உளநலம், பொருள்நலம் வாய்ந்து வரலாறு, தொல்லியல் மற்றும் அறிவியல் கல்விசார் பணிகள் தொடர்ந்து செய்ய எல்லாம் வல்ல இறைவன் இவருக்கும் இவருடைய குடும்பத்தினருக்கும் நன்கு திருவருள்பாலிப்பாராக.

*****    *****

# இலங்கை மக்களின் பண்டைய சமய நம்பிக்கைகளை வெளிப்படுத்தும் லக்ஷ்மி நாணயம்
# - ஒரு தொல்லியற் பார்வை -

**செல்வி. கு.சசிதா**
**தொல்லியல் சிறப்புக்கலை**
**இறுதிவருடம்**



பாக்கர் என்பவரால் (Parkar *1981:463*) கி.பி.1885 இல் முல்லைத்தீவில் மட்குடம் ஒன்றிலிருந்து 51 லக்ஷ்மி நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1917 இல் கந்தரோடையில் நூற்றுக்கு மேற்பட்ட நாணயங்கள் பெறப்பட்டன. இவற்றைக் கண்டெடுத்த போல் பீரிஸ் அவற்றில் இடம் பெற்றுள்ள பெண் உருவத்திற்கு "கஜலக்ஷ்மி" எனப் பெயரிட்டார். இப்பெயரே இன்றுவரை இந்த நாணயத்துக்குரிய பெயராகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.


லக்ஷ்மி நாணயங்கள் இலங்கையின் பல வட்டாரங்களில் கண்டுபிடிக்கப்பட்டாலும், வகையிலும் தொகையிலும் அதிகமான நாணயங்கள் தென்னிலங்கையிலும், வட இலங்கையிலும் கிடைத்துள்ளன. கந்தரோடையின் பின்னர் நல்லூர், மாதோட்டம், வல்லிபுரம், ஆனைக்கோட்டை, உடுத்துறை, நாகர்கோயில், பூநகரி வட்டாரத்தில் மண்ணித்தலை, ஈழவூர், பள்ளிக்குடா, கல்முனை போன்ற இடங்களிலும், வட இலங்கைக்கு வெளியே அநுராதபுரத்தில் உள்ள தூபராம மற்றும் கிரிபத் விகாரைப் பகுதிகளிலும், நிந்தவூர், புத்தளம், திஸமாறகம, சிலாபம், அண்மையில் அக்குறுகொட ஆகிய இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வு, அகழ்வாய்வுகளிலும் அதிக எண்ணிக்கையிலான நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (Codrington *1924, சிவசாமி 1974, கிருஷ்ணராஜா 1983, புஷ்பரட்ணம் 1998,* Bopearachchi *1998, 1999).*

இந்த நாணயங்கள் அனைத்தும் நீள் சதுர வடிவில் உள்ளன. இது சமகாலத்தில் தென்னாசியாவில் வெளியிடப்பட்ட வட்டம், சதுரம் போன்ற வடிவமைப்புடைய நாணயங்களில் இருந்து வேறுபட்டவை. ஆனால் இந்தியாவில் கி.மு.3ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டதாகக் கருதப்படும் நாணயம் ஒன்று இதே வடிவமைப்புடன் கூடியது. ஆனால் அதன் ஒரு பக்கத்தில் மட்டும் கற்பகதரு என்னும் விருட்சம் பல இலைகளுடன் கூடியதாகக் காணப்படுகின்றது (Mansulchlat *1998).* ஏனைய அம்சங்களில் இரு நாணயங்களிடையேயும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவற்றைத் தவிர இதே வடிவமைப்புடன் கூடிய நாணயம் எதுவும் இக் காலத்தில் இந்தியாவில் இருந்ததாகத் தெரியவில்லை. இலங்கையில் தொடக்க காலத்தில் இந்நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட போது இவற்றை நாணயமாக எடுக்காது சமயச் சின்னமாகக் கருதப்பட்டது. ஆனால் காலப்போக்கில் இவை புராதன நகரங்களிலும், வர்த்தக மையங்களிலும் ஏனைய நாணயங்களுடனும் கிடைத்ததால் இவை பண்டைய காலத்தில் புழக்கத்தில் இருந்த நாணயங்கள் என்பது தெரியவந்தது. இந்நாணயங்களின் முன்புறத்தில் நிற்கும் நிலையில் பெண் வடிவமும், பின்புறத்தில் பீடத்துடன் கூடிய சுவஸ்திகாவும் முக்கிய சின்னங்களாகக் காணப்படுகின்றன. ஆனால் நாணயத்துக்கு நாணயம் வடிவமைப்பு, அளவு, எடை என்பவற்றில் வேறுபடுகின்றன. இந்நாணயங்கள் ஆகக் கூடிய எடையாக 16 கிராம் கொண்டவையாக காணப்படுகின்றன.

*******                                   ******

கருத்துக்கள் நிலவுகின்றன. இவ் நாணயங்கள் பற்றி ஆராய்ந்த அறிஞர்களில் ஒரு சாரார் இவை கிறிஸ்துவுக்கு பிற்பட்ட காலத்தில் புழக்கத்தில் வந்ததாகக் கருதுகின்றனர். பூநகரியில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து நாணயங்களும் மேற்புடை ஆய்வில் பெறப்பட்டவை. ஆனால் அவற்றுடன் இணைந்திருக்கக் கூடிய பிற சான்றுகளை அடையாளம் கண்டு காலத்தை கணிப்பது கடினமாகும். முல்லைத்தீவில் கிடைத்த நாணயங்களை ஆய்வு செய்த எச்.பாக்கர் நாணயங்களில் வரும் சின்னங்களையும், இலங்கையின் பண்டைய கால அரசியல் வரலாற்றையும் தொடர்புபடுத்தி இவற்றின் தோற்றகாலம் கி.மு.2ஆம் நூற்றாண்டிற்கு பிற்பட்டதாக இருக்கலாம் எனக் கணித்துள்ளார். (Parkar 1981:463–482).

அண்மையில் அநுராதபுர அகழ்வாய்வில் பெறப்பட்ட கலாச்சாரச் சின்னங்களுடன் இவ்வகை நாணயங்களும் கிடைத்துள்ளன. இக்கலாசாரப் படைகளின் காலம் கி.மு.2ஆம் நூற்றாண்டு என கணிப்பிடப்பட்டுள்ளது (Bopearachchi 1999:154). மற்றும் வட இலங்கையில் ஆனைக்கோட்டையில் பெருங்கற்காலப் புதைகுழியில் இருந்து ஒரு நாணயம் பெறப்பட்டது. இப் புதைகுழியில் கிடைத்த சாசன முத்திரை ஒன்றின் காலம் கி.மு.3ஆம், அல்லது 2ஆம் நூற்றாண்டு என கணிப்பிடப்பட்டுள்ளது (Ragupathy 1987:124). அநுராதபுர அகழ்வில் பிற தொல்பொருட்களுடன் கிடைத்த சான்றுகளின் அடிப்படையிலும் ஆனைக்கோட்டை சாசனத்தின் அடிப்படையிலும் இந்நணயங்களின் தோற்ற காலம் கி.மு.2ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென எடுத்துக் கொள்ள இடமுண்டு. ஆயினும், பல இடங்களில் பிற்பட்ட கால உரோமர் நாணயங்களுடனும் இந் நாணயங்கள் கிடைத்திருப்பதால் இதன் புழக்கம் கி.பி.4ஆம் நூற்றாண்டு வரை இருந்ததெனக் கூறமுடியும்.




இந்திய நாணயங்களில் சுவஸ்திகா ஒரு முக்கிய சின்னமாக இடம் பெற்றுள்ளது. இந்த அம்சத்தை லக்ஷ்மி உருவம் பொறித்த நாணயங்களிலும் காணமுடிகின்றது. ஆனால், இலங்கையில் காணப்பட்ட லக்ஷ்மி உருவம் பொறித்த நாணயங்களில் பீடத்துடன் கூடிய சுவஸ்திகாவே கூடுதலாகக் காணப்படுகிறது. ஆனால் பீடத்துடன் கூடிய சுவஸ்திகா சின்னத்ததை இந்தியாவில் காணமுடியாது. இந்தியாவில் பல வடிவங்களில் நாணயங்கள் வெளியிடப்பட்டதற்கு சான்றுகள் காணப்படுகின்ற போதிலும் இவ் லக்ஷ்மி நாணயங்களை ஒத்த வடிவ நாணயங்களை இதுவரை காணமுடியவில்லை. சிலர் வட இந்திய நாணயங்களுடன் தொடர்புபடுத்துகின்றனர் (Bopearachchi 1999:29). ஆனால் அவற்றில் வரும் பெண் உருவங்கள் முற்றிலுமாக லக்ஷ்மி நாணயங்களில் இருந்து வேறுபட்டிருப்பதுடன் அவை வட்ட வடிவ நாணயங்களில் மட்டும் உள்ளன. மேற்கூறப்பட்ட வற்றில் இருந்து லக்ஷ்மி நாணயங்கள் இலங்கையில் வெளியிடப்பட்டதென நிச்சயப்படுத்திக் கூறலாம். ( புஷ்பரட்ணம் 2003:104). இதை உறுதிப்படுத்தும் வகையில் மிகச் சமீபத்தில் இந் நாணயங்களிற்குரிய சுடுமண் அச்சுக்கள் பல தென்னிலங்கையில் கிடைத்தள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

லக்ஷ்மி நாணயங்களை இலங்கைக்குரியதாகக் கொள்ளும்போது இவற்றை வெளியிட்டவர்கள் யார்? என்ற கேள்வி எழுகிறது. கி.மு.3ஆம் நூற்றாண்டில் இருந்து பௌத்தம் அரச மதமாக இலங்கையில் இருந்ததனால் அம்மதத்திற்கு சார்பாக ஆட்சி புரிந்த சிங்கள மன்னர்கள் இந்துமத செல்வாக்கை காட்டும் லக்ஷ்மி நாணயத்தை வெளியிட்டிருக்க மாட்டார்கள் என நிச்சயமாக கூறலாம். சிங்கள மன்னர்களது நாணயங்களிலும் கொடிகளிலும் அரச இலச்சினையாக இடம் பெறும் சிங்கம் லக்ஷ்மி நாணயங்கள் எதிலும் இடம் பெறவில்லை. மாறாக இலங்கைத் தமிழ் மன்னர்கள் கி.பி.13 ஆம் நூற்றாண்டில் புனித சின்னமாக

நிற்கும் நிலையிலும் சித்தரிகப்பட்டுள்ளது. எச்.பாக்கர் தமிழ் நாட்டில் இருந்து வந்து ஆட்சி புரிந்த எல்லாளன் போன்ற தமிழ் மன்னர்களினால் இந்நாணயம் வெளியிடப்பட்டிருக்கலாம் எனக் கூறியுள்ளார். நூறு ஆண்டுகளுக்கு முன்பு அவர் கூறிய கருத்து இற்றை வரை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால் இந்நாட்டு வரலாற்றோடு தமிழ் மக்களிற்குரிய தொடர்பைக் காட்டும் அண்மைக்கால தொல்லியல் கண்டுபிடிப்புகளின் பின்னணியில் நோக்கும் போது அவரின் கருத்து பொருத்தமாகவே தென்படுகின்றது. இதனால் இந்நாணயத்தை தமிழ் மன்னர்களோடு அல்லது தமிழ் வணிகர்களோடு தொர்டர்புபடுத்துவதே பொருத்தமானதாகும். ( புஷ்பரட்ணம் 2003:104).




இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள் அனைத்திலும் நிற்கும் நிலையிலும், அமர்ந்த நிலையிலும் பெண் உருவம் காணப்படுகின்றது. ஆனால் அக்குறுகொட, உடுத்துறை போன்ற இடங்களில் கிடைத்த நீள்சதுர நாணயங்கள் சிலவற்றில் காணப்படும் உருவம் ஆண் தெய்வத்தைக் குறிப்பதாகவும் கருதப்படுகின்றது. பெண் உருவத்தைப் பொதுவாக கஜலக்சுமி உருவம் எனக் கூறப்பட்டுள்ளது. இவை நாணயங்கள் வெளியிடப்பட்டவர்களின் சமய நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றன. ஆனால் எல்லாப் பெண் உருவங்களும் கஜலக்ஷ்மி உருவமா என்பதை நிச்சயப்படுத்த முடியவில்லை. பூநகரியில் கிடைத்த நாணயம் ஒன்றில் பெண் உருவம் ஸ்ரீவத்சா நிலையில் இருந்து சற்று வேறுபட்டு வளர்ச்சியடையாத நிலையில் உள்ளது. பூநகரியில் கிடைத்த மற்றும் சில நாணயங்களில் தாமரைத் தண்டிற்குப் பதிலாக வேல், அம்பு, சூலம் போன்ற சின்னங்களுடன் பெண் உருவம் காணப்படுகின்றது (புஷ்பரட்ணம் 200). சில நாணயங்களில் தாமரை ஆசனத்தில் நிற்கும் பெண்ணைத் தாமரை மலரில் நிற்கும் இரு யானைகள் நீர்தெளித்து அபிடேகம் செய்யும் காட்சி இடம்பெற்றுள்ளது. இது ஸ்ரீசூக்மத்தில் லக்ஷ்மி பற்றிவரும் வர்ணனையைப் பெருமளவு ஒத்துள்ளது. (சிவசாமி 1974:29). அநுராதபுரம், முல்லைத்தீவு போன்ற இடங்களில் கிடைத்த சில நாணயங்கள் தலைவிரி கோலமாக இடது காலை மடித்து குந்தியிருக்கும் நிலையில் காணப்படுகின்றது. இந்த வேறுபாடுகளால் நாணயங்களில் வரும் பெண்ணுருவம் கஜலக்ஷ்மியை மட்டும் குறிக்காது காளி, துர்க்கை போன்ற சக்தியின் ஏனைய வடிவங்களையும் குறிக்கின்றது எனக் கருத இடமுண்டு ( புஷ்பரட்ணம் 2003).



டி.பி.ஈ. கெற்றியாராச்சி லக்ஷ்மி நாணயத்தில் வரும் யானையும் பெண்ணுருவமும் மாயாதேவி கனவைப் பிரதிபலிப்பதாகக் கருதுகின்றார். இதற்குச் சார்பாக பார்ஊட், சாஞ்சி, புத்தகாயா, இலங்கையில் அபயகிரி போன்ற பௌத்த விகாரைகளில் வரும் மாயாதேவியின் கனவை சித்திரிக்கும் சிற்பங்களைச் சான்று காட்டுகின்றார். (1950:194122). இந்திய நாணயங்களில் யானை ஒரு முக்கிய சின்னமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது குறிப்பிட்ட ஒரு வம்சத்தை அல்லது மதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதாகத் தெரியவில்லை. சங்க காலத்தில் மூவேந்தர், குறுநில மன்னர் வெளியிட்ட நாணயங்களில் பொதுவான ஒரு சின்னமாக யானை இடம்பெற்று உள்ளது. எனவே யானையைக் குறிப்பிட்ட ஒரு மதத்திற்குரியதாகக் கூறுவது பொருத்தமாயில்லை. இலங்கையில் சிங்கள மன்னர் தாம் வெளியிட்ட நாணயங்களில் பௌத்த சின்னங்களுடன் சிங்கத்தினைப் பயன்படுத்திய அளவுக்கு யானையைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. இதனால் யானையைப் பௌத்த மதத்திற்கு மட்டும் உரிய சின்னமாகக் கொள்ள முடியாது.

நாணயங்களில் இடம்பெற்றுள்ள பெண் உருவத்தைப் பௌத்த விகாரைகளில்

இவ்யக்ஷி உருவத்தின் தோற்றம் இவ் லக்ஷ்மி நாணயங்களின் தோற்றத்தைவிடக் காலத்தால் பிற்பட்டது. கி.பி. 1ஆம் நூற்றாண்டின் பின்னர் ஆந்திராவில் இருந்து மகாயான பௌத்தம் இலங்கைக்குப் பரவியதன் பின்னரே இங்குள்ள விகாரைகளில் யக்ஷி உருவம் சிற்பங்களாக செதுக்கப்பட்டன (புஷ்பரட்ணம் 2003) இச்சிற்பங்களுக்கும் நாணயங்களில் வரும் பெண் வடிவங்களிற்கும் இடையே தோற்ற அமைப்பில் ஒற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் நாணயங்களின் தோற்றத்திற்கு முன்னரே பெண்தெய்வ வழிபாடு இலங்கையில் இருந்ததற்குச் சான்றுகள் உண்டு. இதற்கு பெருங்கற்கால பண்பாட்டு மையங்களில் கிடைத்த சுடுமண் உருவங்கள் சிறந்த சான்றாகும். இவற்றை இலங்கையின் சக்தி வழிபாட்டிற்குரிய தொடக்ககாலச் சான்றாக சிரான் தெரணியகல கூறுகின்றார் (Deraniyagala:*1953 133-138*).




லக்ஷ்மி நாணயத்தின் தொடக்க கட்ட வளர்ச்சியாக ஸ்ரீவத்ஸா உருவம் கொள்ளப்படுகிறது. பௌத்த, இந்துக் கலைகளில் மங்களச் சின்னமாகக் கருதப்படும் இது வைஷ்ணவ சமயத்தில் "மகாபுருஷலக்ஷணத்தை" பிரதிபலிப்பதாகக் கூறப்படுகிறது. இச்சின்னம் இலங்கைப் பிராமிக் கல்வெட்டில் குறியீடாகவும், தமிழகப் பெருங்கற்கால பண்பாட்டில் கல் உருவமாகவும் பெறப்பட்டுள்ளது. பூநகரியில் மற்றும் கந்தரோடையில் கிடைத்த வட்ட மற்றும் நீள்சதுர நாணயங்களின் முன்புறத்தில் ஸ்ரீவத்சாவும், பின்புறத்தில் மீன் குறியீட்டுச் சின்னமும் இடம்பெற்றுள்ளது. இவ்வகை நாணயம் இலங்கையில் மேலும் சில இடங்களில் கிடைத்துள்ளன. இதில் வரும் மீன்குறியீட்டுச் சின்னம் பாண்டியத் தொடர்பைக் காட்டினாலும் முன்புறத்தில் தனியொரு சின்னமாக ஸ்ரீவத்ஸத்தைப் பொறிக்கும் மரபு தமிழக நாணயங்களில் பின்பற்றப்பட்டதாகத் தெரியவில்லை. இந்நிலையில் பூநகரி, கந்தரோடை போன்ற இடங்களில் கிடைத்த நாணயங்களில் வரும் ஸ்ரீவத்ஸா உருவம் லக்ஷ்மியின் படிமுறை வளர்ச்சியை காட்டுவதாகவுள்ளது. இப்பின்னணியில் நாணயத்தில் வரும் லக்ஷ்மி உருவத்தை இலங்கைக்குரிய நாணய மரபாகக் கருத இடமுண்டு (புஷ்பரட்ணம்:1999).

லக்ஷ்மி நாணயத்தின் பின்புறத்தில் சுவஸ்திகா முக்கிய சின்னமாக இடம் பெற்றுள்ளது. சுவஸ்திகா நீண்ட ஆயுள், அதிட்டம் என்பவற்றைக் குறிப்பதாகவும், சூரியனைப் பிரதிநிதித்து வப்படுத்துவதாகவும் கூறப்படுகின்றது. இச்சுவஸ்திகாவின் தோற்றம் ஹரப்பா, மொகஞ்சதாரோ, பேர்ஷியா, சுமேரிய நாகரிகங்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. சுவஸ்திகா சின்னமானது பழைய மதங்களான இந்து, பௌத்தம், சமணம் போன்ற மதங்களிற்கும் உரியதாகக் கூறப்படுகின்றது. (Sarma*1990:6063*) இச்சின்னம் மேற்குறிப்பிடப்பட்ட நாகரிகங்களில் கண்டு பிடிக்கப்பட்ட மட்பாண்டங்கள், சாடிகள், அலங்காரப் பொருட்கள், இறந்தவர்களை அடக்கம் செய்யும் மட்பாண்டங்கள், நாணயங்கள், போன்றவற்றில் காணப்படுகின்றது. பௌத்த மதத்தில் சுவஸ்திகா சித்தம் என்ற பொருளில் வருகிறது. நாகர்ஜூனகொண்டா, அமராவதி, தூபிகளில் இச்சுவஸ்திகா சின்னம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இச்சின்னம் பண்டைய நாணயங்களில் காணப்பட்டாலும் பீடத்துடன் கூடிய சுவஸ்திகா சின்னம் இலங்கை நாணயங்களில் மட்டும் காணப்படுகின்றமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.


டி.பி.ஈ.கெற்றியாராச்சி லக்ஷ்மி நாணயத்தில் வரும் சுவஸ்திகா புத்தரின் பிறப்பு, போதனையைக் குறிப்பதாகவும் கூறுகின்றார். இதற்கு சார்பாக பாரூட், சாஞ்சி, புத்தகாயா, இலங்கையில் அபயகிரி போன்ற இடங்களில் உள்ள பௌத்த விகாரைகளில் காணப்படும் இச் சின்னத்தைச் சான்றுகளிட்டு கூறுகின்றார் (1950: 104 122). ஆனால் இந்திய நாகரிகத்தில் சுவஸ்திகா சின்னத்திற்குத் தொன்மையான வரலாறு உண்டு. இது பௌத்தமதம் தோன்ற


சான்றுண்டு. அவ்வாறே இலங்கை பெருங்கற்காலப் பண்பாட்டிலும் இச்சின்னம் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டது. இலங்கை பெருங்கற்கால மட்பாண்டங்களில் தனித்தும் பீடத்துடனும் சுவஸ்திகாச் சின்னம் காணப்படுகிறது. பீடத்துடன் கூடிய சுவஸ்திகா இலங்கைக்கேயுரிய தனிப் பண்பாகும். இது பிற்காலத்திலும் தொடர்ந்ததற்கு பிராமிக் கல்வெட்டுக்களும் நாணங்களும் சான்றாகும் (Paranavithana 1970:No 406,563,1018,1007). இதில் இருந்து லக்ஷ்மி நாணயத்தில் வரும் பீடத்துடன்கூடிய சுவஸ்திகா சின்னம் இந்நாணயம் இலங்கைக்கு உரிய மரபு என்பதை மேலும் உறுதிப்படுத்துகிறது.




இந்து மதத்தில் சிவவழிபாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதில் அக்கடவுளோடு தொடர்பான சின்னங்களிற்கு முக்கிய பங்குண்டு. அவற்றுள் லக்ஷ்மி நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ள திரிசூலம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் தொடக்க காலத்தில் வெளியிட்ட முத்திரை நாணயங்களில் இச்சின்னம் பொறிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் பிற்கால வார்ப்பு நாணயங்களில் இவை பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன (Sarma 1990:13). இதற்கு சங்க காலத்தில் பாண்டியர், மலையமான் போன்ற மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களில் வரும் திரிசூலங்கள் சிறப்பாக்கக் குறிப்பிடத்தக்கது (Kirushnamurthy 1997). இம்மரபு பிற்காலத் தமிழ்நாட்டு நாணயங்களில் தொடர்ந்ததற்குப் பல சான்றுகள் உண்டு.

இலங்கையைப் பொறுத்தவரையில் இச்சின்னத்தின் தொடக்கத்தை பெருங்கற்கால மண்டபாண்டங்களில் குறியீடாகக் காணமுடிகின்றது. காலப்போக்கில் இவற்றின் தொடர்ச்சியை தமிழ் அரசர்கள் வெளியிட்ட பல்வேறு காலகட்டத்திற்குரிய நாணயங்களிலும் காணமுடிகின்றது. கி.மு. 3ஆம், 2ஆம் நூற்றாண்டுகளில் வெளியிடப்பட்டு புழக்கத்திற்கு வந்த பெண்ணுருவம் பொறித்த நீள்சதுர நாணயங்கள் சிலவற்றில் முன்புறத்தில் நிற்கும் நிலையில் உள்ள பெண்ணின் இடப்புறத்தில் திரிசூலம் காணப்படுகின்றது (புஷ்பரட்ணம் 1999: 112). வேறு சில நாணயங்களில் சிவனுக்குரிய மழுவும், இத்திரிசூலத்துடன் காணப்படுகின்றது. இவையிரண்டும் சிவனிற்குரிய முக்கிய படைக்கலன்களாகும்.






லக்ஷ்மி நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ள சின்னங்களில் சிவலிங்கமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதுவே சிவவடிவங்களுள் தொன்மையானது எனக் கூறப்படு கின்றது. இது குணமும், குறியும் கடந்த பேரொளியாகிய சிவனை ஒரு குறியின் கண் வைத்து வழிபடும் பொருட்டுத் தோன்றிய குறியீடாகும். (சிவகுருநாதபிள்ளை 1991:4). இதன் தொடக்க காலச் சான்றுகள் வடஇலங்கையில் உருத்திரபுரம், மாமடு போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் சுடுமண் சிற்பங்களாகப் பெறப்பட்டுள்ளது லக்ஷமி நாணத்தில் இச்சின்னம் நாணயத்தின் பின்புறத்தில் பொறிக்கப்பட்டுள்ள சுவஸ்திகா சின்னத்திற்கும் காளை உருவத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் பொறிக்கப்பட்டுள்ளது. சில நாணயங்களில் சிவலிங்கத்திற்குப் பதிலாக பூரணகும்பமும் காணப்படுகின்றது (Parkar 1981:480).




லக்ஷ்மி நாணயத்தில உள்ள சமயச் சின்னங்களுள் காளை உருவம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இது சிவனின் வாகனமான நந்தியைக் குறிப்பதால் நாணயங்களில் இச்சின்னம் சிவ வழிபாட்டை முக்கியப்படுத்திக் காட்டுவதாகக் கூறப்படுகின்றது. சிந்துவெளி நாகரிக கால முத்திரைகள் பலவற்றில் இவ்வுருவம் பொறிக்கப் பட்டிருப்பதைச் சான்றாகக் காட்டி அக்காலத்திலேயே சிவவழிபாடு

தென்னாசியாவில் புழக்கத்திற்கு வந்த முத்திரை நாணயங்கள் பலவற்றில் நந்தி உருவம் பல வடிவங்களில் பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றையடுத்து கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து வெளியிடப்பட்ட இந்திய வார்ப்பு நாணயங்கள் பலவற்றில் தனித்தும் பிறசின்னங்களுடன் சேர்ந்தும் காளையுருவம் பொறிக்கப்பட்டுள்ளது.




இலங்கைத் தமிழரிடையே நாணயங்களும், நாணயங்களில் காளை உருவம் பொறிக்கும் மரபும் கி.பி.13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசு காலத்தில் தோன்றியதாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அம்மரபு இலங்கைத் தமிழரிடம் இருந்ததற்கு லக்ஷமி நாணயங்கள் சான்றாகும். இதற்கு முல்லைத்தீவில் கிடைத்த நாணயங்கள் சான்றாகும் (Parkar 1981:476482). இவற்றைத் தவிர அக்குறுகொட, கந்தரோடை, மாதோட்டம் போன்ற இடங்களில் கிடைத்த நாணயங்களில் காளைக்குப் பதிலாக நந்திபாதம் காணப்படுகின்றது.



வடஇலங்கையில் உடுத்துறை என்ற இடத்தில் கிடைத்த நாணயம் தனிச் சிறப்புடையது. இது 2.5 x 1.4 Cm நீள அகலமுடைய நீளசதுர செப்பும், ஈயமும் கலந்து வார்க்கப்பட்ட நாணயமாகும். இந்நாணயத்தில் பெண் உருவத்திற்கு பதிலாக ஆணின் உருவம் காணப்படுகின்றது. இந்நாணயத்தில் பின்புறத்தில் பெண்ணுருவ நாணயங்களில் வருவது போல் பீடத்துடன் கூடிய சுவஸ்திகா பொறிக்கப்பட்டிருப்பதுடன் அதற்கு கீழே காளையுருவம் காணப்படுகிறது. இது பெண்ணுருவ லக்ஷ்மி நாணயங்கள் வெளியிடப்பட்ட காலத்திற்குரியவை என்று நிச்சயப்படுத்திக் கூறலாம். இந்நாணயத்தில் பெண்ணிற்குப் பதிலாக ஆணுருவம் காணப்படுவது இவ்வுருவம் சிவனைக்குறிப்பதாக கொள்வது பொருத்தமானதாகத் தெரிகிறது. மேலும் இது ஒரு தெய்வத்திற்குரிய உருவம் என்பதை இந்நாணயத்தின் பின்புறம் எழுதப்பட்டுள்ள "ஓம்" என்ற வாசகம் உறுதிப்படுத்துகின்றது. இது போன்ற நாணயங்கள் பல மேலும் கிடைக்கும் பட்சத்தில் இக்கருத்து மேலும் வலுப்பெறலாம். (புஸ்பரட்ணம் 2002,111).




தமிழகத்தின் முருக வழிபாட்டின் தொடக்க காலச் சான்றுகளாக ஆதிச்சநல்லூர் பெருங்கற்காலப் பண்பாட்டில் பெறப்பட்ட வேல், சேவல் என்பவற்றுக்குரிய சின்னங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. ஈழத்திலும் அனுராதபுரம், பொம்பரிப்பு, பின்வேவ, கந்தரோடை, பூநகரி ஆகிய இடங்களில் அடையாளம் காணப்பட்ட பெருங்கற்கால பண்பாட்டுச் சின்னங்களுடன் முருக வழிபாட்டை நினைவுபடுத்தும் வேல் சின்னமாகவும், குறியீடாகவும் பெறப்பட்டுள்ளது. இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களிலும், சமகாலப் பாளி இலக்கியங்களிலும் வேல், வேலா, வேலு போன்ற பெயர்கள் காணப்படுவதை சிறப்பாக குறிப்பிடலாம். இதை உறுதிப்படுத்தும் வகையில் இலக்ஷ்மி நாணயங்களில் வரும் சின்னங்கள் காணப்படுகின்றன. இந்நாணயங்களில் ஸ்ரீவத்ஸம், யானை, தாமரை, சூலம், காளை போன்ற பிற தெய்வங்களுக்குரிய சின்னங்களுடன் முருகனுக்குரிய மயில், சேவல், வேல் போன்ற சின்னங்களும் இடம்பெற்றுள்ளன (Parkar 1981 சிவசாமி, கிருஸ்ணராஜா 1983). இதில் மயில் சின்னத்துடன் வரும் வேல், சேவல் போன்ற சின்னங்கள் இலங்கையில் முருக வழிபாடு பெற்றிருந்த முக்கியத்துவத்தை மேலும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இவற்றில் வரும் வேல் சின்னம் வெற்றிக் கடவுளான முருகனை "வடிவேலன்" (சிலப்பதிகாரம் 1:2 49-50)









அப்படியே நினைவு படுத்துகின்றது. சேவலை முருகனுடன் தொடர்புபடுத்துவது ஆரியக் கலப்பால் ஏற்பட்ட ஒன்று என்ற கருத்தக் காணப்படுகின்றது. ஆயினும் அது பண்டு தொட்டு முருக வழிபாட்டிற்குரிய அடையாளச் சின்னமாகவே பார்க்கப்படுகின்றது.




சங்க காலத்தில் முருக வழிபாட்டுடன் இணைந்த ஒன்றாக கடம்ப மர வழிபாடு காணப்படுகின்றது. இதன் காரணமாகவே முருகன் "கடம்பமர்ந்த செல்வன்" எனப் பரிபாடலில் (8:126) விழிக்கப்படுகின்றான். மேற்கூறப்பட்ட லக்ஷ்மி நாணயங்களின் பின்பக்கத்தில் பீடத்துடன் கூடிய சுவஸ்திகாவிற்கு பதிலாக வேலியிடப்பட்ட மரம் காணப்படுகின்றது. முல்லைத்தீவு, அனுராதபுரம் போன்ற இடங்களில் கிடைத்த நாணயங்களின் பின்புறத்திலே சுவஸ்திகாவுடன் சேர்ந்ததான வேலியிடப்பட்ட மரம் காணப்படுகின்றது. இம்மரத்தை சங்க இலக்கியத்தில் வரும் முருகனிற்குரிய கடம்ப மரத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.


இலங்கையில் வைஷ்ணவ சமயம் பண்டைய காலத்தில் முதன்மை பெற்றதை எடுத்துக்காட்டுவதில் லக்ஷ்மி நாணயத்திற்கு தனிச் சிறப்புண்டு. ஏனெனில் இந்நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஸ்ரீவத்ஸாவும், விஷ்ணுவின் தேவியார் லக்ஷ்மியினது உருவமுமே அதற்கு சிறந்த சான்றாகும். அத்துடன் இந்நாணயத்தில் பிற சின்னங்களுடன் வரும் யானைகள் இந்திரனுடைய ஐராவத்தை குறிக்கின்றது. நாணயத்தில் வரும் தாமரை பல மதங்களிற்கு பொதுவாக இருப்பினும் அது லக்ஷ்மி உருவத்தோடு வருவது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது.






பொதுப்பட லக்ஷ்மி நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள சின்னங்களான சிவலிங்கம், நந்தி, நந்திபாதம், காளை, சுவஸ்திகா, திரிசூலம், அம்பு, வேல், மயில், சேவல், ஸ்ரீவத்ஸம், லக்ஷ்மி, தாமரை, யானை, சக்கரம், வேலியிடப்பட்ட மரம், சூரியன், சந்திரன் என்பவற்றை நோக்கும் போது அவை பண்டைய கால மதங்களை, சமய நம்பிக்கைகளைப் பிரதிபலிப்பதாக எடுத்துக் கொள்ளலாம். பெரும்பாலான சின்னங்கள் அக்காலத்தில் வழக்கில் இருந்த இந்து, பௌத்த, சமண, அஜீவக மதங்களுக்குப் பொதுவானவை. இருப்பினும் அவற்றுள் பெரும்பாலான சின்னங்கள் பௌத்த, சமண மதங்கள் இலங்கைக்குப் பரவ முன்னரே இலங்கையில் இருந்த திராவிட மக்களது பெருங்கற்காலப் பண்பாட்டில் பின்பற்றப்பட்டிருந்தற்குச் உறுதியான சான்றுகள் உண்டு. இச்சின்னங்கள் சில பிற்காலத்தில் பரவிய பௌத்த மதத்துடனும் கலந்திருக்கலாம். இருப்பினும் லக்ஷ்மி நாணயத்தின் வடிவமைப்பு, அதில் பொறிக்கப்பட்டுள்ள சின்னங்கள், நாணயத்தில் இடம்பெற்றுள்ள "ஓம்" என்ற மங்கலச் சொல் என்பவற்றை நோக்கும் போது இந்நாணயம் பிற்கால இந்து மதத்திற்கு முன்னோடியாக இருந்த (Proto Hinduism) சமய நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாக எடுத்துக் கொள்வதே பொருத்தமாகும். இதையே சமகாலத்தில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களிலும், பாளி இலக்கியங்களிலும் வரும் இந்து தெய்வங்களுக்குரிய பெயர்களும் நினைவுபடுத்துகின்றன எனலாம்.





## லக்ஷ்மி நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ள சமயச் சின்னங்கள், குறியீடுகள்




| | | | |
|---|---|---|---|
| பீடத்துடன் கூடிய சுவஸ்திகா-1,2,3 | | கப்பல்,பீடத்துடன் கூடியசுவஸ்திகா4 | |
| சுவஸ்திகா | -5 | மங்கலச்சின்னம் | -6,7,8,9 |
| உடுக்கை | -10,11, | மத்தளம் | -11,25 |
| நந்திபாதம் | -12,15,41,42,45,46,49,50 | சூரியன் | -13,38,47,48 |
| சக்கரம் | -13,17,47,48 | சந்திரன் | -39 |
| திரிசூலம் | -14,18 | அங்குசம் | -26,43,51,52 |
| ஸ்ரீவத்ஸம் | -19,34 | கப்பல் | -27 |
| வேலியிடப்பட்ட மரம்-20,23 | | இந்திரதுவஜம் | -16,24 |
| நந்தி | -35 | சிவலிங்கம் | -36 |
| சேவல் | -37 | அம்பும் வில்லும் | -44 |
| ஒளிவட்டம் | -22 | மயில் | -28 |
| கும்பம் | -29 | யானை | -32 |
| குத்துவிளக்கு | -33 | தண்டுடன் கூடிய தாமரை-30 | |


## உசாத்துணை நூல்கள்


- Bopearachchi,O., 1998, **Archaeological Evidence on Changing Pattems of International Trade Relation of Ancent Srilanka** in Origien and Circulation of foreign coins in in the Indian Ocean.
- Bopearacchi ,O., & Wickramasinhe, W., 1999, **Ruhuna an Ancient Civilization Revisited**, Nugegoda.
- Codrinton, H.W., 1924, **Coins & Currency**, Memories of The Colombo Museum Series, No-3, Colombo Parkar, H., 1981, **Ancient Ceylon**, Asain Educational Servises , NewDelhi.
- Deraniyagala,P.E.P., 1953 Ferro-Lithic an Early Historic Terracotta and a Cist from Ceylon in **Spolia Zeylanica**, Colombo.
- Kirushnamurthy,R., 1997, **Sangam Age Tamil Coins**, Garnet publications, Madras
- Pakar. H., 1981, **Ancient Ceylon, Asain Educational Servises**, New Delhi.
- Peris , P.E., 1922, "Nagadipa & Buddhist Remains in Jaffna, Part-1", **Journal Of The Royal Asiatic Society** , Ceylon Branch, 11-20.
- Pushparatnam,P. 1999 , "Luxmi Coins Found in Northern Sri Lanka A Review" **South Asia**, Silver Jubilee Commemorative, Volume-2,University of Jaffna, Srilanka, South Asian Study Center Publication.
- Ragupathy,P,. 1987, **Early Settlements in Jaffna**. An Archaeological Survey, Madras,
- Sharma, S., 1990, **Early Indian Symbols Numismatic Evidence**, Agam Kala Prakashan , Delhi.
- கிருஷ்ணராஜா,செ., 1983, "யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிடைத்த நாணயங்கள்", **சிந்தனை**, 1, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.
- சிவசாமி.வி., 1974, **யாழ்ப்பாணக் காசுகள்**, நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு மலர், யாழ்ப்பாணம்.
- சிவகுருநாதபிள்ளை,மா., 1991, **சிவ வடிவங்கள்**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
- புஷ்பரட்ணம்.ப.,2003, **தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு**, பவானி பதிப்பகம் யாழ்ப்பாணம்.
- புஷ்பரட்ணம்.ப., 2001, **இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள்**, பவானி பதிப்பகம், யாழ்ப்பாணம்.
- புஷ்பரட்ணம்.ப.,2002, **தொல்லியல் நோக்கில் ஈழத் தமிழரின் பண்டைய கால மதமும் கலையும்**, குமரன் புத்தக இல்லம், சென்னை.


******  ******

# அன்றிலிருந்து இன்றுவரை - இலங்கைப் பெருங்கற்கால மட்பாண்டக் குறியீட்டு எழுத்துக்களின் பயணம்

ந.கெற்சி
தொல்லியல்-சிறப்பு
இறுதி வருடம்



உலக நாடுகளின் வரலாறானது நாகரிகத்தின் தோற்றம், வளர்ச்சி, மாற்றம் என்பனவற்றுக்கமைய வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (Pre-History) வரலாற்றுதய காலம் (Proto History), வரலாற்றுக் காலம் (Historical Period) எனப் பிரித்துள்ளனர். இவற்றுள் ஒரு நாட்டின் பண்பாடு பற்றிய ஆய்வில் அதிக முக்கியத்துவத்தினைப் பெறுகின்ற வரலாற்றுதய காலம் என்பது மக்கள் நாடோடியாக அலைந்து திரிந்து வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும் (Pre-History), எழுத்தாதாரங்கள் பயன்படுத்தத் தொடங்கிய வரலாற்றுக் காலத்திற்கும் (Historical Period) இடைப்பட்ட காலத்தைக் குறிக்கிறது. இவ் வரலாற்றுதய காலத்திலிருந்தே வரலாற்றுக் காலப் பண்பாட்டம்சங்களான எழுத்தின் பயன்பாடு, நிலையான குடியிருப்பு, நிரந்தர பொருளாதாரம், விவசாய - வாணிப வளர்ச்சி, நாணயப்புழக்கம், நகரமயமாக்கம், அரச உருவாக்கம், தொழில்நுட்ப வளர்ச்சி, அயல்நாட்டு உறவு போன்ற பல்வேறு பண்பாட்டு அம்சங்கள் தோன்றி, வளர்ச்சி பெற்றன. இத்தகைய வரலாற்றுக் காலத்துக்கு வேண்டிய அடிப்படையான பண்பாட்டம்சங்கள் யாவும் இக்காலத்தில் கருக்கட்டியதனால், இவ்வரலாற்றுதய காலத்தை ஆக்ககாலம் (Formation Period) எனவும் அழைக்கின்றனர்.

இந்தவகையில் இலங்கையின் வரலாற்றுதய காலமானது தென்னிந்தியாவை ஒத்த வகையில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஆரம்பமாகியதுடன், இப்பண்பாடே நீர்ப்பாசன நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்த அநுராதபுர அரசின் தோற்றத்திற்கும் வித்திட்டது எனலாம். இப்பண்பாட்டுக் காலத்தில் மக்கள் இறந்தோரை அடக்கம் செய்வதற்காக மிகப்பெரிய கற்களைக் கொண்டு (Mega - பெரிய, Lithic - கல் - கிரேக்கச்சொல்) ஈமச்சின்னங்களை அமைத்ததினால் இது பெருங்கற்காலம் (Megalithic Culture) என்றும், இக்காலத்தில் இரும்பின் உபயோகம் அதிகமாக இருந்த காரணத்தினால் இது இரும்புக்காலம் (Iron Age) என்றும் அழைக்கப்படுகிறது. மத்திய தரைக்கடற் பிராந்தியத்திலிருந்து தோன்றி, ஆசிய நாடுகளுக்குரிய பொதுப் பண்பாடாக வளர்ச்சி பெற்ற பெருங்கற்காலப் பண்பாடானது குடியிருப்பு, வயல், குளம், ஈமச்சின்னம் ஆகிய முக்கியமான நான்கு கலாசாரக் கூறுகளோடு கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களின் உபயோகம், இரும்பின் பயன்பாடு, நிலையான குடியிருப்பு, நிரந்தர பொருளாதாரம், சிறு தொழில்நுட்ப வளர்ச்சி, மந்தை வளர்ப்பு, குதிரையின் உபயோகம் போன்ற வரலாற்றுதய காலக் கூறுகளையும், மேற்குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்துக்குரிய பண்பாட்டம்சங்களின் ஆரம்ப நிலைக்குரிய வளர்ச்சிகளையும் உள்ளடக்கியதாக விளங்குகின்றது.

******                                                                 ******

தென்தமிழகத்தைப் போல் இலங்கையிலும் நுண்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாகவும், வரலாற்றுதய காலமாகவும் திகழும் இப் பெருங்கற்காலப் பண்பாடானது தென்னாசியாவிற் காணப்படும் ஏனைய பெருங்கற்காலப் பண்பாடுகளிலிருந்து வேறுபட்ட பல தனித்துவக் கூறுகளை உள்ளடக்கியதாக விளங்குகின்றது. தென்னிந்தியப் படர்ச்சியே ஈழத்தில் பெருங் கற்காலப் பண்பாட்டின் தோற்றத்திற்குக் காரணமெனக் கூறினாலும் ஈழத்தில் 1,25000. வருடங்களிற்கு முன்பிருந்த கற்கால மனிதனின் வழிவந்தவர்களான நுண்கற்கால மக்களாலும், தென்னிந்தியாவிலிருந்து வந்த திராவிட மக்களாலும் தனித்துவமான முறையில் வளர்த்தெடுக்கப் பட்டதென்பது உண்மையாகும். தென்னிந்தியாவிலிருந்து ஆதிக் குடியேற்றமும் இனக்கலப்பும் ஏற்பட்ட இலங்கையின் வரலாற்றுதய காலத்தைப் பேராசிரியர் சுதர்சன் செனவிரட்ண அவர்கள் கி.மு1000 இற்கும் கி.மு250 இற்கும் இடைப்பட்ட காலம் எனக் கணித்துள்ளார்.

இப் பெருங்கற்காலப் பண்பாட்டைப் பின்பற்றியவர்களுள் ஒரு பகுதியினரே கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய பௌத்த மதத்தை ஆதரித்ததுடன் புதிய பண்பாடு தோன்றவும் வழிவகுத்தனர். பௌத்த மத வருகையை அடுத்து ஏற்பட்ட சிங்கள மொழியின் சொற்செறிவு பிராகிருத மொழிக்குரியதாக இருப்பினும், அதன் மொழியமைப்பு பெருங்கற்காலத் திராவிட மொழியமைப்பை ஒத்ததாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் அண்மைய ஆய்வுகளின் மூலம் கி.மு. 4 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே இலங்கை வட இந்தியாவுடன் கலாசார, வர்த்தக தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தாலும் அவை பாளி இலக்கியங்களில் சொல்லப்பட்ட குடியேற்றத்திற்கு வழிவகுக்கவில்லை என்பது புலனாகின்றது.

தொடர்ச்சியான வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க நாடாகிய இலங்கையில் இன்று வாழும் தமிழ்-சிங்கள மக்களின் பாரம்பரிய, பண்பாட்டு வரலாறானது இலங்கையின் வரலாற்றுதய காலமான பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்தே தனித்துவமான முறையில் உருவாகி, இரு கிளைகளாக வளர்க்கப்பட்டதனை நாம் காண்கின்றோம். இலங்கைப் பண்பாட்டின் போக்கைத் தீர்மானிப்பதில் இக்காலத்தில் முதிர்ச்சி பெற்றிருந்த வரலாற்றுக் காலத்துக்குரிய பண்பாட்டு அம்சங்கள் அடிப்படையாக விளங்கின. இந்தவகையில் பெருங்கற்காலத்தில் வழக்கிலிருந்த கிராபிடிக் குறியீடுகள் (Graffiti Marks) வரலாற்றுக் காலத்தில் வளர்ச்சி பெற்ற அம்சங்களுள் ஒன்றான பிராமி எழுத்தின் ஆரம்ப தோற்றத்தைச் சுட்டி நிற்பதாகவும் கருத இடமுண்டு. இதற்குச் சான்றாகப் பெருங்கற்காலப் பண்பாட்டில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த மட்பாண்டக் குறியீடுகள், பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்களின் பயன்பாட்டையடுத்து, அவை படிப்படி யாகக் குறையத் தொடங்கியதை எடுத்துக்காட்டலாம். இதிலிருந்து, பிராமி எழுத்து குறியீட்டி லிருந்துதான் வளர்ந்ததா? அல்லது குறியீடுகள் பிராமி எழுத்தின் தோற்றத்தையடுத்து மறைந் தனவா? அல்லது இக்குறியீடுகள் தனித்தனியாக வளர்ந்து பின் காலகதியில் இப் பண்பாட்டுக்குரிய அம்சங்களாகினவா? அல்லது குறிப்பிட்டதொரு காலத்தில் மட்டும் தோன்றி வளர்ந்தனவா? என்பன பல ஆய்வாளர்களினது ஐயப்பாடான கருத்துக்களாகும் எவ்வாறிருப்பி னும் வரலாற்றுதய காலமான பெருங்கற்காலப் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட கிராபிடிக் குறியீடுகள் எழுத்து தோன்ற முன் மக்களுக்கு ஒரு செய்தியை எடுத்துக் கூறுபவையாக, எண்ணங்களை வெளிப்படுத்தும் கருவியாக, பெருங்கற்கால சமூகத்தின் தொடர்புசாதன ஊடகமாகத் திகழ்ந்திருக்க வேண்டும். இவ்வாறு தனித்துவமான முறையில் பெருங்கற்காலப் பண்பாட்டில் புழக்கத்திலிருந்த இக்குறியீடுகள் வரலாற்றுக் காலம் தொட்டு தற்காலம் வரை புழக்கத்திலிருந்து வருகின்றமையை நாம் காணலாம்.

ஒரு பண்பாட்டு உணர்வினை, அறச்சிந்தனையை அல்லது ஆன்மீக எண்ணங்களை ஆற்றல்பட உணர்த்துவதற்கு அதாவது ஒன்றைப் பிறிதொன்றின் வாயிலாக உணர்த்த இயற்கையிலுள்ள ஒரு பொருளையோ அல்லது ஏதேனுமொரு பருப்பொருளையோ (செயற்கைப் பொருள்) பயன்படுத்தும்போது அந்த இயற்கைப் பொருள் அல்லது பருப்பொருள் குறியீடு எனப்படும். (ஓ.பாலகிருஷ்ணன் : 2004:339). மட்பாண்டத்தில் இடப்படும் கீறல் குறியீடுகள் ஆங்கிலத்தில் கிராபிடிக் குறியீடுகள் (Graffiti Marks) என அழைக்கப்படுகின்றன. இவற்றை பிராமி எழுத்தைச் சாராத குறிகள் (Non-Brahmi Symbols 1792) என்றும் பொதுவாக அழைப்பர். இக்குறியீடுகளை மானிடவியலாளர்கள் குலக்குறி (Totem) என்னும் பொருளில் ஆங்கிலத்தில் டோடமிக் குறியீடுகள் (Totemic Symbols-1792) என அழைக்கின்றனர் (சா.குருமூர்த்தி1974:67, பத்தவத்சல பாரதி 2003:506).

ஓர் இனத்தினுடைய பண்பாட்டுக் கட்டமைப்பின் அடிப்படைக் கூறுகளாகத் திகழும் இக்குறியீடுகள் மனிதனின் அறிவுத்திறன் வளர்ச்சியில் ஏற்பட்ட உணர்வை வெளிப்படுத்தும் வாயில்களாக விளங்குவதனைக் காணலாம். மொழியின் தொடக்ககால வளர்ச்சியே குறியீடுகளாகும் எனக் குறிப்பிடுகின்ற மொழியியலாளர்கள், இவை எழுத்துருவாக்கச் சிந்தனையுடன் கூடிய கருத்து அல்லது தகவற் பரிமாற்றத்திற்கெனப் பயன்படுத்தப்பட்ட வடிவங்கள் எனக் குறிப்பிடுகின்றனர். பொதுவாகக் குறியீடுகளின் வளர்ச்சி நிலையை,

1. கருத்துருவம் (Ideo Graph)

2. வடிவுருவம் (Picto Graph)

3. எழுத்துருவம் (Paleo Graph)

என 3 வகையாகப் பாகுபடுத்தலாம். (இரா.பவுன்துரை:2004:3-6).

மட்பாண்டங்களைச் சுடமுன் அதாவது சக்கரத்தில் பானையை வடிவமைக்கும் போதும் அல்லது வடிவமைத்த பின்பும், மட்பாண்டங்களைச் சுட்ட பின்பும் சிறு குச்சி எலும்பு, உலோகத்தகடு, விரல்நுனி போன்ற ஏதாவதொரு கூரிய ஆயுதத்தைப் பயன்படுத்தி, இடமிருந்து வலமாக மட்பாண்டங்களின் உட்புறமாகவோ அல்லது வெளிப்புறமாகவோ கிராபிடிக் குறியீடுகள் இடப்பட்டதனைக் காணலாம். மட்பாண்டங்களில் இக்குறியீடுகள் பொதுவாக வாய் வளையத்திலிலும், வளையக்கட்டிலிலும், கழுத்து வளையத்தின் கீழ்ப்பாகத்திலும், விளிம்புக்குக் கீழும், தோள்ப் (முதுகு) பகுதியிலும், அடிப்பகுதியிலும் (வயிற்றுப்பகுதி) இடப்பட்டன.

மட்பாண்டத் தயாரிப்புடன் இணைந்ததாகவும், மட்பாண்டங்களைச் சுட முன்னரும் வரையப்பட்ட குறியீடுகள் தெளிவானதும், ஆழமானதுமான பதிவுகளாக விளங்குவதனால் நம்பகத்தன்மை கூடிய சான்றாகவும், மட்பாண்டங்களைத் தயாரித்த பின் வரையப்பட்ட குறியீடு கள் யாவும் தெளிவற்ற மெல்லிய கீறல்களாகவும், தயாரித்தவருக்கும் வரைந்தவருக்குமிடை யிலான உறவுமுறைகள் தெளிவற்றிருப்பதாலும் நம்பகத்தன்மை குறைந்த சான்றுகளாகவும் கொள்ளப்படுகின்றன.

பண்டைய பண்பாட்டின் எச்சங்களாக விளங்கும் கிராபிடிக் குறியீடுகள் இந்தியாவில் சிந்துவெளி காலம் முதல் தமிழக நாகரிக நிலைக்கு வித்திட்ட தென்னகப் பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலம் வரை அதிகளவில் செறிந்து காணப்படுகின்றன. ஈழத்தின் நாகரிக நிலைக்கு வித்திட்ட ஈழத்துப் பெருங்கற்காலப் பண்பாட்டிலும் இதன் செறிவை நாம் காணலாம். குறிப்பாக

வடஇந்தியாவிலிருந்து, தென்னிந்தியா வரை கி.மு 2500 முதல் கிறிஸ்தாப்த காலம் வரை வழக்கிலிருந்த இக்குறியீடுகள் பரந்த பிரதேசத்தில், பல்வேறு பண்பாடுகளுடன் இணைந்து காணப்படுவதனைக் காணலாம். எனவே இக்குறியீடுகளைப் படைத்த மக்களாக நகரநாகரிக உச்சக்கட்டத்திலிருந்து தமக்கென எழுத்து வகையைப் படைத்த சிந்துவெளி மக்களும், இவர்களைவிடப் பண்பாட்டில் ஒருபடி குறைந்து காணப்பட்ட தக்கண-இந்திய, மத்திய-இந்திய, கல், செம்புக்கால மக்களும், கிராமிய வாழ்வில் செழித்தோங்கிய பெருங்கற்கால மக்களும் திகழ்ந்ததைக் காணலாம்.

பெருங்கற்காலக் குறியீடுகளின் தோற்றம் சிந்துவெளி நாகரிகத்திலிருந்தே ஆரம்பமாகின்ற தெனவும், இக்குறியீடுகளிலிருந்தே பிராமி எழுத்துத் தோன்றியதெனவும் கூறப்படுகின்றது. மேலும் இவ்விரு பண்பாடுகளையும் வளர்த்த மக்கள் திராவிடர் என்பதாலும், இவ்விரு பண்பாடுகளிலுமுள்ள குறியீடுகள் மட்டுமன்றி முத்திரைகள், கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், உறைகிணறுகள், வெண்கலப் பொருட்கள் என்பன ஒரே வகையான பொதுத்தன்மைகளைக் கொண்டு விளங்குவதுமாகும். (தனபாக்கியம்-ஜி : 1988:216)

பொதுவாக எழுத்தின் தோற்றமானது சித்திர எழுத்திலிருந்து (Picto graphy) கருத்தெழுத்தாகவும் (Ideograms), அதிலிருந்து ஒலியெழுத்தாகவும் (Phono graphy) மாற்றம் பெறுகிறது. இந்தவகையில் சிந்துவெளிச் சித்திர எழுத்துக்களிலிருந்து தான் (கி.மு.2500) பிராமி எழுத்து தோன்றியதெனக் கூறப்படுகிறது. ஆனால் சிந்துவெளிச் சித்திர எழுத்துக்கள் சிந்துவெளி நாகரிக வீழ்ச்சியுடன் (கி.மு.1500) மறைந்தமையும், கி.மு 1500 இற்கும் கி.மு 3 இற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுத்துப் பற்றிய எதுவித சான்றாதாரங்களும் இல்லாதிருந்தமையும், இவ்விடைப்பட்ட காலப்பகுதியில் அழியாப் பொருட்களான முத்திரைகள், மட்பாண்டங்களில் எழுதும் முறை கைவிடப்பட்டு, அழியும் பொருட்களான பனையோலை, மண் போன்றவற்றில் எழுத்துக்களை எழுதியதாலும், கி.மு 3 இலிருந்து மீண்டும் அழியாப்பொருட்களில் எழுதும் மரபு ஆரம்பிக்கப் பட்டமையாலும் பிராமி எழுத்தின் தோற்றம் வளர்ச்சி என்பனபற்றித் தெளிவாகக் கூறமுடியாது உள்ளது தமிழகத்திலும், இலங்கையிலும் புதிய கற்காலம் மற்றும் நுண்கற்காலம் என்பவற்றினூடாக இக்குறியீடுகள் வளர்ச்சியடைந்து, பெருங்கற்காலப் பண்பாட்டில் முழுமையான வளர்ச்சி நிலையை அடைந்ததைக் காணமுடிகின்றது.

மட்பாண்டங்களிலுள்ள கிராபிடிக் குறியீடுகள் பற்றிய ஆய்வினை இந்தியாவில் முதன் முறையாக 1881 இல் பிரான்பில் (Branfil) என்ற அறிஞர் தொடக்கி வைத்தார். அவரைத் தொடர்ந்து ஜி.யஜ்தானி (1917), ஈ.எச்.ஹண்ட் (1929), எம்.வீலர் (1948), பி.கே..தாபர் (1957), பி.பி.லால் (1962), ரி.வி.மகாலிங்கம் (1940), சி.ரி.மலோனி, டி.சோத்திரி (1971), எ.சுந்தரா (1975), எல்.குருமூர்த்தி (1999), கா.ராஜன் (1991-1998), பி.எல்.சாமி, ப.துரைசாமி, இரா.மதிவாணன், இரா.பவுன்துரை, மற்றும் இலங்கையைச் சேர்ந்த சுதர்சன் செனவிரட்ண (1984,1992),

எஸ்.யூ.தெரணியகல (1972), பி.இரகுபதி (1987), ஒஸ்மண்ட் பொப்பியாராய்ச்சி ப.புஸ்பரட்ணம் (1992) போன்ற தொல்லியல், கல்வெட்டியல், மானிடவியல் அறிஞர்களினால் இன்று வரை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

இலங்கையில் பெருங்கற்கால மட்பாண்டக் குறியீடுகள் பற்றிய ஆய்வானது போதிய சான்றுகளின்மை, சிங்கள பௌத்தம் என்ற அரசின் ஒருதலைப்பட்சமான கொள்கைகள், வட இலங்கையில் விரிவாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை, யுத்த சூழ்நிலைகள் போன்ற பல்வேறு காரணிகளினாலும், இக்குறியீடுகள் சுட்டும் பொருளைப் படித்து விளங்கிக்கொள்ளு மளவிற்கு எவரும் முன்னேறாதுள்ளமையும் குறியீடு பற்றிய ஆய்வுகள் ஆரம்பநிலையிலேயே நின்று விட்டதற்கான அடிப்படைகள் எனலாம்.

ஈழ – தமிழக வரலாற்றுதய காலமாகிய பெருங்கற்காலப் பண்பாட்டில் எழுத்து தோன்ற முன்னர் எண்ணிக்கையில் அதிகமாக, தனிச்சிறப்பான முறையில் பயன்படுத்தப்பட்டமைக்கு கார ணம் அவை பயன்படுத்தப்பட்ட இடம், காலம், நிலை என்பன பிராமி எழுத்தின் தோற்றத்துடன் ஒத்துக்காணப்பட்டமையாகும். பெருங்கற்காலப் பண்பாட்டில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட இக் குறியீடுகள் சமகாலத்தில் பிராமி எழுத்துக்களுடன் கலந்த நிலையிற் காணப்படுவதும், காலம் செல்லச்செல்ல பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்களின் பயன்பாடு அதிகமாக, படிப்படியாக மட்பாண்டங்களில் குறியீடு இடும்முறை குறையத் தொடங்குவதனைக் காணலாம். எழுத்தின் ஆரம்பநிலையை சுட்டிநிற்கும் இக்குறியீடுகள் எழுத்து தோன்ற முன் எழுத மேற் கொண்ட முயற்சிகளையே குறித்து நிற்கின்றன எனக் கருதலாம். ஏனெனில் எண்ணிக்கையில் அதிகமான குறியீடுகளை எதுவித நோக்கமும் இன்றி அப்பண்பாட்டு மக்களால் பொறித்திருக்க முடியாது. அவற்றுக்கு நிச்சயமாக ஏதோ ஒரு உட்கருத்துக்கள் இருந்திருக்க வேண்டும்.

பெருங்கற்காலப் பண்பாட்டில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட இக்குறியீடுகள் சமகாலத்தில் பிராமி எழுத்துக்களுடன் கலந்த நிலையிற் காணப்படுவதும், காலம் செல்லச்செல்ல பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்களின் பயன்பாடு அதிகமாக, படிப்படியாக மட்பாண்டங்களில் குறியீடு இடும்முறை குறையத் தொடங்குவதனைக் காணலாம். இதன்மூலம் குறியீட்டிலிருந்து தான் பிராமி வளர்ச்சி பெற்றதா? அல்லது குறியீடுகள் பிராமி எழுத்தின் தோற்றத்தையடுத்து முற்றாகவே மறைந்தனவா? எனவும் கூறமுடியாதுள்ளது. இத்தகைய குறியீடுகள், பிற்காலக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், நாணயங்களில் குறைவாகவே பயன்படுத்தப்பட்டிருந்தாலும், தற்காலத் தமிழர்களது பண்பாட்டில் ஈழத்திலும், தமிழகத்திலும் பல்வேறு தேவைகள், நோக்கங்களுக்காகப் பெருங்கற்காலப் பண்பாட்டை ஒத்த குறியீடுகள் பல பயன்படுத்தப்பட்டு வருகின்றமையை இதுவரை மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளின் ஊடாக அறியக்கூடிய தாகவுள்ளது.

பெருங்கற்காலத்துக்கு முன், பின்னாகப் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் கூடுதலான மினுமினுப்பு, தொழில்நுட்பத்திறன் போன்றவற்றால் பெருங்கற்காலத்திற்கேயுரிய தனிச்சிறப்புப் பெற்ற கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களிலும், தனிக்கறுப்பு, தனிச்சிவப்பு நிற

மட்பாண்டங்களிலும் கிராபிடிக் குறியீடுகள் குறிப்பாகக் கழுத்து வளையத்தின் கீழ்ப்பாகத்தில் தான் அதிகமாக வரையப்பட்டுள்ளதனைக் காணலாம். குறிப்பாக பெருங்கற்காலக் குறியீடு மற்றும் பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்களுள் 90 சதவீதமானவை கறுப்பு-சிவப்பு மட்பாண்டங் கள் எனவும், அவற்றில் குவளைகளே அதிகம் எனவும், அரிதாக தட்டுப்போன்ற பாத்திரங்களில் இக்குறியீடுகள் உட்புற, வெளிப்புறப் பரப்பில் காணப்படுகின்றன எனவும் ஆய்வுகளின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் 1960 களின் பின்னரே தென்னிந்தியாவை ஒத்த பெருங்கற்காலச் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இலங்கையில் குறிப்பாக பின்வேவ, இபின்கட்டுவ (சுதர்சன் செனவிரட்ண), றிதியாகம (ஒஸ்மண்ட் பொப்பியாராய்ச்சி, ராஜன்) போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் இலங்கைக்கு இப்பண்பாடு தென்னிந்தியாவிலிருந்தே வந்ததெனவும், இப்பண்பாட்டு மக்களின் சந்ததியினரே இலங்கையின் புதிய கலாசாரப் படர்க்கைக் காலம் வரை அதாவது வரலாற்றுக் காலம் வரை நீடித்திருந்தனரெனக் கூறப்படுகிறது. இப்பண்பாட்டில் நிலவிய குறியீடுகள் .தொடர்ச்சியாக வரலாற்றுக்கால ஆதி பிராமிக் கல்வெட்டுக்கள், நாணயங்கள் ஆகியவற்றிலும், தற்கால இலங்கைத் தமிழர் பண்பாட்டிலும் புழக்கத்திலிருந்து வருவதை அடிப்படையாகக் கொண்டு ஈழ வரலாற்றுக் கால நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் பெருங்கற்கால மக்களே எனலாம்.

இலங்கைப் பெருங்கற்கால மட்பாண்டக் குறியீடுகளை ஒத்தவகையில் சமகாலத்தில் முத்திரைகள், அச்சுக்குத்தப்பட்ட நாணயங்கள் மற்றும் ஈமச்சின்னங்களிலும் குறியீடுகள் இடப் பட்டதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இதற்கு ஆனைகோட்டை முத்திரைச் சாசனம் (கி.மு 300-200) சிறந்த எடுத்துக்காட்டாகும். யாழ்.மாவட்டத்திலுள்ள ஆனைக்கோட்டையில் நீளக்கிடத்தி அடக்கம் செய்யப்பட்ட இரு மனித எலும்புக் கூடுகளுடன் கூடிய ஈமச்சின்னத்தி லிருந்து மீட்கப்பட்டதும், மேல் வரியில் மூன்று குறியீடுகளையும், கீழ் வரியில் 3 பிராமி வரிவடிவ எழுத்துக்களையும் கொண்ட முத்திரையிலிருந்து இப்பண்பாட்டு மக்களே சித்திர எழுத்து முறையிலிருந்து பிராமி வரிவடிவ முறையைக் கையாண்டனரென்பது தெளிவாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். மேலும் இபின்கட்டுவவிலுள்ள தொப்பிக்கல் ஈமச்சின்னத்தில் பிராமியுடன் குறியீடுகளும் பொறிக்கப்பட்டுள்ளமையும், இதுவே இலங்கையிற் கிடைத்த காலத்தால் முந்திய கல்வெட்டுச் சான்றாக விளங்குவதையும் அண்மைக்கால ஆய்வுகள் சுட்டி நிற்கின்றன. இவ்வாய்வினை கலாசார முக்கோணத் திட்டத்தினருடன், பேராசிரியர் சேனக பண்டாரநாயக்கவும், ஜேர்மன் தொல்லியலாய்வுக் குழுவும் இணைந்து மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும் (புஸ்பரட்ணம்,ப:2004:17). மேலும் சமகாலத்திற் புழக்கத்திலிருந்த மட் பாண்ட ஓவியங்கள் (பூநகரி) மற்றும் அச்சுக் குத்தப்பட்ட முத்திரை நாணயங்களில் வரும் குறியீடு கள் பலவும் பெருங்கற்கால மட்பாண்டக் குறியீடுகளைப் பெரிதும் ஒத்துள்ளதனைக் காணலாம்.

மட்பாண்டங்களிற் காணப்படும் குறியீடுகளைப் பொதுவாக ஆராய்ந்த அறிஞர்கள் அவற்றைச் சமயச் சின்னங்களாக அல்லது வணிகச் சின்னங்களாக அல்லது குடும்பச் சின்னங்களாக அல்லது குலச்சின்னங்களாக அல்லது படையற் பொருட்களின் எண்ணிக்கைக ளாக அல்லது எழுத்துக்களாக இருந்திருக்க வேண்டுமெனக் கருதி வந்துள்ளனர். ஆயினும்

P 117

குறிப்பிட்டதொரு குறியீடானது குறிப்பிட்டதொரு செய்தியை மட்டுமே கூறி நிற்கிறது என்றோ, அல்லது குறியீடுகள் அனைத்தும் ஒரே வடிவத்தை உடையவை என்றோ நிச்சயமாகக் கூறமுடியாதுள்ளது. அத்துடன் அனைத்துக் குறியீடுகளையும் அவற்றின் எண்ணிக்கை, இடம், இடத்தொடர்பு என்பவற்றின் அடிப்படையில் ஒரேவிதமாக நோக்க முடியாதுள்ளது. மேலும் இக்குறியீடுகளிற் சில, வரிவடிவங்கள் தோன்றிய காலத்தில் எழுத்துக்களாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தமைக்குப் போதிய சான்றுகள் உள. எனவே இம் மட்பாண்டக் குறியீடுகள் சிலவற்றை ஒலிப்பெறுமானமுள்ள எழுத்தாக குறிப்பாக ஈழ-தமிழக வரலாற்றுதய காலமான பெருங்கற்காலத்திற் கொள்வதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

பெருங்கற்கால மட்பாண்டக் குறியீடுகள் எதனைக் குறிக்கின்றன அல்லது எதன் அடிப்படையில் எழுந்தன என்பதற்கமைய அண்மைக்கால ஆய்வுகளினை அடிப்படையாகக் கொண்டு, ஆய்வாளர்களினால் மூன்று கருதுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவையாவன

*1. பானை செய்வோரின் குறியீடு* (Potter's mark)

*2. பானை உரிமையாளரின் குறியீடு* (Owner's mark)

*3. குலக் குறியீடு* (Clan's Mark) *என்பனவாகும்.*

அதாவது இக்குறியீடுகளைப் பானை செய்வோரின் (குயவர்களின்) குறியீடாக இருக்க முடியாது. ஏனெனில் ஒரே ஊரில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட ஒரு சில அகழ்வாய்வுகளின் போது நூறுக்கு மேற்பட்ட குறியீடுகள் கிடைத்துள்ளன. இக்குறியீடுகள் சமகாலத்தில் பல்வேறு இடங்களில் காணப்பட்டமையும், ஒரு மட்பாண்டத்திலேயே ஒரு குறியீட்டுக்குப் பதிலாக சில சமயம் நான்கிற்கு மேற்பட்ட குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இக்குறியீடுகள் அனைத்தும் மட்பாண்டங்களைச் சுட்டபின்பே கீறப்பட்டவையாகும். இவை குயவர்களின் குறியீடாக இருந்திருந்தால், மட்பாண்டங்களைச் சுட முன்பே எளிதாகக் கீறி இருந்திருக்க வேண்டும். எனவே பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்களைப் பெரிதும் ஒத்துள்ள இப்பெருங் கற்கால மட்பாண்டக் குறியீடுகளைப் பானை செய்வோரின் குறியீடாக ஏற்கமுடியாதுள்ளது. *(கா.ராஜன்:1994:27)*

அதே போல் இக்குறியீடுகளை பானை உரிமையாளரின் குறியீடு என்கின்றனர். இதுவும் ஏற்கக்கூடிய கருத்தல்ல. ஏனெனில் பல குறியீடுகள் ஒரு மட்பாண்டத்தில் காணப்படுவதும், ஒரே குறியீடு சமகாலத்தில் பல்வேறு இடங்களில் கிடைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் ஒரு குறியீட்டுத் தொடரில் உள்ள பல்வேறு குறியீடுகள் தம்மில் இடம்மாறியும், கலந்தும் வெவ்வேறு நிலைகளைப் பெற்று விளங்குவதனைக் காணலாம். மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட வர்களின் எலும்புக்கூடுகள் அல்லது எலும்பின் பாகங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள பெருங் கற்கால ஈமச்சின்னம் ஒன்றிலிருந்து குறிப்பிட்டதொரு குறியீடு மட்டுமே மீட்கப்பட்டுள்ளமையைக் காணலாம். இவ் ஈமச்சின்னத்தில் கிடைத்த குறியீட்டை பானை உரிமையாளரினது குறியீடு எனக் கருதினால், அங்கு ஒன்றுக்கு மேற்பட்ட குறியீடுகளே கிடைத்திருக்க வேண்டும். ஆனால், ஒரேயொரு குறியீடே கிடைத்துள்ளதால் அதனை ஒரு நபருக்குரிய அதாவது குறிப்பிட்டதொரு உரிமையாளருக்குரிய குறியீடெனக் கூறமுடியா துள்ளது.

***** *****

ஒன்றுக்கு மேற்பட்டவர்களது எலும்புக் கூடுகள் காணப் படும் ஈமச்சின்னம் ஒன்றில் ஒரே வகையான குறியீடுகள் மட்டுமே பொறிக்கப்பட்டிருந்தமையினைக் கொண்டு இக்குறியீடுகளை ஒரு குடும்பத்திற்குரிய குறியீடாக ஏற்கமுடியாது. ஏனெனில், ஒரே வகையான குறியீடுகள் பல்வேறு இடங்களில், பல்வேறு ஈமச்சின்னங்களிலும் சமகாலப் பிற சான்றுகளிலும் காணப்படு கின்றன. மேலும் குறுகியதொரு காலகட்டத்தில் ஒரே குடும்பத்தால் அவ்வளவு தொகையிலான ஈமச்சின்னங்களை எழுப்ப முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எனவே இக்குறியீடுகளை ஒரு குடும்பத்திற்கு உரிய குறியீடாகவும் கருதமுடியாதுள்ளது.

இவற்றை ஒரு கூட்டத்தின் அல்லது இனக்குழு ஒன்றின் குலக்குறியீடாகக் கொள்ளவும் முடியாது. ஏனெனில் சில குறியீடுகள் வெவ்வேறு இடங்களில், வேறுபட்ட பண்பாடுகளில், சில குறியீடுகள் தொடர்புற்று விளங்கினாலும் புலம்பெயர்ந்து செல்லும் பண்பாட்டினையுடைய மக்களிடமும் குறியீடுகளைத் தொடர்ச்சியாகப் பின்பற்றுகின்ற மரபு காணப்படுவதனாலும் குறிப்பிட்டதொரு குலத்தைச் சுட்டும் குறியீடாக இவற்றை கருத முடியாது.

மேலும் இக் குறியீடுகளை ஈமச்சின்னங்களுடன் தொடர்புடைய குறியீடுகளாக அதாவது குறிப்பிட்டதொரு ஈமச்சின்னத்திற் கிடைத்த ஒரே வகையாக குறியீட்டை அடிப்படை யாகக் கொண்டு ஈமக்குழியில் அடக்கம் செய்யப்பட்டவருடன் தொடர்புபட்ட குறியீடாக அல்லது ஈமச் சின்னத்தில் சடலத்தைப் புதைக்கும் போது நிகழ்த்தப்பட்ட சடங்கு மற்றும் நம்பிக்கைகளுடன் கூடிய மரபுகளுடன் தொடர்புபட்ட குறியீடாக, படையற் பொருட்களை குறிக்கும் குறியீடாக கொள்ளப்படுகின்றது. ஆனால இக் கருத்து ஏற்கக்கூடியதல்ல. ஏனெனில் ஈமப்பொருட்கள் அனைத்திலும் குறியீடுகள் வரையப்பட்டுள்ளமையும் அக்குறியீடுகள் குறிப் பிட்டதொரு ஈமப்பொருளை மட்டும் ஈமச்சின்னமாக கொண்டிருக்காது இருந்தமையும் குறிப் பிடத்தக்கது. (இரா.பவுன்துரை:2004:184)

பெருங்கற்கால மட்பாண்டக் குறியீடுகள் ஈமச்சின்னங்களில் மட்டுமன்றி, சமகாலக் குடி யிருப்புகளிலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இக்குறியீடுகளை ஈமச் சின்னங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு குலச்சின்னம் எனக்கூறினால், அக்கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும். ஆனால் ஊரிருக்கைப் பகுதியில் கிடைத்த நூற்றுக்கும் மேற்பட்ட குறியீடுகள் இவற்றைக் குலக்குறியீடுகளாக ஏற்க முடியாததை வலியுறுத்தி நிற்கின்றன. குறியீடு ளின் வடிவத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எந்தவொரு இனத்தைப் பற்றியும் குறிப்பிட முடியாதுள்ளது.

சில இடங்களில் பிராமி எழுத்துடன் தொடர்புபட்டவையாக, அவற்றுடன் இணைந்து சொல்லின் இறுதியில் பெருங்கற்கால மட்பாண்டக் குறியீடுகள் இடம்பெற்றுள்ளன. இதன் அடிப்படையில் நோக்கும் போது பெருங்கற்கால மக்கள் இக்குறியீடுகளுக்கெனச் சிறப்பான ஒரு இடத்தினை அளித்திருந்தமை புலனாகின்றது. இதற்கு யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டையில் பெருங்கற்கால ஈமச்சின்னம் ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்ட இருவரிச் செப்பு முத்திரையைக் குறிப்பிடலாம். மேல் வரிசையில் மூன்று குறியீடுகளையும், அக் குறியீடுகளை ஒத்தவகையில் கீழ் வரியில் அவற்றுக்கு நேராக கோவேத என்னும் மூன்று பிராமி எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருப்பதனைக் காணலாம்.

ஈழத்தில் மட்டுமன்றி இந்தியாவில் கூட ஆய்வுகளின் போது கிடைத்து வருகின்ற தனிக் குறியீட்டுத் தொடர், அதன் அமைப்பு, வளர்ச்சி என்பவற்றை துல்லியமாக பகுத்தும், பிரித்தும்

ஆய்வுகள் மேற்கொள்ளப்படாதுள்ளமை குறியீடுகள் பற்றிய முழுமையான தகவல்களைப் பெறுவதற்குள்ள சிக்கலான விடயங்களாகும். பெருங்கற்கால குறியீடுகளினுடைய முழுப் பொருளையும் முற்றாக எம்மால் விளங்கிக்கொள்வது என்பது கடினமான விடயமாகும். எனினும் அவற்றில் இடம்பெறும் குறியீடுகளின் வடிவங்கள், அவை இடம்பெற்றுள்ள தன்மை என்பன ஓர் ஒழுங்குமுறையில் இடம்பெற்றுள்ளமையை நாம் காண்கிறோம். இவ் ஒழுங்கு முறைகளைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

அடிப்படைக் குறியீடுகளும், அதன் சிறு வேறுபாடுகளும் (வளர்ச்சி அல்லது மாற்றம்)

1. ஓர் தனிக்குறியீட்டுடன் இணைந்து கொண்டுள்ள அக-புறக் குறியீடுகள்

2. ஒரு வடிவத்தைக் கொண்ட குறியீட்டைப் போல, அதே வடிவத்தை ஒன்றின் மீது ஒன்று இணைத்து வரைதலால் இடம்பெறும் குறியீடுகள் (உதாரணம் : ஈமச்சின்னம்)

3. ஒரு குறியீடு தோற்றத்தில் எண்ணிக்கையை குறித்து நிற்றல்.

4. தொடக்கத்திலும், இறுதியிலும் இடம்பெறும் ஒரே வகையான குறியீடுகள்

5.ஒரு குறியீடானது அதனுள் சிறு சிறு வேறுபாடுகளுடன் ஓர் முழுமையான குறியீடாகவும் அமைந்துள்ளமை.


(உதாரணம் : படுக்கை, நெடுக்கைக் கோடுகள் ஒரு முறை, இருமுறை எனத் தொடர்ந்து வருதல்.

இவற்றுடன் ஒரு குறியீடானது மீண்டும் மீண்டும் வரும் செயல்முறையானது கூட்டுக் குறியீடு என்னும் ரீதியிலும் எண் தொடர்பு என்ற ரீதியிலும், அமைந்திருப்பதனைக் காணலம். சில ஆய்வாளர்கள் தனிக்குறியீடுகள் 1-0 வரையுள்ள எண்களைக் குறிக்கலாமெனக் கருதுகின்ற னர்.எவ்வாறிருப்பினும் ஒவ்வொரு மட்பாண்டத்திலும் வேறுபட்டுக் காணப்படும் இக்குறியீடுகள் யாவும் தெளிவான நெறிமுறைகளைப் பின்பற்றி வரையப்படவில்லை என்பதே உண்மையாகும். (இரா.பவுன்துரை:2004:186)

எனவே குறியீடுகள் உணர்த்தும் பொருள் பற்றி பொதுவாக நோக்குகின்றபோது, அவை பற்றிச் சரியான திட்டவட்டமான முடிவைக் கூறமுடியாதுள்ளது. ஏனெனில், எழுதப் பட்ட ஆவணங்கள் எதுவுமின்றி, எழுத்தறிவு பெற முன்பிருந்த சமூகங்களினது மொழி பற்றித் திட்ட வட்டமாக எதுவும் கூறமுடியாதுள்ளது. ஆயினும் ஈழ, தமிழக வரலாற்றுதய காலமான பெருங் கற்காலப் பண்பாட்டில் எழுத்து முறையாக மட்பாண்டக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டிருந்த மைக்கான சான்றுகள் உள்ளன. பெருங்கற்காலப் பண்பாட்டில் பிராமி எழுத்து தோன்ற முன் அதி களவில் பயன்படுத்தப்பட்டு வந்த இக்குறியீடுகளைப் பற்றிப் படித்துப் பொருள் கூறும் அளவுக்கு முழுமையான ஆய்வு வளரவில்லை. எனவே இவற்றைப் படித்துப் பொருள் கூறும் வரை இதனைப் பயன்படுத்திய மக்களினது அதிலும் குறிப்பாக பெருங்கற்கால மக்களினது மொழி அல்லது மொழிகளைப் பற்றி அறிய உதவும் சான்றாகக் குறியீடுகளைக் கொள்ளமுடியாது. (கா.இந்திர பாலா:2006:128) எனினும் பெருங்காலத்திற் பயன்படுத்தப்பட்ட குறியீடுகளிற் பெரும்பாலானவை அப்பண்பாட்டில், வழிவந்தவர்களான தமிழக, இலங்கைத் தமிழர்களால் இன்றும் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையைக் காண முடிகின்றது. இவை பயன்படுத்தப்பட்டதன் நோக்கம் வேறாக இருப்பினும் பண்பாட்டுத் தொடர்ச்சியை உணர்த்தி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

***** ******

# பெருங்கற்கால மட்பாண்ட குறியீடுகள்




# குறியீடுகளின் பெயர்

01. சுவஸ்திகா
02. பீடத்துடன் கூடிய சுவஸ்திகா
03. பீடத்துடன்கூடிய சகஃசிலுவை வடிவம்
04. சக (+ ) அல்லது சிலுவை வடிவம்
05. வேலியிடப்பட்ட மரம் அல்லது செடி
06. வேலியிடப்பட்ட மரம்
07. ஒரு தலைச் சூலம்
08. இரு தலைச் சூலம்
09. முத்தலைச் சூலம்
10. பிறைச் சந்திரன் ஃ அரைவட்டம்
11. வட்டம்
12. மனித உரு ஃ தெய்வம்
13. தோணி ஃ வள்ளம்ஃபாய்மரக் கப்பல்
14. நட்சத்திரம்
15. அம்பு
16,17,18,19. மீன்
20. முக்கோணம் அல்லது பூரணகும்பம்
21. ஏணி
22. சூரியக் கதிர்கள்
23. தர (ஓ) அடையாளம்
24. நேர்கோடு
25. ஆங்கில எழுத்து M வடிவம்
26. ஆங்கில எழுத்து Z வடிவம்
27. ஆங்கில எழுத்து Sவடிவம்
28. ஆங்கில எழுத்து N வடிவம்
29. ஆங்கில எழுத்து T வடிவம்
30. ஆங்கில எழுத்து Y வடிவம்
31. நான்கு வளைகோடுகள்/(பெண் தெய்வம்)
32. இரு வட்டங்களை இணைக்கும் கோடு
33. சதுரப் பெட்டியிலிருந்து நடுவிலிருந்து செல்லும் கோடு
34.வட்டத்தின்நடுவிலிருந்துசெல்லும் கோடு
35. உடுக்கு ஃ மதக் குறியீடு
36. உடுக்கு ஃ மதக் குறியீடு
37. தலைகீழ் ஏ வடிவம்
38. தலைகீழ் வு வடிவம்
39. மலைமுகடுகள்
40. ஆறு, அலைவரி கோடுகள்
41. மலர்
42. திசைக்கிளைகள், மதக்குறியீடு
43. விளக்கு அல்லது மதக்குறியீடு
44. சங்கு
45. ஸ்ரீவத்சம் - தாய்த் தெய்வ வழிபாடு
46. கோயில்
47. செங்குத்துக் கோடுகள்
48. நெற்குதிர்
49. கோடரி
50. நீர்
51. பூமி
52. சதுரம்
53. நீள்சதுரம்
54. முட்டை வடிவம்
55. அறுகோண வடிவம், முக்கோணம்
56. 3 புள்ளிகள்
57,58,59,60,61,62. விலங்குகள்
63. நந்தி பாதம் / மதக்குறியீடு
64. ஆமை
65. விலங்கு
66. பாம்பு

## பெருங்கற் கால மட்பாண்ட குறியீடுகளும், பிற்காலப் பண்பாட்டில் அவற்றின் தொடர்ச்சியும்.

| பெருங்கற்கால மட்பாண்டக் குறியீடுகள் | கல்வெட்டுக்கள் | முத்திரைகள் | நாணயங்கள் | சலவைத் தொழிலாளர் குறியீடுகள் | மாடுகளுக்கு இடப்படும் குறியீடுகள் |
|---|---|---|---|---|---|



# உசாத்துணை நூல்கள்


- இந்திரபாலா.கா, *2006*, **இலங்கையில் தமிழர் - ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு (கி.மு 300 – கி.பி 1200)**, குமரன் புத்தக இல்லம், சென்னை - கொழும்

- இராஜன்.கா, *1994*, **கொடுமணல் அகழ்வாய்வு - ஓர் அறிமுகம்,** மனோ பதிப்பகம், தஞ்சாவூர

- இராஜன்.கா, *2001*, பண்டைக் குறியீடுகளும் எழுத்துக்களும், **தமிழ் கல்வெட்டியலும் வரலாறும்;;**, (ப.ஆ) சுப்பராயலு.எ, இராசு.செ, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் : *1-16*

- காசிநாதன்.நடன, *1988*, தமிழகக் கல்வெட்டுக்களோடு காணப்படும் குறியீடுகள், **ஆய்வுக் கோவை 3;;,** இந்தியப் பல்கலைக்கழகம், தமிழாராய்ச்சி மன்றம், பத்தாவது கருத்தரங்கு *(8) 58-62*

- சிற்றம்பலம்.சி.க, *1991, 1999*, **பண்டைய தமிழகம்**, யாழ் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி குருமூர்த்தி.ச, *1974*, **தொல்பொருளாய்வும், தமிழர் பண்பாடும்**, சென்னை பல்கலைக்கழகம், சென்னை : *65-67*

- தனபாக்கியம்.ஜி, *1988*, **இலங்கையில் தொல்லியலாய்வுகளும், திராவிடக் கலாசாரமும்,** மட்டக்களப்பு

- பவுன்துரை.இரா, *2004*, **பண்டைக் குறியீடுகளும், எழுத்துக்களும்**, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

- பாலகிருஷ்ணன்.X, *2004*, குறியீட்டியல், **ஆய்வுக்கோவை**, பல்துறையியல், இந்தியப் பல்கலைக்கழக தமிழாசிரியர் மன்றம், பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி : *335-339*

- புஸ்பரட்ணம்.ப, *1993*, **பூநகரி தொல்பொருளாய்வு**, யாழ் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி : *20-33*

- புஸ்பரட்ணம்.ப, *2004*, **தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு**, பதிப்பு 2,பவானி பதிப்பகம், யாழ்ப்பாணம்.

- Rajan.K & Osmund Bopearachchi, 2002, **Graffiti Marks of Kodumanal (India)** & Ridiyagama (Sri lanka) - A comparative study, **"Man & Environment xxvii (2)"** : 98-101


- Ragupathy.P, 1987, **Early Settlements in Jaffna:An Archaeological Survey**, Mrs. Thillaimalar Ragupathy, Madras : 7-14

- Sudarshan Seneviratne & D.K.Jayaratne, 2006, A shared ritual cultural simbol : The Megalithic memorials of South India & Sri lanka, **மாற்றீட்டு அகழ்வாய்வியல்,** பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை : *1-14*


****** ******

# வடஇலங்கை – உரோம நாட்டு வணிக உறவுகள்
## (தொல்லியற் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

திரு.பா.கபிலன்
தொல்லியல் – சிறப்பு
4ஆம் வருடம்



இலங்கை இந்துசமுத்திரத்தின் மத்தியில் மேலைத்தேய கீழைத்தேய வர்த்தகப் பாதையின் கடல்சார் தொடர்பின் முக்கிய தரிப்பிடமாகக் காணப்படுகிறது. இதனால் பண்டைய காலத்தில் மேற்காசியா, கிழக்காசியா, செங்கடல், தென்கிழக்காசியா, இந்தியா போன்ற உலக வர்த்தக மையங்களை ஒன்றிணைக்கும் மையமாக இலங்கை காணப்பட்டது. அதில் வடஇலங்கையின் அமைவிடம் தென்னிந்தியாவின் தென்பகுதியுடன் மருவிக் காணப்படுவதால் கடல்சார் வர்த்தகத்தில் இரு பிராந்தியங்களும் ஒன்றிணைந்து வளர்ச்சிபெற முடிந்தது. இதற்கு மேற்கத்தேய வர்த்தகரைக் கவரும் வணிகப் பொருட்கள் பலவும் இப்பிராந்தியத்தில் இருந்து இலகுவாகக் கிடைத்தமையும் இன்னொரு காரணமாகும். இதையே வடஇலங்கையில் கிடைத்த உரோம நாட்டுத் தொல்லியற் சின்னங்களும் உறுதிப்படுத்துகின்றன.

பண்டுதொட்டு வடஇலங்கை கடல்சார் வர்த்தகத்தில் முதன்மை பெற்றிருந்தாலும் உரோம நாட்டுடனான தொடக்ககால வர்த்தகம் வளர்ச்சி பெறுவதற்கு சிறப்பான சில காரணங்கள் இருந்தன. கி.பி முதலாம் நூற்றாண்டின் பேரரசாக எழுச்சியடைந்த உரோம அரசின் வளர்ச்சிக்கு கீழைத்தேய நாடுகளுடனான வர்த்தக உறவு ஒரு முக்கிய காரணமாகும். இதை முன்னெடுத்து செல்வதற்கு சாதகமான கடல், தரைவழிப்பாதைகளையும் உரோமர் கண்டறிந்தனர். கிப்பலஸ் பருவக்காற்றின் உதவியுடன் கடல் பயணம் மேற்கொள்ளும் முறையைக் கண்டறிந்ததன் விளைவாக உரோம வர்த்தகர்கள் செங்கடல், அரேபியக் கடற்பகுதிகள் ஊடாக கீழைத்தேய நாடுகளை அடைந்தனர். இக் கடற்பாதையின் மையப்பரப்பில் வடஇலங்கை அமைந்துள்ளது. இதன் விளைவாக அவர்களது நடவடிக்கைகள் இப்பரப்பிலும் வலுவடைய வழி வகை ஏற்பட்டது.

மேலும் வட இலங்கையில் மாதோட்டம், ஊர்காவற்துறை, ஜம்புகோளப்பட்டிணம் முதலிய இயற்கைத் துறைமுகங்கள் அன்றைய வர்த்தகத்திற்கு சாதகமாக இருந்தன. அவற்றுள் மாதோட்டத் துறைமுகம் கி.பி.11ஆம் நூற்றாண்டுவரை ஒரே நேரத்தில் பல கப்பல்கள் தங்குவதற்கேற்ற வசதியினைக் கொண்டிருந்தை 1980–1984 காலப்பகுதியில் காஸ்வெல்-மார்த்தா தலைமையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் இருந்து தெரியவந்துள்ளது. இதுபோன்ற முக்கியத்துவம் ஊர்காவற்துறையும் பெற்றிக்கலாம் என்பதை

சூளவம்சம், சோழக் கல்வெட்டுக்களில் இருந்து அறியமுடிகிறது.

மாதோட்டம் தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்றால் வங்களா விரிகுடாவில் கொந்தளிப்பு சூறாவளி என்பவற்றால் கப்பல்கள் பாதிக்கப்படாத மையத்தில் அமைந்துள்ளது. இத் துறைமுகத்தை அண்டிய கடற்பரப்பில் காணப்படும் பவளப் பாறைகள் மணற் திட்டுக்கள் என்பன கப்பல்களைப் பாதுகாப்பனவாக காணப்பட்டன. இச்சாதகத் தன்மை உரோமரை இப் பரப்பு நோக்கி ஈர்க்க முக்கிய காரணமாகும். வட இலங்கை 25°c - 28°c இடைப்பட்ட வெப்பநிலையினையும் 750mm - 2000mm இடைப்பட்ட மழைவீழ்ச்சியினையும் பெறும் கரையோர சமவெளிப் பரப்பாகும். காலநிலை சீராக காணப்பட்டமை வர்த்தக நடவடிக்கைகளை தடையின்றி எக்காலத்திலும் மேற்க்கொள்வதற்கேற்ற சூழ்நிலையினை ஏற்படுத்தியது.

உரோம வர்த்தகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த வர்த்தகப் பொருட்களை வட இலங்கையில் இருந்து பெறக்கூடிய சாதகமான சூழ்நிலை காணப்பட்டது. வடமேற்கு இலங்கையின் கரையோரப் பரப்பிற் காணப்படும் முத்து, சங்கு என்பன அன்றைய உலக சந்தையில் முக்கியத்துவம் பெற்று விளங்கின. மெகஸ்தனிஸ் தன் குறிப்பில் இந்திய முத்துக்களை விட இலங்கை முத்துக்கள் மிக உயர்ந்தவை எனக் குறிப்பிடுகிறார். ஏனைய வார்த்தகப் பொருட்களான யானைத்தந்தம், வாசனைத் திரவியங்கள், கடலாமையின் ஓடுகள் என்பனவும் இங்கு பரவலாக காணப்பட்டன. இவ்வர்த்தக பொருட்கள் மேலைத்தேய மக்களைக் கவர இவற்றினைப் பெறும் நோக்கோடு உரோம வர்த்தகர்கள் இப்பரப்பினை நாடத் தொடங்கினார்கள்.

கீழைத்தேய நாடுகளுடனான உரோமரின் வாத்தக உறவுகள் ஏறத்தாழ கி.மு.1ஆம் நூற்றாண்டில் இருந்து செல்வாக்குப் பெறத் தொடங்கியதெனக் கூறலாம். ஆரம்ப கால வர்த்தகத்தில் தென்னிந்தியா உரோமரின் முக்கிய வர்த்தகத் தளமாகக் காணப்பட்டது. தமிழகத்தின் மேற்குப் பகுதியில் தமது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்த உரோமர் காலப்போக்கில் தமிழகத்தின் கிழக்குப் பகுதிகளிலும் ஆதிக்கம் செலுத்தினர். இதை இரு பிராந்தியங்களிலும் கண்டறியப்பட்ட வேறுபட்ட காலத்திற்குரிய தொல்லியற் சின்னங்கள் உறுதி செய்கின்றன. இதனால் கி.பி.1ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் உரோமர் இலங்கைக்கு வராமலே தமது வர்த்தகப் பொருட்களை தென்னிந்தியத் துறைமுகங்களில் விற்று தமக்குத் தேவையான இலங்கைப் பொருட்களை அங்கேயே பெற்றுக் கொண்டனர். இதற்கு இலங்கை தென்னிந்திய வர்த்தகர்கள் இடைத்தரகராகச் செயற்பட்டதை சமகால இலங்கை இந்திய இலக்கியங்களும், வெளிநாட்டார் குறிப்புக்களும் உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் காலப்போக்கில் உரோம வணிகர்கள் நேரடியாகவே இலங்கை வர்த்தகத்தில் ஈடுபட்டனர். இதை இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் குறிப்பாக வடஇலங்கையில் கிடைத்த உரோம நாட்டு தொல்லியற் சின்னங்கள் உறுதிப் படுத்துகின்றன.

**இலக்கிய ஆதாரங்கள்.**

தென்னாசியாவில் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமுடைய நாடுகளில் இலங்கையும்

ஒன்றாகும். பௌத்த மத வரலாற்றை முதன்மைப்படுத்திக் கூறும் பாளி இலக்கியங்கள் மற்றும் வர்த்தக தொடர்பின் விளைவாக வந்த கிரேக்க உரோம வர்த்தகர்களின், குறிப்புக்கள் என்பன இலங்கைப் பரப்புக்கும் உரோமுக்கும் இடையிலான வார்த்தக உறவுகளை அறியத் துணைபுரிகின்றன.

இலங்கையின் முதன்மை வரலாற்று நூலான மகாவம்சம் பாதிக அபயன் கி.மு 22 கி.பி 7 காலப்பரப்பில் உரோமரோடு இருந்த வர்த்தக உறவுகள் பற்றி மறைமுகமாகக் கூறுகிறது. இலங்கை உரோம வணிகர்களுடன் தூதுவர்கள் உரோம அரசசபைக்கு அனுப்பப்பட்டு நல்லுறவு பேணப்பட்டதுடன் அழகிய மணிகள் பெறப்பட்டு அநுராதபுர மகா தூபியை அலங்காரம் செய்வித்தான் என உரோம நூலில் கூறப்படுகின்றது. சங்க இலக்கியங்கள் உரோம தொடர்புகள் பற்றிய விரிவான தகவல்களை அறியத்துணைபுரிகின்றன. புறநானூறு உரோமரை யவனர்கள் என குறிப்பிட்டு அவர்களின் வர்த்தக பொருட்கள் பற்றியும் குறிப்பிடுகின்றது. கட்டிடக் கலைஞர்களாக, காவலாட்களாக, படைவீரார்களாக, வர்த்தகர்களாக, கலை வல்லுநார்களாக என பல வடிவங்களில் மக்களோடு இணைந்த வாழ்வினை யவனர்கள் மேற்கொண்டு வந்தனர் என்பதை முல்லைப்பாட்டு வெளிப்படுத்துகின்றது. கி.பி முதலாம் நூற்றாண்டைச் சோர்ந்த பெரிப்பிளஸ் என்னும் நூலில் உரோம வர்த்தகர்கள் இலங்கைப் பொருட்களை தென்னிந்திய துறைமுகங்களில் பெற்றமை பற்றியும் மேற்காக புறப்பட்ட வர்த்தகர்கள் செங்கடல் ஊடாக இந்தியாவின் மேற்க்குக் கரையை அடைந்து வர்த்தகத்தை மேற்கொண்டமை பற்றியும் அதற்குச் சாதகமாக இருந்த துறைமுக அமைப்புக்கள் பற்றியும் பல குறிப்பக்களைத் தருகின்றன. முதலாம் அலெக்ஸாண்டர் வடமேற்கு இந்தியா மீது படை எடுத்த போது அவரது கப்பற்படையில் மாலுமியாக விளங்கிய ஒனோசி கிறீட்டஸ் இந்திய பரப்பில் இருந்து இலங்கை வர்த்தகம் தொடர்பான பல தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இலங்கை உரோம வர்த்தக உறவுகள் பற்றி பிளினி என்னும் யாத்திரிகர் தன் "இயற்கை வரலாறு" என்ற நூலில் தெளிவாக குறிப்பிடுகின்றார். கிறிஸ்தவ தசாப்த கால ஆரம்பத்தில் இலங்கை தப்பிரபேன் என அழைக்கப்பட்டது. இங்கு 700க்கு மேற்பட்ட வர்த்தக மையங்களை கொண்டிருந்ததுடன் அலெக்ஸாண்டிரியாவுடன் நெருங்கிய உறவுகளினை பேணிக் கொண்டிருந்தது. செங்கடலூடாக கடற்பறவைகளின் துணையுடன் வடகீழ் தென்மேல் பருவக் காற்று செயன்முறைக்கு ஏற்ப 20 நாட்களில் இலங்கையை அடைந்தார்கள் முதலான குறிப்புக் கள் அவற்றில் முக்கியமாகும். மேலும் அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள புதுக்கி என்ற இடம் பூநகரியாக வும், தலைக்கோரி என்ற இடம் பூநகரியில் உள்ள கல்முனையாகவும் இருக்கலாம் என்பது முதலி யார் இராசநாயகத்தின் கருத்தாகும். கொஸ்மஸ் இன்டிகோபிளியூஸ்டஸ் தனது The Topographia என்ற நூலில் உரோம வர்த்தக தொடர்பு பற்றிய பல செய்திகளைத் தருகின்றார். கி.பி ஆறாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தரவுகளின்படி இலங்கைத் துறைமுகங்கள் நோக்கி உலகின் பல பாகங்களிலிருந்தும் எல்லா வித பொருட்களும் வந்தன. இங்குள்ள வர்த்தக பொருட்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இலங்கை மக்கள் தம் தேவைகளுக்காக பாத்திரங்களை மேற்கு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்தனர் பேர்சிய, உரோமானிய வர்த்தகர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் தம் வழமையான வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு

வந்தனர் எனக் கூறு கின்றார்.

அண்மையில் எகிப்தில் கண்டறியப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனம் உரோம வர்த்தக தொடர்புகளினை விளக்கி ிற்பதினை ஐராவதம் மகாதேவன் வெளிப்படுத்தி உள்ளார். Polcamus Annius என்பவரது குறிப்பின்படி எகிப்திய கிழக்கு பாலைவன பகுதியில் இலங்கை மன்னனது உரோமுக்கான வர்த்தக தூதுவராலயம் அமைந்திருந்தது. இவ் காலம் குளோடியஸ் அரசனுக்கு முற்பட்ட காலமாகும். (Srimotimer Wheeler,1954;128). மேற்கூறப்பட்ட இலக்கிய, கல்வெட்டு அதாரங்களை உறுதிப்படுத்துவதில் வடஇலங்கையில் கண்டறியப்பட்டுள்ள தொல்லியற் சின்னங்களுக்கு முக்கிய இடமுண்டு.

### உரோம மட்பாண்டங்கள்

புராதன மக்களது பிறப்பு முதல் இறப்பு வரையான வாழ்வின் சகல அம்சங்களோடும் மட்பாண்டங்கள் பின்னிப் பிணைந்து காணப்பட்டன. இதனால் புராதன மக்களது வாழ்விடங்களினை, வாழ்க்கை முறைமையினை, வாழ்ந்த காலத்தினை, அயல்நாடுகளுடன் கொண்டிருந்த உறவுகள் என்பவற்றினை அறிய மட்பாண்டங்களே துணைபுரிகின்றன. மக்களது அறிவு வளர்ச்சிக்கேற்ப மட்பாண்டங்களின் அமைப்பு, தொழில்நுட்பம் என்பன வளர்ச்சியடைந்து வந்தன. ஐரோப்பியாவில் எழுச்சியடைந்த உரோமப் பேரரசு வட இலங்கைப் பரப்புடன் கொண்ட வர்த்தக உறவுகளின் விளைவாக அப்பிரதேச மட்பாண்டங்கள் மக்களது வாழ்க்கையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. நேரடியாக உரோமிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை, உரோம தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவை என இரு வகையான மட்பாண்டங்கள் காணப்படுகின்றன. சிறப்பாக றௌலட்டட் மட்பாண்டம் (Rouletted Ware), அரிட்டைன் மட்பாண்டம் (Arretine Ware), ஆம்போறா ஜாடிகள் (Amphora Jars) முதலிய மட்பாண்ட வகைகள் அகழ்வுகள் மேலாய்வுகளின் போது கண்டறியப்பட்டுள்ளன.

### றௌலட்டட் மட்பாண்டம் (Rouletted Ware)

வட இலங்கையின் பண்டைய மக்களது வாழ்விடங்கள், துறைமுகங்கள், வர்த்தக மையங்கள் முதலிய பிரதேசங்களில் பரவலாக கண்டறியப்பட்ட மட்பாண்டமாக றௌலட்டட் விளங்குகிறது. ஏனைய மட்பாண்டங்களைப் போல தடிப்பானவையாக இல்லாமல் மென்மையான இயல்புடையனவாக கறுப்பு, சாம்பல் நிறங்களில் மேற்பரப்பில் றௌலட்டட் எனப்படும் அலங்கார அமைப்பு சிறிய முக்கோண, வட்ட, இணைகர வடிவில் அல்லது புள்ளிக ளாக வரையப்பட்டு காணப்படும். மெல்லிய இரும்பு வளையங்களுக்குள் வைத்து வெப்ப மேற்றப்படுவதால் மென்மையாக காணப்பட்ட பொழுதிலும் உடையாமற் காணப்படும். பெரும் பான்மையான மட்பாண்டங்கள் சாதாரண விளிம்புகளுடன் காணப்பட சில மட்பாண்டங்கள் உள்நோக்கிய வெளிநோக்கிய விளிம்புகளுடன் அலங்கார அமைப்புடனும் காணப்படுகின்றன.

உரோமப் பரப்பிலிருந்து நேரடியான வர்த்தக உறவுகளின் விளைவாக கொண்டு வரப் பட்ட மட்பாண்டங்கள் சிறியளவிலேயே காணப்படுகின்றன. ஆரம்ப காலங்களில் உரோமர்கள்

இந்திய வர்த்தகர்கள் மூலமே இலங்கை வர்த்தகத்தை மேற்கொண்டதன் விளைவே இதற்கு காரணம். உரோம வர்த்தக தொடர்பால் இந்தியாவில் உரோமக் குடியேற்றங்கள் உருவாகின. தமிழ் நாட்டின் அரிக்கமேடு உரோமரின் முக்கிய குடியேற்ற மையமாக காணப்பட்டதனை தொல்லியல் அகழ்வாய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. உரோம தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி பல மட்பாண்ட உற்பத்தி மையங்கள் தோற்றம் பெற்றன. பல தொழிற்சாலைகள் காணப்பட்டதனை இலக்கிய, அகழ்வுச் சான்றுகள் வெளிப்படுத்துகின்றன. மட்பாண்ட உற்பத்தி இலங்கையிலும் சில மையங்களில் இடம்பெற்றுள்ளன. உரோமிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட வைக்கும் உள்ளூர் உற்பத்திகளுக்குமிடையில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. உள்ளூர் மட்பாண்டங்களின் மேற்பரப்பு கரடு முரடான வகையில் அழுத்தம் குறைந்தவையாக உடையும் தன்மை உடையனவாக காணப்படுகின்றன.

வடஇலங்கையின் கரையோரப்பகுதிகள், துறைமுகங்களை அண்டிய பிரதேசங்கள், நகரமையங்கள் என்பவற்றில் றௌலட்டட் மட்பாண்ட சிதைவுகள் பரவலாக கண்டறியப்பட்டுள்ளன. குறிப்பாக மாதோட்டம், கந்தரோடை, ஆனைக்கோட்டை, சாட்டி, ஜம்புகோளப்பட்டிணம், மண்ணித்தலை, வெட்டுக்காடு. வல்லிபுரம், சந்திராந்தை, வேலணை, கருமணற்கும்பி, தாளையடி, வெற்றிலைக்கேணி, வெடியரசன்கோட்டை, கல்வளை முதலிய பிரதேசங்களில் மட்பாண்டச் சிதைவுகள் மேலாய்வுகளிலும், அகழ்வாய்வுகளிலும் கண்டறியப்பட்டுள்ளன.

வடமேற்கு கரையோரம் புராதன உரோம தொடர்புகளின் முக்கிய மையமாகும். இந்தியாவிற்கு அண்மையிற் காணப்பட்டமை, பௌதீக உறுப்புக்களின் சாதகத் தன்மை, வளமான இயற்கைத் துறைமுகம் போன்ற வர்த்தக விருத்திக்கு சாதகமான அம்சங்களின் ஒன்றிணைவினால் வர்த்தக உறவுகள் வலுவடைந்து காணப்பட்டன. வடமேற்கு கரையோர மாதோட்டப் பரப்பில் 1987 இல் பி.ஜே.போக், 1907 இல் தொல்லியல் திணைக்களத்தினர், 1926 இல் கோகாட், 1950இல் எஸ்.சண்முகநாதன், 1967 இல் விமலா பேக்லே, 1980,82,84 இல் ஜோன் காஸ்வெல் தலைமையிலான குழுவினர் ஆகியோர்களது அகழ்வாய்வுகள் மூலமாக பெருமளவிலான றௌலட்டட் மட்பாண்டங்கள் கண்டறியப்பட்டன. விமலா பேக்லே இவ் மட்பாண்டங்கள் இந்தியாவின் அரிக்கமேடு, மாந்தை என்பன வர்த்தகத்தில் இணைந்த மையமாக காணப்பட்டதனை எடுத்துக் காட்டுகிறார். மட்பாண்டங்களோடு கிடைத்த ஏனைய சான்றுகளுடன் நோக்கும் பொழுது இவை கி.மு 1 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 5ஆம் நூற்றாண்டு வரையான காலப்பரப்பு மட்பாண்டங்களாக காணப்படுகின்றன. உரோமிலிருந்து நேரடியாக உற்பத்தி செய்யப்பட்டவை சிறியளவிலும் இந்திய உற்பத்தி மட்பாண்டங்கள் பெருமளவிலும் கண்டறியப்பட்டுள்ளன.

வடமேற்கு இலங்கைக் கரையோர பூநகரிப் பரப்பிலும் புஸ்பரட்ணம் தலைமையிலான அகழ்வாய்வின் மேலாய்வின் பொழுது உரோமப் பொருட்கள் றௌலட்டட் மட்பாண்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மண்ணித்தலை, வெட்டுக்காடு, கௌதாரிமுனை முதலிய பிரதேசங்களில் மட்பாண்ட சிதைவுகள் பரவலாக கண்டறியப்பட்டுள்ளன. தொல்லியல் மாணவர்களாகிய

நாம் கள ஆய்வினை மேற்கொண்ட பொழுது மண்ணித்தலை, வெட்டுக்காடு ஆகிய பிரதேச மண்மேடுகள், அகழ்வுக்குழிகள் என்பவற்றில் றௌலட்டட் மட்பாண்டங்களை சேகரிக்க முடிந்தது.

வட இலங்கையின் புராதன நகர வர்த்தக மையமாகிய கந்தரோடையில் போல்.இ.பீரிஸ், விமலா பேக்லே, கிருஸ்ணராஜா, யாழ் பல்கலைக்கழக தொல்லியல் மாணவர்கள் ஆகியோர் மேற்கொண்ட அகழ்வாய்வு மேலாய்வுகளின் பொழுது றௌலட்டட் மட்பாண்ட சிதைவுகள் பல கண்டறியப்பட்டுள்ளன. 30.12.2007 அன்று புஸ்பரட்ணம் தலைமையில் தொல்லியல் மாணவர்க ளாகிய நாம் மேற்க்கொண்ட கள மேலாய்வின் பொழுது கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியா லயத்தை அண்மித்த நிலப்பரப்பிலிருந்து றௌலட்டட் மட்பாண்ட சிதைவுகள் பரவலாக காணப் பட்டதனை அவதானிக்க முடிந்ததுடன் சேகரிக்கவும் முடிந்தது.

ஆனைக்கோட்டைப் பரப்பில் இரகுபதி தலைமையிலான யாழ் பல்கலைக்கழக குழுவி னர் அகழ்வாய்வினை மேற்க்கொண்ட பொழுது பெருங்கற்கால ஈமச்சின்னங்களுடன் றௌலட் டட் மட்பாண்டங்களும் கண்டறியப்பட்டுள்ளன. பெருங்கற்கால ஈமச்சின்னங்களுடன் றௌலட் டட் மட்பாண்டம் காணப்படுவதனைக் கொண்டு வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டு உரோமத்தொடர்பு காணப்பட்டதனை அறியமுடிகிறது. பி,யி என்ற பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட றௌலட்டட் சாசனத்தின் ஒரு பகுதி கண்டறியப்பட்டுள்ளது. மட்பாண்ட உற் பத்தி சிறப்பாக காணப்பட்டதை இவ் சாசனங்கள் வெளிப்படுத்துகின்றன.

வெள்ளைக் கடற்கரை என அழைக்கப்படும் சாட்டிப் பரப்பில் 2004 – 2005 காலப்பரப்பில் புஸ்பரட்ணம் தலைமையிலான தொல்லியல் மாணவர்களாகிய நாம் மேற்கொண்ட அகழ் வாய்வின் பொழுது றௌலட்டட் மட்பாண்ட சிதைவுகள் சில கண்டறியப்பட்டன. வடஇலங்கைப் பரப்பிற் கிடைத்த மட்பாண்டங்களில் நேரடியாக உரோமிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மட்பாண்டமாக இது விளங்குகின்றது. இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது இரு வகை உரோம மட்பாண்டங்கள் பெறப்பட்டன. அவற்றுள் ஒருவகை மட்பாண்டம் உரோமில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. ஏனையவை சுதேச அல்லது தென்னிந்தியாவில் இருந்து வந்தவை. தென்னிந்திய தொல்லியற் பேரசிரியர் வை.சுப்பராயலு தமிழகத்தில் அரிகமேட்டிற்குப் பின்னர் உரோமில் இருந்து இறக்குமதியான மட்பாண்டம் கண்டறியப்பட்ட இடமாகச் சாட்டியைக் குறிப்பிடுகிறார். சந்திராந்தைப் பரப்பில் பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களது அகழ்வாய்வின் பொழுது ஆய்வுக்குழியின் மேற்பரப்பில் மட்பாண்டங்களின் சிதைவுகள் கண்டறியப்பட்டுள்ளன. ஏனைய பகுதிகளில் அகழ்வாய்வுகள் திட்டமிட்ட வகையில் இடம்பெறாத போதிலும் மேலாய்வுகளில் றௌலட்டட் மட்பாண்டங்களின் சிதைவுகள் பல கண்டறியப்பட்டுள்ளன.

**அரிட்டைன் மட்பாண்டம் (Arretine ware)**

உரோம வர்த்தகத் தொடர்பின் விளைவாக அப்பரப்பிலிருந்து கொண்டு வரப்பட்ட


மட்பாண்டமாக அரிட்னை மட்பாண்டமட் காணப்படுகிறது. இள மஞ்சள், பச்சை, சிவப்பு நிற மெருகுடன் மென்மையாகவும் நுண்மையாகவும் கண்ணாடி போன்ற பளபளப்புடன் ஒன்றன்மேல் ஒன்றாக மேல் வளையங்கள் ஒட்டப்பட்டதைப் போற காணப்படுகின்றன. இத்தாலியின் அரிசோ (Arezzo) பரப்பிலிருந்து முதலில் கொண்டு வரப்பட்டதனால் இப்பெயர் பெற்றது. இத்தாலியில் கி.மு 50 ஆண்டளவில் உற்பத்தி இடம்பெற்றது. கி.மு 1ஆம் 2ஆம் நூற்றாண்டு வர்த்தகத்தில் முக்கியம் பெற்று காணப்பட்டது. (ஏகாம்பரநாதன் 1993:132) இவ் வகை மட்பாண்டங்கள் தமிழ்நாட்டில் அரிக்கமேட்டில் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது.

வட இலங்கைப் பரப்பில் மாந்தை, கந்தரோடை, ஆனைக்கோட்டை, மண்ணித்தலை, வெட்டுக்காடு பகுதியில் இவ் வகை மட்பாண்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவ் மட்பாண்டங்கள் பெறுமதி கூடியவையாக காணப்பட்டமையால் உரோம வர்த்தகர்களது தனிப்பட்ட தேவைகளுக்காகவும், உயர் வர்க்கத்தினரின் பயன்பாட்டிலுமே இவை பயன்படுத்தப்பட்டன. வடமேற்கு மாந்தை நகரப்பரப்பில் 1950 இல் சண்முகநாதனது அகழ்வாய்வின் பொழுது பெருங்கற்கால ஈமைச்சின்ன அடக்க மேலிரு படைகளிலும் எவ்வித எச்சங்களும் காணப்படவில்லை. மூன்றாவது மணப்படையில் அரிட்டையின் மட்பாண்டங்கள் செறிவாக காணப்பட்டன. இதன் மூலம் வரலாற்று உதய காலத்தை அடுத்து உரோம வர்த்தகத் தொடர்புகள் உருவாகி விட்டதனைக் காணக்கூடியதாக உள்ளது. கந்தரோடை ஆனைக்கோட்டை பரப்பில் மேற்க்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது சிறியளவில் இவ் வகை மட்பாண்டச் சிதைவுகள் கண்டறியப்பட்டன. பூநகரியின் மண்ணித்தலை, வெட்டுக்காடு முதலிய பிரதேசங்கள் மாந்தை துறைமுகத்தை அண்டிய கரையோரப் பகுதிகளாக காணப்படுவதனால் அரிட்டையின் மட்பாண்டங்கள் பல கண்டறியப்பட்டுள்ளன. வட இலங்கையின் பல பகுதிகளில் இவ் வகை மட்பாண்டங்கள் காணப்படுவது உரோம வர்த்தக தொடர்பின் நெருக்கத்தினை வெளிப்படுத்துகின்றது.

## ஆம்போறா ஜாடிகள் (Amphora jars)

உரோம வர்த்தகர்கள் மதுபானம், எண்ணெய் முதலிய திரவப் பொருட்களை பாதுகாப்பாக பரிமாற்றம் செய்ய ஒரு வகை சாடி பயன்படுத்தப்பட்டது. இவை ஆம்போராச் சாடிகள் என அழைக்கப்பட்டன. இவை மிருதுவான களிமண்ணால் வனையப்பட்டு சூடாக்கப்பட்டு பழுப்பு நிறத்தினை உடையதாக இருக்கும். இவற்றின் அடிப்பகுதி கூராகவும் வாய்ப்பகுதி அகன்றதாகவும் மூடிகளை உடையதாகவும் கழுத்துப் பகுதியில் இருபுறமும் கைப்பிடிகளை உடையதாகவும் காணப்படும். கைப்பிடிகளை கொண்டிருப்பதனால் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு எடுத்துச் செல்லவும் கூர்மையான அடிப்பகுதி இருப்பதனால் நிலத்தில் ஊன்றி வைப்பதற்கும் வசதியாக காணப்பட்டது. (ஏகாம்பரநாதன் 1993:134). இவை தமிழ்நாட்டில் அரிக்கமேடு, வசப சமுத்திரம், கரூர் முதலிய இடங்களில் கிடைத்துள்ளன. பிற்காலத்தில் இச்சாடிகளைப்பார்த்து இதே வடிவத்திலே தமிழ்நாட்டு மக்களும் செய்துள்ளனர். ஆனால்

இச்சாடிகள் கைப்பிடி இல்லாது கூர்மையான அடிப்பாகம் உடையனவாக காணப்பட்டது. காஞ்சிபுரம் அகழ்வாய்வின் போது இச்சாடிகள் பல முழுமையாக மண்ணினுட் புதைந்து வைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (ஏகாம்பரநாதன் 1993:135) மட்பாண்ட உயரம் ஏறத்தாழ 35 தொடக்கம் 40 இன்சஸ் (inches) ஆகவும், தடிப்பு 2 தொடக்கம் 3 cm அடிப்பரப்பு 3 தொடக்கம் 6cm க்கு உட்பட்டதாகவும் காணப்படுகிறது.



வட இலங்கையின் மாதோட்டம், சாட்டி, பள்ளிக்குடா, மண்ணித் தலை முதலிய பகுதிகளில் இவ்வகைச் சாடிகளின் சிதைவுகள் பரவலாக கண்டறியப்பட்டுள்ளன. மாதோட்டம் வர்த்தக மையமாக விளங்கியதனால் பரவலாக ஜாடிகளின் சிதைவுகள் காணப்படுகின்றன. பூநகரி பள்ளிக்குடாப் பரப்பில் புஸ்பரட்ணம் அவர்கள் மேற்கொண்ட அகழ்வாய்வின் போது ஆம் போரா ஜாடி ஒன்று முழுமையாக கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் கைபிடிகள் இருந்தமைக்கான அடையாளங்கள் காணப்படுவதால் இது உரோமில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக இருக்கலாம். ஆயினும் இவ்விடம் உப்பு நீரோடும் பகுதியாக இருப்பதால் அதன் மினுமினுப்பான தன்மை கறைபடிந்து காணப்படுகிறது.

**உரோமானிய நாணயங்கள்**


வடஇலங்கை உரோம வணிக உறவை வெளிப்படுத்துவதில் உரோமர் கால நாணயங்களுக்கு முக்கிய இடமுண்டு. நாடோடி வாழ்க்கையை வாழ்ந்த மனிதன் விவசாய பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு நிலையாக ஓரிடத்தில் வாழத் தொடங்கிய போது அன்று முதல் வாணிபம் ஆரம்பமாகிவிட்டது. ஆரம்பத்தில் பண்டமாற்றாக இருந்த வர்த்தகம் கால ஓட்டத்தில் பண்டமாற்று முறையில் ஏற்பட்ட சிக்கல், வர்த்தக மையப் பொருளின் விலை நிர்ணயம் என்பவற்றில் ஏற்பட்ட சிக்கல், மக்களிடம் ஏற்பட்ட அறிவு வளர்ச்சி என்பன நாணயங்களின் தோற்றத்திற்கு வழிவகுத்தன. அந்நாணயங்களே இன்று பண்டைய கால மக்களின் வரலாறு பற்றிய ஆய்வில் நம்பகத் தன்மையுடைய தொல்லியற் சான்றுகளில் ஒன்றாகப் பயன்படுத்தப்படுகிறது. தொல்லியல் ஆய்வில் கண்டறியப்படும் நாணயங்கள் அவை வெளியிடப்பட்ட நாடுகளினதும், அவை பயன்படுத்தப்பட்ட இடங்களினதும் சமகால மக்களது பண்பாட்டின் பல்வேறு வரலாற்று பரிமாணங்களைக் கண்டறிய உதவுகின்றன. அவை இலக்கியங்கள் கூறும் வரலாற்றை உறுதிப்படுத்தவும் உதவுகின்றன.


கீழைத்தேயத்துடன் உரோமர் ஏற்படுத்திய உறவு தமிழகத்தின் மேற்குப்பகுதியில் இருந்து படிப்படியாக கிழக்கு நோக்கி நகர்ந்ததை இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். அதனையே உரோமர் தொடர்பாகக் கிடைத்த நாணயங்களும் உறுதிப்படுத்துகின்றன. தொடக்க கால உரோம நாணயங்கள் பலவும் தமிழகத்தின் கிழக்குப் பகுதியில் இருந்தே கண்டெடுக்கப்பட்டன. தமிழகத்தின் கிழக்குப் பகுதியில் மிக அரிதாக கி.மு.1ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட

நாணயங்களே கிடைக்கின்றன. வகையிலும் தொகையிலும் கி.பி.3-7ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட கால நாணயங்களே அதிகமாகக் கிடைத்துள்ளன. இதற்கு உரோம நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நாணயங்களோடு அதையடிப்படையாகக் கொண்டு தமிழகத்தில் வெளியிடப்பட்ட சுதேச நாணயங்களும் புழக்கத்திற்கு விடப்பட்டமை காரணமாகும். இந்த அம்சத்தை இலங்கையிலும் காணலாம். இதற்கு இலங்கை உரோம வர்த்தகம் தமிழகத்துடன் இணைந்து வளர்ச்சியடைந்ததே காரணமாகும். இலங்கையில் கிடைத்த உரோம நாணயங்கள் பற்றி ஆராய்ந்தவர்களில் ஸ்ரில்(J.still), கொட்றிங்ரன;(H.W.Codrington), மக்டொவால் (Macdowall) போன்றார் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனர். அவர்களுள் கொட்றிங்ரன் கி.மு 144 - கி.மு 49 வரையான காலகட்டத்தை சேர்ந்த 8 வெள்ளி நாணயங்கள் வடஇலங்கையில் கண்டறியப்பட்டதாக தனது நூலில் குறிப்பிடுகிறார். இருப்பினும் அதை உறுதிசெய்ய முடியவில்லை சுதந்திரத்துக்கு பின் ஏற்பட்ட தொல்லியல் ஆய்வு வளர்ச்சி உலகமயமாக்கல் பற்றிய எண்ணக்கரு என்பன புராதன வணிக உறவு பற்றிய ஆராய்வுகளுக்கு வழிகாட்டிகளாக உள்ளன.


மக்டொவால் என்ற அறிஞர் கி.பி 1 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 3ஆம் நூற்றாண்டு வரையான காலத்திற்குரிய வெள்ளியினால் 14 பேரரசு நாணயங்கள் (imperial coins) இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறுகிறார். அவை ரைபீரியஸ் (Tiberius) கி.பி 14-37, டொமிரியன் (Domitian) (81-96), ஹாட்ரியன் (Hadrian) (117-118), லூசியஸ் வேஹஸ் (Lucius verus) (161-169), மார்க்கஸ் ஒறிவியல் (Mareus Aurelius) (161-180), வோஸ்ரினா த-கங்கர்(175), கொமோடியஸ் (Commodus) (180-193), கெற்றா (Geta 211-217), யூலியர் டொமனா (Julia Doma) (217), Julia mammea 235, அன்ரோனியானி பிலிப்த எல்டர் (Antoniani of philipthe elder 244-249) ஆகிய மன்னர் கால நாணயங்களாகும். வால்பேக் (wal burg) என்பவர் ரைபீரியஸ் (Tibrrius) நாணயத்தைப் பற்றிக்கூறும் பொழுது இவ் நாணயங்கள் தென்னிந்தியப் பரப்பில் இருந்தே இலங்கை வந்தன என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார். வார்மிங்டன் (warmington) இக் கருத்தின் உண்மைத் தன்மையினை ஏற்றுக் கொண்ட போதும் இன்னொரு கருத்தை கூறுகின்றார். முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் உரோம வர்த்தகம் நேரடியாக அன்றி இந்திய வர்த்தகர்கள் மூலமாகவே இடம்பெற்று வந்தன. தென் இந்தியாவின் சோழ, பாண்டிய அரசுகள் இலங்கைப் பொருட்களுக்கு தாமே ஏகபோக விற்பனையாளர்களாகத் திகழ்ந்தனர். இதனை பிளினி போன்ற அறிஞர் குறிப்புகளிலிருந்து அறிய முடிகிறது.


வட இலங்கைப் பரப்போடு உரோம வர்த்தகர்கள் கொண்ட உறவுகளின் விளைவாக அவர்களது நாணயங்கள் இப்பரப்பிற் பல மையங்களில் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் கி.மு 2ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 6ஆம் நூற்றாண்டு வரையான காலப் பரப்பினைச் சேர்ந்த உரோம நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. வடஇலங்கையின் புராதன தொல்லியல் மையங்கள் யாவற்றிலும் நாணயங்கள் கண்டறியப்பட்டுள்ள போதிலும் மாதோட்டம்,






கந்தரோடை, ஆனைக்கோட்டை, மண்ணித்தலை, வெட்டுக்காடு, சாட்டி, வல்லிபுரம், நாகர் கோவில், வரணி, நல்லூர், கல்வளை முதலிய பகுதிகளில் அதிக அளவில் கண்டறியப்பட்டுள்ளது. இவை ரோமிலிருந்து நேரடியாக கொண்டு வரப்பட்டவை, இந்தியப் பரப்பிலிருந்து வந்தவை, உள்நாட்டிலே உற்பத்தி செய்யப்பட்டவை என மூன்று வகையான நாணயங்கள் காணப்பட்ட பொழுதிலும் பல அம்சங்களில் ஒற்றுமை கொண்டு காணப்படுகின்றது. முன்புறத்தில் பெரும்பாலும் மன்னனது தலை, இரண்டு போர் வீரர்கள் காவல் காப்பது போன்ற உருவம் மறு புறத்தில் வட்டத்தினுள் காணப்படும் சிலுவை, இணைந்த வட்டங்கள், புள்ளிகள், நிற்கும் நிலையில் உள்ள மனித உருவம் என்பவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. சில நாணயங்களில் லத்தீன் மொழியில் மன்னன் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான நாணயங்கள் செம்பில் வடிவமைக்கப்பட்டவை. பொன், வெள்ளி நாணயங்கள் எண்ணிக்கையில் அரிதாகும். மனிதன் போன்ற உருவங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் வடஇலங்கையில் கண்டறியப்பட்ட நாணயங்களில் அகஸ்டிஸ் (Augustus), குளோடியஸ் (Claudius), நிரோ (Nero), டொமன்ரியம் (Donantian), ரெம்பிறியஸ் (Tiberius), ஹடிரியன் (Hadrian), யூலியா டொமன் (Julia domna), யூலியா மெம்மாயி (Julia mammaee), வஸ்பஸ்ன் (Vespasian), போர்த்துமயஸ் (Postumas) முதலான மன்னர் கால நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.





யாழ்ப்பாணக் குடாநாடு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் உடைய பிரதேசம். கந்த ரோடை வரலாற்றுப் பழைமை வாய்ந்த நகர மையமாகும். 1907 இல் போல் இ.பீரிஸ், 1967 இல் விமலா பேக்லே, 1980களின் பின்னர் கிருஸ்ணராஜா முதலியோர் இப் பரப்பில் அகழ்வாய்வுகளை மேற்க்கொண்டுள்ளனர். வரலாற்று ஆர்வம் மிக்க பலர் மேலாய்வுகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். இவ் ஆய்வுகளின் போது பல உரோம நாணயங்கள் கண்டறியப்பட்டதாக கொட்ரிங்ரைன் தனது நூலில் குறிப்பிடுகின்றார். அவற்றுள் கொன்ஸ்ரைன்.ஐ, (Constantine I,) வலஸ்ரினியன் (Valentinian), அக்ரேரியஸ் (Accadius), இந்தோ- ரோம நாணயம் என்பவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. பேராசிரியர் கிருஸ்ணராஜா கந்தரோடையில் பொன் நாணயத்தை கண்டுபிடித்ததாகத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். தென்மராட்சி வரணிப் பகுதியில் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களது ஆய்வின் போது 600க்கு மேற்பட்ட உரோமர் காலச் செப்பு நாணயங்கள் கண்டறியப்பட்டுள்ளது. அவற்றுள் பெரும்பாலான நாணயங்கள் கி.பி.4-6ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்டவையாகும். வடமேற்கு இலங்கையில் மாதோட்டப் பகுதியில் போக், சண்முகநாதன், விமலாபேக்லே, ஜோன் காஸ் வெல் மேற்க்கொண்ட

அகழ்வாய்வுகளின் போது பல உரோம நாணயங்கள் கண்டறியப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் பிடாரிக்குளம் பகுதியில் வலன்ரியன் 11 (Vallentinian), தொடோசியல் (Thodiosius) ஆகிய மன்னர் கால நாணயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றோடு இந்தோ ரோம நாணயங்களும் காணப்படு கின்றது.



பூநகரிப் பகுதியில் உள்ள மண்ணித்தலை, வெட்டுக்காடு பரப்பில் பெருமளவிலான உரோம நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவை கி.பி முதலாம் நூற்றாண்டுக்கும் ஆறாம் நூற்றாண்டுக்கும் இடையிலே புழக்கத்தில் இருந்த நாணயங்களாகும். அந்நாணயங்கள் சிலவற்றில் முன் பக்கத்தில் உரோமப் பேரரசின் கிரீடம் தரித்த தலையும், சுற்றிவரப் புள்ளிகளும், பின் பக்கத்தில் இரண்டு போர் வீரர்களின் உருவமும் உள்ளன. வேறுசில நாணயங்களில் அரசனின் பெயரும் பொறிக்கப்பட் டுள்ளது. அப் பெயரை ஆதாரமாகக் கொண்டு இந் நாணயங்கள் கி.பி முதலாம் நூற்றாண்டிலே் ஆட்சி புரிந்த ஒகஸ்தஸ்சீசர் காலத்திற்குரிய நாணயம் என அடையாளம் காண முடிந்தது. ஆனைக்கோட்டைப் பரப்பில் கலாநிதி.பொ. இரகுபதி தலைமையிலான ஆய்வின்போது பெருங்கற் கால ஈமச் சின்னங்களை அடுத்த படையில் உரோமர் கால நாணயம் கண்டறியப்பட்டுள்ளன. உரோமர் கால நாணயங்களுடன் அவர்களது பிற கலைப்படைபுகள் சிலவும் வடஇலங்கையில் கண்டறியப்பட்டுள்ளன. இவையனைத்தும் வடஇலங்கையுடன் உரோம நாட்டிற்கிருந்த வர்த்தக பண்பாடு உறவுகளுக்கு நம்பகத் தன்மையுடைய சான்றுகளாக விளங்குகின்றது. இருப்பினும் இலங்கை வரலாற்று இலக்கியங்களில் உரோமரது உறவு அநுராதபுர அரசின் மையப்பகுதியுடன் இருந்தது பற்றியே அதிகமாகப் பேசுகிறது. ஆனால் வட இலங்கையில் கிடைத்த உரோமர் தொடர் பான சான்றுகளை நோக்கும் போது அவர்களது நடவடிக்கைகள் இப்பிரதேசத்திலும் மேலோங்கி யிருந்ததைக் காண முடிகிறது. இது இலங்கை பற்றிய வரலாற்று ஆய்வில் இடம்பெறுவது அவசியமாகும்.



*****                                                    *****

# உசாத்துணை நூல்கள்

இந்திரபாலா.கா., 2006, **இலங்கையில் தமிழர்**, சென்னை.

கிருஸ்ணராஜா.செ., 1983, யாழ்ப்பாணக் குடாநாட்டிற் கிடைத்த நாணயங்கள் **சிந்தனை** தொகுதி 1, பக், 71-84.

சிவசாமி, வி., 1974 **யாழ்ப்பாணக் காசுகள்**, யாழ்ப்பாணம்.

சிற்றம்பலம்.சி.க., 1993, **யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு**, யாழ் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி

பத்மநாதன், சி., 1984, இலங்கையிற் தமிழ் வணிக கணங்களும் நகரங்களும், கி.பி1000-1250, **சிந்தனை** தொகுதி 2, பக் 45-78.

புஸ்பரட்ணம், ப., 1993, **பூநகரி தொல்பொருளாய்வு**, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

Carswell, John, and Martha Prickett, 1984, **Mantai 1980; APreliminary Invesitigation In Aneient Ceylon,** Journal of Archaelogical Survey, Department of Srilanka, pp3-68.

Codrington, H.W., 1924, **Ceylon Coins and Currency,** Colombo.

Geiger, W., 1950, **Mahavamsacem,** Colombo

Godakumbura, C.E., 1968, **Kanthoroai**, J.R.A.S.C.B.N.S, Vol-XII, pp67-76.

Perera, B.I., 1951 **The Foreign Trade and Commerce of Ancient Ceylon**, Ports of Ancient Ceylon, The Ceylon Historical Journal, Vol-I, No-2, Oct.


Rgupathy, P; 1987, **Early Settlements in Jaffna-An Archaeological survey,** Madras.

Wheeler, R.E.M., 1964, Arikamedu An Indo-Roman Trading Station on The EastCoast of India; **Ancient India**, No-2, pp: 180-310

***** *****

## வடஇலங்கையில் தமிழ் மொழியின் தொன்மையும், தமிழ்ச் சாசனங்களும் - ஒரு ஆவணத் தொகுப்புக்கான அறிமுகம்

*சி.ரேணுகா*
*தொல்லியல் சிறப்பு*
*இறுதி வருடம்*



தொல்லியலில் நம்பகத்தன்மை உடைய மூலாதாரங்களில் சாசனங்களும் ஒன்றாகும். இவை இலக்கியங்களைப் போல் தொடர்ச்சியான, விரிவான வரலாற்றைக் கூறாவிட்டாலும், கூறப்படும் சம்பவங்கள் பெரும்பாலும் நம்பகத்தன்மை உடையவை. இவை சம்பவம் நடந்த காலத்தில் எழுதப்படுவதால் பிற்கால இடைச்சொருகல்கள், திரிபுகள் இடம்பெற வாய்ப்பில்லை. இதனால்தான் தொல்லியல் ஆய்வில் சாசனங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. வடஇலங்கையைப் பொறுத்தவரை இங்கு ஏனைய இடங்களில் கிடைத்தது போன்ற அதிக அளவிலான சாசனங்கள் கிடைத்ததெனக் கூறமுடியாது. இதற்கு எழுத்துக்களைப் பொறிப்பதற்கு ஏற்ற கல்வகை கிடைக்காமை ஒரு காரணமாகக் கூறப்பட்டாலும், விரிவான அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படாமையும் இன்னொரு காரணமாகும். ஆயினும் இதுவரை கிடைத்த சாசனங்கள் இலங்கைத் தமிழர் வரலாறு பொறுத்து முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. இக்கல்வெட்டுக்கள் இப்பிரதேசத்தின் எழுத்து, மொழி, மதம், கலை, அரசியல், பொருளாதாரம், அயல்நாட்டு உறவுகள் என்பவற்றை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றன.


இங்கு கிடைத்த சாசனங்கள் பெரும்பாலும் சமகால தமிழக சாசனமரபை ஒட்டியதாகவே வெளிந்துள்ளது. இதற்கு வடஇலங்கை தமிழகத்திற்கு அண்மையில் அமைந்திருப்பதும், மதம், மொழி, பண்பாட்டால் இரு பிராந்தியங்கள் ஒன்றாக இருப்பதும் காரணமாகும். இந்த ஒற்றுமையும், உறவுகளும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து தொடங்குகிறது. இதையே வடஇலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட நுண்கற்கால, பெருங்கற்கால பண்பாடுகள் தமிழகத்தின் ஒரு பகுதியெனக் கருதும் அளவிற்கு ஒற்றுமை கொண்டிருப்பதன் மூலம் உணரமுடிகிறது.

வடஇலங்கையில் எழுத்துப் பொறித்த சாசனங்கள் கி,மு.3ஆம் நூற்றாண்டில் இருந்து கிடைக்கின்றன. அவற்றுள் கி.பி.5ஆம் நூற்றாண்டுவரை பயன்பாட்டில் இருந்தவை எண்ணிக்கையில் அதிகமாகும். அதன் பின்னர் கிடைத்த கல்வெட்டுக்கள்


பெரும்பாலும் கி.பி.10 –11 ஆம் நூற்றாண்டுக்கு உரியவை. 16 ஆம் நூற்றாண்டின் பின்னர் இந்த எண்ணிக்கை படிப்படியாகக் குறைவடைந்து செல்கின்றன.

## மட்பாண்டச் சாசனங்கள்

தென்னாசியாவில் கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்து பிராமி எழுத்து பயன்பாட்டுக் வந்ததைத் தொடர்ந்து கற்களில் எழுத்துப் பொறிக்கும் மரபும் தோன்றியது. ஆயினும் தமிழகத்திலும், இலங்கையிலும் மட்டும் மட்பாண்டங்களில் எழுதும் முறை இதுவரை கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு இரு பிராந்தியங்களிலும் பெருங்கற்காலப் பண்பாட்டு முதிர்ச்சி நிலையில் இவை பயன்பாட்டிற்கு வந்ததைக் காணலாம். அண்மையில் அநுராதபுரத்திலும், தமிழகத்தில் ஆதிச்ச நல்லூரிலும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் மங்கிய நிலையில் கண்டறியப்பட்ட மட்பாண்ட எழுத்துக்கள் பல்வேறு காலக் கணிப்பிற்கு உட்படுத்தியதில் இருந்து இவற்றின் தோற்றம் கல்லில் பிராமி எழுத்துப் பொறிக்கப்படுவதற்கு சில நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதெனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்திலும், இலங்கையிலும் தமிழ் வரிவடிவத்தின் தொன்மை மேலும் முன்னோக்கிச் செல்வதாக உள்ளது.




இலங்கையின் பல்வேறு வட்டாரங்களில் பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வடஇலங்கையில் பூநகரி, இரணைமடு, சாட்டி, ஆனைக்கோட்டை, கந்த ரோடை ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. அவற்றுள் கந்தரோடை, பூநகரி ஆகிய இடங்களில் கிடைத்த சில தமிழ்ப் பெயர் பொறித்த மட்பாண்டங்களைத் தவிர ஏனைய இடங்களில் கிடைத்த மட்பாண்ட ஓடுகளில் ஓரிரு எழுத்துக்கள் மட்டுமே உள்ளன. ஆயினும் அவற்றில் தமிழ் மொழிக்கே சிறப்பான ழ, ள, ற, ன போன்ற எழுத் துக்கள் உள்ளன.



அத்துடன் பெரும்பாலான எழுத்துக்கள் தமிழ்ப்பிராமிக்குரிய வரிவடிவ அமைப்பிலேயே எழுதப்பட்டுள்ளது. அவற்றை அடிப் படையாகக்கொண்டு கி.மு.3ஆம் நூண்டிலிருந்தாவது வட இலங்கையில் தமிழ்மொழி வழக்கில் இருந்ததெனக் கூற முடிகிறது. அதேவேளை இக்காலத்தில் இருந்து தென்னாசியா எங்கிலும் பிராகிருத மொழியில் பிராமிச் சாசனங்கள் எழுதப்பட்டதால் அவற்றின் செல்வாக்கையும் இங்கு கிடைத்த மட்பாண்டச் சாசனங்களில் காண முடிகிறது. இதற்கு கந்தரோடையில் கிடைத்த சாசனம் சிறந்த உதாரணமாகும்.

***** *****


### ஆனைக்கோட்டை சாசன முத்திரை




இச்சாசனம் 1980ஆம் ஆண்டு கலாநிதி இந்திர பாலா தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் ஆனைக்கோட்டையில் மேற்கொண்ட தொல்லியல் அகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டது. பெருங்கற்கால ஈமச் சின்னம் ஒன்றிலிருந்து இச்சாசனம் கண்டுபிடிக்கப்பட்டதென்ற வகையில் இதற்குத் தனி முக்கியத்துவம். உண்டு.

### பிராமிக் கல்வெட்டுக்கள்

இலங்கையில் ஏறத்தாழ 1500 பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவ்வளவு எண்ணிக்கையுடைய கல்வெட்டுக்கள் தென்னாசியாவில் வேறு எந்த நாட்டிலும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. வட இலங்கையின் எல்லா வட்டாரங்களிலும் கல்வெட்டுக்களைப் பொறிப்பதற்குப் பொருத்தமான கல்வகை கிடைக்காவிட்டாலும் வவுனியா மாவட்டத்தில் உள்ள பெரியபுளியங்குளம், எரப் பொத்தாளை, வெடிகினார் மலை ஆகிய இடங்களில் மட்டும் 59 கல்வெட்டுக்கள் கிடைத்துள் ளன. தென்னாசியாவின் ஏனைய வட்டாரங்களைப் போல் இக்கல்வெட்டுக்கள் அசோக பிராமியில், பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருந்தாலும் அவற்றில் தமிழ்பிராமி எழுத்தினதும், தமிழ் மொழியினதும் செல்வாக்கைக் காணமுடிகிறது. அத்துடன் வேள், ஆய், பரதவர், மல்லன் முதலான தமிழ்ப் பெயர்களும், பட்டம் குலம் சார்ந்த பெயர்களும் காணப்படுகிறன. பெரியபுளியங்குளத்தில் உள்ள இரு கல்வெட்டுக்கள் தமிழ் வணிகர் பற்றிப் பேசுகின்றன.




கலாநிதி இந்திரபாலா அண் மையில் வெளியிட்ட நூலில் இலங்கையில் மொழியடிப்படையில் முதலில் இனங்காணப்பட்டவர்கள் தமிழர் என்பதற்கு இக்கல்வெட்டுக்கள் சிறந்த சான்றாகும் எனக் குறிப்பிடுகிறார்.



### தமிழ்பிராமியில் வெளியிடப்பட்ட நாணயங்கள்

சங்க காலத்திற்குச் சமமான காலத்தில் இருந்தே இலங்கைத் தமிழர் நாணயங்கள் வெளியிட்டனர் என்பதற்கு தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற



இடத்திலும், வட இலங்கையில் உடுத்துறை, கந்த ரோடை ஆகிய இடங்களில் கிடைத்த கி.மு.2ஆம் நூற்றாண்டுக்குரிய நாணயங்கள் சான்றாகும். தென்னிலங்கையில் கிடைத்த நாணயங்களில் தஜபியன், மகாசாத்தன், உதிரன், கபதி கஜபன், திசபுரசடநாகராசன் ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன. அதில் வரும் திசபுரசடநாகராசன் என்ற பெயர் கி.மு.2ஆம் நூற்றாண்டில் தமிழ்ச் சிற்றரசன் ஒருவனது ஆட்சி தென்னிலங்கையில் இருந்ததற்குச் சான்றாகும். இதே காலத்திற் குரிய கந்தரோடை நாணயம் ஒன்றில் திசபியன் என்ற பெயர் காணப்படுகிறது. உடுத்துறையில் கிடைத்த நாணயத்தில் அதன் முன்பக்கத்தில் நாகபூமி என்ற பெயரும், பின்புறத்தில் பொலம் என்ற சொல்லும் காணப்படுகிறது. இதில் வரும் நாகபூமி என்ற பெயா நாக வம்சத்தை அல்லது நாகநாட்டைக் குறிக்கலாம். இந்நாணயங்கள் தமிழ்மொழி, தமிழ் எழுத்து என்பவற்றின் தொன்மையை மட்டுமனறி பண்டைய இலங்கைத் தமிழரின் அரசியல், சமூக வரலாற்றையும் அறிய உதவுகின்றன.

### பொற்சாசனம்

1936 ஆம் ஆண்டு வல்லிபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பொற்சாசனம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது வல்லிபுர ஆலயத்தினுள்ளே உள்ள கட்டட மொன்றின் அத்திவாரத்தின் கீழே மீட்கப்பட்டது. இது 39.16 அங்குல நீளமும், ஒரு அங்குல அகலமும் 69.5 கிரெய்ன் நிறையும் கொண்டது. இப்பொற்சாசனம் பற்றி பல் வேறு முரண்பாடான தகவல்கள் பலராலும் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. பரணவிதான இதன் ஆட்சியாளரை வசப மன்னன் என குறிப்பிடுகின்றார். சிலர் பொற்சாசனம் கி.பி. 1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனவும், வேறுசிலர் கி.பி. 3ஆம் அல்லது 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனவும் எனவும் குறிப்பிடுகின்றனர். 4 வரிகளையுடைய இச்சாசனம் பின்வருமாறு வாசிக்கப்பட்டுள்ளது.

"ஸித்த மகரஜ வஹயக ரஜெஹி அமெதெ
இஸிகிரயே நகதிவ புஜமெதி
படகர அதநெஹி பியகுகதிஸ
ஹிஹர அரிதே"

இச்சாசனத்தில் வகயக மகாராஜாவின் ஆட்சிக் காலத்திலே அவரது அமைச்சரான இஸிகிரய நாகதீவை நிர்வாகம் செய்யும் போது படகர அதனவில் பியகுக திஸ்ஸ விகாரையைக் கட்டுவித்த செய்தி கூறப்பட்டுள்ளது. இருப்பினும், இதன் வாசகம்,

எழுத்து மொழி தொடர்பாக அறிஞர்களிடையே ஒருமித்த கருத்துக் காணப்படவில்லை. இருப்பினும் இதில் தமிழ் எழுத்து, மொழி தொடர்பான சான்றுகள் இருப்பதைப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். இது எதிர்காலத்தில் இச்சாசனம் பற்றிய ஆய்வில் புதிய கருத்துக்கள் வெளிவர இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

**சோழ சாசனங்கள்**

வட இலங்கையில் கிடைத்த தமிழ்ச் சாசனங்களின் வரிசையில் சோழக் கல்வெட்டுக்கள் முக்கியம் பெறுகின்றன. அந்த வகையில் மாதோட்டம் ஊர்காவற்றுறைக் கல்வெட்டு எனப் பெயரிடப்பட்ட கல்வெட்டு அதிக முக்கியத்துவம் உடையது. இக்கல்வெட்டு ஊர்காவற்றுறை டச்சுக் கோட்டையாகிய ஹமல்ஹில் கோட்டையிலே மீட்கப்பட்டது. மாதோட்டத்திலே இந்து ஆலயம் ஒன்று அழிக்கப்பட்டு கோட்டை கட்டுவதற்காக ஊர்காவற்றுறைக்கு கொண்டுவரப்பட்டதாக கருதப்படுகிறது. இராசேந்திர சோழனுக்குரியதான 11 ஆம் நூற்றாண்டுக்குரிய இக்கல்வெட்டு தமிழும் கிரந்தமும் கலந்த வரிவடிவிலே பொறிக்கப்பட்டுள்ளது. "ஸ்வஸ்தி ஸ்ரீ ஈழ மு(ழு)வதுங் கொண்டு.." எனத் தொடங்கும். இக்கல்வெட்டானது 3 அடி 1 அங்குல நீளமும், 8 அங்குல அகலமும், உயரமுடையது. வைரமான கல்லில் பொறிக்கப்பட்ட இச்சாசனத்தின் முதற் பகுதி 17 வரிகளையும் இரண்டாம் பக்கத்தில் 18 வரிகளும் காணப்படுகின்றன.

இக்கல்வெட்டிலே கூறப்பட்ட செய்தியானது சோழத் தளபதியாகிய தண்ட நாயகனான ஐயங் கொண்ட மூவேந்த வேளான் என்பவன் தலைமையில் இலங்கை மீது படையெடுத்து இலங்கையில் ஆட்சி செய்து கொண்டிருந்த மகிந்தன் அவனது அரசி, சொத்துக்களை கொண்டு சென்றமை பற்றியும், மாதோட்டத்திலே உள்ள ஆலயம் ஒன்றிற்கு தானம் வழங்கியமை பற்றியும் குறிப்பிடுகின்றது.

யாழ் கோட்டையிற் கிடைத்த சாசனமானது யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டையின் பிரதான வாயிலின் உட்புறத்திலே கழிவுநீர் வாய்க்காலுக்கு குறுக்கே வைத்துக் கட்டப்பட்ட நிலையிலே மீட்கப்பட்டது. 11ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த முதலாம் இராஜேந்திர சோழனுக்குரியதான இக்கல்வெட்டும் தமிழ், மற்றும் கிரந்த வரிவடிவத்தில் எழுதப்பட்டுள்ளது. இதில் இராசேந்திர சோழனால் ஈழம் வெற்றி கொள்ளப்பட்ட செய்தியும், நல்லூரில் உள்ள இச்சாசனமானது வைரமான சுண்ணக்கல்லிலே 5 அடி 10 அங்குல நீளமும், 8 ½ அங்குல பக்கங்களின் அகலத்தையும் 4 பக்கங்களிலும் இருபக்கப் பரப்பிலே பொறிக்கப்பட்டுள்ளது. "அ" பாகம் மெய்க்கீர்த்தி பாகமாகவும், "ஆ" பாகமானது சாவாமூவாப் பேரோடு என்னும் மொழியுடனும் காணப்படுகிறது. அதிலே "அ" பாகம் "திருமன்னி வளர இருநில மடந்தையும் போர்ச் சயப்பாவையுஞ்......... எனத் தொடங்கி இராஜே(ந்திர) (சோழ) தேவர்க்கு என முடிகிறது. "ஆ" பாகமானது "யாண்(டு)

.......உடையார் ஸ்ரீ (ரா)ஜே(ந்திர) சோழ .. எனத் தொடங்கி .......யிலுடைய......ஆன் சாத்தனே" என முடிவடைவதனை காணலாம்.

சோழத் தளபதியால் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டானது தூணின் நான்கு பக்கங்களிலும் 4 அடி 5 அங்குல நீளமும், 8 அங்குல அகலமுடையதாக காணப்படுகின்றது. 98 வரிகளையுடையது. சில வரிகள் சேதமடைந்திருந்தாலும் "அ" பக்கம் "சோழ மண்டலத்து ஷத்திரிய சிகாமணி வளநாட்டு வேளார் நாட்டுச் சிறு கூற்ற நல்லூர்க் கிழவன் " எனவும் "ஆ" பக்கம் "நைக் கொடி நாடான அருமொழித்தேவ வளநாட்டுக்கு அசங்கும் பாதைகளால் நிசதம்......" எனவும் "இ" பக்கம் "வன் பெருங் கோலால் உட்பட வடக்கும் மேல பாற்கெல்லை ராஜராஜப் பெருந்தெரு.......எனவும் "ஈ" பக்கம் "ஒன்றும் பாதை படவுகளால் அக்கம் ஒன்றும் இவ்வூர் நெய்யும் தயுகளால் ........" எனவும் நான்கு பக்க தூணிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட மாதோட்டம் திருவிராமேஸ்வரம் கல்வெட்டும் குறிப்பிடத்தக்கது. வடஇலங்கையில் கிடைத்த இக்கல்வெட்டானது மாந்தையில் உள்ள திருக்கேதீஸ் வரத்திலே கிடைத்தது. 1ஆம் இராசேந்திர சோழனுக்குரியதான 11 ஆம் நூற்றாண் டுக்குரிய இக்கல்வெட்டு தமிழ் கிரந்த வரிவடிவிலே பொறிக்கப்பட்டுள்ளது. இதிலே இராஜராஜபுரமென வழங்கப்பட்ட மாதோட்டத்திலமைந்திருந்த திருவிராமேஸ்வரம் ஆலயத்தற்கு வழங்கப்பட்ட கொடை பற்றிக் கூறப்பட்டுள்ளது. திருவிராமேஸ்வரம் ஆல யம் பற்றி குறிப்பிடுகின்ற இக்கல்வெட்டானது 29 வரிகளிலேயே கிடைத்திருப்பதுடன் மிகுதிப்பகுதி அழிவடைந்து விட்டது. இதன் வாசகம் "ஸ்வஸ்தி ஸ்ரீ திரு(வி)ராமேஸ்வர முடைய மகாதேவர் .......எழுந்தருளும் இஷவா......" எனச் சொல்கின்றமையைக் காணலாம்.


அடுத்து, திருக்கேதீஸ்வரத்திலே கிடைத்த மாதோட்டம் சிலாசாசனமானது மிகவும் முக்கியம் பெறுகின்றுது. இக்கல்வெட்டும் 1ஆம் இராசேந்திர சோழனுக்குரிய தாகவும் 11 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ் சமஸ்கிருத மொழியில் தமிழ் கிரந்த வரிவடி விலே பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கல்வெட்டிலே ஈழத்தினை இராஜேந்திரனின் படைகள் வெற்றி கொண்ட செய்தியும், மன்னரதும் மகிஷியரதும் மடி, குடை என்பவற் றையும் பாண்டியர் விட்டுச் சென்றவற்றை கைப்பற்றிக்கொண்டு சென்றமை பற்றிக் கூறப்பட்டுள்ளது. மேலும் இக்கல்வெட்டிலே "ஸ்வஸ்தி ஸ்ரீ திருமன்னி வளர இருநில மடந்தையும் போ(ர்)ச் செயப்பாவையும்......"எனத் தொடங்கி 27 வரிகளில் மட்டுமே கிடைத்திருப்பதுடன் எஞ்சியவை சேதமடைந்து விட்டமையையும் காணலாம். இச்சிலாசாசனமானது துண்டமாகிய படியே கிடைக்கிருக்கின்றது.

***** *****

## பராக்கிரமபாகுவின் தமிழ்ச் சாசனம்

சோழர் ஆட்சியைத் தொடர்ந்து பொலநறுவையில் ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்களுள் பலரும் தமிழர் வாழ்ந்த பகுதிகளில் தமது நிர்வாக நடவடிக்கை களை தமிழில் மேற்கொண்டனர். இதற்கு பொலநறுவை, திருகோணமலை மாவட் டங்களில் கண்டுபிடிக்கப்பட்ட விஜயபாகு, கஜபாகு, நிசங்கமல்லன் காலத் தமிழ்க் கல்வெட்டுக்கள் சிறந்த சான்றாகும். இதை நயினாதீவில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாம் பராக்கிரமபாகு வின் தமிழக் கல்வெட்டு மேலும் உறுதி செய்கிறது.

இக்கல்வெட்டு நயினை நாகபூசணி அம்மன் ஆலய வளவிலுள்ள கற்பலகை யிலே காணப்படுகிறது. கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்குரிய இக்கல்வெட்டு தமிழ் மற்றும் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அதிக வரிகள் கொண்ட கல்வெட்டுக்களில் இதுவும் ஒன்றாகும். 3 அடி 11 அங்குல நீளமும், 2 அடி 4 அங்குல அகலமுடைய இக்கற்பலகையின் இருபக்கங்களிலும் ஏறத்தாழ 24 வரிகளில் சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது. சாசனத் தின் மேற்பகுதி 1 அடி 7 அங்குல அகலமுடையது. 1926 இல் முதலியார் இராசநாயகத்தாலும், 1949 இல் இலங்கைத் தொல்பொருட் திணைக்களத்தாலும் மைப்பிரதி எடுத்து வாசிக்கப்பட்ட இச்சாசனம் இறுதியில் கலாநிதி இந்திரபாலாவால் மைப்பிரதி எடுக்கப்பட்டு வாசிக்கப்பட்டதன் பின்னர் அதன் முக்கியத்துவம் பிறசான்றாதாரங்களின் பின்னணி யில் வெளிவந்தது. "........நாங்கள் .........வந்து ஊராத்துறை(யில்) பரதெசிகள் வந்து இருக்க வேணுமென்றும் அவர்கள் ரஷைப்பட வேணு மென்றும்........"தொடரும் இக்கல் வெட்டானது பிறநாட்டு வர்த்தகர்களுக்கு ஏற்படுத்தப் பட்ட சில வசதிகளையும் சுங்க ஒழுங்குகளையும் எடுத்துக்கூறுவதாக இச்சாசனம் அமைகிறது.



## ஆறாம் பராக்கிரமபாகுவின் தமிழ்ச் சாசனம்

இச்சாசனம் யாழ்பாணத்தின் பிரதான வீதியில் யாழ்ப்பாணம் "சென்றல் கபே" எனும் தேநீர் கடையின் வாசலிலே 1968 இல் கண்டுபிடிக்கப்பட்டு தொல்லியல் ஆய்வுப் பிரிவினரால் மைப்பிரதி எடுக்கப்பட்டது. வைரமான கல்லில் பொறிக்கப்பட்ட சாசனம் 5 அடி நீளமும், 7 அங்குல அகலமுடையது. இதில் இச்சாசனம் 25 வரிகளில் எழுதப்பட்

டிருந்தாலும் 15 வரிகளை மட்டுமே வாசிக்க கூடியதாக அதன் எழுத்துக்கள் தெளிவாகக் காணப்படுகின்ற. இச்சாசனத்தின் முக்கிய வாசகங்களாக "ஸ்ரீ சங்க பொதி வ(ர்)மரான தி(ரு)புவ(ந) (ச) சக்க(ற) வத்திக(ள்)" என்ற வாசகம் காணப்படுகிறது. சாசனத்தில் கூறப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களில் இருந்து இச்சாசனம் கி.பி 1546 1556 இற்கும் இடைப்பட்டகாலத்தில் தென்னிலங்கையில் ஆட்சி புரிந்த ஆறாம் பராக்கிரமபாகுவிற்கு உரியதென்பது தெரிகிறது.

## உரும்பிராய் தமிழ்ச் சாசனம்

மத்திய காலக் கல்வெட்டுக்கள் வரிசையிலே உரும்பிராய் கருணாகரப் பிள்ளை யார் கோயில் கல்வெட்டு முக்கியம் பெறுகின்றது. இது கருணாகரப் பிள்ளையார் கோயி லிலே கண்டுபிடிக்கப்பட்டதால் இதற்கு கருணாகரப் பிள்ளையார் சாசனம் எனப் பெய ரிடப்பட்டது. கி.பி 15 ஆம் அல்லது 16 ஆம் நூற்றாண்டுக்குரிய இக்கல்வெட்டு கிரந்த எழுத்தின்றி தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளது. சாசனத்துடன் திருச்சூலமும் பொறிக் கப்பட்டுள்ளதால் இதை திருச்சூலக்கல் என கலாநிதி இந்திரபாலா குறிப்பிடுகின்றார். இக்கல்வெட்டின் இறுதியிலே "ஓம்படைக்கிழவி" எனும் பாகமும் இடம்பெற்றுள்ளது. இதன் மேற்பக்கத்தில் "திருச்சிற்றம்பலம் பண்டாரத் தன்ம(ம்) உடமை ப்பணம்றி " எனத் தொடங்கி 5 ஆவது பக்கத்தில் "(ரும்செ) கடவதாகவும் ங்கு நிலைத்தவ பெறக் கடவ தாகவும்" என முடிவடைவதனை காணலாம். இக்கல்வெட்டு கோயில் ஒன்றிற்கு செய்யப் பட்ட தானம் பற்றியே குறிப்பிடுகிறது.. அது நிலத்தானமாக இருக்கலாம் என்பது அறிஞர் கருத்தாகும்..

## கல்வியாங்காட்டு செப்பேடு

செப்பு பட்டயம் என்ற வகையில் கல்லியங்காடு செப்பேடு முக்கியமானது. பரராச சேகரன் திருப்பணி பற்றிக் கூறும் இப்பட்டயம் 9 அங்குல நீளமும் 12 அங்குல அகலமும் கொண்டது. 56 வரிகளையுடைய இப்பட்டயம் .18 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ் மொழியில் அமைந்துள்ளது. "ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீமந் மகா மண்டல சுரன் கரீகராய விபாடந் பாஷைக்குத்தப்புவராயர் கண்டன் மூவராயர் கண்டன் கண்ட நாடு கொண்டு.." என்று செல்கின்ற இப்பட்டயத்திலே யாழ்ப்பாணத்து மன்னன் பரராசசேகரன் சிதம்பரம் தரி சனம் செய்து அங்கு பல திருப்பணிகள் செய்தமை பற்றிக் குறிப்பிடுவதனை காணலாம்.

கல்லியம் காட்டில் கிடைத்த இன்னொரு பட்டயம் கி.பி.18 ஆம் நூற்றாண் டுக்குரிய தமிழ் மொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. இதற்கு அறிஞர் கயிலை வன்னியனார் மட தர்மசாதனப் பட்டயம் எனப் பெயர் இட்டுள்ளனர். 11 அங்குல நீளமும்

10 ½ அங்குல அகலமும் 55 வரிகளும் கொண்ட இப்பட்டயம் "ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீமன் மகா மண்டலேசுரன் கரி கராய விபாடன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் மூவராயர் கண்டன் கண்ட நாடு கொண்ட நாடு கொடாதான் பூர்வ தஷிண பஸ்சி மோத்தர சதுஸ் சமுத்திராபதி கஜவேட்டை............" எனத் தொடங்குகிறது. இப்பட்டயத்தில் வன்னியர்கள் பலர் சிதம்பரத்திலுள்ள அற நிலையம் ஒன்றுக்கு தானம் கொடுத்தமை பற்றிக் குறிப்பிடுவதனை காணலாம். வன்னியர்கள் செய்த அறப்பணிகளை கூறுகின்ற வகையிலே இது மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

## உசாத்துணை நூல்கள்


- இந்திரபாலா,கா., 1999, யாழ்ப்பாணக் கல்வெட்டுக்கள், **சிந்தனை,** மலர் 2, பேராதனை.

- கிருஷ்ணராசா.செ., 1998, **தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும்,**பிறைநிலா வெளியீடு, சுன்னாகம்.

- சிற்றம்பலம்.சி.க., 1993, **யாழ்ப்பாணத் தொன்மை வரலாறு,** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


- பத்மநாதன்,சி., 2006, **இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்,** இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.




# 1971 இல் உதயமான யாழ்ப்பாணத் தொல்லியற் கழகம் ஒரு மீள்பார்வை

*கோ.ஹம்சானந்தி*
*தொல்லியல் சிறப்பு*
*இறுதி வருடம்*

## அறிமுகம்




இலங்கையில் எல்லாப் பிராந்தியங்களுக்கும் தனித்தவமான வரலாறு இருப்பதாகக் கூறமுடியாது. ஆனால் யாழப்பாணம் பண்டு தொட்டு இலங்கை வரலாற்று மூலங்களில் தனித்து அடையாளம் காணப்பட்டு வந்ததற்ககுப் போதிய ஆதாரங்கள் உண்டு. இது பாளி இலக்கியங்களில் நாகதீபம், உத்தரதேசம், எனவும், தமிழ் இலக்கியங்களில் நாக நாடு எனவும் அழைக்கப்படுகிறது. இதை 1936ஆம் ஆண்டு வல்லிபுரத்தில் கிடைத்த பொற்சாசனமும் உறுதிப்படுத்தகிறது. பிற்கால விஜயநகரக் கல்வெட்டில் யாழப்பாணாயன் பட்டினம் எனவும் போத்துக்கேய ஆவணங்களில் யாப்பாபட்டுன எனவும் அழைக்கப்படுகிறது. இதன் தனித்துவம்தான் 13ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட மன்னன் ஆளுகைக்கு உட்பட்ட தமிழ் இராசதானி தோன்றக் காரணமாகும்.

யாழ்ப்பாணத்தின் தொன்மை வரலாற்றை இலக்கியங்கள் ஊடாக வெளிப்படுத்திய பெருமை முதலியார் இராசநாயகம், நவரத்தினம், சுவாமி ஞானப்பிரகாசர் , சு.நடேசபிள்ளை ஆகியோருக்கு உண்டு. இருப்பினும் தொல்லியல் நோக்கில் அதன் முக்கியத்துவம் 1917 ஆம் ஆண்டு போல் பீரீஸ் கந்தரோடையில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வின் பின்னரே வெளியுலகிற்குத் தெரியவந்தது. இதனால் பிற்காலப் புலமைசார் ஆய்வுகளில் இலக்கியங்களைக் காட்டிலும் தொல்லியற் சான்றுகள்தான் யாழ்ப்பாணத்தின் பண்டைய வரலாறு பற்றிய ஆய்வில் முதன்மை பெற்று வருகின்றன.

## தொல்லியற் கழகத்தின் தோற்றப்பின்னணி

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து தென்னாசிய நாடுகளிடையே தமது பாரம்பரிய பண்பாட்டைக் கண்டறிவதிலும், அவற்றைப் பாதுகாப்பதிலும் விழிப்புணர்ச்சி தோன்றத் தொடங்கியது. இதற்கு ஐரோப்பியருக்கு எதிராகத் தோன்றிய தேசியவாத இயக்கங்கள் ஒரு முக்கிய காரணமாகும். இக்கட்டத்தில்தான் இந்திய தொல்லியல் மற்றும் வரலாற்று ஆசிரியர்கள் தமது இன, மத வேறுபாடுகளை மறந்து இந்திய மக்களிடைபே வேற்றுமையில் ஒற்றுமை காண முற்பட்டனர். இதன் விளைவால் பரந்த இந்தியா, அகன்ற

*******

இந்தியா, விசால இந்தியா என்ற பெயரில் பல வெளியீடுகள் படைக்கப்பட்டன. இதன் தாக்கம் சமகாலத்தில் இலங்கையில் ஏற்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாண மக்களிடையே மொழி, மதம் பண்பாடு என்ற அடிப்படையில் பல அமைப்பக்கள் உருவாகின். இதற்கு யாழ்ப்பாண வரலாற்றுக் கழகம், ஆரியதிராவிடபாஷா அபிவிருத்தி சங்கம், சைவபரிபாலன சபை, தமிழ்ச் சங்கம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இருப்பினும் தொல்லியல், வரலாற்று ஆய்வுகளைப் பொறுத்தவரை இலங்கையின் ஒவ்வொரு இனத்தவரும் தமது பண்பாட்டை முதன்மைப்படுத்தி ஆராய்ந்த அளவிற்கு இலங்கை மக்களிடையே இருந்த பண்பாட்டு ஒருமைத் தன்மையைக் கண்டறிவதில் அக்கறை காட்டவில்லை. அதிலும் தமிழ் அறிஞர்கள் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பண்பாட்டை ஆராய்ந்த அளவிற்கு தொல்லியற் சின்னங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறிவிட்டனர்.

கந்தரோடைத் தொல்லியற் கண்டுபிடிப்பைத் தொடர்ந்து மாதோட்டம், வல்லிபுரம், நல்லூர் போன்ற இடங்களில் பலவகைத் தொல்லியற் சின்னங்கள் கண்டறியப்பட்டன. இது வரலாற்று ஆர்வலகளிடையே தொல்லியற் சின்ங்களைக் கண்டறிந்து பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தியது. இருப்பினும் இதுதொடர்பான காத்திரமான வெளியீடுகள் வெளிவரவில்லை. அவை மக்களிடமும் அதிக விழிப்புணர்வை ஏற்படுத்தியதாகவும் தெரியவில்லை. தனிப்பட்ட சிலர் அரிய பல தொல்லியற் சின்னங்களைச் சேகரித்த போதும் அவற்றை ஏனைய நாட்டவருக்கும், ஏனைய மக்களுக்கும் விற்றுப் பணமாக்குவதிலேயே அதிக ஆர்வம் கொண்டிருந்தனர். இவற்றைக் கருத்திற் கொண்ட தமிழ் அபிமானிகள் எமது பிரதேசத்தின் பண்பாட்டுச் சின்னங்கள் கண்டறியப்பட்டு பாதுகாக்கப்படவேண்டும் என வலியுறுத்தத் தொடங்கினர்.

இத்தகைய சூழ்நிலையில்தான் தமிழ் வரலாற்று ஆர்வலகர்கள் தொல்லியல் ஆய்வுக்குப் பொருத்தமான கட்டமைப்புடைய அமைப்பொன்று அவசியம் என்பதை உணரத் தொடங்கினர். இதற்கு பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வுச் சூழலில் மேற்கொள்ளப்பட் தொல்லியல் வரலாற்று, ஆய்வுகளும் ஒரு முக்கிய காரணமாக இருந்ததை அறியமுடிகிறது. இதன் விளைவால் பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணக் கல்லூரியில் கடமையாற்றிய கல்விசார் அறிஞர்களும், பாடசாலை மற்றும் உயர் நிறுவனங்களில் கடமையாற்றியவர்களும், தமிழ் அபிமானிகளும் ஒன்று சேர்ந்து 1971 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் தொல்லியற் கழகத்தை உருவாக்கினர். ஆயினும் இதை உருவாக்கிய முன்னோடிகள் என்ற வகையில் முன்னாள் வரலாற்றுப் பேராசிரியர் கா. இந்திரபாலா, சமஸ்கிருதப் பேராசிரியர் வி.சிவசாமி மற்றும் யாழ்ப்பாண தொல்பொருள் அருங்காட்சியகத்தின் பொறுப்பாளராக இருந்த அ.கந்தையா ஆகியோர் முக்கியமானவர்கள் என்பதை இவ்விடத்தில் குறிப்பிட்டே ஆகவேண்டும். காலப்போக்கில் தொல்லியலில் பெரிதும் ஈடுபாடும் ஆர்வமும் கொண்ட கலாநிதி று.டு. ஜெயசிங்கம், திருவாளர்கள் எஸ்.பொன்னம்பலம், எஸ்.யோகநாதன், ஆ.சிவநேசச் செல்வன்,

ஜே.எச்.அரியரத்தினம், செல்வரத்தினம், எஸ்.எச்.சேதுகாவலர் மற்றும் ஆ.தேவராஜன் போன்றோர் கழகத்தில் இணைந்து பெரும்பங்களிப்புச் செய்தனர். இக்கழகத்தை உருவாக்கும் எண்ணக் கருவை தொல்லியல் ஆர்வலகர்களிடையே விதைத்து அதற்கான அனைத்து ஆலோசனைகளையும் பேராசிரியர் இந்திரபாலா பேராதனைப் பல்கலைகத்தில் இருந்து அவ்வப்போது நெறிப்படுத்தியபோது அதனை யாழ்ப்பாணத்தில் இருந்து இயக்கியதில் யாழ்ப்பாணப் பட்டப்படிப்புக் கல்லூரியில் விரிவுரையாளராக் கடமையாற்றிய வி.சிவசாமி மற்றும் திரு.ஆ.சிவநேசச்செல்வனுக்கும் உரியது. ஆதனால்தான் தற்போது அக்கழகம் செயலிழந்த நிலையிலும் அதன்கடந்த கால செயற்பாடுகள் தொடர்பான சில ஆவணங்களைப் பேராசிரியர் சிவசாமியிடம் இருந்து பெற்று என்னால் இக்கட்டுரையை எழுத முடிந்ததை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்

## நிர்வாகக் கட்டமைப்பு

உலக நாடுகளிடையே தொல்லியல் ஆய்வு தொடர்பான நிர்வாகக் கட்டமைப்பு அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருப்பினும் ஒரு நாட்டுக்குள்ளேயே வேறுபட்ட இனம், மதம், பண்பாடு என்பவற்றின் தமித்துவத்தைக் கண்டறியவும், பாதுகாக்கவும் பிரதேச வாரியன தொல்லியல் அமைப்புக்கள் அரச மேற்பார்வையிலும், கல்வி நிறுவனங்களின் கண்காணிப்புக்க ளிலும், குறிப்பிட்ட சமூக நிறுவனங்களின் வழிநடத்தலிலும் இயங்கி வருவதைக் காணலாம். இதற்கு இந்தியாவில் உள்ள நூற்றுக்கணக்கான தொல்லியல் அமைப்புக்களைக் குறிப்பிடலாம். இவற்றின் பணிகளால் அந்த நாட்டின் ஒட்டு மொத்த வரலாற்று உண்மைகள் வெளிவந்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம். இது யாழ்ப்பாணத் தொல்லியற் கழகத்திற்கும் பொருந்தும். அதன் பெயரும், அதில் பங்கெடுத்தவர்கள் பலரும் யாழ்ப்பாணத்தை தமது பிறப்பிடமாகக் கொண்டிருந்தபோதும் அதன் செயற்பாடுகள் தென்னாசியாவில் தொல்லியல் ஆய்வுகளை மையப்படுத்தியதாகவே இருந்ததை அதன் நிர்வாகக் கட்டமைப்பு பற்றிய சாசனம் எடுத்துரைக்கிறது. அச்சாசனத்தில உள்ளடக்கப்பட்ட யாழ்ப்பாணத் தொல்லியற் கழகத்தின் கருப்பொருள் பற்றி அக்கழகத்தின் வெளியீடான பூர்வகலாச் சஞ்சிகையில் குறிப்பிட்டுள்ளதை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

" நமது கழகம் பிரதேச வாரியாக இருந்தாலும், இது குறுகிய மனப்பான்மையுடன் இயங்கும் ஒன்றல்ல. தொல்பொருளியலானது அப்படிக் குறுகிய மனப்பான்மையுடன் ஆராயக் கூடிய துறையாகாது. யாழ்ப்பாண மாவட்டத்தின் தொல்பொருட்கள் இலங்கையின் பிற பாகங்களில் தொல்பொருட்களுடனும் பொதுப்படத் தென்னாசியத் தொல்பொருட்களுடனும் தொடர்புபடுத்தப்பட்டே ஆராயவேண்டியவை. ஆகவேதான், நமது நோக்கம் சிறப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலும் பொதுப்பட இலங்கையின் பிறபாகங்களிலும் தென்னாசியாவிலும்

கிடைக்கும் தொல்பொருட்களை ஆராய்வது என்று நமது யாப்பிலே கூறியுள்ளோம்."

1971 இல் இக்கழகம் (Jaffna Archacologygical Society) ஆரம்பிக்கப்பட்ட போது அதன் ஸ்தாபக அங்கத்தவர்களாக பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கார்த்திகேசு இந்திரபாலா, யாழ்ப்பாணப் பட்டப்படிப்புக் கல்லூரி வரலாற்று விரிவுரையாளர் திரு.வி.சிவசாமி, யாழ்ப்பாண தொல்லியல் அருங்காட்சியகப் பொறுப்பாளர் திரு.அ.கந்தையா ஆகியோர் இருந்தனர். அதன் கௌரவ உறுப்பினர்களாக வணபிதா கலாநிதி தனிநாயகம் அடிகளார், பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் ஆ.சதாசிவம், கலாநிதி ஆர்.எச்.டி.சில்வா, கலாநிதி டி.யு.சத்தமங்கல கருனாரத்தினா, கலாநிதிபி.எச்.எச்டி.சில்வா கலாநிதி எஸ்.பி.எவ் செனரட்னா, கலாநிதி டபியு. எல் ஜெயசிங்கம், திரு.லொறன் சில்வா ஆகியோர் இருந்தனர். அப்பாது கழகத்தின் வாழ்நாள் உறுப்பினர்களாக இருவரும், சாதாரண அங்கத்தவர்களாக 45 பேரும் அங்கம் வகித்தனர். இத்தொல்லியற் கழகத்தின் முதல் தலைவராக திரு.எஸ்.பொன்னம்பலமும், உப தலைவராக கலாநிதி கா.இந்திரபாலாவும், செயலாளராக திரு. வி.சிவசாமியும், பொருளாளராக ஆ.சிவநேசச்செல்வனும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். யாழ்ப்பாணக் கல்லூரியைத் தலைமையிடமாகக் கொண்டு உருவான இக்கழகம் பிற்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை தலைமைப்பீடமாகக் கொண்டு செயற்பட்டது.

## நோக்கம்

இத்தொல்லியற் கழகத்தின் நோக்கம் பன்முகத் தன்மை கொண்டதென்பதை அதன் கடந்த காலச் செயற்பாடுள் உணர்த்துகின்றன. யாழ்ப்பாணம் 2500 ஆண்டுகளுக்கு குறையாத வரலாறு கொண்ட பிரதேசம். ஆயினும் அதன் வரலாறு இலங்கை வரலாற்று மூலங்களில் புகைபடர்த நிலையிலேயே காணப்படுகிறது. இதற்கு உண்மை வரலாற்று ஆதாரங்கள் மண்ணுள் புதையுண்டு இருப்பதே காரணமாகும். அவற்றை வெளிக் கொணரவேண்டும் என்பது இக் கழகத்தின் முக்கிய நோக்கமாகும். அது சாத்தியமான ஒன்று என்பதை இக்கழகம் முன் னெடுத்த சில தொல்லியல் ஆய்வுகளும் உறுதிப்படுத்தியுள்ளன. ஒரு வட்டாரத்தின் பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப்படவேண்டுமானால் அப்பண்பாட்டு அம்சங்களை அவ்வட்டார மக்கள் தெரிந்து கொள்வது அவசியமாகும். அதன் மூலமே அவ்வட்டார மன்னளிடம் வரலாற்று உணர்வும், அதைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வமும் உருவாகும். அந்த வகையில் மக்களிடையே வரலாற்று விழிப்பணர்வை ஏற்படுத்துவது இக்கழகத்தின் இன்னொரு முக்கிய நோக்காக இருந்துள்ளதைக் காணமுடிகிறது. அதற்கு ஏற்றவகையில் கருத்தரங்குகள், கண்காட்சிகள், வானொலி உரையாடல் என்பவற்றை ஏற்படுத்துவது இக்கழகத்தின் செயற்பாடாக அமைந்திருந்தது. இதன் மூலம் பாடசாலை

தொட்டு பல்கலைக்கழகம் வரை கல்வி கற்றும் மாணவர்களிடம் தொல்லியல், வரலாற்று விழிப்புணர்வை ஏற்படுத்துவது இக்கழகத்தின் போக்காக இருந்தது. எமது பழைமை தொடர்பான சின்னங்கள் எம்மிடம் இருந்தும் அவற்றின் வரலாற்றுப் பெறு"மதியை உணராமல் அலட்சியமாக இருந்துள்ளோம். அவற்றை அடையாளப்படுத்தி மக்களிடம் விளக்கப்படுத்துவதிலும், அவற்றைப் பாதுகாப்பதிலும் இக்கழகம் முக்கிய கவனம் எடுத்தது. இன்று கலாசார ஒருமைத்தன்மை, கலாசார ஐக்கியம் என்பன தொல்லியல் ஆய்வுகளூடாக ஏற்படுத்துவது முக்கிய நோக்கமாக உள்ளது. ஆனால் அதை இக்கழகம் இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே உணர்ந்து இலங்கையின் ஏனைய இன மக்களின் அறிஞர்களையும் கழகத்தில் இணைத்துச் செயற்பட்டமை இக்கழகத்தின் உயர்ந்த நோக்கைப் புலப்படத்துவதாக உள்ளது.

## கழகத்தின் செயற்பாடுகள்

இக்கழகம் மிக உயர்ந்த நோக்கோடு தொடங்கப்பட்டதால் அதன் செயற்பாடுகளும் குறுகிய காலத்திற்குள் மிகத் தீவிரமாக இருந்ததைக் காணமுடிகிறது. அதன் செயற்பாடுகளில் தொல்லியற் கழக உறுப்பினர் மட்டுமன்றி தொல்லியற் கண்டுபிடிப்புக்களில் ஆர்வமுடை இலங்கையின் பல வட்டார மக்களும், தென்னிலங்கை மற்றும் தமிழகத்து அறிஞர்களும் பங்கெடுத்துக் கொண்டமை கழகத்தின் செயற்பாடுகளுக்கு நல்லதொரு அங்கீகாரமாக இருந்தது. அதன் முக்கிய செயற்பாடுகளில் தொல்லியல் ஆய்வுகள், கருத்தரங்குகள், கண்காட்சிகள், வானொலி நிகழ்ச்சிகள், நூல் வெளியீடுகள் என்பவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். மண்ணுக்குள் மறைந்திருக்கும் மற்றும் பாதுகாக்கப்படாது பாவனையில் இருந்து மறைந்து போகும் தொல்லியற் சின்னங்களைக் கண்டறிந்து அவற்றின் வரலாற்றுப் பெறுமானத்தை மக்களுக்கு எடுத்துரைப்பதும், அவற்றைப் பாதுகாப்பதும் கழகத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. அதை அடையும் நோக்கில் *1972* இல் இருந்து *1983* வரை அதாவது பேராசிரியர் கா. இந்திரபாலா *1984* இல் பல்கலைக்கழகத்தை விட்டு விலகும் வரை பல்வேறு இடங்களில் களஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதைக் காணலாம். அவற்றுள் குடாநாட்டில் உள்ள காரைநகர், வேரப்பிட்டி, இராசாவின் தோட்டம், கந்தரோடை, வரணி, நல்லூர், கிழக்கிலங்கையில் திருகோணமலை, கந்தளாய், நிலாவெளி, சங்கமங்கண்டி வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நெடுங்கேணி, பட்டைபிரித்த குளம், கோரமோட்டை, வெடுக்குநாறிமலை, வெடிவிச்ச கல்லு, முத்தையன்கட்டு, வாவெட்டி மலை, பூநகரி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளைக் குறிப்பிடலாம். இவ்வாய்வுகள் மூலம் புராதன குடியிருப்பு மையங்கள், பண்டைய நாணயங்கள், தமிழ், சிங்களக் கல்வெட்டுக்கள், பௌத்த சிங்கள ஆலய அழிபாடுகள், இந்து விக்கிரகங்கள், சிற்பங்கள், சிலைகள் பாவனையில் இருந்து மறைந்து போகும் பலவகையான பாவனைப் பொருட்களைக் குறிப்பிடலாம். இக்கள ஆய்வுகளில் கழகத்தின் முக்கிய உறுப்பினர்களாக இருந்த கலாநிதி

இந்திரபாலா, திருவாளர்கள் வி.சிவசாமி, ஆ.சிவநேசச்செல்வன், க.கிருஷ்ணமூர்த்தி, சு.யோகநாதன், கே.வைரமுத்து, ஜே.இளையதம்பி, செ.குணசிங்கம், திருக.நடராசா, திரு.சு.செபநேசன், எஸ்.பொன்னம்பலம் ஆகியோர் முக்கிய பங்கெடுத்தனர். இவர்களது கள ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டதில் அவ்வப் பிரதேச மக்களும், கள உறுப்பினர்களும் கொடுத்த தகவல்களும், ஒத்துழைப்புக்களும் முக்கிய காரணமாக இருந்ததைக் காணமுடிகிறது.

இக்கழகத்தின் இன்னொரு முக்கிய செயற்பாடு காலத்திற்கு காலம் ஏற்பாடு செய்த சாசனவியல் விரிவுரைகள், கருத்தரங்குகளாகும். இதன் மூலம் சாசனவியல் தொடர்பான கருத்தரங்குகளை யாழ்ப்பாணத்தில் நாடாத்தியது என்ற பெருமையை இக்கழகம் பெற்றது. இச்சாசனவியல் விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குளை அத்துறையில் புலமையுடைய நம்நாட்டு அறிஞர்களான கலாநிதி இந்திரபாலா, கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை, கலாநிதி செ.குணசிங்கம், வி. சிவாசமி ஆகியோர் மட்டுமன்றி 1974 காலப்பகுதியில் தமிழகத்தில் இந்து வருகை தந்த தமிழக அரசு தொல்லியல் கழக இயக்குனர்களான நடன காசிநாதன், தாமோதரம் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழக சாசனவியல் அறிஞர் புலவர் இராசு போன்ற அறிஞர்களும் பங்கெடுத்து நடாத்தியது இக்கழகத்தின் செயற்பாடுகள் முதன்மைபெற காரணமாகியது. இச்செயற்பாடுகள் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் சாசனங்கள் பெறும் முக்கியத்துவத்தை ஆய்வாளர்கள் மத்தியில் பிரபலப்படுத்த உதவியது.

கழகத்தின் செயற்பாடுகளும், கண்டுபிடிப்பக்களும் சாதாரண மக்களிடம் சென்றடையும் வகையில் கழக அங்கத்தவர்களான கலாநிதி இந்திரபாலா, செ.குணசிங்கம், ஆ.சிவநேசச் செல்வன், வி.சிவசாமி, எஸ்.பொன்னம்பலம், த.சண்முகசுந்தரம், மா.மகாதேவன் போன்றோர் மேற்கொண்ட வானொலிக் கலந்துரையாடல், பேட்டிகள், செய்திகள் என்பன இத்தொல்லியற் கழகத்தை மக்களிடையே பிரபல்யப்படுத்தியது. இவை மக்களிடையே தொல்லியல் வரலாற்று விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தொல்பொருட்களைப் பாதுகாப்பதிலும், கண்டறிவதிலும் மக்களிடையே ஆர்வத்தை உருவாக்கவும் உதவியது. தொல்பொருள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், மக்கள் தமது பண்பாட்டு விழுமியங்களை அறிந்து கொள்ள வைப்பதிலும் தொல்பொருள் பற்றிய கண்காட்சிகளுக்கு முக்கிய பங்குண்டு. அப்பணியைச் செய்ததில் யாழ்ப்பாணத் தொல்லியல் கழகத்திற்கு முக்கிய இடமுண்டு. இக்கழகத்தில் அங்கம் வகித்த சிலர் தாம் கடமையாற்றிய இடங்களில் சேகரித்த தொல்பொருட்களை இக்கழகத்திநூடாக காட்சியப்படுத்துவதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டனர். அவர்களுள் திரு.சி.பொன்னம்பலம், திரு.க.யோகநாதன், திரு.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கந்தரோடை, யாழ்ப்பாணம், பூநகரி, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் சேகரித்த தொல்பொருட்களை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், யாழ். மாநகரசபையிலும் காட்சிப்படுத்தியதைக் குறிப்பிடலாம். மேலும் 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராச்சி மகாநாட்டின் போது நடைபெற்ற தொல்பொருட் கண்காட்சியில் இக்கழகமே முக்கிய பங்கெடுத்தது. அக்கண்காட்சியில்

கழகத்தால் சேகரிக்கப்பட்ட தொல்பொருட்கள் மட்டுமல்ல தொல்பொருள் தொடர்பான செய்திகள் ஆவணங்கள், ஓலைச் சுவடிகள் எனப் பலவைகைப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டன. இக்கண்காட்சியை ஆரம்பித்து வைத்த வணபிதா தனிநாயகம் அடிகளார் அப்போது கூறிய கருத்தை இவ்விடத்தில் நினைவுபடுத்துவது இக்கழகத்தின் உயர்ந்த செயற்பாட்டிற்கு ஓஉ எடுத்துக்காட்டாகும்..

"A young Archaeological Society of Jaffna has in a short period held exhibitions and promoted interest in the antiquities and epigraphy of districts which have hitherto been neglected" "ஓர் இளம் யாழ்ப்பாண தொல்லியற் கழகம் குறுகிய ஒரு காலப்பகுதிக்குள் பொருட் காட்சிகளை நடாத்தியும் இதுவரை புறக்கணிக்கப்பட்ட மாவட்டங்களின் தொல்பொருட்களிலும் சாசனங்களிலும் ஆர்வத்தை வளர்த்தும் உள்ளது"

## வெளியீடுகள்

யாழ்ப்பாணத் தொல்லியற் கழகம் ஒரு நீண்ட காலப் பணியை நோக்காகக் கொண்டு தொடங்கப்பட்டதென்பதற்கு கழம் ஆரம்பித்த குறுகிய கலத்திலே அதன் பெயரில் வெளியிடப் பட்ட **பூர்வகலா** என்ற தொல்லியற் சஞ்சிகை சிறந்த எடுத்துக்காட்டாகும். இதுவே இலங்கையில் தமிழில் வெளியிடப்பட்ட முதலாவது தொல்லியற் சஞ்சிகையாகும். இச்சஞ்சிகை தொல்லியற் கண்டுபிடிப்புக்கள், தொல்லியல் தொடர்பான செய்திகள், தொல்லியலில் ஈடுபட்ட முன்னோர் பற்றிய வரலாறு, அறிமுகம் என்பவற்றை முக்கிய கருப்பொருளாகக் கொண்டு வெளியிடப் பட்டது. இச்சஞ்சிகை மூலம் கல்வியலாளர்கள் மட்டுமன்றி தொல்லியல் ஆர்வலர்களும், சாதாரண மக்களும் தொல்லியல் பற்றிய அறிவையும், ஆர்வத்தையும் பெறக் கூடிய வாய்ப்பைத் தொல்லியற் கழகம் உருவாக்கியது. இதனால் இச்சஞ்சிகை மட்டுமன்றி கழக உறுப்பினர்களாக இருந்தோர் தமது படைப்புக்களையும் தொல்லியற் கழகத்தின் பெயரில் வெளியிடுவதைப் பெருமையாகக் கருதினர். இதற்குப் பின்வரும் படைப்புக்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். அவற்றுள்


1. Indrapala, K., (ed) Epigraphica Tamilica, part-1, Jaffna, 1970,
2. இந்திரபாலா, கா., யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்., கண்டி 1972.
3. Indrapala, K., (ed) Dr.James thevadasan Ratnam 75th Birth day Felicitation volume, Jaffna 1975,
4. Veluppillai, A., Pandya Inscriptions, Kandy 1973 . ஆகியோர் வெளியிட்ட நூல்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

## முடிவுரை

1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாண வளாகம் ஆரம்பிக்கப்படுவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் பண்பாடு பற்றிய ஆய்வு தமிழர் பிராந்தியங்களில் இருந்து

வெளிக்கிளம்ப வேண்டும் என்ற உணர்வை உருவாக்கிய பெருமை இத்தொல்லியற் கழகத்திற்கு உரியதாகும். இக்கழகத்தின் வரலாறும், பணியும் மிகக் குறுகியதாக இருப்பினும் அக்காலப் பரப்பிற்குள் அது ஆற்றிய பணிகள் மிகப் பரந்த நோக்கைக் கொண்டதாகும். அது பிற்காலத் தலைமுறையினரிடம் தொல்லியல் ஆர்வத்தை ஏற்படுத்த ஒரு முன்னோடியாகவும் இருந்ததெனக் கூறலாம். 1974இல் யாழ்ப்பாண வளாகம் ஆரம்பித்த போது இத்தொல்லியற் கழகம் வீறுகொண்டு செயற்படக் கூடிய சாதகமான சூழ்நிலைகள் தோன்றின. ஏனெனில் இதுவரை தென்னிலங்கைப் பல்கலைக்கழகத்தில் இருந்து இக்கழகத்தை வழிநடாத்திய கலாநிதி இந்திரபாலாவும் ஏனையோரும் படிப்படியாக யாழ்ப்பாண வளாகத்திற்கு வரத்தொடங்கினர். இதனால் இதுவரை யாழ்ப்பாணக் கல்லூரியில் இயங்கிய கழகம் இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை தலைமையிடமாகக் கொண்டு செயற்படத் தொடங்கியது. இருப்பினும் எதிர்பார்த்த அளவுக்கு இக்கழகம் முன்னைய பணிகளைக் கூட பின்னர் முன்னெடுத்ததாகத் தெரியவில்லை. இதையுணர்ந்த பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் சிவசாமி, திரு.ஆ. சிவநேசச்செல்வன் ஆகியோர் 1980களின் பின்னர் குறிப்பாக ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமச் சின்னங்களைத் தொடர்ந்து இத்தொல்லியற் கழகத்திற்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க முனைந்தனர். இருப்பினும் 1984 பேராசிரியர் இந்திரபாலா பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறியதன் பின்னர் இக்கழகம் அதன் செயற்பாடுகளை முற்றாக இழந்துவிட்டதென்றே கூறலாம். இப்போது தொல்லியல் பற்றிய ஆய்வில் யாழ்ப்பாணத் தொல்லியற் கழகமும் மறைந்து போன ஒரு முன்னோடிக் கழகமாகவே பார்க்கப்படுகிறது.


(இத்தொல்லியற் கழகத்தின் வரலாறு பற்றிய முக்கிய சில ஆவணங்களைத் தந்துதவியதுடன் பல ஆலோசனைகளை வழங்கிய முன்னாள் சமஸ்கிருத துறைப் பேராசிரியரும் தலைவருமான இலக்கியக் கலாநிதி வி.சிவாசமி அவர்கட்கும், இக்கட்டுரையை முறையாக எழுதுவதற்கு என்னை நெறிப்படுத்திய பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்களுக்கும் கட்டுரை ஆசிரியரின் நன்றிகள் உரித்தாகும்)



******                                                        ******

# இலங்கைக் கலைமரபின் உருவாக்கம் - பெருங்கற்காலப்பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

*க.துஷ்யந்தினி*
*தொல்லியல் சிறப்பு*
*இறுதிவருடம்*



ஏறத்தாழ கி.மு 1000 முதல் கி.மு.1ஆம் நூற்றாண்டுவரை இலங்கையில் நிலவிய பெருங்கற்காலப் பண்பாடு இலங்கை நாகரிக உருவாக்கத்தில் புதிய காலகட்டத்தின் தொடக்கமாகப் பார்க்கப்படுகிறது. இப்பண்பாடு இலங்கையில் எல்லா இடத்திலும் ஒரே காலத்தில் தோன்றி வளர்ந்ததாகக் கூறமுடியாது. அது இடத்துக்கு இடம் வேறுபட்ட காலங்களில் தோன்றியிருப்பதை இப்பண்பாட்டின் தோற்றம் பற்றிய காலக்கணிப்பு உறுதி செய்கின்றது. இப்பண்பாட்டின் அடையாளச் சின்னமாக ஈமச்சின்னங்கள், குடியிருப்புக்கள், குளங்கள், வயல்கள் என்பன விளங்குகின்றன. இக்காலப் பகுதியில் வாழ்ந்த மக்கள் தமது இருப்பிடத்தை அமைப்பதை விட ஈமச்சின்னங்களைச் சிறப்பாக அமைப்பதிலேயே அதிக அக்கறை காட்டினர். இவ்வாறு இம்மக்கள் இறந்தவர்களை அடக்கஞ்செய்வதற்கு பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங்களை அமைத்தமையினால் இக்காலம் பெருங்கற்காலம் (Megalithic period) என அழைக்கப்படுகின்றது. இப்பண்பாட்டுடன் இலங்கையில் இரும்பின் உபயோகம் புழக்கத்திற்கு வந்ததால் இப்பண்பாட்டை இரும்புக் காலப்பண்பாடு எனவும் அழைக்கப்படுகிறது (Iron Age Culture). இலங்கையில் 40 மேற்பட்ட இடங்களில் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப பட்டுள்ளன. அவற்றுள் கந்தரோடை, ஆனைக்கோட்டை, காரைநகர், மாந்தை, தெக்கம், பொம்பரிப்பு, அக்குறுகொடை, முக்கறுகொட, பின்னவேவ, கரம்பன்குளம், அலுத்பொம்புல, மாமடுவ, தமவெல்ல கொடல்ல, மச்சாகம், கதிரவெளி, மபகல, கதிர்காமம், கல்அத்தார, மக்கோவிந்த பதவிகம்பொல, பென்கட்டுவ, நல்லே, கலொறுவெவ, குருகல்கின்ன, கொக்கபே, திவுல்வேவ, அநுராதபுரம் போன்ற இடங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய ஆய்வு பெரும்பாலும் இறந்தவருக்கு அமைக்கப்பட்ட ஈமச் சின்னங்கள் பற்றிய ஆய்வாக இருப்பினும், ஈமச்சின்னங்கள் இறந்தவஉகளுக்கு மறுபிறப்புண்டு என்ற நம்பிக்கையின் அடிப்படையில் சிறப்பான


முறையில் அமைக்கப்பட்டிருந்தன. அத்துடன் இறந்தவர் வாழ்நாளில் பயன்படுத்திய பெரும்பாலான பொருட்களும் இறந்தவர் உடலோடு சேர்த்து அடக்கம் செய்யப்பட்டி ருந்தன. அதனால் ஈமச்சினங்கள் பற்றிய ஆய்வானது அக்காலகட்டப்பண்பாடு பற்றிய ஆய்வாகவே கருதப்படு கிறது. இப்பண்பாடு பற்றிய ஆய்விலிருந்து தென்னிந் தியாவைப் போல் இலங்கையின் நாகரிக உருவாக்கத் திற்கு வித்திட்டவர்கள் பெருங்கற்கால மக்கள் எனபது தொல்லியலாளரின் பொதுவான கருத்தாகும். இதனால் இலங்கைப் பண்பாட்டின் பல்வேறு அம்சங்களின் வரலாற்றைப் பெருங்கற்காலப் பண்பாட்டின் பின்னணியில் இருந்தே நோக்க வேண்டியுள்ளது. அவற்றில் கலையுருவாக்கம் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.




இற்றைக்கு 1,25000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து இலங்கையில் கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் அப்பண்பாட்டில் தோன்றிவளர்ந்த கலைமரபுகள் எந்தளவுக்கு பிற்காலக் கலைமரபுகளுடன் இணைந்து கொண்டன அல்லது பிற்காலத்தில் கலைகள் தோன்றக் காரணமாக இருந்தன என்பதை அறிவதற்குரிய தெளிவான சான்றுகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.. ஆனால் பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய காலத்தில் மிகை உற்பத்தி காணப்பட்டதால் அக்கால மக்கள் ஓய்வு நேரத்தில் பல கலைப்படைப்புக்களை உருவாக்கியிருந்தனர். அவை பிற்காலத்தில் தோன்றி வளர்ந்த பல கலைப்படைப்புக்களுக்கு முன்னோடியாக இருந்தன என்பதற்கும் பல சான்றுகள் காணப்படுகின்றன. அவ்வாறு தோன்றிய கலைவடிவங்க ளில் சுடுமண் சிற்பங்கள், சிலைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அவை அக்கால மக்களின் கலையுணர்வை, தொழில்நுட்பத்தை, அழகியல் உணர்வைப் பிரதிபலிப்பதாக உள்ளன. இச்சுடுமண் கலைவடிவங்களில் மனித உருவங்கள் மட்டுமன்றி விலங்குகள், பறவைகள் இயற்கைத்தாரவரங்கள், அலங்காரப் பொருட்கள் உட்பட பலவகைப்பட்ட கலைவடிவங்கள் இருந்தன. அவற்றுள் சில அக்காலத்தில் வழிபடப்பட்ட கடவுளரின் உருவமாகவும், தாய்த் தெய்வம் மற்றும் சிவனின் வடிவமாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றுள் லிங்க வடிவிலமைந்த சுடுமண் சிற்பங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதற்கு உருத்திரபுரம் மற்றும் மாமடுவப் பகுதியில் கண்டுபிடித்த சுடுமண்ணால் அமைந்த சிவலிங்க வடிவங்களைக் குறிப்பிடலாம். மேலும் சில வடிவங்கள் அக்கால கிராமிய மட்டத்தில் வழக்கில் இருந்த வழிபாட்டுத் தெய்வங்களாக வும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இத்தகைய சுடுமண் சிற்பங்கள் கிளிநொச்சி

மாவட்டத்திலுள்ள உருத்திரபுரம், பூநகரி, பல்லவராயன், வவுனியா மாவட்டத்திலுள்ள மாமடுவ, மாத்தளை மாவட்டத்திலுள்ள இலுக்வேவ, புத்தளம் மாவட்டத்திலுள்ள தம்போவ, மருதன்மடுவ, அரிப்பு, அம்பாறை மாவட்: த்திலுள்ள நவக்கிரி ஆறு ஆகிய பெருங்கற்கால மையங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பெருங்கற்கால மக்களின் கலைமரபு, கலையுணர்வு, அழகியல், தொழில்நுட்ப அறிவு என்பவற்றை வெளிப்படுத்துவதில் அப் பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களை முக்கிய சான்றாகக் கொள்ளலாம். அக்காலப் பண்பாட்டில் அனைத்துப் பாவனைகளுக்கும் மட் பாண்டங்களே பயன்படுத்தப்பட்டன. அதில் இலங்கை தென்னிந்தியப் பெருங் கற்காலப் பண்பாட்டைத் தனித்து அடை யாளப்படுத்தும் கறுப்பு-சிவப்பு நிற (Black and Red Ware) மட்பாண்டங்களை வனை






வதில் பின்பற்றப்பட்ட மூலப்பொருட்களின் செயற்கையும், தொழில்நுட்ப அறிவும் மிக உயர்ந்த தன்மைகொண்டதாகக் காணப்படுகிறது. அதனால் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள், ஊரிருக்கைப் பகுதிகள் இருந்த இடங்களில் இம்மட்பாண் டங்களுடன் பிறமட்பாண்டச் சிதைவுகளும் செறிந்து காணப்படுகின்றன. அவை பல வடிவங்களில், அளவுகளில், நிறங்களில் வடிவமைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் வடிவமைப்புக்களும் பயன்படுத்தப்பட்டதன் நோக்கத்தைப் பொறுத்து வேறுபட்ட வடிவங்களைக் கொண்டதாக இருந்தன. அவற்றுள் ஈமத் தாழிகள், பானைகள், சட்டிகள், கூசாக்கள், வட்டில்கள், தட்டுக்கள், மண்விளக்குகள் என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அம்மட்பாண்டங்களை அழகுபடுத்துவதிலும், அலங்காரப்படுத்துவதிலும் இம்மக்கள் கூடிய அக்கறை செலுத்தினர் என்பதை மட்பாண்டங்களின் மேற்பரப்பில் வரையப்பட்ட பலவகைச் சித்திரங்களும், ஓவியங்களும் உறுதிப்படுத்துகின்றன.


பேராசிரியர் சேனக பண்டாரநாயக்கா பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் பின்பற்றிய ஈமச்சின்னங்களின் கட்டிடக் கலைமரபில் இருந்தே இலங்கையின் தொடக்க கால பௌத்த ஆலயங்களும், மக்களது இருப்பிடங்களும் தோன்றி வளர்ந்தன எனக் குறிப்பிடுகிறார். அதற்கு ஆதாரமாக பெருங்கற்கால மக்களது இருப்பிடங்களின்

வடிவமைப்புக்களுக்கும், பௌத்த தூபிகளுக்கும், பிற்கால மக்கள் அமைத்த இருப்பிடங்களுக்கும் இடையிலான தொடர்பையும், ஒற்றுமையயும் எடுத்துக்காட்டுகிறார். இலங்கையில் கற்களைப் பயன்படுத்தி முதலில் கட்டப்பட்ட கட்டிடக்கலையாக பெருங்கற்கால ஈமச்சின்னங்களே காணப்படுகின்றன. அவை குறிப்பிட்ட அளவுகளில், குறிப்பிட்ட வடிவங்களில் கற்களை அறுத்து ஈமச் சின்னங்களின் வடிவமைப்புக்கு ஏற்ப பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கட்டப்பட்ட கட்டடங்களாகும். இத்தகைய கட்டடக்கலை தோன்றுவதற்கு பெருங்கற் காலப் பண்பாட்டுடன் புழக்கத்திற்கு வந்த இரும்பின் பயன்பாடே முக்கிய காரணமாகும். இருப்பினும் இலங்கை எங்கிலும் ஒரே தன்மையுடைய ஈமச் சின்னங்கள் அமைக்கப்பட்டிருந்தன எனக் கூறமுடியாது. அவை இடத்தின் தன்மை, பௌதிக வளம், சாதகமான மூலப்பொருட்கள் என்பதற்கு அமைவாக வேறுபட்டிருந்தன. இதற்கு வவுனியா மாவட்டத்திலுள்ள இபின்கடுவ, மாமடுவ, திருகோணமலையில் கதிரவெளி போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வட்டங்கள், (Stone Cacrn Circle), கல்மேசைகள் (Dolme and Cist), கல்லறைகள் மற்றும் குடைக்கல் என்பன கற்களைப்பயன்படுத்தி அமைக்கப்பட்ட இலங்கைக்குரிய சிறப்பான பெருங்கற்கால ஈமச் சின்னங்களாகும். இவ்வீமச் சின்னங்கள் இறந்தவர்களுக்கு மறுபிறப்புண்டு என்ற நம்பிக்கையில் அமைக்கப்பட்டவையாகும். பெருங்கற்கால ஈமச் சின்ங்களை பெரும்பாலும் குளங்களை அண்டியே காணப்படுவதால் இவற்றைப் பிற்காலத்தில் இந்துக் கோவிலுக்கும் கேணிக்கும் இடையிலான தொடர்பை நினைவுபடுத்துவதாக அறிஞர் கருதுவர்.




பெருங்கற்கால மக்கள் அலங்காரப் பொருட்களைக் கொண்டு அலங்கரித்தமைக்கு ஆய்வுகளின் மூலம் கிடைத்த சின்னங்கள் சான்றுபகர்கின்றது. அந்தவகையில் பல வடிவங்களில் செய்யப்பட்ட மணிகள் (Beads) கைவளையல்கள் (Bangles), எலும்பினால் செய்யப்பட்ட கழுத்து மாலைகள் (Necklace), அலங்காரப் பொருட்கள், கல்வளையல்கள், உலோகத்தால் செய்யப்பட்ட காற்சலங்கைகள் போன்றனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இம்மக்கள் ஆடம்பரமாக வாழ்ந்தது மட்டுமன்றி கலை ரீதியாக கொண்டிருந்த ஆர்வத்தை இக் கலைவடி வங்கள் எடுத்தியம்புகின்றது. மற்றும் இரும்பினால் செய்யப்பட்ட கருவிகளும் பெருங்கற்கால மக்களின் கவைடிவங்ககளாகக் கொள்ளப்படுகின்றது. இதன் அடிப்படையில் இம்மக்கள் மீன்பிடித் தொழிலைத் தெரிந்துள்ளனர் என எண்ணத்தோன்றுகின்றது. காரணம்


இருப்பினாலான கொழு (Plough Share), கத்தி போன்றனவும் பரவலாகக் கிடைத்த மீன்பிடி ஊசிகள் (Fish Hooks) போன்ற கருவிகள் இவர்களின் கலை வடிவங்களில் ஒன்றாக அமைகின்றது. இவற்றுடன் இரும் பாணிகளும் காணப்படுகின்றன.[3] இலங்கை யின் முக்கிய தொல்லியல் மையங்களான அனுராதபுரம், கந்தரோடை பொம்பரிப்பு போன்ற இடங்களில் கிடைத்த இரும்பினா லான வேல் கிடைத்துள்ளது. இவ் வேல் சின்னமானது முருகவழிபாட்டினை எடுத்தியம்புகின்றது.



இவ்வாறு பெருங்கற்கால கலை வடிவங்களான ஈமச்சின்னங்கள், மட்பாண்டங் கள், சுடுமண் பாவைகள், இரும்பினால் ஆன கருவிகள், அணிகலன்கள் மற்றும் ஏனைய கலை வடிவங்கள் பிற்காலத்தில் எவ்வாறு தொடர்ந்து வளர்ந்து வந்தது என்பதை நோக்கினால், தென்னாசியாவின் பண்டைய காலக் கட்டடக் கலைகள் எல்லாம் பெரும்பாலும் மதத்தை மையமாகக் கொண்டு தோற்றம் பெற்றன. கி.மு.1000 இன் பின்னர் தோன்றிய திராவிட மக்களுக்குரிய பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் அம் மக்களால் நினைவாலயங்களாகக் கருதப்பட்டு வழிபட்டு வந்தன. இதன் அடிப்படையில் அப்பண்பாட்டில் இறந்தோரை அடக்கம் செய்ய பெரிய கற்களைக் கொண்டு பல்வேறு வடிவங்களில் அமைக்கப்பட்டமைதான் கட்டடக் கலையின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக் கும் காரணம் எனக் கூறப்படுகின்றது. அதேபோன்று சுடுமண் பாவைகள் இந்துக் கடவுளரின் தொடக்க காலமாகவும் கொள்ளலாம். பெருங்கற் கால பண்பாட்டில் சுடுமண் பாவை களை தாய்த்தெய்வங்களாக வழிபட்டிருக்கின்றனர் என்பதற்கு சான்றுகள் உள்ளது. இது பிற்காலத்தில் தொடர்கின்றது. அலங்காரப் பொருட்களான மணிகள், கைவளையல்கள், கழுத்து மாலைகள், கல்வளையல்கள், காற் சலங்கைகள், கல்மோதிரங்கள் என்பனவும் பிற்காலத்தில் பெண்கள் தம்மை அழகுபடுத்து வதற்கு பயன்படுத்துகின்றனர். குறிப்பாக இன்று வரை தொடர்கின்றது என்றால் மிகையாகாது. அதேபோன்று இரும்புக்



கருவிகளின் பயன்பாடு பெருங்கற் காலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் அது இன்று வளர்ச்சியடைந்த நிலையில் உள்ளது. பொதுவாக கூறின் பெருங்கற்காலத்தில் தோற்றம் பெற்ற அனைத்து கலை வடிவங்களும் பிற்கா லத்தில் மாறுதல்களுக்கு உட்பட்டு வளர்ச்சியடைந்த நிலையில் பிற்காலத்தில் தொடர்ந்து நிலைத்து வருவதினைக் காணக்கூடியதாக உள்ளமை பெருங்கற்கால கலைவடிங்களின் சிறப்பம்சமாகும். இலங்கையில் கலைகள் தோற்றம் பெற்ற காலமாக பெருங்கற்காலப் பண்பாடு விளங்குகின்றது. இந்தவகையில் கட்டடக்கலை மரபு, சிற்பங்கள், ஓவியங்கள், அழகியல், சிறு தொழில்நுட்பம் போன்ற கலை அம்சங்கள் தோன்றிவிட்டதற்கு இலங்கையின் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் கிடைக்கப்பெற்ற தொல்பொருள் எச்சங்கள் சான்றாக அமைவது சிறப்பம்சமாகும். இலங்கை வரலாற்றில் கி.மு 3 ஆம் நூற்றாண்டு முக்கிய ஒரு காலப்பகுதியாகவும் பிரிகோடாகவும் விளங்குகின்றது. காரணம் வட இந்தியாவில் 3 ஆவது பௌத்த மகாநாடு அசோகனால் பாடலிபுத்திரம் என்னும் இடத்தில் கூட்டப்பட்டது. அதில் அயல்நாடுகளுக்கு பௌத்த மதம் பரப்புவது என்ற முடிவு எடுக்கப்பட்டது. அதற்கு அமைய இலங்கையிலும் கி.மு 3 ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் பரப்பப்பட்டது. இம்மதத்தின் வருகையுடன் தான் இலங்கையில் கட்டுக்கோப்புடைய மதம் ஒன்று தோன்றியதாகவும் அதனுடன் இணைந்த வகையில் கட்டடக்கலை மரபும் சிற்பங்கள், ஓவியங்கள், அழகியல், தொழில்நுட்பமும் தோன்றியதாக பாளி இலக்கியங்கள் வர்ணிக்கின்றது. ஆனால் அண்மைக்கால தொல்லியல் சான்றுகள் பாளி இலக்கியங்களில் கூறுவதற்கு மாறான சான்றுகளையே தந்துவருவதைக் காண முடிகின்றது.



## உசாத்துணை நூல்கள்


- இந்திரபாலா.கா., 2006, **இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு,** சென்னை.
- ராஜன்.கா.,1994, **கொடுமணல் அகழாய்வு ஓர் அறிமுகம்,** தஞ்சாவூர்.
- கிருஷ்ணராசா.செ., 1998, **தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும்,**பிறைநிலா வெளியீடு, சுன்னாகம்.
- கிருஷ்ணராசா.செ.,2005, **இலங்கை வரலாறு பாகம்1,** பிறைநிலா இரண்டாம் பதிப்பு.
- சிற்றம்பலம்.சி.க., 1996, **ஈழத்து இந்துசமய வரலாறு பாகம் 1,**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.
- சிற்றம்பலம்.சி.க.,2001, **ஈழத்தமிழர் தொன்மை,** சென்னை.
- சிற்றம்பலம்.சி.க., 1991, **பண்டைய தமிழகம்,** சென்னை.
- புஷ்பரட்ணம்.ப., 2003, **தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு,**பவானி பதிப்பகம், யாழ்ப்பாணம்.
- புஷ்பரட்ணம்.ப., 1993, **பூநகரி தொல்பொருளாய்வு,** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.
- புஷ்பரட்ணம்.ப., 2001, **இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள்,** பவானி பதிப்பகம், யாழ்ப்பாணம்.


***** ******

# அருங்காட்சியகங்களின் தோற்றம் வளர்ச்சி
## - ஒரு வரலாற்ற நோக்கு -

*சி.வசிகரன்*
*இறுதி வருடம்*
*தொல்லியல்-சிறப்பு*

மியூசியம் (musuam) என்ற சொல் முதன் முதலில் 1981 இல் oxford ஆங்கிலச் சொல்லகராதியில் இடம் பெற்றுள்ளது. எட்வார்ரு பிலிப்ஸ் பதிப்பித்த 6ஆவது சொல்லகராதியில் மியூசியம் என்பதற்கு கல்விக்கூடம், நூலகம், கல்லூரி, பொதுஇடம், கல்வியாளர்களின் கூடம், அஸ்மோல் காட்சியகத்தின் சேகரிப்பு என பல பொருள் கொடுக்கப்பட்டுள்ளன மியூசியம் என்பதற்கு பல்வேறு காலத்தில் பல்வேறு பெயர்கள் கொடுத்து அழைக்கப்பட்டது. மியூசியம் என்ற தமிழ் சொல்லிற்கு இணையான சொல்லாக கண்காட்சிகூடம், நூதனசாலை, கலைக்கூடம், காட்சிச்சாலை, அருங்காட்சியகம், அகழ் வைப்பகம் என பொருள் கொள்ளப்பட்டது.

அருங்காட்சியகம் என்பது நாளாந்தம் பயன்படுத்திய அரிய அருகிய தொல்பொருட் சின்னங்களை தன்னகத்தே சேமித்து வைத்திருக்கும் கூடமாகும். இவ்விடங்களை பொது மக்கள் ஆர்வத்துடன் காணவருவதால் அருங்காட்சியகம் எனப் பெயர் பெற்றது. அருங்காட்சியகத்திற்கு மிக நீண்ட வரலாறு காணப்படாத பட்சத்திலும் அவற்றில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் பொருட்களுக்கு மிக நீண்ட வரலாறு உண்டு. இவ் அருங்காட்சியகத்திலுள்ள தொல்பொருட்களினூடாக கடந்த கால வரலாற்றின் சமூக, சமய, பொருளாதார, கலை, கலாச்சார, தொழில்நுட்ப, கல்வி, அரசியல் என்ற எல்லா விடயங்களினையும் எமக்கு தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இடமாக அருங்காட்சியகங்கள் அமைகின்றன.

12 ஆம் நூற்றாண்டில் அழகுப் பொருட்களான தொல்பொருட் சின்னங்கள் ஆனவை வீடுகளை அழகுபடுத்தும் பொருட்களாகவே பார்க்கப்பட்டது. அப்போது இருந்தே அருங்காட்சியகம் தோன்றுவதற்கான அடித்தளத்தை இட்டுக் கொடுத்தது. இதன் பின்னர் பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின் உலகில் தோன்றிய தொழிற்புரட்சி, மறுமலர்ச்சி இயக்கம் ஆகியவற்றின் விளைவே புதிய கோட்பாடுகளைக் கொண்ட அருங்காட்சி யகங்கள் தோன்றின. உலக வணிக வரலாற்றின் கி.பி 16-17 ஆம் நூற்றாண்டுகளில் சிறப்பிடம் பெறும் இரண்டு முக்கிய நிகழ்வுகள் ஏற்பட்டன. ஒன்று போரிடுதல் மற்றொன்று சென்ற இடங்களில் கிடைக்கின்ற கலைப் பொருட்களைத் திரட்டிக் கொண்டு வருதல். இது அக்கால அரசர்களின் வணிக குழுக்களின் சிறப்பினைக் கூறும் வரலாற்ற நிகழ்வுகள் என்றாலும் அவர்கள் சேகரித்த கலைப்பொருட்கள் அவர்கள் செல்லுகின்ற இடங்களில் விட்டுச் செல்கின்ற பொருட்கள் இன்று நினைவுச் சின்னங்களாகவும் வரலாற்றை உருவாக்குவதற்கான சான்றாகவும் திகழ்கின்றன.

******    ******

கி.பி 16-17 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியர்களின் கடல் வணிக நோக்கம் உலக அளவில் மாபெரும் விளைவுகளை ஏற்படுத்தியது. வணிக நோக்கத்துடன் கலையுணர்வு கொண்ட பல்வேறு நாட்டைச் சேர்ந்த மன்னர்கள் தங்களது அழகுப் பேழைகளில் (cabinets) அரிய பொருட்களை சேகரித்து வைத்துப் பெருமை சேர்த்தனர். தொடக்க காலத்தில் அரிய பொருட்களை சேகரித்து வைக்கும் பேழைகள் சாதாரண நிலையங்களிலிருந்து அழகூட்டப்பட்ட வேலைப்பாடுகள் நிறைந்த பேழைகளாக மாற்றம் பெற்றன.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட பொருட்கள் தலைமுறை தலைமுறையாக பாதுகாக்கப்பட்டடு வந்தன. அரசர், செல்வந்தர், வணிகர் மற்றும் கலை ஆர்வலர் தனிப் பட்ட நிலையில் கலை வரலாறு இயற்கையின்பால் ஏற்பட்ட ஆர்வத்தாலும் சேகரிக் கப்பட்டன. அவை காலப்போக்கில் பொது மக்கள் காண்பதற்குரிய இடமாகவும் மாற்றத் திற்குள்ளாகின

அரும்காட்சியகங்களின் சேகரிப்புக்கள், அதன் அமைப்பு முறைகளைக் கொண்டும் அதன் அடிப்படை நோக்கத்தை மையமாக கொண்டும் அவற்றை கீழ்க்கண்டவாறு பிரித்துக் காட்டலாம்.

1. தொல்பொருள் அருங்காட்சியகம்
2. வரலாற்று அருங்காட்சியகம்
3. கள அருங்காட்சியகம்
4. கோயில் அருங்காட்சியகம்
5. கல்லூரி அருங்காட்சியகம்
6. பல்கலைக்கழக அருங்காட்சியகம்
7. தொழில்நுட்ப அறிவியல் அருங்காட்சியகம்
8. அரசியல் மற்றும் சமுதாயத்தலைவர்களின் நினைவு அருங்காட்சியகம்
9. ஓவியம் அல்லது கலை அருங்காட்சியகம்
10. குழந்தைகள் அருங்காட்சியகம்
11. மானிடவியல் அருங்காட்சியகம்
12. இயற்கை வரலாற்று அருங்காட்சியகம்
13. விளையாட்டு அருங்காட்சியகம்
14. நாட்டுப்புறவியல் அருங்காட்சியகம்
15. இலக்கிய அருங்காட்சியகம்
16. திறந்தவெளி அருங்காட்சியகம்

*****  *****

17. ஆயுத அருங்காட்சியகம்

18. கடல் சார் அருங்காட்சியகம்

19. விலங்கியல் அருங்காட்சியகம்

20. இனப் பரப்பியல் அருங்காட்சியகம்

**இலங்கையில் அருங்காட்சியகங்கள் தோற்றமும் வளர்ச்சியும்**

ஒரு நாட்டில் அருங்காட்சியகங்கள் தோன்றி வளரப் பல காரணங்கள் பின்னணியாக உள்ளன. இலங்கையில் அருங்காட்சியகங்கள் தோன்றப் பிரித்தானியர் ஆட்சியில் எதிர்பாராமல் கிடைத்த தொல்பொருட் சின்னங்கள் ஒரு காரணமாகும்.

1818_இல் பிரித்தானிய தரைப்படை அதிகாரியான, லெப்டி.எம்.எச்.பாகன் அவர்கள் கிளர்ச்சிக்காரர்களைப் பிடிப்பதற்காக பொலநறுவை மாவட்டத்தில் தேடுதல் நடத்தினார்கள். அப்போது பொலநறுவையிலுள்ள பண்டைய நினைவுச் சின்னங்களின் சில முக்கிய பகுதிகளைக் கண்டதும் அவர்கள் அவற்றைப் பற்றி அறிவதிலேயே மிக ஆர்வம் காட்டினார்கள். பிரித்தானியர் பொலநறுவையை தொபாறே என்றும் வழங்கினார்.இப்பெயர் தூப வாவிய என்ற கட்டுக் கரைக்குளத்தின் திரிபாகும். இந்த குளத்தினுள் ஒரு தூபி அல்லது தாதுகோபம் அழிந்திருக்க வேண்டும் எனச் சொல்லப்படுகின்றது. பொலநறுவையில் பாகன் கண்ட இடங்கள் பற்றி அவரது கருத்துக்கள் 1820ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியாகின. இதன் பின்னர் மன்னாரின் இறைவரி சேகரிப்பாளரான டி.ஆர்.பாக்கவுன் அனுராதபுரம், மிகிந்தலை, கவுதுலூ வாவி ஆகிய பகுதிகளுக்குச் சென்று விபரங்களைச் சேகரித்தார். அவருடைய பதிவேடுகளிலேயே சில முக்கிய நினைவுச் சின்னங்கள் பற்றியும் குளங்களின் அணைக்கட்டுப் பற்றியும் விளக்கங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன. பின்னர் 1828களிலும் 1831 இலும் ஒரு தரைப்படை அதிகாரியான மேஜர் போப்ஸ் அனுராதபுரம், பொலநறுவை, சிகிரியா ஆகிய இடங்களிற்குச் சென்று தகவல்களைச் சேகரித்தார். இவர் இலங்கையிலேயே 11 ஆண்டு தங்கியிருந்தார். இவர் எழுதியுள்ள இவ்விபரங்கள் உபயோகமானவையாகும். 1832-33 எலட்டினன் ஸ்கிறீனர் அனுராதபுரத்திற்குச் சென்று முக்கியமான நினைவுச் சின்னங்களின் புற உருவங்களை படங்களாக வரைந்தது மட்டுமல்லாது கிராமிய மக்களால் அச்சின்னங்களிற்கு காரணப் பெயராக இடப்பட்ட வழக்கிலுள்ள பெயர்களையும் சேகரித்துள்ளார்.

இதன்பின்னர் ஆர்வமுள்ள பொதுமக்கள் ஒன்று சேர்ந்து அநுராதபுரத்திலுள்ள பண்டைய நினைவுச் சின்னங்களைச் சுற்றியுள்ள காட்டை வெட்டி துப்புரவு செய்ய முயன்றார். 1828-29 வரை ஜேதவனாராமம் கிழக்குப் புறத்திலுள்ள தாதுகோபத்தையும்

1848இல் தூபராமம் என்ற பழைமையான தாதுகோபுரத்தையும் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெற்றதாக முந்திய அரசாங்க அதிபர் ஒருவர் அறியத் தந்துள்ளார். 1840ஆம் ஆண்டு அரசாங்கமானது 40 பவுண் பணத்தை ஒதுக்கீடு செய்து தன்மையான நினைவுச் சின்னங்களை காட்டை அழிக்க செலவு செய்தது.

இதைத் தொடர்ந்து புராதன இடங்களைப் பற்றி அறிக்கைகள் வெளியிடப் பட்டன. காடு வெட்டித் துப்பரவு செய்யும்போது வெளிவந்த புராதன கல்வெட்டுக்களைப் பற்றிய அக்கறையும் ஆய்வும் தொடங்கியது. 1859இல் குடியேற்றச் நாட்டுச் செலவானராக இருந்த சேர் ஜேம்ஸ் எமர்சன் தெனன்ட் என்பவர் இரண்டு பகுதிகளைக் கொண்ட ஒரு விரிவான நூலை வெளியிட்டார். இன்றும் இவ்வகையிலுள்ள படித்த மக்கள் மத்தியில் இலங்கையின் புராதன இடங்கள் பற்றிய ஆவலைக் குறிப்பிடத்தக்களவு தூண்டியது.

1868ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த எச்.எஸ்.றசல் என்பவர் புராதன சிங்கள மக்களுடைய கட்டட அமைப்புக்களும் ஏனைய கலை செல் வங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். சில ஆண்டுகளிற்கு முன்னர் இந்தியாவிலேயே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போன்று இங்கும் மேற்கொண்டால், அவை காப்பாற்றப்படும் என்று அரசாங்கத்திற்கு எடுத்துரைத்தார். தேசாதிபதியாக இருந்த சேர் ஹேர்கியூலிஸ் ரொடிங்சன் என்பவர் அவருடைய சேகரிப்புகளிற்கு செவிசாய்த்து அந்த ஆண்டில் ஒரு விசாரணைக் குழுவை அமைத்தார். இக்குழுவானது நாட்டின் புராதன சின்னங்களை எப்படிப் பாதுகாப்பது என்பதற்குரிய சாத்தியக் கூறுகளை விசாரணை செய்யவும் வடமத்திய மாகாணத்திலுள்ள கல்வெட்டுப் பொறிப்புக்களின் பிரதிநிதிகளைச் சேகரிக்கவுமான தொல்பொருள் ஆராட்சி ஆணைக்குழு என வழங்கப்பட்டது. இக்குழுவில் நில அளவைப் பகுதிப் பெரும் தலைவராக இருந்த கப்புள் எ.பீ.வையர்ஸ், பொது வேலைப் பகுதி அதிகாரிகளுக்குத் தொல்பொருள் ஆராய்ச்சித் துணைத் தலைவராக இருந்த ஜேம்ஸ் சிமித்தர் (இவரே குழச் செயலாளராகவும் இருந்தார்). ஆகியோர் அங்கம் வகித்தனர் இந்த தொல்பொருள் ஆராய்ச்சி குழுவின் அறிக்கையை தேடி கண்டுபிடிக்க முடியாதிருக்கின்றது.

இலங்கையில் தொல்பொருள் ஆராய்ச்சிக்கான முயற்சிகள் மேற்கொள்ளபட் டன. 1869ஆம் ஆண்டு முதன்முறையாக அரசாங்க ஆதரவுடன் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அன்றிலிருந்து இலங்கையில் தொல்பொருளாய்விற்கான முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன. 1870 கண்டியைச் சேர்ந்த லோற்றன் என்ப வர் முக்கிய தொல்பொருட் சின்னங்களை படமெடுத்தார். இதைத் தொடர்ந்து தொல் பொருள் ஆராய்ச்சிக் குறிப்பேடு தயாரிப்பதில் புகைப்படமெடுத்தலும் உபயோகிக் கப்பட்டது.

வில்லியம் ஹென்றி கிறெகரி 1872 மார்ச் மாதம் 4ஆம் திகதி இலங்கையில் தேசாதிபதியாகக் கடமை ஏற்றார். இவர் ஆரம்ப காலம் தொட்டே இலக்கியம், தொல் பொருட்கள் என்பவற்றில் அதிக அக்கறை உடையவராக காணப்பட்டார். இதன்பின் இலங்கை வந்த கிறெகறியவர்கள் இலங்கையின் தொல்பொருட் சின்னங்களை ஆராய்வ திலும், பாதுகாப்பதிலும் அதிக அக்கறை செலுத்தினார். தேசாதிபதி வில்லியம் கிறெகரி அநுராதபுரத்திலும் வேறு இடங்களிலுள்ள கல்வெட்டுக்களை ஒழுங்கு முறையாக சேகரிக்கவும் வேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்தார். 1874 இல் கானர் வொன் கோமகனுக்கு கடிதமூலம் வேண்டுகோள் விடுத்து இங்கு கிடைகக்கூடிய ஏராளமான கல்வெட்டுக்களைப் பதிவெடுப்பதற்கும், வாசிப்பதற்கும் திரு.பி.கோல்ஸ்சிமித் அவர்க ளைத் தந்துதவும்படி கேட்டுக்கொண்டார். பி.கோல்ஸ்சிமித் 1877 வரை கடமையாற்றினார்.

றோயல் எசியாட்டிச் சங்கத்தின் இலங்கைக் கிளை 1854 இல் நிரந்தர இல்லம் ஒன்றை நிறுவ விரும்பியது. 1872 ஆம் ஆண்டில் அது பொதுநூல் நிலையம் ஒன்றின் நிமித்தம் தீவிர கிளர்ச்சி செய்தது. இக்கிளர்ச்சியின் பயனாக சங்கத்தின் தலைவரான கேணல் ஏ.பி.பயிலேஸ் அவர்களின் தலைமையில் பேராளர் குழு ஒன்று தேசாதிபதி சேர்.வில்லியம் ஹென்றி கிறெகறி அவர்களைச் சந்தித்து புலமைசால் பேரறிஞரான தேசாதிபதி அவர்கள் குழுவின் வேண்டுகோளை பாராட்டியதோடு அமையாது தாமே முழுமையாக முன்வந்து இப்பிரேரணைக்கு இலங்கைச் சட்டவாக்க மன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றார். அத்துடன் கட்டடத் திட்டவடிவமைப்புப் பற்றி அறிவுரை கூறி அதை அமைப்பதற்கான இடத்தினையும் தெரிவு செய்து அதற்குத் தலைமை தாங்குவதற்கு பொருத்தமான பணிப்பாளர் ஒருவரையும் கண்டுகொண்டார்.தேசாதிபதி கிறெகரி சட்டவாக்க மன்றத்தின் தலைவர் என்ற முறையில் புதிய அரசாங்க கூட்டு வேலைகளின் கீழ் நூதனசாலைகளுக்கென 50,000 அடங்கும் மசோதாவை 1873 செப்ரெம்பர் 25ஆம் திகதி புதன்கிழமை சமர்ப்பிப்பது உரையாற்றினார். மசோதா சமர்ப்பிக்கப்படுகையிலும் விவாதத்தின் இறுதியிலும் அவர் ஆற்றிய உரைகள் மிக முக்கியமானவை. அருங்காட்சியகத்தின் தேவை பற்றி அவர் வலியுறுத்தி வேண்டுகோள் விடுத்தது மட்டுமல்லாமல் அதன் செயல் நோக்கத்தைப் பற்றியும் அவர் மேல்வாரியாக எடுத்து கூறினார்.

அருங்காட்சியகம் ஒன்றினைத் தாபிப்பதற்கெனத் தேசாதிபதியினால் சமர்க்க ப்பட்ட மசோதா மூன்று உத்தியோக சார்பற்ற உறுப்பினர்களின் எதிர்ப்பினால் சட்டவாக்க மன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. பிரதானமாக கட்டடத்துக்கான செலவு பற்றி திருப்தியின்மை நிலவியது. இவ் அருங்காட்சியகத்தினை அமைக்க 125,000 க்கு மேற்பட்ட பணம் வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. அருங்காட்சியகம் பற்றிய திட்டம் எதுவும் மன்றத்தில் சமர்ப்பிக்கபடாமையினால் இவ்வுறுப்பினர்கள் மூலமதிப்பீடு விஞ்சப்படும்

சாத்தியக்கூறு உண்டென அஞ்சினார்கள். மேலும் அக்காலப் பகுதியில் அரசாங்கம் பெரும் செலவில் கட்டடங்களை அமைப்பது கண்டனத்துக்கு உள்ளானதுமாகும் என அஞ்சினார்கள். எனினும் தேசாதிபதி அவர்களைத் தமிழ் பிரதிநிதி திரு.முத்துக் குமாரசாமி அவர்கள் பலமாக ஆதரித்துப் பேசினார்கள். செலவு 12,000 பவுணுக்கு மேற்படமாட்டாதென தேசாதிபதி கிறெகறி அவர்கள் உறுதியளித்ததை அடுத்து மசோதாவை சட்டவாக்கக் கழகத்தில் நிறைவேற்றப்பட்டது.

கொழும்பில் பொது அருங்காட்சியகம் ஒன்றினைத் தாபிப்பதற்கும் அதனை ஒழுங்கு விதிகளிற்கு ஏற்பாடு செய்யும் கட்டளைச் சட்டத்தினையும் முதலாம் வாசிப்பு இலங்கை சட்டவாக்க மன்றத்தால் 1873ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி திங்கட்கிழமையன்று குடியேற்ற நாட்டுச் செயலாளர் கௌரவ ஆதர் என்.பேச் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. காரணியின் வழக்கறிஞர் ஆர்.எவ்.மோகன் அவர்களால் வழிமொழியப்பட்டது. மசோதா 1873ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி புதன் கிழமை இரண்டாம் வாசிப்பிற்கு எடுக்கப்பட்டு, காரணியின் வழக்கறிஞரான மோகன் டேவிட் உவில்சன், எஸ்.பேடினண்டஸ் என்போரைக் கொண்ட ஒரு குழுவினரிடம் விடப் பட்டது. அக்குழுவின் விதப்புரையின் பெயரில் 1873ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதியன்று இலங்கை சட்டவாக்க மன்றத்துக்கு கொண்டு வரப்பட்டு மூன்றுமுறை வாசிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதன்பின்னர் 1873ஆம் ஆண்டு ஸ்மித்தேக்ஸ் என்பவரின் மேற்பார்வையின் கீழே கட்டடம் அமைக்கப்பட்டு 1875ஆம் ஆண்டு இறுதியில் முற்றுப்பெற்றது. 1877 மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டது. இவ் அரும்பொருட்சாலை நிறுவுவதற்கு முன்னமே ஆசிய வேதியர் இலங்கைக் கிளை அலுவலகத்தின் அறை ஒன்றிலேயே அருங்காட்சியகம் போன்ற ஒரு நிலையம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அங்கு வேதியர் அவையின் அங்கத்தவர்களால் நன்கொடையாக அளிக்கப்பட்ட கலாசாரம், இயற்கை சரிதம் சம்பந்தமான பொருட்களும், மாதிரிப் பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. எனவே, இந்த அருங்காட்சியகம், அங்கத்தவர்களின் பார்வைக்கு மட்டுமே உடையதாகவிருந்தது. இந்தப் பொருட்களையும், விலையுயர்ந்த நூல்நிலைப் பொருட்களையும் கொண்ட இத்திரட்டுக்களே ஒரு புது அருங்காட்சியத்தின் மூலம் கண்காட்சிப் பொருட்களாகின. இப்புதிய அருங்காட்சியகத்திற்கு ஏ.ஹேவி என்பவரைப் பணிப்பாளராக நியமித்தார். கலாநிதி ஹேலிக்குப் பின்னர் ஒருவர் பின் ஒருவராகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகள் பரம்பரை தொடர்ந்தது. இவர்களே அருங்காட்சியகம் வளர்வதற்கு அயராது உழைத்தவர்களாவார்கள்.

இதன் பயனாக இன்று சரித்திர காலத்துக்கும் முற்பட்ட வரலாறு, புதைபடிவ ஆய்வியல், விலங்கியல், இலங்கையின் கலைகள், தொல்பொருட்கள் என்பன பற்றிய

ஆராய்ச்சி அனைத்திலும் புகழ்பெற்று விளங்குகிறது.

இலங்கை அருங்காட்சியக வரலாற்றில் 50 வருடங்களுக்கு முற்பட்ட அரிய அருகிவரும் பொருட்களை தொல்பொருட்கள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வேறுபட்ட தொல்பொருட்கள் வேறுபட்ட காலப்பகுதிக்கு உரிய பொருட்கள் என வகைப்படுத்தப்படுட்டுள்ளது. இது நாடுகளிற்கு நாடுகள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் அழகுப் பெருட்களாகப் பார்க்கப்பட்ட தொல்பொருட்கள் பிற்பட்ட காலத்தில் ஆய்வுகளிற்கு உட்பட்டு அதன் முக்கியத்துவம் வெளிக்கொணரப்பட்டன. அருங்காட்சியங்களின் பணியாக

- பொருட்களைச் சேகரித்தல்
- பொருட்களை பாதுகாத்தல்
- காட்சிப்படுத்தல்
- கல்வியை பெற்றுத்தரல்
- எழுத்துருவாக்குதல்

போன்ற பணிகளினை அருங்காட்சியகமானது மேற்கொண்டு வருகின்றது.

இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகங்களை கீழ்கண்டவாறு பிரித்துக் காட்டலாம். அவை:

1. தேசிய அருங்காட்சியத்தின் கீழுள்ள அருங்காட்சியகங்கள்
2. தொல்பொருட் திணைக்களத்தின் கீழுள்ள அருங்காட்சியகங்கள்
3. பிராந்திய கலாச்சார நிதியத்தின் கீழுள்ள அருங்காட்சியகங்கள்
4. அரச திணைக்களத்தின் கீழுள்ள அருங்காட்சியகங்கள்
5. தனியார் அருங்காட்சியத்தின் கீழுள்ள அருங்காட்சியகங்கள்
6. ஞாபகார்த்த அருங்காட்சியத்தின் கீழுள்ள அருங்காட்சியகங்கள்

**யாழ்ப்பாண அருங்காட்சியகத்தின் தோற்றம்**

வட இலங்கையிலே இரண்டு அருங்காட்சியகங்கள் காணப்படுகின்றது. முதலாவது யாழ்ப்பாண அருங்காட்சியகம், இரண்டாவது வவுனியா அருங்காட்சியகமாகும். 1942 ஆம் ஆண்டு தேசிய அருங்காட்சியகச் சட்டத்திற்கமைய கொழும்பு அருங்காட்சியகம் தேசிய அருங்காட்சியகமாக பிரகடனப்படுத்தப் பட்டது. சில ஆண்டுகளின் பின் மூன்று தேசிய அருங்காட்சியகங்கள் கண்டி, இரத்தினபுரி, யாழ்ப்பாணம் என்னும் இடங்களிலே ஸ்தாபிக்கப் பட்டது. 1956 ஆம் ஆண்டு 2ம் குறுக்குத் தெருவில் அமைக்கப்பட்டது. 1965 ஆம் ஆண்டு மந்திரி சபைத் தீர்மானத்தின்படி புதை பொருளாராட்சித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.



அருங்காட்சியகமானது ஆரம்பத்திலே ஆங்கிலேயர் பாணியில் அமைந்த தனியார் கட்டடம் ஒன்றிலேயே அமைக்கப்பட்டது. அக் காலப் பகுதியிலே பெரும்பாலான செயற்பாடு கள் கோட்டையை அண்டிய பிரதேசங்களிலேயே காணப்பட்டது. யாழ்ப்பாணப் பிரதேசத்திலே கண்டுபிடிக்கப்படும் பொருட்கள் இவ் அருங்காட்சியகத்தினை அலங்கரித்தன. அருங் காட்சியகத்திலே பொருட்களின் எண்ணிக்கை அதிகரித்தது. பொருட்கள் காட்சிப்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாகவும் நகர மயமாக்கம் போன்றவற்றாலும் அருங்காட்சியகத்திற்கு என சொந்தமாகக் கட்டிடம் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு 1972 ஆம் ஆண்டு மார்கழி 18 ஆம் திகதி கௌரவ எஸ்.எஸ்.குண திலக அவர்களால் அருங்காட்சியகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 11 கூடங்களைக் கொண்ட கண்டிக் கட்டடக் கலைப்பாணியில் 1985 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. இதன் அமைவிடமானது நாவலர் வீதியிலுள்ள இந்து கலாச்சார மண்டபத்திற்கு பின் புறமாக அமைந்துள்ளது.

1956-1984 வரை 2 ஆம் குறுக்குத்தெருவில் இயங்கி வந்த அருங்காட்சியகம் 1985 ஆம் ஆண்டு இடம் மாற்றப்பட்டு அதே ஆண்டு மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டது. இவ் அருங்காட்சியகத்தில் பொருட்கள் 8 கூடங்களிலே காணப்படு கின்றது. வரலாற்று உதயகாலம் தொடக்கம் ஆங்கிலேயர் காலம் வரையிலான பொருட்களும், மாதிரிப் பொருட்கள், திமிங்கிலத்தின் எலும்பு போன்றன தொல்பொருட் சின்னங்களாக காணப்படுகின்றன. இங்கு காணப்படும் தொல்பொருட் சின்னங்கள் பெருமளவு யாழ்ப்பாணத் தில் கண்டுபிடிக்கப்பட்டவையாகும்.

2 ஆம் குறுக்குத்தெருவில் அருங்காட்சியகம் அமைந்திருந்த பொழுது 2 பெரிய யானைத் தந்தமும், 1 வெண்கலப் பீரங்கியும் களவாடப்பட்டுவிட்டது. தங்க ஆபரணங்கள் காவல் நிலையத்தில் பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்டபோதும் அது தற்பொழுதுவரை கிடைக்கப்பெறவில்லை. இது தவிர பல தொல்பொருட் சின்னங்களும் காணாமற் போயுள்ளது. யுத்தத்தின் காரணத்தால் நாணயங்கள் சேதத்துக் குள்ளாக்கப்பட்டு விட்டது. இப் பொழுது 100 நாணயங்கள் மட்டுமே காணப்படுகின்றன.

யாழ்ப்பாண அருங்காட்சியகத்தின் கீழே 3 பழைமை வாய்ந்த இடங்களிலுள்ள கட்டடங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவையாவன:

*****  *****

1. கந்தரோடையிலுள்ள தூபிகள்

2. சங்கானையிலுள்ள கோட்டை கட்டடம்

3.நெடுந்தீவிலுள்ள கோட்டை கட்டடம், என்பனவாகும்.

ஒரு நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கு தேவையான கடந்தகால சம்பவங்களை அளித்துதவி வழிநடத்தும் பாங்கினை அருங்காட்சியகம் அளிக்கின்றது. அதுமட்டுமல் லாது முக்கியமானதொரு கல்வி நிலையமாக்வும் சேவையாற்றி வருகின்றது. மேலும் எமது பாரம்பரியத்தினையும், இயற்கை வளங்களையும், தேசிய வரலாற்றையும், எமது முன்னோரது வாழ்க்கை முறையினையும், எமது பண்பாட்டுச் சிறப்புக்களையும் அறிந்து கொள்வதற்கும் பெரிதும் உதவுகிறது.

## உசாத்துணை நூல்கள்


- பவுண்துரை, இ., 2001, **அருங்காட்சியகவியல்**, மெய்யய்ன் தமிழ்த்தாயகம்

- பஸ்தியாம்பிள்ளை, பீ., 1977, **கொழும்பு நூதனசாலை நூற்றாண்டு நிறைவு மலர்**, கொழும்பு நூதனசாலை வெளியீடு.


- சில்வா, P.S.D.H.T., 1969, **இலங்கை கல்வி நூற்றாண்டு மலர்**, பாகம் 3, இலங்கை கல்வி கலாச்சார அமைச்சின் வெளியீடு.




# யாழ்ப்பாண அரசு பற்றிய ஆய்வுக்கு புது வெளிச்சமூட்டும் அண்மையில் கிடைத்த அரியவகை நாணயங்கள்

*செல்வி. க. மதுராம்பிகை*
*தொல்லியல் சிறப்புக்கலை*
*மூன்றாம் வருடம்*


வட இலங்கையில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசு ஒன்று கி.பி.13 ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கி.பி.17 ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஆரியச் சக்கரவர்த்திகள் என்னும் தமிழ் மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டதைத் தமிழ் சிங்கள இலக்கியங்கள், இலங்கை, தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் போர்த்துக் கேயர், ஒல்லாந்தர் கால ஆவணங்கள் முதலியவற்றால் அறிந்து கொள்கிறோம். இவ் அரசின் கீழ் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், பச்சிலைப்பள்ளி போன்ற பிரதேசங்களும் மன்னார் மற்றும் பதின்மூன்று தீவுகளும், வன்னிமைகளான பனங்காமம், முள்ளியவளை, தென்னமரவாடி என்பனவும் உள்ளடங்கியிருந்தன. சில காலங்களில் இதன் ஆதிக்கம் கிழக்கிலங்கையிலும், தென்னிலங்கையிலும் பரவியிருந்ததாகத் தெரிகிறது.



பொன் நாணயம்

சிங்கள இலக்கியங்களில் இவ்வரசை யாப்பாபட்டன எனவும், விஜயநகர, தஞ்சை நாயக்கர் காலக் கல்வெட்டுக்களும், பிற ஆவணங்களும் இவ்வரசை யாழ்ப்பாண தேசம், யாழ்ப்பாணாயன் பட்டினம் எனவும் குறிப்பிடப்படுகின்றன.


இவ்வாறு தமிழ்ப் பிரதேசத்தின் பரந்த நிலப்பரப்பை ஏறத்தாழ 350 ஆண்டுகளுக்கு மேல் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த இவ்வரசின் வரலாற்றை அறிந்து கொள்ள சான்றாதாரங்கள் பெருமளவில் இதுவரை கிடைக்கவில்லை. இந் நிலையில் இவ் அரசுகால வரலாற்றை மிகவும் நம்பகத் தன்மையுடன் எடுத்துக் காட்டும் முக்கிய மூலாதாரமாக இவ்வரசு கால மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் காணப்படுகின்றன. வட இலங்கையில் மட்டுமன்றி இலங்கையின் ஏனைய வட்டாரங்களிலும், தென்னிந்தியாவிலும் கிடைத்து வருகின்றன. இந் நாணயங்களில் "சேது" என்ற மொழியும், நந்தியும் முக்கிய அம்சங்களாகத் திகழ்கின்றன.




வெள்ளி நாணயம்

இங்கனம் கிடைக்கப் பெற்ற நாணயங்களைக் கொண்டு யாழ்ப்பாண அரசு கால மன்னர்கள் செப்பு நாணயங்களை மட்டுமே வெளியிட்டனர் என்ற கருத்தே பொதுவாக

மன்னர்கள் செப்பு நாணயங்களை மட்டுமே வெளியிட்டனர் என்ற கருத்தே பொதுவாக நிலவிவந்தது. ஆனால் பேராசிரியர் பத்மநாதன் பிரித்தானியாவில் பொஸ்டன் நூதன சாலையில் இம்மன்னர்கள் வெளியிட்ட பொன் நாணயம் ஒன்றிருப்பதாகக் குறிப்பிடுகின்றமையும், பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் பூநகரியில் மேற்கொண்ட தொல்லியல் மோலாய்வுகள் இரு பொன் நாணயங்களையும், வலிகாமம் புத்தூரில் தூய வெள்ளியிலான நாணயம் ஒன்றையும் கண்டுபிடித்து இம் மன்னர்கள் வெளியிட்டதாக எடுத்துக் காட்டியிருப்பது செப்பு நாணயங்களை மட்டுமல்லாது பொன், வெள்ளி நாணயங்களையும் வெளியிட் டுள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகிறது





பொதுவாக, யாழ்ப்பாண அரசு கால மன்னர்கள் "சேது" என்ற மங்கல மொழி பொறித்த நாணயங்களையே வெளியிட்டனர் என்ற கருத்தே நீண்ட காலமாக நிலவி வந்த போதும் பேராசிரியர் புஸ்பரட்ணம் இது தொடர்பாக மேற்கொண்ட ஆய்வில் கந்தனைக் குறிக்கும் "கந்" என்ற பெயரி லும் ஆறுமுகனை அல்லது ஆரியச்சக்கரவாத்திகள் என்ற வம்சத்தை குறிக்கும் "ஆ" என்ற பெயரிலும் நாணயங்களை வெளியிட்டதை எடுத்துக் காட்டி யுள்ளனர். இத்தகைய நாணயங்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் மண்ணித்தலை, வீரபாண்டியன்முனை போன்ற இடங்களிலும் யாழ்ப்பாணத்திலுள்ள கந்தரோடை போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. மேலும் சில நாணயங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள ஜேம்ஸ் ஈவிலின் பண்பாட்டு நிறுவனத்தில் வைக்கப்பட்டிருந்தன. இலங்கையில் தனிப்பட்ட முறையில் நாணயச் சேகரிப்பில் ஈடுபட்டு வரும் கலைஞானி பொன்னம்பலம், ஆசிரியர் திருவள்ளுவர் போன்றோரிடம் இத்தகைய நாணயங்கள் இருப்பதாகத் தெரிகிறது. தற்போது சென்னை அருங்காட்சி யகத்தில் நான்கு நாண யங்கள் உள்ளன. மேலும் சில ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்திலும் அவ்வட்டாரத்தைச் சேர்ந்த நாணயவியலாளர் திருஞான சம்பந்தனிடமும் உண்டு என இவை பற்றிய ஆய்வில் ஈடுபட்ட பேராசிரியர் புஸ்பரட்ணம் குறிப்பிட்டுள்ளார்.

இங்ஙனம் வட இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னர்களது ஆட்சி பற்றி அறிந்து கொள்வதில் முக்கிய மூலதாரமாக விளங்கும் நாணயங்கள் பொதுவாக செப்பினால் மட்டுமே வெளியிடப்பட்டதாகக் கருதப்பட்டு வந்த போதும் அண்மைக்கால ஆய்வு கள் பொன், வெள்ளி முதலியவற்றாலும் வெளியிடப்பட்டதை உறுதிப்படுத்துவதோடு "சேது" என்ற மங்கல மொழி பொறித்த நாணயங்களை மட்டுமல்லாது கந்தனைக் குறிக்கும் "கந்" என்ற பெயரிலும் ஆறுமுகனை அல்லது ஆரியச் சக்கரவர்த்திகளைக் குறிக்கும் "ஆ" என்ற எழுத்திலும் நாணயங்கள் வெளியிடப்பட்டதை அண்மைக்கால ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

◆

## உசாத்துணை நூல்கள்


புஸ்பரட்ணம்,ப.,2001, **இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள், பவானி பதிப்பகம்** - யாழ்ப்பாணம்,பக் 140-159)


புஸ்பரட்ணம்,ப.,2003, **தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு** பவானி பதிப்பகம் - யாழ்ப்பாணம் ,பக் 197-228




******　　　　******

## தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் அரிய தொல்லியற் கண்டுபிடிப்பு

*சிவரூபி*
*தொல்லியற் சிறப்புக் கலை*
*இரண்டாம் வருடம்*




தமிழகத்தில் அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் தமிழ் மொழி, எழுத்து என்பவற்றின் தொன்மை பற்றி புதிய கருத்துச் சூழலை உருவாக்கி வருகின்றன. இதற்கு மிகச் சமீபத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொல்லியற் துறை ஆய்வாளர்கள் தேனி மாவட்டத்தில் புலிமான் கோம்பை என்ற இடத்தில் மேற்கொண்ட கள ஆய்வின்போது கண்டுபிடித்த எழுத்துப் பொறிப்புடன் கூடிய நடுகற்கள் சிறந்து விளங்குகின்றன. இக்கண்டுபிடிப்பு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக தொல்லியற் பேராசிரியர் இராஜன் அவர்களின் வழிகாட்டலில் அவரது ஆய்வு மாணவர்களான திரு.வி.பி யதீஸ்குமார் மற்றும் திரு.சி.செல்வகுமார் இணைந்து மேற்கொண்ட கொல்லியல் களஆய்வின் போது கண்டறியப்பட்டதாகும்.


இந்நடுகற்கள் சங்ககாலத்தைச் சேர்ந்த முதுமக்கள் தாழிகளை உட்கொண்ட ஈமச் சின்னத்தின் ஒரு பகுதியாக நடப்பட்டு இருந்தன. மூன்றடி உயரமும், ஒன்று முதல் ஒன்றரை அடி அகலமும் கொண்ட இந்நடுகற்கள் நிலத்தில் ஓர் அடி ஆழத்தில் நடப்பட்டிருந்தன. இந்த மூன்று நடுகற்களில் ஒன்றில் "கல்பேடு தீயன் அந்தவன் கூடல் ஊர் ஆகோள்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இதற்கு கூடலூரில் நடைபெற்ற ஆகோள் பூசலில் உயிர் நீர்த்த பேடு தீயன் அந்தவன் என்பவனுக்கு எடுவித்த கல் எனப் பொருள்படும்.




இரண்டாம் மூன்றாம் கல் வெட்டுக்கள் உடைந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டாலும் இரண டாவது கல்வெட்டில் இருவரிக ளில் எழுதப்பட்ட வாசகம் காணப் படுகின்றன. அதன் முதல் வரியில் "அன் ஊர் ஆதன் " என்றும் இரண்டாவது வரியில் "ன் அன்

***** *****

கல்" என்ற வாசகமும் காணப்படுகின்றன. மூன்றாவது கல்வெட்டில் "வேள் ஊர் பதவன் அவ்வன்" என்ற வாசகம் காணப்படுகின்றது. இதற்கு வேள் ஊரைச் சார்ந்த பதவன் அவ்வன் என்பவனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் எனப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது.





நடுகற்கள் பற்றி சங்க இலக்கியங்கள் பலவும் விபரித்துக் கூறும் அதே நேரம் தொல்காப்பியம் "ஊர் கொலை ஆகோள் பூசன் மாற்றே" என ஆகோள் பற்றிக் கூறுகிறது. இக் கூற்றை உறு திப்படுத்தும் ஆகோள் பற்றிய தெளிவான நடுகல் முதன்முறையாக இங்குதான் கண்டு பிடிக்கப்பட்டள்ளது. தென்னாசியாவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துப்பொறிப்புடன் கூடிய காலத்தால் முந்திய நடுகற் கள் என்ற சிறப்பை இக்கல்வெட்டுக்கள் பெற்றிருப்பதனால் அவற்றின் முக்கியத்துவம் கருதி இக்கல்வெட்டுக்களை தமிழக தொல்லியல், கல்வெட்டு மற்றும் வரலாற்று அறிஞர்கள் பலரும் ஆராய்ந்து வரும் அதேவேளை இவ் தேனி மாவட்டத்தில் எந்தவித பிராகிருத மொழிக் கலப்பும் அற்ற காலத்தால் முந்திய அதாவது கி.மு 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பழந்தமிழ்க் கல்வெட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பது பாரம்பரிய நம்பிக்கையில் இருந்து விடுபட்டு புதிய கண்ணோட்டத்தில் ஈழ் தமிழகப்பிராமி எழுத்தின் தோற்றத்தை ஆராய வேண்டும் என்பதைக் கோடிட்டு காட்டுகின்றன.



# தமிழ் நாட்டு ஆதிச்சநல்லூரில் கண்டுபிடிக்கப்பட்ட அரிய தொல்லியற் சின்னங்கள்

*அருள்ராஜ்*
*மூன்றாம் வருடம்*
*தொல்லியல் சிறப்பு*

மிக அண்மையில் இந்திய தொல்லியல் அருங்காட்சியகக் குழுவினர் மிகப் பெரிய அளவில் தமிழ் நாட்டிலுள்ள திருநெல்வேலி நகரிலிருந்து 24km அப்பாலுள்ள ஆதிச்சநல்லூர் என்னும் இடத்தில் அகழ்வாய்வினை மேற்கொண்டனர். இந்த அகழ்வின் போது அடையாளம் காணப்பட்ட பெருங்கற்கால அகழ்வுக்குளியிலிருந்து அகன்ற பாத்திரங்கள், கறுப்பு- சிவப்பு மட்பாண்டங்கள், மனித எலும்புக்கூடுகள், சிறிய வகைப் பானைகள் என பலவகைப்பட் தொல்லியற் சின்னங்களைக் கண்டுபிடித்தனர். இவை தமிழ்நாட்டு நாகரகத்தின் ஆரம்பம், சமூக உருவாக்கம், அரச தோற்றம் என்பன பற்றிய ஆய்வில் புதிய மாற்றங்கள் ஏற்பட வழியேற்பட்டிருப்பதாக அதன் அகழ்வுக்குப் பொறுப்பாக இருந்த தொல்லியல் இயக்குனர் சத்தியமூர்த்தி அவர்கள் கூறுகிறார்.



இங்கே பெறப்பட்ட தொல்லியல் எச்சங்களிலே பிராமி எழுத்துப் பொறித்த சிறிய மட்பாண்டம் ஒன்று சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அதில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ்ப் பிராமி எழுத்துக்களை தொல்லியலாளர்கள் தமிழகத்தில் கிடைத்த காலத்தால் முந்திய தமிழ் வரிவடிவமாகப் பார்க்கின்றனர். அச்சிறிய பாத்திரங்களின் அடியில் தமிழ் பிராமியில் ஏழு எழுத்துருவங்கள் காணப்படுகின்றன. அவற்றை ஆய்வு செய்த தொல்பொருள் ஆராட்சியாயர் காலநிதி ரி. சத்தியமூர்த்தி என்பவரே முதலில் இவ் எழுத்துக்கள் மிகவும் ஆரம்ப கால எழுத்துக்கள் என கூறினார். இவ்வாறே முன்னாள் இந்திய தொல்பொருள் சாசனவியல் இயக்குளர் டி.எம் சம்பத் என்பவர் இவ் எழுத்துக்களை தமிழ்ப் பிராமியின் மிகவும் பழைமைவாய்ந்த வடிவங்கள் என கருத்து தெரிவித்ததுடன் இவ் எழுத்துக்களை க-றி-அ-ர-வ-ன-த (Ka ri a ra va (na) ta) என பரிட்சார்த்திதமாக வாசித்து 7 எழுத்துக்கள் உள்ளதாக கூறினார்.


***** *****

**பின்னர் இம்மட்பாணட சாசனம் விஞ்ஞானபூர்வமான காலக்கணிப்பகளுக்கு குறிப்பாக காந்தசக்தி** அளவு முறை (C14) மற்றும் தெமோலுமினிசன் (thermo **luminescence dating)** காலக்கணிப்பிற்கு உட்படுத்தியதில் இருந்து இவ்வெழுத்தின் **காலம் கி.மு.500 எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.** இக்காலக் கணிப்பு மேலும் உறுதிப் **படுத்தப்படுமானால்** தமிழ்ப் பிராமியின் தோற்றம், தமிழ் எழுத்தின் தொன்மை, சங்க **காலத்தின் எல்லை பற்றிய** கருத்துக்களில் பல மாறுதல்கள் ஏற்பட இடமுண்டு என்பது **தொல்லியலாளரின்** நம்பிக்கையாகும்.



# சங்க காலத் தமிழகம் எகிப்துடன் கொண்டிருந்த உறவுக்கு ஒரு அரிய சான்று

*வே.ராஜீவன்*
*மூன்றாம் வருடம்*
*தொல்லியல் சிறப்பு*



சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் வரும் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற சொற்தொடர் அக்காலத்தில் தமிழகம் பல நாடுகளுடன் உறவு கொண்டிருந்ததைக் காட்டுகிறது. இக் கூற்றை இலக்கிய அறிஞர்களில் ஒரு சாரார் ஐவகை நிலப் பிரிவுக்குள் இருந்த உறவைக் காட்டுவதாக எடுத்துக் கொண்டனர். ஆனால் அண்மைக் காலத் தொல்லியற் கண்டுபிடிப்புக்கள் சங்க காலத் தமிழகம் மேற்காசியா, கிழக்காசியா மற்றும் தென் கிழக்காசிய நாடுகளுடன் வணிக, பண்பாட்டு உறவுகள் கொண்டிருந்ததைத் உறுதிப்படுத்துகின்றன. இதற்கு மேலும் ஒரு சான்றாக எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த சாசனம் அமைகின்றது.

அண்மையில் எகிப்தில் உள்ள செங்கடற்கரையில் ரோமன் குடியேற்றத்தை கொண்ட பழைய துறைமுகமான "Quseir-al-Qadim" என்ற இடத்தில் மேற் கொள்ளப் பட்ட அகழ்வாய்வில் தமிழ் பிராமி எழுத்திலுள்ள சாசனத்தைக் கொண்ட உடைந்த சேமிப்புக் கூசா ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இதன் காலம் கி.மு.1ஆம் நூற்றாண்டெனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இதைக் கண்டுபிடித்த இங்கிலாந்திலுள்ள அம்ரன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொல்பொருள் ஆராய்ச்சிக் குழு இதை ஒரு பிரமிக்கக்கூடிய கண்டுபிடிப்பென வர்ணித்துள்ளனர். இச்சாசனம் பொறிக்கப்பட்ட கூசா சிதைவடைந்த நிலையில் காணப்பட்டாலும் அதில் பொறிக்கப்பட்ட எழுத்தை இலகு வாக வசிக்கமுடிகிறது. அதை முதலில் வாசித்த மேற்கத்தேய அறிஞரான ரொபேட்டா ரொம்பர, பிக்கொக் மற்றும் இந்திய அறிஞர்கள் தமிழர் பண்பாட்டில் இருந்து வந்த உறி என்ற சொல் இதில் எழுதப்பட்டிருப்பதாகக் கூறினர். பின்னர் இச்சாசனத்தை வாசித்த தமிழ்ப் பிராமியின் தந்தையான ஐராவதம் மகாதேவன் மற்றும் சாசனவியல் அறிஞரான பேராசிரியர் சுப்பராயலு, பேராசிரியர் இராசன் ஆகியோர் சங்க இலக்கியத்தில் வரும் செய்திகளையும், தமிழர் பண்பாட்டில் உறியின் பாவனை பெற்ற முக்கியத்துவத்தையும் உதாரணம் காட்டி அப்பெயரே கூசாவிலும் எழுதப்பட்டிருப்பதாகக் கூறினர். தமிழ் மொழியிலும், தமிழ்ப் பிராமியிலும் அமைந்த இச்சாசனம் இற்றைக்கு 210 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்துடன் தமிழகம் கொண்ட வணிக உறவுக்கு ஒரு முக்கிய சான்றாக அமைகிறது.

****** ******

# 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ச் சாசனம் தாய்லாந்தில் கண்டுபிடிப்பு.

எம். ரசித்குமார்
தொல்லியற் சிறப்புக் கலை
மூன்றாம் வருடம்


சமீபகாலத் தொல்லியல் ஆய்வில் உலகமயமாக்கலுக்கு முன்னர் நாடுகளுக்கிடையே இருந்து வந்த வர்த்தகப், பண்பாட்டு உறவுகள் பற்றிய ஆய்வில் அதிக கவனம் எடுக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாக கடற்கரை சார்ந்த பண்டைய நகரங்கள், வர்த்தக மையங்கள், துறைமுகங்கள் அதிக அளவில் தொல்லியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வுகளின் விளைவாக இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னரே தமிழ் வணிகர்கள் உலக நாடுகள் பலவற்றுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தமை தெரியவந்துள்ளது. இதற்கு இத்தாலி, எகிப்து, அலக்சாண்டிரிய, யப்பான் போன்ற நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்ச் சாசனங்களும், பிற தொல்பொருட்ச் சின்னங்களும் சான்றாகும். இதற்கு மேலும் ஒரு சான்றாக அண்மையில் தாய்லாந்தில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்ப்பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்ட மட்பாண்டச் சாசனம் காணப்படுகிறது.




அண்மையில் தென்கிழக்காசிய நாடுகளில் ஒன்றான தாய்லாந்தில் அதன் தீபகற்பப் பகுதியான "பு காவ் தோங்" (Phu Khav Thong) என்ற இடத்தில் தாய்லாந்து நாட்டு தொல்லியலாளரான பரோன் சில்பக்கோம் ( Praon silpanth) மற்றும் பிரான்ஸ் நாட்டுத் தொல்லியலாளரான பிரனிஸ் பிலினா(Berenice bellina) ஆகியோர் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் போது அரிய பல தொல்லியற் சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றுள் உலக தொல்லில் வரலாற்று அறிஞர்கள் பலரையும் கவர்ந்த அம்சமாக தமிழ்ப்பிராமி எழுத்தில் அமைந்த மட்பாண்டச் சாசனம் காணப் படுகிறது.

இச்சாசனம் கி.பி.2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததென்பதை அதன் எழுத்தமைதி கொண்டு கணிப்பிடப்பட்டுள்ளது. தென்கிழக்காசிய நாடுகளில் கண்டு பிடிக்கப்பட்ட தமிழ் எழுத்து பொறித்த சாசனங்களிலே இச்சாசனமே மிகவும் பழமை வாய்ந்தமை சிறப்பம்சமாகும். இம்மட்பாண்டச் சாசனத்தில் தூ, ற, ஓ என்னும் 3 எழுத்துக்களே எஞ்சி காணப்படுகின்றன. இம்மட்பாண்டம் உடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் முழுமையான சாசனத்தின் எஞ்சிய பகுதியை ஊகித்தே அறிஞர்கள் வாசிக்க முற்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் இச்சாசனத்தின் வாசகத்தை துறவோன் அல்லது துறவோர் என வாசித்து இது துறவியின் பெயரின் பகுதியாக இருந்

திருக்கலாம் எனப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்ப் பிராமியின் தந்தையெனப் போற்றப்படும் ஐராவதம் மகாதேவன் இச்சாசனத்தின் இறுதியில் உள்ள ஓ என்ற உயிரெழுத்தானது தமிழ்-பிராமி கல்வெட்டுக்களிலே காணப்படுகின்ற ஓன் அல்லது ஓர் எனும் விகுதியுடன் முடிவுறும் சொல்லாகவும், அத்துடன் இவ் எழுத்துக்களில் முத லாவதாக உள்ள **தூ** என்னும் எழுத்தை **து** என கொண்டு **துறஓன்** அல்லது **துற ஓர்** என ஊகித்து மேற்குறித்த வகையில் துறவோன் அல்லது துறவோர் என வாசிக்கலாம் எனக் குறிப்பிடுகிறார். மேலும் அவர் இம் மட்பாண்ட ஓட்டிலே உள்ள தமிழ் பிராமி எழுத் துக்களை தமிழகத்தில உள்ள புகளூர் குகைக் கல்வெட்டு எழுத்துக்களுடன் ஒப்பிட்டு இதன் காலத்தை கி.பி-2ஆம் நூற்றாண்டெனக் எடுத்துள்ளார். இந்த வகையில் இம்மட் பாண்ட ஓட்டிலுள்ள எழுத்துக்களை ஆதாரமாக கொண்டு அக்காலத்திலே தமிழகத் திலிருந்து தாய்லாந்திற்கு சென்ற பௌத்த துறவிகளில் ஒருவரின் பெயரை இச்சொற் கள் வெளிப்படுத்தி நிற்பதாக அவர் கருதுகிறார்.



கிறிஸ்தவ சகாப்தத்தின் தொடக்கத்தில் இருந்தே தமிழகத்திற்கும் தென்கிழக்கசியாவிற்கும் இடையில் வணிகத் தொடர்புகள் இருந்ததைச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. இதற்குப் பட்டினப்பாலை யில் வரும் "ஈழத்துணவும் காள கத்தாக்கமும்" என்ற சொற்தொடர் சிறந்த சான்றாகும். இதை மேலும் உறுதிப்படுத்துவதாக தாய்லாந்தில் கண்டு பிடிக்கப்பட்ட சங்க காலச் சோழ நாணயங்கள் விளங்குகின்றன. மேலும் இம்மட்பாண்ட ஓடு தாய்லாந்திலே கண்டு பிடிக்கப்படுவதற்கு முன்பு அங்கு மேற்கொண்ட பிறிதோர் ஆய்வின்போது "பெரும்ப (த்)தன் கல்" என்ற வாசகத்துடனான கி.பி-3-4ஆம் நூற்றாண்டுக்குரியதான உரை கல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு இன்றும் அவ் உரைகல்லானது தாய்லாந்திலுள்ள அருங் காட்சியகத்திலே பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்க அம்சமாகும்.



இதை மேலும் உறுதிப்படுத்துவதாகவே அண்மைய கண்டுபிடிப்பு அமைகிறது. இது தமிழ் வரிவடிவம், தமிழ் மொழி என்பவற்றின் தொன்மை பற்றிய எதிர்கால ஆய்வில் முக்கிய இடத்தைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை. இக்கண்டுபிடிப்பைத் தொடர்ந்து தாய்லாந்திலே மேலும் பல தமிழ் எழுத்துக்கள் பொறித்த தொல்லியல் ஆவணங்கள் கிடைக்கலாம் எனும் ரீதியில் அங்கு தொல்லியல் ஆய்வுகள் மிக முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதை கண்டு கொள்ளலாம்.

*****                                                                                         *****

# களஆய்வில் கண்டவையும் கண்டுபிடித்தவைகளும் - தொல்லியல் இறுதி வருட மாணவர்கள் பங்கெடுத்த ஒரு நிகழ்வுப் பதிவு

பல கற்பனைகளோடு, கனவுகளோடு பல்கலைக்கழகம் வந்தோம். சில நினைவுகளோடும், பல அனுபவங்களுடன் பல்கலைக்கழம் விட்டுச் செல்கிறோம். இது பல்கலைக்கழகக் கல்வியை முடித்துவிட்டு வெளியேறும் மாணவர்கள் தமக்கிடையே பகிர்ந்து கொள்ளும் இனிய உரையாடலாகும். இதற்குமாறாக பல்கலைக்கழகத்தில் எமக்கு எந்த அனுபவமும், மகிழ்ச்சியான நினைவுகளும் கிடைக்க எமக்கு மட்டும் கடந்த காலத்தில் சாதகமான சூழ்நிலைகள் இருக்கவில்லை என ஆதங்கப்படும் மாணவஉகள் சிலரும் உண்டு. ஆனால் தொல்லியல் கற்று வெளியேறும் நாம் ஏனைய பல மாணவர்களுக்கு இல்லாத இனிய அனுபவங்களுடனும், மகிழ்ச்சியான நினைவு களுடனும் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறுகிறோம் என்ற ஆன்ம திருப்தியில் இருக்கிறோம். அந்த திருப்தியை எமக்குத் தந்தது கடந்த நான்காண்டு காலத்தில் நாம் பங்கெடுத்த தொல்லியற் கள ஆய்வுகளாகும். அதில் மூன்றாம், நான்காம் வருடத் தொல்லியல் மாணவர்கள் மட்டுமல்ல வரலாறு, இந்துநாகரிகம், சமூகவியல், நுண்கலை ஆகிய பாடங்களைக் கற்ற ஆர்வமுடைய மாணவர்கள் சிலரும் பங்கெடுத்துள்ளனர். அந்த அனுபவத்தையும், மகிழ்ச்சியையும் நாம் வகுப்பறையில் நடக்கும் போதனையைப் போல் இலகுவாகப் பெற்றுக்கொள்ளவில்லை. கொடிய வெயிலிலும், மழையிலும், கடும் காற்றிலும், குளிரிலும் குன்றும் குளியுமான ஒற்றையடி பாதையில் நடந்து, காடுகளையும், குளங்களையும் கடந்து, வயல் வெளி வரம்புகளைத் தாண்டி மணல் மேடுகளில் ஏறியிறங்கி கடற்கரை ஓரமாக நெடுதூரம் நடந்தே அடையப் பெற்றோம். அந்த இனிய அனுபவங்களை தேடல் சஞ்சிகையில் பதிவு செய்வதில் மன மகிழ்வு அடைகிறோம்.

**கந்தரோடை**

வடஇலங்கையின் முக்கிய தொல்லியல் மையங்களில் கந்தரோடையும் ஒன்றாகும். இதன் முக்கியத்துவம் 1917ஆம் ஆண்டிலிருந்து உணரப்பட்டுள்ளது. இவ்விடத்தை தனது ஆய்வுத்தளமாகக் கொண்ட பேராசிரியர் கிருஷ்ணராஜா அவர்கள் விரவுரைகளின் போது அவ்விடத்தின் தொல்லியல் முக்கியத்துவத்தைப் பல தடவைகள் எடுத்துக் கூறி அங்கு நடைபெற்ற ஆய்வுகளையும், கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியற் சின்னங்களின் முக்கியத்துவத்தை புகைப்படங்களுடாக விபரித்தமை அவ்விடத்தல் தொல்லியற் கள ஆய்வில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வத்தை உண்டாக்கியது. எமது ஆர்வத்தைப் புரிந்து

கொண்ட பேராசிரயர் கிருஷ்ணராஜா 2005 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் எம்மை அங்கு அழைத்தச் சென்று அவரால் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட இடங்களையும், ஏனைய அகழ்வாய்வு மையங்களையும் விபரித்துக் காட்டியமை தொல்லியல் ஆய்வு நெறிமுறையில் புதிய அனுபவத்தைக் கொடுத்தது. பின்னர் பேராசிரியர் புஷ்பரட்ணம் தலமையில் பல தடவை அங்கு சென்றுவந்ததால் அவ்விடம் எமக்குப் பழக்பட்ட கிராமயாக மாறியது. இவ்வாண்டின் முற்பகுதியில் பேராசிரியர் ப.புஷ்பரட்ணத்தின் வழிகாட்டலில் அங்கு சென்ற நாம் அங்குள்ள தமிழ்க்கந்தையா வித்தியாலயத்திற்கு மைதானம் அமைக்கப்பட்ட இடத்திலும், ஏனைய தொல்லியல் மையங்கள் அமைந்த பகுதியிலும் தொல்லியல் மேலாய்வில் ஈடுபட்ட போது பெருங்கற்கால சின்னங்கள், பண்டைய நாணயங்கள் மற்றும் கிறிஸ்தவ சாகாப்பத்திற்குரிய பலவகை உரோம மட்பாண்டங்னளையும் சேகரிக்க முடிந்தது. இக்கிராம மக்களில் சிலர் மழை பெய்யும் காலங்களில் இங்கு காணப்படும் அரிய சின்னங்களைச் சேகரித்து பிற இடத்து மக்களுக்குப் பணத்திற்கு விற்றுப் பழக்கப்பட்டவர்களாக இருந்ததால் அவர்கள் சேகரித்து வைத்துள்ள சில அரிய சான்றுகளை பணம் கொடுத்துப் பெறவேண்டிய நிலையிருந்தது. அவ்வாறு பெறப்பட்டவற்றுள் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட புராணாஸ் மற்றும் சங்க கால நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

### பெருநிலப்பரப்பு

தொல்லியலில் ஆர்வத்தையும், அனுபவத்தையும் மன மகிழ்வையும் கொடுத்ததில் பெருநிலப்பபைப்பில் 2004 –2005 காலப்பகுதியில் தங்கியிருந்து மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. 11.05. 2004 அன்று பேராசிரியர் புஷ்பரட்ணம் தலமையில் அங்கு கள ஆய்வை மேற்கொள்ள புறப்பட்டபோது நாம் எதிர்நோக்க இருந்த அசௌகரியங்கள் பற்றி சிந்திக்கவில்லை. மாறாக தொல்லியல் மையங்கள் சிலவற்றைக் கண்டுபிடிக்க வேண் டும் என்ற ஆர்வமே இருந்தது. அதை அடையும் நோக்கில் இரணைமடு, ஊற்றுப்புலம், அக்கிராயன், பூநகரி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் நல்ல பலனைத் தந்தது.

### இரணைமடு

கலாநிதி சிரான் தெரணியகலா என்ற தொல்லியலாளர் இலங்கையில் இற்றைக்கு 125000 ஆண்டுகளுக்கு முன்னர் கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான கல்லாயுதங்கள் (Upper Paleaolithic Stone tools) கண்டுபிடிக்கப்பட்ட இடங்களில் ஒன்றாக இரணைமடு குளப் பகுதியைக் குறிப்பிடுகிறார். இங்கு நாம் மூன்று நாட்கள் ஏறத்தாழ மூன்று மைல் சுற்றளவில் தொல்லியல் மேலாய்வை (Archaeological Exploration)



சாட்டி அகழ்வாய்வு



சாட்டி அகழ்வாய்வு.



அகழ்வாய்வு நடைபெறும் இடத்தை
அரச அதிபர் பத்மநாதன் பார்வையிடல்.




அகழ்வின் போது தெரியவரும்
தொல்லியற் சின்னங்கள்.




அகழ்வில் பெறப்பட்ட முழுமையான பானை
பிற சான்றுகளுடன்.



இரணைமடுவில் கிடைத்த பிராமி
எழுத்துப் பொறிக்கப்பட்ட மட்பாண்டங்கள்.




கல்முனை அகழ்வின்போது தெரியவரும்
மட்பாண்டங்கள், கல்மணிகள், சங்குகள், பிற சான்றுகள்.



அகழ்வில் கண்டுபிடித்த
மனித எலும்பின் பாகங்கள்.


மேற்கொண்டிருந்தோம். அப்போது இரணைமடுக் குளம் வற்றியிருந்ததால் மழைகாலத்தில் பெருக்கெடுத்த மேட்டு நிலப்பகுதி அரிபட்டு அந்த இடங்களில் இருந்த புராதன குடியிருப்புக்களின் எச்சங்களை தெளிவாகக் காணமுடிந்தது. அவற்றுள் புராதன குடியிருப்புக்களை அமைக்கப் பயன்படுத்தப்பட்ட துவார



மிடப்பட்ட சதுரமான கற்கள், சுடுமண்ணால் வடிவடைக்கப்பட்ட பலவகை மனித மிருக உருவங்கள், பாவனைப் பொருட்கள், செறிவான மட்பாண்டங்கள், கல்மணிகள் என்பவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அவற்றுள் மிக முக்கியமான சான்று பிராமி எழுத்துப் பொறித்த இரு மட்பாண்ட ஓடுகளாகும். அவற்றை ஆதாரமாகக் கொண்டு இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்விடத்தில் புராதன குடியிருப்புக்கள் இருந்ததை உறுதிப்படுத்த முடிகிறது.


**ஊற்றுப்புலம்**

இவ்விடம் கிளிநொச்சி நகருக்கு தெற்கே 10 மைல் தொலைவில் அமைந் துள்ளது. இவ்விடத்தின் சிறப்பு அங்கு காணப்படும் சிறு மலைகளால் ஏற்பட்டதாகும். அடுக்கடுக்காய் அமைந்துள்ள இம்மலைக ளுக்கு மேற்கே சிறிய காடுகளும் ஏனைய இடங்களில் இருந்த காடுகள் அழிக்கப்பட்டு




நெற்செய்கைக்கு உட்பட்ட நிலங்களாகவும் உள்ளன. இங்குள்ள மலைகளின் அத்திவாரத்தில் உள்ள சிறிய குழிகளில் இருந்து எந்நேரமும் நீர் பாய்ந்தோடுவதால் இவ்விடம் ஊற்றுப்புலம் என்ற பெயரைப் பெற்றதாகத் தெரிகிறது. இம்மலைகளின் உச்சியில் செங்கட்டிகள் மற்றும் கருங்கற்கள் கொண்டு அமைக்கப்பட்ட கட்டட அழிபாடுகளும், செறிவான மட்பாண்டச் சிதைவுகளையும் காணமுடிந்தது. மலைகளின் அத்திவாரப்பகுதியில் உள்ள காடுகளில் கருங்கற்தூண்கள் கொண்டு அமைக்கப்பட்ட சதுரவடிவான கட்டட அழிபாடுகள் காணப்படுகின்றன. சில தூண்களின் அடிப்பாகம் சதுரமாகவும் மேற்பகுதி வட்டமாகவும் நன்கு வடிவமைக்கப்பட்டுள்ளன. அத்தூண்க ளில் பல பிற தேவைக்காக அங்கிருந்து எடுத்தப்பட்டுச் செல்லப்பட்டாதகக் தெரிகிறது. மலையின் தெற்குப்பக்க அத்திவாரத்தில் இறந்தவருக்காக அமைக்கப்பட்ட கல்வட்ட

ஈமச்சின்னம் அமைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் காணப் படுகின்றன. ஆயினும் அங்கு தங்கியிருந்து அவ்வீமச் சின்னத்தை அகழ்ந்து பார்க்கக் கூடிய சாதகமான சூழ்நிலை அவ்விடத்தில் இருக்கவில்லை. இருப்பினும் இவ்விடத்தில் கிடைத்த செங்கட்டிகளின் வடிவமைப்பு அவற்றில் இடப்பட்டுள்ள மேசன்மார்க் குறியீடுகள் என்பற்றை ஆதார மாகக் கொண்டு இவ்விடம் கி.பி.8ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவையாக இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இவ்வகைச் செங்கட்டிகள் அநுராதபுரம், கந்தரோடை ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன. அவற்றின் காலம் கி.பி. 7, 8ஆம் நூற்றாண்டெனக் கணிப்பிடப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஆயினும் இவ்விடம் முழுமையான அகழ்வாய்வுக்கு உட்படுமானால் புதிய பல சான்றுகள் கிடைக்கும் என்பது நிச்சயம்.



இவ்விடத்திற்கு தெற்கே இரண்டு மைலுக்கு அப்பால்தான் குடியிருப்புக்கள் சில காணப்படுகின்றன. அங்கு சென்ற போது அங்கிருந்த நாகதம்பரான் ஆலயம் எமக்கு அதிசயமாக இருந்தது. அதில் தெய்வமில்லை. ஆனால் வெண்ணிற மான மிக உயர்ந்த பாம்புப் புற்றுக்கள் உள்ள மேடு காணப்படுகிறது. அம்மேட்டைச் சுற்றி தீப விளக்கும் மலர்களும், ஏனைய படையற் பொருட்களும் காணப்பட்டன. அத்துடன் பாத்திரம் ஒன்றில் பால் வைக்கப்பட்டிருந்தது. இதன் அருகில் சிறிய குடிசை வீடு ஒன்று உள்ளது. அதன் குடியிருப்பாளர் காலையிலும், மாலையிலும் வழக்கமாக வைக்கும் பாலைப் பாம்புகள் பருகிவிட்டு அவை மீண்டும் புற்றுக்குள் போய்விடுவதாக அவ்வீட்டுக் குடியிருப்பாளர் கூறினார். அச்சிறிய ஆலயமே அக்கிராமத்தின் பிராதன வழிபாட்டு இடமாக காணப்படுகிறது.



## பூநகரி

பெருநிலப்பரப்பு கள ஆய்வில் நல்ல பயிற்சியையும், இனிய அனுபவங்களையும் கொடுத்தது பூநகரிப் பிராந்தியத்தில் நடாத்திய களஆய்வுகளாகும். இங்கு பல்வேறு இடங்களில் பேராசிரியர் புஷ்பரணட்ணம் ஏற்கனவே பல தடவைகள் ஆய்வுகளை மேற்கொண்டிருந்ததால முக்கிய தொல்லியல் மையங்களை இலகுவாக அவரால் எமக்கு அடையாளம் காட்ட முடிந்தது. அவற்றுள் மண்ணித்தலையில் அவரலால் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி. 9-10 நூற்றாண்டுக் குரிய சோழக் கலைமரபில்

அமைந்த சிவாலயத்தை நேரில் பார்வையிட வாய்ப்புக் கிடைத்தமை மகிழ்ச்சியாக இருந்தது. நாம் பூகரியில் தங்கியிருந்த காலப் பகுதியில் பூநகரி ஆலடிப் பகுதியில் இருந்து கல்முனை வரையிலான 12 மைல் பிரதேசமே மேலாய்வுக்கு உட்படுத்தப் பட்டது. இது ஒடுங்கிய நிலப்பரப்பாகும். இதன் மத்தியில் உயர்ந்த மணற் குன்றுகளும் சிறிய பற்றைக் காடுகளும்



கைவிடப்பட்ட தென்னந்தோப்புக்களும் காணப்படுகின்றன. தெற்கே ஆழமான கடலும், வடக்கே பரவைக் கடலும் உள்ளது. இங்கு ஒரு சில குடும்பங்களே பரமன்கிராய், வெட்டுக்காடு, கௌதாரிமுனை, மண்ணித்தலை, கல்முனை ஆகிய கிராமங்களில் வசிக்கின்றன. மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய எந்த வசதிகளும் இல்லை. அவர்கள் தமக்குரிய உணவுப் பொருட்களை 12 மைலுக்கு அப்பால் உள்ள பூநகரி வாடியடிக்கு கால் நடையாகச் சென்றே வாங்கி வருகின்றனர். ஒழுங்கான வீதிகள் கிடையாது. எமக்கு தங்குவதற்கு இடமிருக்கவில்லை. ஒரு சிறு குடிசைக்கு அருகில் இருந்த கூரையற்ற இடிந்த கிறிஸ்தவ ஆலயமே எமக்கு இரவில் தங்கும் இருப்பிடமாக இருந்தது.

எமக்கு வேண்டிய உணவை மரநிழலின் கீழ் நாமே சமைத்து ஆய்வுக் குச் செல்லும் இடங்களுக்கு தலையில் சுமந்து சென்றோம். நல்ல நீர் கிடையாது. இதனால் எமக்குத் தேவையான நீரை நாமே கடற்கரையில் சிறு குழியேற்படுத்திப் பெற்றுக் கொண்டோம். இருப்பினும் இந்த அசௌகரியங்களுக்கு மத்தியில் நாம் மேற்கொண்ட கள ஆய்வுகள் எமக்குப் பூரணதிருப்தியை



அளித்தது. அவற்றால் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து ஐரோப்பியர் காலம் வரை இங்கு வாழ்ந்து மறைந்த மக்கள் கைவிட்ட அரிய பல சின்னங்களை எம்மால் சேகரிக்க முடிந்தது.

ஆய்வை முடித்து திரும்புவதற்கு முதல் நாள் மாதிரிக் குழி அமைத்து ஆய்வு செய்ய விரும்பினோம். அதற்குப் பொருத்தமான தொல்லியல் மையத்தை ஏழது


பேராசிரியர் புஷ்பரட்ணம் கல்முனைக் கிராமத்தில் உள்ள ஒரு இடத்தில் அடையாளப்படுத்தி இருந்தார். அந்த இடத்தில் 6 X 4 அடி நீள அகலத்தில் குழி அமைத்து ஆய்வு செய்தோம். அந்த ஆய்வின் போது ஆச்சரியப்படக்கூடிய வகையில் வரலாற்று உதய கால வரலாற்றுத் தொடக்க காலத்தைச் சேர்ந்த அரிய பல சான்றுகளைக் கண்டுபிடித் தோம். அதில் கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்கால மட்பாண்டங்கள், பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள், லக்ஷ்மி நாணயங்கள் என்பவற்றுடன் அதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நுண்கற்காலக் கற்கருவியொன்றும் கிடைத்தமை எமக்கு எல்லையற்ற மகிழ்ச்சியத் தந்தது.



**சாட்டி (வேலணை)**

குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் யாழ்ப்பாண நகருக்கு தென்மேற்கே ஆறு மைல் தொலைவில் உள்ள சாட்டிக் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ் வாய்வு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கடற் கரையை அண்டிய பிரதான வீதிக்கு வடக்கேயுள்ள மண்மேடுகள் பிறதேவைக்காக அகற்றப்பட்ட போது அங்குள்ள தொல்லியல் சின்னங்களை அவ தானித்த பேராசிரியர் புஷ்பரட்ணம் அந்த இடத்தை அகழ்வாய்வுக்குரிய மையங்களாகத் தேர்ந்தெடுத் தார். இந்த ஆய்வின் போது 30க்கு மேற்பட்ட தொல்லியல் மையங்கள் அடையாளம் காணப்பட்டு ஒன்பது இடங்களில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவை அனைத்தும் இறந்தவர்களுக்காக ஏறத்தாழ ஒரே வடிவத்தில் அமைக்கப்பட்ட ஈமச்சின்னங் களாகும். இவ்வீமச்சின்னங்களில் இருந்து கண்டு பிடிக்கப்பட்ட மனித மிருக எழும்புகள், கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்டங்கள்







பொலனறுவை பௌத்த ஆலயம்.



பண்டைய மக்கள் பயன்படுத்திய நீர் பெறும் மரக்கொட்டு.
வெற்றிலைக் கேணியில் சுனாமியால் வெளிவந்தது.



சுனாமியால் அழிவுற்ற வரலாற்றுப் பழமைவாய்ந்த
உடுத்துறை விநாயகர் ஆலயம்.




பூநகரி கள ஆய்வில் சேகரிக்கப்பட்ட
பெருங்கற்கால மணிகள்.



சுற்றுலாவில் பார்வையிட்ட பொலநறுவை சிவாலயம்.



சாட்டி அகழ்வாய்வில் ஈடுபடும் மணவ்கள்.



சாட்டி அகழ்வாய்வில் ஈடுபடும் மணவ்கள்.



சாட்டி அகழ்வாய்வில் ஈடுபடும் மணவ்கள்.

இரும்புக் கருவிகள் மிக அரிதாகக் கிடைத்த கல்மணிகள் என்பவற்றின் அடிப்படையில் இவற்றின் காலம் கிறிஸ்தவ சகாப்பத்திற்கு சற்று முற்பட்டதாக இருக்கலாம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இதை இங்கு கிடைத்த புராணாஷ் நாணயம், எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் மேலும் உறுதிப்படுத்தகின்றன. இங்கு கிடைத்த உரோம மட்பாண்டங்கள் பற்றி பின்னர் ஆய்வு செய்த தமிழகத்தின் முதன்மைத் தொல்லியலாளரான பேராசிரியர் வை.சுப்ப ராயலு தமிழகத்தில் அரிகமேட்டுக்குப் பின்னர் உரோம நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மட்பாண்டங்கள் சாட்டி அகழ்வாய்வில் மட்டும் கிடைத்திருப்பது இதன் காலத்தை மேலும் முற்பட்டதாக எடுத்துக் கொள்ளலாம் எனக் கூறுகிறார். நாம் அகழ்வுக்கு உட்படுத்திய தொல்லியல் மையங்கள் மிகக் குறுகிய ஆழத்தில் நீரால் சூழப்படுவதால் பல சந்தஉபங்களில் அகழ்வை இடையில் நிறுத்த நேரிட்டுள்ளது. எதிர்காலத்தில் அதற்குப் பொருத்தமான ஆகழ்வு முறையைக் பின்பற்றி மேற்கொள்ளப்படும் போது புதிய சான்றுகள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.




**சுனாமியும் தொல்லியல் மையங்களும் (யாழ்ப்பாணத்தில் இருந்து திரியாய் வரை).**

*26.12.2004* அன்று ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் ஆசிய நாடுகள் பலவற்றில் மீளமுடியாத பல அழிவுகளை ஏற் படுத்தியது. அதில் தொல்லியல் மையங்க ளும், வரலாற்றுப் பெறுமதியுடைய சின்னங் களும் தப்பவில்லை. அந்த அழிவுகளை மதிப்பிட விரும்பிய உலக தொல்லியல் பாதுகாப்ப அமைப்பு (ICOMS) பல் கலைக்கழக மானிய ஆணைக்குழு ஊடாக இலங்கையில் உள்ள பல்கலைக்கழக தொல்லியல் விரிவரையாளர்களை இணைப்பாளராக நியமித்து அவர்கள் ஊடாக தொல்லியல் மையங்களுக்கு ஏற்பட்ட சேதவிபரங்களை மதிப்பீடு செய்தது. இதற்கு எமது பல்கலைக் கழகத்தில் இருந்து பேராசிரியர் புஷ்பரட்ணம் இணைப்பாளராக நியமிக் கப்பட்டார். அவர் யாழ்ப்பாணத்தில் இருந்து திரியாய் வரை மேற்கொண்ட ஆய்வு பின்னர் மானிய ஆணைக் குழுவால் அறிக்கையாகப் பிரசுரிக்கப் பட்டது. இந்த மதிப்பீட்டில் தொல்லியல் மாணவர்களாகிய நாம் பேராசிரியர் புஷ்பரட்ணத்துடன் இணைந்து ஆய் வில் பங்குகொள்ள வாய்ப்பு கிடைத் தமை அதிஷ்டம் என்றே கூறலாம். இதன் மூலம் நாம்

அறிந்திராத முக்கிய தொல்லியல் மையங்களைக் கண்டறிய அரிய வாய்ப்பு கிடைத்தது. அதில் சுனாமியால் அழிவுற்ற வரலாற்றுப் பழமைவாய்ந்த ஆலயங்களையும், போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் கால நிர்வாக மையங்களையும் அவதானிக்க முடிந்ததுடன் கடற்கரை ஓரமாக இருந்த புராதன குடியிருப்பு மையங்களும் சுனாமியால் சீரழிக்கப்பட்டதைக் காணமுடிந்தது. இந்த இடங்கள் எதிர்காலத்தில் தொல்லியல் ஆய்வை மேற்கொள்ள ஒரு தரவாக அமைந்துள்ளது.

## தொல்லியல் வரலாற்றுச் சுற்றுலா




தொல்லியல் கற்கும் மாணவர்கள் குறைந்த பட்சம் இலங்கையில் உள்ள வரலாற்றுப் பழமை வாய்ந்த இடங்களையாவது நேரில் பார்த்திருப்பது அவசியமாகும். அந்த வாய்ப்பு 2005 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் எமக்கு கிடைத்தது. வரலாற்று இறுதிவருட மாணவர்களின் விடாத முயற்சியால் ஏற்படுத்தப்பட்ட இத்தொல்லியற் சுற்றுலாவில் தொல்லியல் மாணவர்களும் இணைந்து கொள்ள வாய்ப்பேற்பட்டது. பேராசிரியர் புஷ்பரட்ணத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட இச்சுற்றுலாவில் பேராசிரியர் கிருஷ்ணராஜா, விரிவுரையாளர் அருந்தவராசா மற்றும் போதனாசிரியர்கள் சிலரும் இணைந்து கொண்டனர். இச்சுற்றுலாவில் தொல்லியல், வரலாற்றுப் பழமையுடைய கந்தளாய், பொலநறுவை, தம்பள்ளை, நாளந்தா, கண்டி, நுவரேலியா, அநுராதபுரம், மிகிந்தலை, சிகிரியா, இசுறுமுனியா ஆகிய இடங்களில் உள்ள தொல்லியல் வரலாற்று மையங்கள், பௌத்த இந்து ஆலயங்கள், அருங்காட்சியகங்கள், தொல்லியல் அகழ்வாய்வுக்கு உட்படத்தப்பட்ட இடங்கள் என்பவற்றைப் பார்வையிட வாய்ப்பு கிடைத்தமை மகிழ்ச்சியான சம்பவங்களாகும்.

களஆய்வில் கற்ற அறிவு, அனுபவம், பயிற்சி அதற்கு அப்பால் கிடைத்த மகிழ்ச்சியான அனுபவங்களை இவ்விடத்தில் நினைவுபடுத்தும்போது அதற்கு



சாட்டி அகழ்வாய்வை பார்வையிடும்
பொதுமக்கள்.



சாட்டி பற்றிய தொலைக்காட்சி நேர்காணல்.
பேராசிரியர் சிவச்சந்திரன், பேராசிரியர் சிவசாமி,
மற்றும் ஏனையோர் பேட்டியளித்தல்.



ஊற்றுப்புலத்தில் மாணவிகள்
சமையலில் ஈடுபடும் காட்சி.



இரணைமடுவில் கண்டுபிடித்த
சுடுமண் உருவங்கள்.



கந்தரோடையில் உள்ள பௌத்த தூபி.



கந்தரோடையில் ஆய்வு நடைபெற்ற
இடங்களைப் பார்வையிடல்.



பேராசிரியர் கிருஸ்ணராஜா அகழ்வு
செய்த ஆய்வுக்குழி.



கந்தரோடை பாடசாலை மைதானத்தில்
சேகரித்த புராணாஸ், சங்க கால நாணய மணிகள்.

காரணமாக இருந்தவர்களயையும் இவ்விடத்தில் நன்றியுடன் நினைவுபடுத்துவது எமது கடமையாகும். அந்தவகையில் எமக்குத் தொல்லியல் கற்பதில் ஆர்வத்தை ஏற்படுத்தியவர்களுக்கும், அதை வகுப்பறையில் போதித்து எம்மைக் கள ஆய்வு செய்யதத் துாண்டிய ஆனைத்து ஆசிரியர்களுக்கும் முதற் கண் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இந்த கள ஆய்வை ஏற்படுத்திய பேராசிரியர் பஷ்பரட்ணம் மற்றும் பேராசிரியர் கிருஷ்ணராஜா தொல்லியல் ஆய்வு நெறிமுறைகளை நேரில் கண்டு கொள்ளச் செய்வதை நோக்காகக் கொண்டிருந்தாலும் அக்கள ஆய்வுகள் புதிய பல சான்றுகளைப் கண்டுபிடிக்க உதவியமை மாணவர்களாகிய எமக்குப் பெருமை



அளிப்பதாக இருந்தது. பெருநிலப் பரப்பிலும். சாட்டியிலும் மிகப்பெரிய அளவில் ஆய்வை மேற்கொண்டு அதில் குறிப்பிட்ட வெற்றியை அடையப் பேராசிரியர் புஷ்பரட்ணமே காரணகர்த்தாவாக இருந்தார். இத்தகைய ஒரு ஆய்வை முன்னெடுக்க அரச அனுதியுடன் வேண்டிய உபகரணங்களையும், நிதியையும் வழங்கியதுடன் பல தடவை ஆய்வு நடைபெற்ற சாட்டிக்கு வந்து நீண்ட நேரம் அவற்றைப் பார்வையிட்ட முன்னாள் அரச அதிபர் செ.பத்மநாதனையும் சக அதிகாரிகளையும் என்றும் மறக்க முடியாது. மேலும் சாட்டி அகழ்வாய்வின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கு வேண்டிய நிதியைப் பல்கலைக்கழகத்தில் பெறக்காரணமான முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும் எங்கள் நன்றிக்குரியவர்கள். இறுதியாக எமக்கு கிடைத்த அனுபவங்களும் பயிற்சியும் எதிர்வரும் காலத்தில் தொல்லியல் கற்கும் ஏனைய மாணவர்களுக்கும் கிடைக் வேண்டும் என்பதே எங்கள் விருப்பமாகும்.

**தொல்லியல் மாணவர்கள்**

**தொல்லியல் ஆய்வு வட்டம்**


# சங்க காலத்தில் சேரநாட்டு வணிகன் கிரேக்க நாட்டு வணிகனுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் பற்றிய அரிய ஆவணம்

*ப.புஷ்பரட்ணம்*
*வரலாற்றுத்துறை*


கடந்த பத்தாண்டு காலப்பகுதியில் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் சங்ககாலம் பற்றிய ஆய்வுகளுக்குப் புதுவெளிச்சமூட்டுபவையாக உள்ளன. இவை சங்க இலக்கியத்தை முதன்மைச் சான்றுகளாகக் கொண்டு இதுவரை எழுந்த ஆய்வுகளை மீள்வாசிப்பிற்கு உட்படுத்த பெரிதும் உதவியுள்ளன. அவற்றுள் தமிழகத்திற்கும் பிற நாடுகளுக்கும் இடையிலான வணிக உறவு பற்றிய அறிஞர்களின் முன்னைய கருத்துக்களை மீளாய்வு செய்யப் பெரிதும் உதவியுள்ளன. சங்க இலக்கியத்தில் வரும் சில வரலாற்றுக் குறிப்புக்கள் தமிழகம் மேற்காசிய நாடுகளுடனும், கீழைநாடுகளுடனும் வணிக உறவு கொண்டிருந்ததை நேரடியாகவும், மறைமுகமாகவும் சுட்டிக்காட்டுகின்றன. இக்குறிப்புக்களை தமிழ் அறிஞர்களில் சிலர் தமிழகம் கடல்கடந்த நாடுகளுடன் ஏற்படுத்திய உறவுகளுக்குரிய ஆதாரங்களாகப் பார்க்காது ஐவகை நிலப்பிரிவுகளுக்கிடையே நடந்த உறவுகளுக்குரிய சான்றுகளாகவே நோக்கினர். இதற்கு தமிழகத்தின் இயற்கை எல்லையைத் தாண்டி கடல்சார் வணிக உறவுகளை ஏற்படுத்தும் அளவுக்கு சங்ககாலத்தில் பலமான அரச உருவாக்கம் நிகழவில்லை என்பதே இவர்கள் தரும் விளக்கமாகும். ஆனால் சமீப காலத்தில் மேற்கே செங்கடற்பகுதியிலும், கிழக்காசியாவில் யப்பான், தென்சீனம் மற்றும் தென்கிழக்காசியவில் தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் வணிகர்கள் இந்நாடுகளுக்குச் சென்று வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதை உறுதிபடுத்துகின்றன. இச்சான்றுகள் சங்க இலக்கியத்தில் அரிதாக வரும் சில குறிப்புக்களை உறுதிப்படுத்துவதுடன் அதில் சொல்லப்படாத பல புதிய தரவுகளையும் தந்துதவுகின்றன. அதற்கு மேலும் ஒரு முக்கிய சான்றாக கிடைத்திருப்பதே முசிறி அலெக்ஸாண்டிரிய வணிக ஒப்பந்தம் பற்றிய ஆவணமாகும்.

சங்க இலக்கியத்தில் வரும் குறிப்புக்கள் பிறநாட்டு வணிகர்கள் குறிப்பாக உரோம நாட்டு வணிகர்கள் தமிழகம் வந்து சென்றது பற்றியே பெரும்பாலும் குறிப்பிடுகின்றன. ஆனால் தொல்லியற் சான்றுகள் இதற்கு மாறாக இருநாடுகளுக்கு மிடையே இருந்த இருபக்க உறவு பற்றி அதிகமாகப் பேசுகின்றன. 1990 காலப்பகுதியில் செங்கடலின் கரையோரப்பகுதியில் உள்ள வரலாற்றுப் பழைமை வாய்ந்த பெனிக்கே துறைமுகத்திற்கு வடக்கில் உள்ள க்வெஸிர் அல்-காதிம் (Quseir al-Qadim) என்ற

இடத்தில் அமைந்துள்ள பண்டைய உரோமானியத் துறைமுகத்தை அகழ்வு செய்தபோது அங்கு தமிழ கத்திலிருந்து கொண்டுவரப்பட்ட மட்பாண்டங்க ளுடன் தமிழ்ப் பிராமி எழுத்தில் அமைந்த கணன் (கண்ணன் - படம்.1), சாதன் (சாத்தன் - படம்.2) என்ற பெயர் பொறித்த இரு மட்பாண்டச் சாசனங்களும் கண்டறியப்பட்டன. இவற்றின் காலம் கி.பி.1ஆம் நூற்றாண்டெனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இம்மட் பாண்டங்களில் பொறிக்கப்பட்ட இரு பெயர்களும் தமிழகத்தில் அரிக்கமேட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது கிடைத்த இதே காலகட்டத்தைச் சேர்ந்த மட்பாண்டங்களிலும் காணப்பட்டுள்ள்மை இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது ( மகாதேவன்.ஐ 1998:17-18).





படம்.1



படம்.2

உரோமானியரின் பண்டைய துறைமுகமான பெர்னிகே என்ற இடத்தில் 1994-95 காலப்பகுதியில் டெலாவோர் (Delaware) பல்கலைக்கழகமும், லெய்டன் (Leiden) பல்கலைக்கழகமும் இணைந்து பேராசிரியர் ஸ்டிவன் ஸைட்பாதம் (Steven Sidebotham) தலைமையில் மேற்கொண்ட அகழ்வின்போது கிடைத்த உரோமா னிய மதுச்சாடியில் தமிழ்மொழியில், தமிழ் பிராமி எழுத்தில் அமைந்த வாசகம் கண்டறியப்பட்டுள்ளது. இதன் வாசகத்தை தமிழகத்தின் முதன்மைச் சாசனவியலாளரான ஐராவதம் மகாதேவன் கொற்பூமான் (கொற்றப்பூமான்) (படம்.3) என வாசித்துள்ளார். இதில் வரும் கொற்றன் என்ற பெயர் தமிழகத்தில் உள்ள கொற்றந்தை, புகளூர்ப் பிராமிக் கல்வெட்டுக்களில் வருகின்றன. பூமான் என்ற சொல் அரசன் என்ற பெயர் தரும் வடமொழிச் சொல்லாகும். இம்மட்பாண்டச் சாசனத்துடன் கிடைத்த உரோ மானிய நாணயங்கள், உரோம மதுச்சாடியின் அமைப்பு என்பவற்றின் அடிப்படையில் இச்சாசனம் கி.பி.40 ஆம் ஆண்டைச் சேர்ந்ததெனக் கணிப்பிடப் பட்டுள்ளது. இந்த அகழ்வாய்வில் பங்கெடுத்த ரோபர்ட் தேசமராபவர் என்ற தொல்லியலாளர் அண்மையில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் வந்த போது






படம்.3

***** *****

பெர்னிகேயில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் தமிழகத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட கறுப்பு மிளகு மட்பாண்டங்களில் சேமித்து வைக்கப்பட்டதற்கான ஆதாரங்களும் கிடைத்திருப்பதாகக் கூறியிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. இவ்வாதாரங்களின் அடிப்படையில் சங்க காலத்தில் தமிழகத்திற்கும் உரோமாபுரிக்கும் இடையே செழிப்பான கடல் வாணிபம் இருந்தமை தெரிகிறது. இதை மேலும் விரிவுபடுத்திக் கூறுவதில் முசிறி அலெக்ஸாண்டிரியா வணிக ஒப்பந்தம் பற்றிய ஆவணம் மேலும் முக்கியத்தவம் பெறுகிறது.

இவ்வரிய ஆவணம் ஆஸ்டிரிய நாட்டுத் தலைநகரான வியன்னாவில் உள்ள அருங்காட்சியகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இது பேபிரஸ் (papyrus) தாளில் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதியாகும். கி.பி.150ஆம் ஆண்டைச் சேர்ந்த இச்சுவடி தமிழகத்தில் சேரநாட்டுத் துறைமுகமான முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகனுக்கும் எகிப்து நாட்டு நைல்நதி முகத்துவாரத்தில் உள்ள அலெக்ஸாண்டிரியா எனப்படும் உரோம நாட்டுத் துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகன் ஒருவனுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட வணிக ஒப்பந்தம் பற்றிக் கூறுகிறது (Harraur and Sijpesteiju 1985:124-155). இக்காகிதச் சுவடியின் இரு பக்கங்களிலும் கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளது. அதில் தமிழ்நாட்டு வணிகன் கிரேக்க மொழியில் கையொப்ப மிட்டுள்ளான். இது தமிழ்நாட்டு வணிகன் கிரேக்க மொழியை அறிந்திருந்தான் என்பதைக் காட்டுகிறது. இருப்பினும் கையொப்பம் இடப்பட்ட பகுதி சிதைவடைந்து இருப்பதால் வணிகனின் பெயரைச் சரிவர வாசிக்க முடியவில்லை.



ஆவணத்தின் முன்பக்கத்தில் தமிழகத்தில் இருந்து எற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு அளிக்கவேண்டிய பாதுகாப்பு பற்றியும், ஆவணத்தின் பின்பக்கத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் அளவு பற்றியும் குறிப்பிடப்படுகின்றது. பாதுகாப்பு பற்றிய விபரத்தில் மத்தியதரைக் கடல் பகுதியில் உள்ள நைல்நதி முகத்துவாரத்திலுள்ள அலெக் ஸாண்டிரியா நகரை அடையும் வரை பொருட்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கேஸன் என்பவரது கருத்துப்படி தமிழகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் செங்கடற் பகுதியில்

*****

வந்திறங்கியதன் பின்னரே இவ்வொப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறுகிறார். ஏனெனில் இவ்வொப்பந்தத்தில் இப்பொருட்கள் செங்கடல் துறைமுகம் வந்தடைந்ததும் அவை கழுதையின் மேல் ஏற்றப்பட்டு கிழக்குச் சகாராப் பாலைவனத்தினுடாக நைல்நதிக் கரையில் அமைந்துள்ள பண்டைய கேப்டஸ்னை (Ancient Copotos) அடைவதையும், பின்னர் அவை அங்கிருந்து படகுகளில் ஏற்றப்பட்டு நைல்நதி வழியாக அதன் கரையில் அமைந்துள்ள அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தை அடைவதாகவும் அங்கு சுங்கவரி செலுத்தப்பட்டவுடன் இப்பொருட் களுக்கு அளிக்கப்பட்ட ஒப்பந்தம் முடிவடைவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் இங்கிருந்து அப்பொருட்கள் மத்தியதரைக் கடல் வழியாக உரோம நாட்டை அடைவதற்கு இன்னொரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்க வேண்டும் என அவர் மேலும் கூறுகின்றார்.

ஆவணத்தின் பின்பக்கத்தில் ஹெர்மபோலன் (Herkapolan) எனப் பெயரிடப்பட்ட கப்பலில் எடுத்துவரப்பட்ட ஆறு பொதிகள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. ஆனால் மூன்று பொதிகள் பற்றிய குறிப்புக்கள் உள்ள ஆவணத்தின் பகுதி சிதைவடைந்து விட்டதால் எஞ்சியுள்ள மூன்று பொதிகளில் இருந்த பொருட்கள் பற்றி விபரத்தையே அறிய முடிகிறது. இந்த ஆறு பொதிகளின் நிறை 1154 தோலனும் (talents) 2852 திரமமும் (drachmas) ஆகும். இந்தப் பொருட்களின் மதிப்பானது அலெக்ஸாண்டி ரியாவில் ஒரு நீர்வழிச்சாலையை (aqueduct) அமைப்பதற்கு ஈடான தென்ற குறிப்பு வருவதால் இதன் மதிப்பு ஏழு மில்லியன் திரமம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு திரமம் என்பது 65 குன்று மணிகளுக்கு ஈடானது. ஒரு குன்று மணியென்பது 0.0648 கிராம் வெள்ளிக்குச் சமனானது. ஆகவே ஏழு மில்லியன் திரமம் என்றால் அது 29484000 கிராம் வெள்ளியின் எடைக்குச் சமனாகும். ஒரு வெள்ளியின் விலை பத்து ரூபாய் எனக் கொண்டால் தற்போதைய நாணயப் பெறுமதியில் கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்ட பொருட்களின் பெறுமதி முப்பது கோடி ரூபாவுக்கு ஈடானதெனக் கணிப்பிடமுடிகிறது (இராஜன் 2004 :89-90). இப்பொருட்கள் கொண்டு செல்லப்பட்ட பொதிகளின் பெறுமதியை ஆய்வு செய்த கேஸன் அதன் பெறுமதி நைல்நதியின் பாசனப்பிடிப்பு பகுதியில் 2400 ஏக்கர் வளமான நிலத்தை வாங்குவதற்கு ஈடானது எனக் குறிப்பிடுகிறார்.

இவ்வணிக ஒப்பந்த ஆவணம் பற்றி அண்மையில் மேலும் ஆய்வு செய்த எச்.ஹராவர் (H.Harvauer), பி. சிஜ்யெஸ்தேஜின் (P.Sijpesteijn), ஜி. துார் (G.Thur), எல். கேஸன் (L.Casson) போன்றோர் ஆவணத்தில் கூறப்பட்டிருக்கும் விபரங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வணிக ஒப்பந்தம் தொடர்பாக இன்னொரு ஆவணமும் இருந்திருக்கவேண்டும் எனவும், அது பெரும்பாலும் தமிழில் எழுதப்பட்டிருக்க வேண்டும்

எனவும் கூறியுள்ளனர். அந்த ஆவணத்தில் தமிழ் வணிகனுக்கும் கப்பல் சொந்தக்கார னுக்கும் இடையே முசிறித் துறைமுகத்தில் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப் பட்டிருக்க வேண்டும் எனவும், அவ்வொப்பந்தத்தில் கப்பல் சொந்தக்கார வணிகனுடன் ஏற்றுமதிப் பொருட்களைக் காப்பீடாக வைத்துச் செய்துகொண்ட கடன் ஒப்பந்தமாக இருக்க வேண்டும் எனவும் மேலும் அவகள் கூறுகின்றனர். இந்த கடன் ஒப்பந்தத்தின்படி கப்பல் சொந்தக்காரர் ஏற்றுமதிப் பொருட்கள் அலெக்ஸான்டிரியாவை அடையும்வரை வணிகனின் முத்திரையைப் பயன்படுதிக்கொள்ளும் உரிமையைப் பெற்றிருக்க வேண் டும் எனவும் கருதுகின்றனர் (Casson *2001:228-243*). இவ்வொப்பந்தம் கிடைத்திருக்குமானால் தமிழ் வணிக சமூகத்தின் உருவாக்கம் பற்றிய பல உண்மைகள் வெளிவந்திருக்கும் எனக் கருத இடமுண்டு.

இருப்பினும் கிடைத்துள்ள ஆவணம் சங்ககால கடல்சார் வர்த்தகத்தால் ஏற்பட்ட தமிழக மற்றும் இலங்கையின் பொருளாதாரச் செழிப்பு, அரச உருவாக்கம் பற்றிய ஆய்வுகளில் முக்கிய மூலாதாரமாக இடம்பெற்றுள்ளதென்பதில் ஐயமில்லை. தமிழக, இலங்கை அரச உருவாக்கம் பற்றி ஆய்வு செய்த பேராசிரியர். ஆர். செம்பகலஷ்மி, பேராசிரியர். சுதர்சன் செனிவரட்னா போன்ற அறிஞர்கள் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் ஏற்பட்ட நீர்ப்பாசன விவசாயமும், மிகை உற்பத்தியுமே இந்நாடுக ளின் அரச உருவாக்கத்திற்கு அடிப்படையாக இருந்ததெனக் கூறுகின்றனர். ஆனால் பேராசிரியர் இராஜன் சமீபகாலத் தொல்லியற் கண்டுபிடிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு தமிழகத்தின் மேற்குப் பகுதியில் குறிப்பாகச் சேரநாட்டுப் பகுதியில் அரச உருவாக்கம் நிகழ்ந்ததற்கு உரோமப் பேரரசுடன் தமிழகம் கொண்டிருந்த வணிகத் தொடர்பே முக்கிய காரணம் எனக் குறிப்பிடுகிறார் (Rajan 2002: 83-95). இக்கூற்று ஓரளவுக்கு தமிழகத்தின் கிழக்குப் பகுதிக்கு சிறப்பாக இலங்கைக்குப் பொருத்தமாக இருக்கும் எனக் கருதலாம். ஏனெனில் தமிழக நாகரிகம் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வளர்ந்ததற்கும், இலங்கை நாகரிகம் வடக்கில் இருந்து தெற்கு நோக்கிப் பரவியதற்கும் வடமேற்கு இலங்கையையும் பாண்டி நாட்டையையும் மையமாகக் கொண்டு நடந்த முத்து, சங்கு குளித்தல் போன்ற கடற் கனிமங்களின் வர்த்தகம் ஒரு முக்கிய காரணமாகும். இவற்றின் காரணமாகவே உரோம நாட்டு வணிகர்கள் காலப்போக்கில் இவ்விடங்களுக்கு வருகை தந்தனர். இதைத் தென் தமிழகத்திலும் இலங்கையிலும் குறிப்பாக வடஇலங்கையின் கடற்கரை சார்ந்த வட்டாரங்களிலும் (மாதோட்டம், பூநகரி, கந்தரோடை) கண்டுபிடிக்கப்பட்ட உரோமர் கால நாணயங்கள் உரோம ஆபரணங்கள், ஆம்பாரா என அழைக்கப்படும் மதுச் சாடிகள் மற்றும் அரிடைன் ரௌலெட்டட் பானை ஓடுகள் என்பன உறுதிப்படுத்துகின்றன.

உரோம வணிகர்கள் தமிழகம் மற்றும் இலங்கையுடன் ஏற்படுத்தியிருந்த வர்த்தக


உறவு பற்றி கி.பி.1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிளினி, தொலமி போன்ற யாத்திரிகர்கள் தமது பயணக் குறிப்புக்களில் சுட்டிக்காட்டியுள்ளனர். அதில் கி.பி.1ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் உரோமர் இலங்கைக்கு வராமலே இலங்கைப் பொருட்களைத் தென்னிந்தியத் துறைமுகங்களில் பெற்றதாகவும், அதேபோல் இலங்கை வர்த்தகர்களும் தமக்குத் தேவையான உரோம நாட்டுப் பொருட்களைத் தென்னிந்தியத் துறைமுகங்களில் பெற்றுத் திருப்தியடைந்ததாகவும் குறிப்பிடுகின்றனர். இக் கூற்று உரோம நாட்டுடனான இலங்கையின் ஆரம்பகால வர்த்தகம் முதலில் தமிழகத்தின் ஒரு பகுதியாக நடைபெற்றதை உறுதிப்படுத்துகிறது. இந்த வர்த்தகத்தால் ஒரு ஆண்டில் மட்டும் 100 மில்லியனுக்கு மேலான செளஸ்டரஸ்ரை (Seserrces) இந்தியர், சேரர், அரேபியர் விழுங்கிவிடுவதாக பிளினி தனது நூலில் குறிப்பிடுகிறார். இக்கூற்று இந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் உரோம நாட்டு வர்த்தகம் பெற்ற முக்கியத்துவத்தைக் காட்டுவதாக உள்ளது (Piliny XII-84: Warmington *1995:274).*

பேராசிரியர் இராஜன் தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட உரோம நாட்டுத் தொல்லியற் சின்னங்களை அடிப்படையாக வைத்து உரோம நாட்டு வணிகர்கள் தமிழ்நாட்டு வர்த்தகத்தில் நேரில் ஈடுபடத் தொடங்கிய காலங்களையும், இடங்களையும் கணிப்பீடு செய்துள்ளார். அவற்றின் அடிப்படையில் தமிழகத்தில் மேற்குப் பகுதியில் அமைந்த சேரநாட்டுப் பகுதியிலேயே உரோமர் முதலில் வர்த்தகத்தில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. ஏனெனில் உரோமநாட்டின் காலத்தால் முந்திய தொல்லியற் சின்னங்கள் இங்குதான் அதிகமாகக் கிடைத்துள்ளன. அவை அரிதாகவே தமிழகத்தின் கிழக்குப் பகுதிகளிலும், இலங்கையிலும் கிடைத்து வருகின்றன. அத்துடன் இந்தியாவில் கிடைத்த மொத்த உரோம நாணயங்களில் 90 விழுக்காடு நாணயங்கள் அதிலும் காலத்தால் முந்திய (கி.மு.1ஆம் நூற்றாண்டு) நாணயங்கள் மேற்குத் தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து இது மேலும் தெளிவாகிறது. இதன் பின்னரே உரோமர் படிப்படியாக கிழக்குத் தமிழகத்திற்கும், இலங்கைக்கும் சென்று அங்கிருந்து தென்கிழக்காசியா மற்றும் கிழக்காசியா நாடுகளுக்கு சென்றதாகத் தெரிகிறது (Rajan, K., 2002, 83-95).

இதில் இலங்கையின் அமைவிடம் மேற்கு நாடுகளையும், கிழக்கு நாடுகளையும் இணைக்கும் வர்த்தகப் பரிமாற்று மையத்தில் இருப்பதால் உரோம வர்த்தகர்கள் இலங்கை ஊடாகவே கீழை நாடுகளுக்குச் சென்றிருக்க வேண்டும். இது தொடர்பாக மும்பை பல்கலைக்கழக முன்னாள் நிலவியல் பேராசிரியர் பி.அருணாசலம் கருத்து தெரிவிக்கையில் "வணிகர்கள் தமிழகத்தின் கீழைக்கடற்கரைத் துறைமுகங்களில் இருந்து இலங்கையின் கீழைக்கடற்கரைத் துறைமுகங்களுக்குச் சென்று அங்கிருந்து பத்து டிகிரி நீரோட்டம் ($10^0$ Channel) என்றழைக்கப்படும் இயற்கையாக உருவான

*****                *****

நீரோட்டத்தின் வழியாக குறைந்த மனித சக்தியைப் பயன்படுத்தி நேராகத் தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா, பாலி, வியட்நாம் ஆகிய நாடுகள் வரை தமது வணிகத்தை




உரோமர் காலத்து முக்கிய தொல்லியல் மையங்கள்

மேற்கொண்டனர் எனக் கூறுகிறார். (இராஜன் 2004:100).


எனவே மேற்கூறப்பட்ட வணிக ஒப்பந்தம் பற்றிய ஆவணத்தை தனித்து சேர நாட்டோடு உரோமாபுரிக்கு இருந்த வணிக உறவுக்குரிய ஆதாரமாக மட்டும் பார்க்காது சமகாலத்தில் கீழைநாடுகளுடன் உரோமர் கொண்டிருந்த நெருக்கமான வணிக உறவுகளுக்கு கிடைத்த புதிய ஆதாரமாகவும் பார்ப்பது பொருத்தமாகும். அதில் இலங்கை தமிழகத்துடன் இணைந்தும், தனித்தும் உரோம நாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்பதற்குரிய அண்மைக்காலத் தொல்லியற் கண்டுபிடிப்புக்களையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும். உரோமர் இலங்கையுடன் ஏற்படுத்தியிருந்த ஆரம்பகால வர்த்தகம் தமிழகத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. இதைக் கிரேக்க, உரோம இலக்கியங்கள் மட்டுமன்றி சமகால இலங்கை வரலாறு கூறும் பாளி இலக்கியங்களும், பிராமிக் கல்வெட்டுக்களும் மறைமுகமாச் சுட்டுகின்றன.

மகாவம்சத்தில் இலங்கை வணிகர்கள் கடல்சார் வர்த்தகத்தில் ஈடுபட்டது பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன. அதை உறுதிப்படுத்தும் சாசன ஆதாரங்கள் சில அண்மைக்காலத்தில் தமிழகத்தில் அரிக்கமேடு, அழகன்குளம், கொடுமணல் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அநுராதபுரம், பெரியபுளியங்குளம், குடுவில் போன்ற இடங்களில்

கண்டுபிடிக்கப்பட்ட கி.மு.2-1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுக்கள் இலங்கைத் தமிழர்கள் ஒரு குழுவாக இணைந்து வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டது பற்றிக் கூறுகின்றன (Paranavithane 1970: nos.94,). அண்மையில் தென்னிலங்கையில் கிடைத்த கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ்நாணயம் ஒன்று இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் குழுவாக வணிகத்தில் ஈடுபட்டதற்கு முக்கிய ஆதாரமாகக் கிடைத்துள்ளது. (படம் - 5). அந்நாணயத்தில் தமிழ்மொழியில். தமிழ்ப்பிராமி எழுத்தில் மகாசாத்தன் என்ற தமிழ்ப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது(Pushparatnam 2001: 75-80). அதில் வரும் சாத்தன் என்ற பெயர் வணிகக் குழுவைக் குறிப்பதாகும். இது சாத்து என்ற வட மொழிச் சொல்லின் தமிழ் வடிவமாகும் (இராஜன்2004:99). ஏறத்தாழ இந்நாணயத்தின் சம காலத்திற்குரிய 21 பிராமிக் கல்வெட்டுகள் இலங்கையில் வாழ்ந்த பரதவ சமூகம் பற்றிக் கூறுகின்றன (Maloney 1969: 224-240, Seneviratne 1985:49-56). அக்கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை வட, வடமேற்கு இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்டவையாகும். இச்சமூகத்திற்குரிய பலர் கப்பல் தலைவர்களாகவும், குதிரை வணிகர்களாகவும், வெளிநாட்டுத் தூதுவர்களாகவும், வரி அறிவிடுவோராகவும் இருந்தாக அக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அத்துடன் அவர்கள் பயன்படுத்திய படகு, தோணி, நாவாய் பற்றிய பல குறிப்புக்களும் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன (Paranavithane 1970: nos. 127, 149, 786, 792, 1174). இவர்கள் கடல்சார் வர்த்தகத்தால் இலங்கையில் செல்வாக்குடைய சமூகங்களில் ஒன்றாக எழுச்சி பெற்றிருக்கலாம் என்பதை அச்சமூகத்தின் பெயரால் வெளியிடப்பட்ட நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன. அண்மையில் தென்னிலங்கையில் கிடைத்த கி.மு.2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாணயம் ஒன்றில் "பரதவ" என்ற பெயரோடு அவர்களின் கடல் தொழிலைக் குறிக்கும் மீன் சின்னமும் அதில் பொறிக்கப்பட்டிருப்பது இதற்குச் சிறந்த சான்றாகும் (Bopearachchi 1999: 53, Pushparatnam, P. 2001: 75-80) (படம்-6).



படம் -5




படம் -6


தமிழகத்தில் சங்ககாலம் தொட்டு நாணயங்கள் வெளியிடும் மரபு காணப் படுகிறது. ஆனால் அங்கு அரசனைத் தவிர வணிகர் நாணயங்கள் வெளியிட்டதற்கு இதுவரை சான்றுகள் கிடைக்கவில்லை (இராஜன் 2004:99). ஆனால் சமகால இலங்கையில் தமிழ் அரசர்கள் மட்டுமன்றி வணிகர்களும் நாணயங்களை வெளி

யிட்டுள்ளனர் என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. இது அக்கால சமூகத்தில் வணிகர்கள் பொருளாதார வளமும், சமூக அந்தஸ்தும் பெற்றவர்களாக இருந்தமை காரணமாக இருக்கலாம்.

மேற்கூறப்பட்ட வணிக ஒப்பந்தத்தில் முசிறியில் இருந்து செங்கடல் வரை பொருட்களை ஏற்றிச் சென்ற கப்பலின் பெயரை "ஹெர்மபோலன்" எனக் குறிப்பிடப்படுகிறது. இது சமகாலத்தில் உரோமர் பயன்படுத்திய கப்பல்களில் சிறிய வகையைச் சார்ந்ததாகும். இதைவிட அதிக பொருட்களை ஏற்றிச் செல்லக் கூடிய மிகப் பெரிய கப்பல்களை உரோமர் கீழைநாடுகளில் பயண்படுத்தியதற்கு ஆதாரங்கள் உண்டு. அண்மையில் தமிழகத்தில் அழகன்குளம் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் உரோமர் பயன்படுத்திய கப்பலின் உருவம் ஒன்று மட்பாண்டத்தில் கோட்டுருவமாக வரையப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது( Rajan 2002: 83-95) (படம் -7). ஏறத்தாழ இதன் சமகாலத்திற்குரிய இலங்கைப் பிராமிக் கல்வெட்டில் பரதவ சமூகம் கடல்சார் வர்த்தகத்தில் ஈடுபட்டதைக் கூறுவதுடன் அவர்கள் பயன்படுத்திய கப்பலின் உருவமும் அக்கல்வெட்டின் முகப்பில் கோட்டுருவமாக வரையப்பட்டுள்ளது (Paranavithana 1970:no.270) (படம் - 8). இதன் வடிவம் உரோம வணிகர் பயன்படுத்திய பெரிய கப்பல் வகையைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. இவற்றில் இருந்து மேற்படி ஆவணத்தில் கூறப்பட்ட கப்பலைவிட மிகப்பெரிய கப்பல்களில் இந்நாடுகளிலிருந்து அதிகளவு பொருட்கள் உரோமப் பேரசுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கலாம் எனக்கருதஇடமுண்டு. இதனால் இவ்வாவணத்தால் அறியப்படும் வணிக ஒப்பந்தம் இரு நாட்டு வணிகர்களுடன் தொடர்புடையதாக இருப்பினும் அதற்குள் பல நாட்டு உற்பத்திப் பொருட்களும், பல நாட்டு வணிகர்களின் ஈடுபாடும் அந்நாடுகளின் பொருளாதார பண்பாட்டு வளங்களும், மாற்றங்களும் அடங்கியிருப்பதையும் புறக்கணித்துவிட முடியாது.



படம் - 7



படம் - 8

***** *****

**உசாத்துணை நூல்கள்**


- Cason, C., 2001, "New Light on maritime Lons P.Vinob G 40822" Ranabir Chakravarti (ed), ***Trade in Early India***, Oxford University Press, New Delhi.

- Mahadevan, Iravatham., 2003, ***Early Tamil Epigraphy From the Earliest Times to the Sixth Century AD***, Harvard University, Harvard.

- Maloney, C., 1969, The Parathavar: 2000 Years of Culture Dynamic of a Tamil Caste" ***Man in India,*** Vol. 49 (I), pp.224-240.

- Paranavithane, S., 1970 , ***Inscription of Ceylon: Early Brahmi Inscriptions***, Colombo.

- Pushparatnam, P., 2001, "Ships in Maritime Trade of Ancient Sri Lanka: Some Archaeological Evidences" ***Push***, Pondichery Journal of Social Science and Humanities, Volume 2, Number 1&2, Pondichery, pp:75-80.

- Pushparatnam, P., 2001, "Parathava Society as Gleaned from Sri Lankan Brahmi Inscriptions" ***Studies in Indian Epigraphy***, Volume. XXVII, Maysore,:119-129.

- Rajan, K., 2002, "Maritime Trade in Early Historic Tamil Nadu," ***Man and Environment***, Journal of the Indian Society for Prehistoric and Quaternary Studies, Volume XXVII, Number 1, Special Volume Indian Ocean in Antiquity, pp:83-95.

- Seneviratne, Sutharsan, 1985, The Baratas: A Case Study of Community Integration in Early Historic Sri Lanka" A.R.B.Amerasinghe (ed), ***Festschrift James Thevathasan Ratnam***, Colombo, pp.49-56.
- இராசன்,கா., 2004, தொல்லியல் நோக்கில் சங்ககாலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
- மகாதேவன், ஐராவதம்., 1998, "எகிப்து நாட்டில் தமிழில் எழுதிய தாழி" ஆவணம், தமிழகத் தொல்லியற் கழகம், இதழ் 9, தஞ்சாவூர், பக்.17–18.


***** *****

# தமிழகம் வேதாரண்யம் கோயிலில் யாழ்ப்பாணத்தார் கல்வெட்டுக்கள்

*கலாநிதி வ.மகேஸ்வரன்*
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*தமிழ்த்துறை*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

சோழ மண்டலச் திருத்தலங்களுள் சிறப்புப் பெற்றது வேதாரண்யம் வேதாரண யேசுவரர் திருக்கோயிவாகும். பல்லவர் கால நாயன்மர்களான அப்பரும், சம்பந்தரும் இக்கோயில் கதவுகள் திறக்க பதிகம் பாடினார் என்று பெரியபுராணம் குறிப்படுகின்றது. அகச்சான்றுகளாக இதனைத் தேவாரங்களும் உறுதிசெய்கின்றன. இதன் பின்னர் சோழப்பேரரசர், விஜயநகரப்பேரரசர், தஞ்சை மராட்டிய மன்னர் முதலியோரது காலங்களிலும் இக்கோயில் சிறப்புடன் விளங்கியுள்ளது. கோயில் கருவறைச் சுவர்களிலும் தூண்களிலும் சுற்றாலைச் சுவர்களிலும் காணப்படும் பல கல்வெட்டுக்கள் இதன் சோழர் கால வரலாற்றுச் சிறப்பை உணர்த்துகின்றன.

மேற்படி கோயிலுடன் ஈழநாட்டு யாழ்பாணத்துக்குத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன. யாழ்ப்பாணத்தவரது முக்கிய யாத்திரைத் தலங்களாகத் தமிழகத்தின் சிதம்பரமும், வேதாரண்யமும் விளங்கி வந்துள்ளன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்துக்கு முன்பிருந்தே இத்தொடர்பு நிலவி இருக்கவேண்டும். 18ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்து நல்லூரில் வாழ்ந்த சின்னத்தம்பிப் புலவர் வேதாரண்யம் கோயில் மீது மறைசை அந்தாதி என்னும் என்னும் இலக்கியம் ஒன்றைப் பாடியுள்ளார். வேதாரண்யத்தில் வரணி ஆதீனம் என்னும் மடாலயம் ஒன்று உண்டு. இது 550 வருடங்களுக்கு முற்பட்டது என்று குறிப்பிடப்படுகிறது. யாழ்ப்பாணத்துத் தென்மராட்சிப் பகுதியில் வரணி என்ற ஊரில் வாழ்ந்த தில்லைநாயகத்தம்பிரான் என்பவர் இதனை நிறுவினார் எனக் குறிப்பிடப் படுகிறது. யாழ்ப்பாணத்து கரணவாய் என்ற இடத்தில் வரணி ஆதீனம் நிறுவப்பட்டு அது பின்னர் வேதாரண்யத்திற்கு மாற்றப்பட்டது என்றும் குறிப்பிடப்படுகிறது. இதனுடைய 19வது சந்நிதானம் கதிர்காமப்பண்டாரச்சந்நிதி என்பவர் ஆவர். 20வது சந்நிதானம் செவ்வந்தி நாதபண்டாரச்சந்நிதி ஆவார். தற்போது பொன்னையா பண்டாரச்சந்நிதி என்பவர் இவ் ஆதீனத்தின் தலைவராக உள்ளார். செவ்வந்திநாதபண்டாரச் சந்நிதிகள் காலத்திலேயே இக்கோயில் புனருத்தாரன வேலைகள் நடைபெற்றிருக்க வேண்டும். இதனால் யாழ்ப்பானத்தவர் பலர் இக்கோயிலின் திருப்பணியில் பங்குகொண்டனர்.

வரணியில் குருக்கள் குடியிருப்பு என்ற பகுதி உண்டு. இங்கு பெரும்பாலும் வீரசைவ மரபைச் சேர்ந்தவர்களே வாழ்கின்றனர். தமிழகத்து வீரசைவரது புலப்பெயர்வு யாழ்ப்பாணத்து வரணியிலும் கிழக்கு மாகாணமான மட்டக்களப்பில் குருக்கள் மடம்

முதலான இடங்களிலும் நிகழ்ந்துள்ளது. வரணி ஆதீன கர்த்தாக்கள் வீரசைவ மரபினராவர். இலங்கை சுதந்திரம் பெறுவதற்குமுன் தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் இடையேயான போக்குவரத்து சுமுகமானதாகவும் இலகுவானதாகவும் இருந்துள் ளது. இதனால் மறைக்காட்டு தரிசனமும் சிதம்பர தரிசனமும் யாழ்ப்பாணத்தவருக்கு இலகுவாக இருந்திருக்க வேண்டும். யாழ்ப்பாணத்தாரது தொடர்புகள் மறைக் காட்டில் அதிகரித்து இருந்ததற்கான சான்றுகளாக வரணி ஆதினமும் யாழ்ப் பாணத்தார் தெரு என்ற வீதியும் (இது தற்போது புதுவீதி என அழைக்கப்படுகின்றது) மறைக்காட்டு கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்களும் விளங்குகின்றன.

இக்கோயிலின் மேலைக் கோபுரத்தின் வாயிலிலும் அம்மன் சந்நிதியிலும் கட்டைக்கோபுர வாயிலும் காணப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் பலவற்றில் யாழ்ப்பாண மாவட்ட ஊர்ப்பெயர்கள் காணப்படுகின்றன. இவற்றின் எழுத்தமைதி 19ஆம் நூற்றாண்டுக்கு உரியனவாக காணப்படுகின்றன. கொடையாளியின் ஊரும், பெயரும் சதாசேவை என்ற வாசகமுமே காணப்படு கின்றது. திருப்பணி தொடர்பான தகவல்கள் எவையும் இல்லை. வகைமாதிரிக்கு கீழே மூன்று கல்வெட்டுக்கள் தரப்படுகின்றன. அதன் கீழ் உள்ள அட்டவணையில் ஊரும் பெயரும் தரப்பட்டுள்ளன. சில பெயர்களின் பதவி நிலை, குழுமம் முதலியன பற்றிய குறிப்பகமும் இடம்பெறுகின்றன. இத்தரவுகள் மறைக்காட்டு கோயிலுக்கும் யாழ்ப்பாணத்தார்க்கும் இடையே நிலவிய தொடர்புகளை ஆய்வு செய்வதற்கான சான்றுகளாக விளங்குகின்றன.

கிழக்குப்புற கட்டைக் கோபுர வாசலில் உள்ள இக் கல்வெட்டுக்கள் ஆறு சிறு வரிகளில் அமைந்தவை. இங்கு ஒரே வரியில் தரப்பட்டுள்ளன.

*36:1*

வரணி சோளங்கச்சேனாதார் ய முதலியார் பெண்சாதிகதிரியார்.

*36:2*

வரணிமாணிக்கவாசக பண்டாரதின் பிள்ளைச்சிவப்பிறகாச பண்டாரம்

*36:3*

வரணி சோளங்கச் சேனாதாராயமுதலியார் மகன் விரகத்தியார்.

***** *****

| இடம் | ஊர் | கொடையாளி பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| கட்டைக் கோபுர வாயில் | வரணி | சோளங்கச் சேனாதிராய முதலியார் பெண்சாதி கதிரியார். | முதலியார் என்பது ஒருவருடைய பதவி நிலைப் பெயர் |
| | வரணி | மாணிக்கவாசக பண்டாரத்தின் பிள்ளை (மகன்) சிவப்பிரகாச பண்டாரம் | பண்டாரம் என்ற சொல் யாழ்ப்பாண மாவட்டத்தில் வீரசைவ மரபினரைக் குறிக்கும். |
| | வரணி | சோளங்க சேனாதிராய முதலியார் மகன் வீரகத்தியார் | |
| மேலைக் கோபுரம் (வலது) | சுழிபுரம் | நடுநாயக முதலியார் | |
| | காரைதீவு | சிதம்பரநாத முதலியார் | |
| | வரணி | மாணிக்கர் சித்தர் சின்னவன் | |
| | வரணி | சேனாபதியாயர் முதலியார் சிதம்பரம் | |
| | வரணி | சிதம்பரனார் பெண்சாதி வள்ளிநாச்சி | |
| | வரணி | கைக்குளர் அம்பலவாணர் | கைக்குளர் என்னும் சாதிப் பிரிவினர் யாழ்ப்பாணத்தில் வசிக்கின்றனர் |
| | வரணி | மளவராயர் வல்லியர் | மளவராயர் என்பது இக்காலத்தில் சாதி சார்ந்ததாக குறிப்பிடப்படுகின்றது. |
| | சுழிபுரம் | கதிர்காமர் பெண்சாதி வேதநாயகி | |
| | சுழிபுரம் | முதலியார் கந்தப்பர் | |
| | மூளாய் | சின்னாத்த முதலிக்குட்டி குணாதன முதலியார் குமாரப் பெருமாள் | |


| | | | |
|---|---|---|---|
| | புலோலி | மருதர் | |
| | மண்டவேலி | குழந்தையார் மகன் நாளாத்தியார். | |
| | வரணி | நிர்ச்சிங்க வளதரையர் | வளதரையர் அரசியர் அதிகாரத்துடன் தொடர்புடையதா என்று தெரியவில்லை. |
| | மந்துவில் | சிதம்பர உடையாரும் பெண்சாதியும் | |
| | வரணி | பொடுகர் சிதம்பரர் | |
| | வரணி | பொடுகர் அம்பலவாணர் | |
| | சுழிபுரம் | சிதம்பரநாதரும் பெண்சாதியும் | |
| | மாதகல் | பேரியையயனான உடையார். | ஆங்கில அரசின் கீழ் கடமைபுரிந்த கிராமத் தலைவர் |
| | முகாவில் | தியாகர் சிதம்பர உடையார் பணங்காம வன்னிபம் குலசேகர பண்ணவன் | பனங்காமம் என்பது வன்னிப் பெருநிலப் பரப்பின் பிரிவு இது யாழ்ப்பாண மாவட்டத்துள் அடங்காது |
| | திருநெல் வேலி | வரணி இராசிங்க மாப்பாண முதலியார் சிதம்பரர் பெண்சாதி பொடுங்காத்தை | மாப்பாண முதலி என்பது யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் இருந்து வழங்கி வரும் அரசியல் அதிகார வம்சாவழியினரைக் குறிக்கும் பெயர். |
| | | கைக்குளர் சித்திராண்டரர் மகன் ஆனந்தன் | |
| | கரணவாய் | உடையார் மகன் குளநகையார். | |

*****　　*****

| | | | |
|---|---|---|---|
| | உடுப்பிட்டி | குளநகையார் மகன் தொ..... ன்.... | |
| | கைதடி | சந்திரசேகர முதலியார் மடத்தை பாகர் பெண் சாதி குளநகையர். | |
| | நவிண்டில் | மயில் நிச்சிங்கர் | |
| | உடுப்பிட்டி | மு.க.கா.சுந்தர் | |
| | துன்னாலை | சிதம்பர உடையார் புத்திரன் அளியாரும் கந்தர் மகள் சின்னாத்தையும் | |
| | இடைக்காடு | வேலாயுதன் | |
| | நல்லூர் | செயம் மருதாத்தை மகள் தழவாத்தை | |
| | மூளாய் | குன்றன் முதலியார் வெள்ளையர் | |
| | மந்துவில் | மயில்வாகன முதலியார் பெருமாள் பெருமாத்தை | |
| | மந்துவில் | இலங்கை அதிகார முதலியார் | |
| | கரணவாய் | மாப்பாணர் அய்யன் பெருமாள் பெண்சாதி தாச்சிப்பிள்ளை | |
| அம்மன் சந்நிதி பின்புறம் | நல்லூர் | தட்டார் பூதர் பெண் சாதி | தட்டார் என்பது பொற்கொல்லர் |

# நூல் அறிமுகம்
# பேராசிரியர் சி.பத்மநாதனின்
# மகத்தான ஆய்வுப் பணிக்கு ஓர் அடையாளம்

சமகாலத்தில் இலங்கைத் தமிழர் வரலாறு, தொல்லியல் தொடர்பாக நடுநிலை நின்று விஞ்ஞானபூர்வமான ஆய்வையும், மதிப்பீட்டையும் மேற்கொள்ளக் கூடிய பல மொழிப் புலமையுடைய தமிழ் அறிஞர்களில் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் பத்மநாதனும் ஒருவர் என்பதில் இரு வேறுபட்ட கருத்துக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்கு அவரது சமீப காலப் படைப்புக்களான இலங்கையில் இந்து கலாசாரம் பகுதி-1: (2000), இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூகவழமைகளும்: (2001), ஈழத்து இலக்கியமும் வரலாறும்: (2004), இலங்கையில் இந்து சமயம்: (2006) ஆகிய நூல்கள் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.. அவற்றுள் 2006ஆம் ஆண்டு வெளிவந்த "இலங்கைத் தமிழச் சாசனங்கள்" என்ற தொல்லியல் சார்ந்த நூலை "தேடல்" சஞ்சிகையில் முதல் அறிமுக நூலாகப் பதிவுசெய்து கொள்வதில் தொல்லியல் ஆய்வு வட்டம் பெருமை அடைகிறது.







தொல்லியலில் நம்பகத்தன்மை உடைய மூலாதாரங்களில் (Reliable Sources) சாசனங்களும் ஒன்றாகும். அவை இலக்கியங்களைப் போல் ஒரு நாட்டின் வரலாற்றை தொடர்ச்சியாகவும், விரிவாகவும், கூறக்கூடியவை அல்ல. ஆனால் சாசனங்கள் வரலாற்றுச் சம்பவங்கள் நடந்த காலத்தில் பொறிக்கப்பட்டதன் பின்னர் எந்த மாற்றத்தையும் பெறாததால் அவற்றில் கூறப்படும் வரலாற்று நிகழ்வுகள் பெரும்பாலும் நம்பகத்தன்மையுடையன. இலக்கியங்களில் ஏடு பெயர்த்து எழுதுபவரால் பல மாற்றங்களும், இடைச்சொருகலும் புகுத்தப்பட வாய்ப்புண்டு. அந்த வாய்ப்பு சாசனங்களில் இல்லை என்றே கூறலாம். இது கற்பனை வளத்தை ஏற்றிச் செல்லும் தன்மை கொண்ட இலக்கிய நடைக்கு முற்றிலும் மாறானதாகும். இதனால் ஒரு நாட்டின் அல்லது ஒரு வட்டாரத்தின் அல்லது ஒரு இனத்தின் மொழி, எழுத்து, மதம், கலை, பண்பாடு என்பன பற்றிய ஆய்விலும், அவற்றின்



காலங்களைக் கண்டறிவதிலும் அவை என்றும் முக்கிய மூலாதாரங்களாக விளங்கி வருகின்றன.

அறிவியல் நோக்கில் இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் பற்றிய ஆய்வு 1875 காலப்பகுதியில் ஆரம்பமாகியமாகத் தெரிகிறது. இருப்பினும் 1970 களின் பின்னரே அது இலங்கை வரலாறு பற்றிய ஆய்வுகளில் ஒரு முதன்மை மூலாதரமாக பார்க்கப்பட்டது. அதை முதலில் பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வுச் சூழலில் அறிமுகப்படுத்தி வைத்த பெருமை பேராசிரியர் செ.பரணவிதானாவுக்கு உண்டு. 1980ஆம் ஆண்டளவில் தமிழ்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களால் மூன்று தமிழ்ச் சாசனங்கள் பதிப்பித்து வெளியிடப்பட்டது. இது தமிழ் அறிஞர்கள் மத்தியில் சாசனவியல் பற்றிய ஆய்வில் புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்ட ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இதனால் பேராசிரியரின் சமகாலத்திலும், பின்னரும் சில அறிஞர்கள் தமிழ்ச் சாசனங்களை ஆராய்வதில் அதிக நாட்டம் செலுத்தினர். அவர்களில் சிலர் தமிழ்க் கல்வெட்டுக்களைக் கண்டுபிடிப்பதிலும், வேறு சிலர் அவற்றை விரிவாகவும், ஆழமாகவும் ஆராய்வதிலும் பெயர்பெற்றனர். அந்த வரிசையில் முன்னாள் தமிழ்ப் பேராசிரியான கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை, வரலாற்றுப் பேராசிரியர்களான கலாநிதி கா. இந்திரபாலா, கலாநிதி சி.பத்மநாதன் மற்றும் வரலாற்று விரிவுரையாளராக இருந்த கலாநிதி செ.குணசிங்கம் ஆகியோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனர். அவர்களுள் இன்றும் தமிழ்ச் சாசனங்களை ஆராய்வதில் அதிக ஈடுபாடு கொண்டிருப்போராக கலாநிதி கா. இந்திரபாலா, கலாநிதி சி.பத்மநாதன் ஆகியோர் காணப்படுகின்றனர். அதன் ஒரு வெளிப்பாடே 2006 ஆம் ஆண்டு வெளிவந்த கலாநிதி சி.பத்மநாதனின் "இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்" என்ற இந்நூலாகும்.

இந்நூல் இலங்கைத் தமிழர் வரலாறு, பண்பாடு பற்றிய பார்வையில் எதிர்காலத்தில் புதிய பல மாறுதல்களை ஏற்படுத்த வழிவகுத்திருக்கிறதென்பதில் ஐயமில்லை. இலங்கையில் கிடைத்த அனைத்து தமிழ்க் கல்வெட்டுக்களையும் ஒன்று சேர இரு தொகுப்பாக வெளியிட முன்வந்திருக்கும் பேராசிரியர் அதன் முதற் தொகுதியில் கி.பி.13ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழச் சாசனங்களை ஏழு அத்தியாயங்களில் 539 பக்கங்களில் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தியுள்ளார். அதற்குப் பொருத்தமாக ஆய்வுக்கு உட்படுத்திய சாசனங்களின் மைப்பிரதியின் புகைப்படங்களை பொருள் விளங்கும் வகையில் பொருத்தமான இடங்களில் வண்ணப்படங்களாகவும், நிழல்படங்களாகவும் கொடுத்துள்ளார்.

பேராசிரியர் தமிழ்ச் சாசனங்கள் பற்றிய ஆய்வுக்கு முன்னோடியக தனது முன்னுரையில் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களுடன் அண்மைக் காலங்களில் இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகளையும், எழுத்துப் பொறித்த நாணயங்களையும் ஒன்றுசேர ஆராய்ந்து முன்னைய ஆய்வுகளுக்கு புதிய விளக்கமளித்துள்ளார். இதன் மூலம் தமிழகத்திற்கு சமமான காலத்திலேயே இலங்கையில் தமிழ் மொழி, தமிழ எழுத்து, பல்வேறு சமூகப் பிரிவுகள், அரச உருவாக்கம் என்பன தோன்றியதென்ற கருத்தை மேலும்

ஆதாரபூர்வமாக வலுப்படுத்தியுள்ளார். மேலும் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் தமிழ்ப் பெயர்கள் தொல்காப்பிய இலக்கண மரபிற்கு பொருத்தமாகவும், பொருத்மற்ற முறையிலும் எழுதப்பட்டிருப்பதைப் பல இடங்களில் சுட்டிக்காட்டி அதற்கு அளித்திருக்கும் பொருத்தமான வாசிப்பு, பொருள் விளக்கம் என்பன முன்னைய ஆய்வுகளில் காணப்படும் சில தவறுகளைச் சுட்டிக்காட்டுவதாகவும். எதிர்காலத்தில் பிராமிச் சாசனங்களை ஆராய முற்படுவோருக்கு அதுவொரு துண்டுகோலாகவும், வழிகாட்டியாகவும் அமைந்திருக்கிறது.

பேராசிரியர் தனது ஆய்வுப்புலத்தில் இளமைக் காலம் தொட்டு தமிழ்ச் சாசனங்களை ஆராய்வதிலேயே அதிக ஈடுபாடு காட்டி வந்திருப்பதை அவரது ஒவ்வொரு படைப்புக்களிலும் துல்லியமாகக் காணமுடிகிறது. இதற்கு அவரிடம் உள்ள தமிழ்ப் பற்றும், வடமொழிப் புலமையும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். மேலும் தொடக்க காலங்களில் தனித்து தமிழ்ச் சாசனங்களை ஆராய்வதில் அக்கறை காட்டிய பேராசிரியர் அண்மைக் காலங்களில் தென்னிந் தியத் தமிழ்ச் சாசனங்களை ஆராய்வதில் அதிக ஈடுபாடு கொண்ட யப்பான் நாட்டு அறிஞரான பேராசிரியர் நொபெறு காறஷீமா (Noboru Karashima) மற்றும் தமிழக கல்வெட்டு அறிஞர்களான பேராசிரியர் வை.சுப்பராயலு, பேராசிரியர் ப.சண்முகம், கலாநிதி இராச கோபால், கலாநிதி இராசவேலு போன்றோருடன் இணைந்து ஆசிய நாடுகள் பலவற்றில் உள்ள தமிழ்க் கல்வெட்டுக்களை ஆராய்துள்ளமை இன்னொரு காரணமாக இருக்கலாம். அவற்றின் மொத்த வெளிப்பாடாகவே இந்நூல் வெளிவந்திருப்பதைப் பார்க்கிறோம்.

இந்நூலில் இலங்கைத் தமிழர் வரலாற்றை மீளக் கட்டியெழுப்ப உதவும் அடிப்படை மூலதாரங்கள் பலவற்றைக் காணமுடிகிறது. அதில் பேராசிரியரால் அண்மைக் காலங்களில் கண்டுபிடிக்கப்பட்டு மைப்பிரதி எடுக்கப்பட்டு வாசிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்கள் சில புதிய கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டுள்ளன. அதேபோல் ஏற்கவே பிறரால் ஆய்வுக்கு உட்படுத்தி வெளிவந்த சாசனங்களையும் பேராசிரியர் தனது ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். அவற்றுள் சில சாசனங்கள் விரிவான விளக்கத்தைப் பெற்றுள்ளன. இன்னும் சில சாசனங்கள் தெளிவாக வாசிக்கப்பட்டு பொருத்தமான விளக்கத்தைப் பெற்றுள்ளன. வேறு சில சாசனங்களின் முன்னைய வாசிப்புக்கள் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டு புதுப்பொலிவைப் பெற்றுள்ளன. மேலும் சாசனங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னைய ஆய்வாளர்களால் முன்வைக் கப்பட்ட முடிவுகள் சில மறுதலிக்கப்பட்டு பொருத்தமான முடிவுகள் தரப்பட்டுள்ளன. இதற்கு உதாரணமாக அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட குமாரகணத்துப் பேரூர் கல்வெட்டைக் குறிப்பிடலாம். பொதுவாக இலங்கையில் கிடைத்த இடைக்காலத் தமிழ்ச் சாசனங்களையும், அவற்றில் கூறப்படும் வரலாற்றுச் சம்பவங்களையும் தமிழகத்தோடு அழுத்தி அடையாளம் காணும் மரபே நீண்ட காலமாக இருந்து வருகிறது. ஆனால் அதற்கு மாறாக இங்கிருந்த தமிழர்களும் தமது வரலாற்றுச் சம்பவங்களை சாசனங்களில் பொறித்திருந்தனர் என்ற புதிய தகவல்களை இந்நூல் தருகிறது. இதற்கு குமாரகணத்துப் பேரூர் சாசனத்தில் இருந்து

பேராசிரியர் தரும் விளக்கம் பொருத்தப்பாடாக அமைகிறது. அச்சாசனத்தில் வரும் ஊரும், பேரும் ஆலயத்திற்குச் செய்த தானமும் கி.பி.750-850 காலப்பகுதியில் அநுராதபுர நகரத்தின் ஒரு பகுதியில் இலங்கைத் தமிழர்கள் அதிகாரம்மிக்க பேரூர் ஒன்றை அமைத்திருந்தனர் என்பது பேராசிரியரின் கருத்தாகும். இக்கருத்தையே தமிழக அறிஞர்களும் கொண்டுள்ளனர். இது இடைக்கால இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய எதிர்கால ஆய்வில் முக்கிய மூலாதாரமாக இடம்பெறும் என்பதில் ஐயமில்லை.

பேராசிரியர் தனது முன்னுரையில் குறிப்பிட்டிருப்பது போல் இந்நூலில் ஆராயப்பட்டுள்ள 50க்கு மேற்பட்ட சாசனங்கள் (பிராமிச் சாசனங்கள் உட்பட) ஆதிகால, இடைக்கால இலங்கைத் தமிழர் வரலாற்றின் பல்வேறுபட்ட பரிமாணங்களை ஆராய்வதற்கு அடிப்படையாக அமைந்திருப்பது இந்நூலின் சிறப்பம்சமாகும். இன்று தொல்லியல் ஆய்வில் கண்டுபிடிக்கப்படும் அல்லது எதிர்பாராமல் கிடைக்கும் புராதன பௌத்த சின்னங்கள் ஒரு மதத்தின் பண்பாடாகப் பார்க்கப்படாது, ஒரு இனத்திற்குரிய அடையாளச் சின்னங்களாகப் பார்க்கப்படுகிறது. ஆனால் பேராசிரியர் இந்நூலில் உள்ள சில தமிழ்ச் சாசனங்களை முன்னொரு காலத்தில் தமிழர்களும் பௌத்தர்களாகவும் இருந்துள்ளனர் என்பதற்கு ஆதாரமாகக் காட்டியுள்ளார். இது வரலாற்று வாசகர்களுக்கு வியப்பூட்டும் செய்தியாக இருக்கலாம். ஆனால் அதுதான் உண்மை என்பதை இலங்கையின் பண்டைய வரலாற்று மூலங்கள் பலவும் எடுத்தியம்புகின்றன. அந்த உண்மைளை நம்பகத் தன்மையுடைய தமிழ்ச் சாசனங்கள் ஊடாகப் பேராசிரியர் வெளிப்படுத்தி இருப்பது இந்நூலுக்குரிய இன்னொரு சிறப்பாகும்.

ஒரு நூலாசிரியரின் புலமைத் தன்னமை என்பது தரவுகளுக்கும், முடிபுகளுக்கும் நூலாசிரியர் கொடுக்கும் பொருத்தமான விளக்கத்தில் தங்கியுள்ளது. பேராசிரியர் தான் அண்மையில் கண்டறிந்த புதிய தமிழ்ச் சாசனங்கள் சிலவற்றை தனது வாசிப்பு, விளக்கங்களுடன் இந்நூலில் சேர்த்திருக்கும் அதேவேளை தனது முன்னைய சாசன வாசிப்புக்களில் உள்ள தவறுகளையும் சுட்டிக்காட்டி அதற்குப் பொருத்தமான புதிய விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். மேலும் கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேல் பிறரால் வாசித்து விளக்கமளிக்கபட்டு வெளிவந்த சாசனங்களையும் தனது ஆய்வுப்புலமையில் மீள்பரீசித்துப் பார்க்க முறப்பட்டுள்ளார். இது சாசனவியல் அறிஞர்களிடையே, ஆர்வலர்க ளிடையே ஆவலையும், பல எதிர்பார்ப்புக்களை எற்படுத்தியிருக்கிறது. ஆயினும் பேராசிரியர் பிறரது சாசன வாசிப்புக்களை, விளக்கங்களை, முடிபுகளை பல இடங்களில் ஏற்றும், சில இடங்களில் திருத்தியும் வேறு சில இடங்களில் மறுதலித்தும் இந்நூலில் ஆராய்ந்து உள்ளார். இந்த வேறுபட்ட கருத்துச் சூழலில் பேராசிரியர் தனது கருத்துக்களுக்கும், முடிவுகளுக்கும் சாத்தியமான மூலாதாரங்கள், விளக்கங்கள் கொடுத்து பொருத்தமான மொழி நடையில் தனது முடிபுகளையும், கருத்துக்களையும் ஏனைய அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் நூலை

அமைத்திருப்பது அவரது ஆய்வுப் புலமையின் மேதாவிலாசத்தை புலப்படுத்துவதாக உள்ளது. மொத்தத்தில் இந்நூல் இலங்கைத் தமிழரின் வரலாற்றை மீட்டெடுப்பதற்கான அடிப்படை மூலாதரங்களைத் கொண்டுள்ளது என்பது இந்நூலுக்குரிய சிறப்பம்சமாகும். பாளி இலக்கியங்களிலும், பிற வரலாற்று மூலங்களிலும் சொல்லப்படாத பல தகவல்களை இந்நூல் தருகிறது. அவற்றின் அடிப்படையில் வடகிழக்கு இலங்கை தமிழ்கள் பூர்வீக குடிகளாக வாழ்ந்து வரும் இடம் என்பதையும், அங்கு தமிழ் அரச மரபு இருந்து வந்ததையும் இந்நூல் துல்லியமாக எடுத்தக் கூறுகிறது. மேலும் பேராசிரியர் தனக்கேயுரிய மொழி நடையில் பண்டுதொட்டு இலங்கைத் தமிழரிடயே மொழிப்புலமையும், இலக்கிய மரபும் இருந்து வந்ததைச் சாசனங்கள் ஊடாக எடுத்துக் காட்டும் பாங்கு இந்நூலை மேலும் மெருகூட்டுவதாக உள்ளது.

இந்நூலைத் தொல்லியல் ஆய்வுப்பரப்புக்கு "உட்பட்டதென உரிமை பாராட்டுவதில் தொல்லியலாளர் பெருமைபெறலாம். இருப்பினும் அதில் இலங்கைத் தமிழரின் பாரம்பரிய வரலாற்றின் பன்முகத்தன்மையும் அடங்கியிருப்பதைக் நூலின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் தெளிவாகக் காணமுடிகிறது. பேராசிரியரின் முன்னைய படைப்புக்களான இலங்கையில் இந்து சமயம், இலங்கையில் இந்துக் கலாசாரம் என்பவை இன்று பாடசாலை, மற்றும் பல்கலைக்கழக பாடபோதனையில் முக்கிய பாடவிதான நூலாகப் போற்றப்படுகின்றன. அந்நூல்கள் இந்து நாகரிகம் என்பது வேதமும், ஆகமமும் அவை கூறும் கிரியை மரபுகளையும் மட்டும் உள்ளடக்கவில்லை. அதறகப்பால் அம்மதத்திற்குரிய அனைத்துப் பண்பாட்டு விழுமியங்களயும் உள்ளடக்கியதே இந்து நாகரிகம் எனப் புதுவழிகாட்டப் புறப்பட்டிருக்கும் அரிய நூல்களாகும். ஆனால் சாசனங்கள் பற்றிய இந்நூல் கற்றோர் பயன்படுத்தக் கூடிய ஆய்வுக்குரிய நூலாக மட்டும் காணப்படவில்லை. அதறகப்பால் இந்நாட்டு மண்ணேடொட்டிய தமிழர்களின் பாரம்பரிய மொழி, மதம், கலை, பண்பாடு என்பவற்றை நேசிப்போருக்கும், அவற்றை மேலும் ஆய்வு செய்ய விரும்புவோருக்கும் அடிப்படைத் தரவுகளை வழங்கும் அரிய பொக்கிசமாகக் காணப்படுகிறது. அத்தகைய நூலால் அறியப்படும் உண்மைகளும் நன்மைகளும் நூலைப்பயன்படுத்துவோரின் கரங்களில் தங்கியுள்ளது. ஆகவே அவ்வரிய நூலைப் படைத்த பேராசிரியர் பத்மநாதன் அவர்களையும், அதன் பெறுமதியை நன்குணர்ந்து அந்நூலை உரிய காலத்தில் சிறந்த முறையில் வெளியிட்டு வைத்த இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தையும், அதன் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனையும் பாராட்டுவதிலும், நன்றி கூறுவதிலும் தொல்லியல் ஆய்வு வட்டம் மகிழ்ச்சியடைகிறது.

*பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

٢١١٩

D117
பொது சன நூலகம்
பிரதேச சபை
நல்லூர்







ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், நீராவியடி, யாழ்ப்பாணம்.